# திருமூலர் கண்ட திருக்கோவில்


*ஆசிரியர் :*

**வித்வான் ல. சண்முகசுந்தரம்**



*வெளியீடு :*

**சண்முகம் பதிப்பகம்**

(பழைய எண் 52) புதிய எண் 5, இரண்டாவது தெரு,
N.G.O. (என்.ஜி.ஓ.) காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.

திருமூலர் கண்ட திருக்கோவில்

முதற்பதிப்பு — 2001

உரிமை, ஆசிரியருக்கே.

விலை : ரூ. 60/-

நூலின் பெயர் - **திருமூலர் கண்ட திருக்கோவில்**

ஆசிரியர் - **வித்வான் ல. சண்முகசுந்தரம்**

பதிப்பகம் - **சண்முகம் பதிப்பகம்,**
52/5, இரண்டாவது தெரு,
என்.ஜி.ஓ. காலனி, குரோம்பேட்டை,
சென்னை - 600 044.

பதிப்பாண்டு - நவம்பர் - 2001-ம் ஆண்டு

மொழி - தமிழ்

பொருள் - இலக்கியம் - கவியின்நயம்

பக்கம் - 224 + 22 = 256

விலை - ரூபாய் 60/-

நூல் அளவு - 1/8 டெம்மி

தாள் நிறை - 16 கிலோ

அச்சு - 12 பாயிண்ட்

கட்டுமானம் - செக்ஷன் பைண்டிங்

அட்டை - லாமினேசன்

அச்சகம் - சக்தி பிரிண்டர்ஸ் அண்டு எண்டர்பிரைஸ்,
தண்டையார்பேட்டை, சென்னை-21.
✆ : 596 2867

# முகவுரை

திருமூலர் ஒரு தெள்ளத்தெளிந்த ஞானி. அருள் மயமான பக்தர்.

பக்தியும் ஞானமுந்தான் திருமூலருடைய வாழ்க்கை, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து அப்படி வாழ்வது சிரமம். மிகச் சிரமம். ஆனால் திருமூலரோ சிரமமே இல்லாமல் மிக்க மகிழ்ச்சியோடு சிரிப்பும் கும்மாளியுமாகவே அப்படி வாழ்ந்தார்.

திருமூலர் படிக்காத நூல்களே இல்லை. கணிதம், பௌதீகம், ரசாயனம், உளவியல், உடலியல், உயிரியல், வானியல், மண்ணியல், அரசியல், பொருளியல் என்று எல்லாத்துறைகளிலும் அவருக்கு அத்துபடி.

அவர்காலத்தில் கல்வி என்பது எந்த அளவில் இருந்ததோ, அந்த அளவு வரை அதை ஒரு முழம் இருண்டு முழம் தாண்டியே அவர் கற்றிருந்தார்.

எத்தனையோ ஆசான்களிடம் அவர் பாடம் கேட்டார், அது மட்டுமல்ல வயலில் இறங்கி வேலை செய்யும் எளிய உழவர்களிலிருந்து அரண்மனையில் ஆலோசகர்களாகத்திகழும் அமைச்சர்கள் வரை, வணிகர்கள், சோதிடர்கள், மருத்துவர்கள், பணியாளர்கள் என்று பல திறப்பட்டவர்களின் வாழ்க்கையிலிருந்தும் அரிய செய்திகள் பலவற்றை அவர் தெரிந்திருந்தார்.

எல்லாவற்றிக்கும் மேலாக உற்றார், உறவினர்,நண்பர்கள், கலைஞர்கள், கோவில், பூசாரி, தேர், திருவிழா, காற்று, மழை, காடு, மலை, பசு, யானை இப்படி எங்கெங்கிருந்தோ அவர் கண்ணில் விழுந்தவை நுட்பமான சங்கதிகள்.

அவ்வளவும் அவர் படிப்போடு படிப்பாய்ச் சேர்ந்து பரிமளித்தன.

ஒவ்வொன்றையும் உணர்ச்சியோடு தான் படித்தார். உணர்ச்சி இல்லாமல் உருப்போடுவதற்காகப் படிக்கவில்லை திருமூலர்

விவரம் தெரிந்தே படித்தார். விவரத்தோடேயே படித்தார். அவர் படித்த படிப்புக்கு பட்டம் கொடுத்துப் பாராட்டுவ

தென்றால் கல்விக்கடல், ஞான மாமலை, கலைக்களஞ்சியம், உணர்ச்சிச்சுரங்கம் என்றெல்லாம் நீண்டுகொண்டே போகும்.

ஆனால் ஒன்று, இப்படி விழுந்து விழுந்து அவ்வளவையும் படித்தாரே தவிர இந்தப் படிப்புத்தான் உண்மையான கல்வி என்று அவரால் நம்பமுடியவில்லை.

எத்தனையோ விபரங்களை இந்தப் படிப்பு காட்டி இருக்கிறது. எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ள, மேலெழுந்தவாரியாக அறிந்துகொள்ள இந்தப்படிப்பு உதவுகிறது, ஆனாலும் இந்தப்படிப்பு மட்டும் படிப்பல்ல, இந்தப்படிப்பைக் கண்ணாடியாகப் போட்டுக்கொண்டு பார்க்க வேண்டடியவை எவ்வளவோ இருக்கின்றன. அவ்வளவையும் தெரிவதுதான் கல்வி என்று தெளிந்தார் திருமூலர்.

கண்ணாடி என்று கூட சொல்லக்கூடாது. இனிக் கற்க வேண்டியதற்கு இதுவரை கற்றதை உரமாகப் போடவேண்டும். அப்படிப் போட்ட உரக்கால் நன்செயில் தான் ஞானப்பயிர் விளையும் என்று தீர்மானித்தார் திருமூலர்.

அப்படியே செய்தார். படித்த படிப்பு அவ்வனவையும் மூட்டை மூட்டையாகக் கட்டினார். ஒவ்வொரு மூட்டையும் வண்ணார் (துணிவெளுப்பவர்) பொதிமாதிரி பெரிய மூட்டைகள்.

அவ்வளவு மூட்டைகளையும் ஒன்றன்மேல் ஒன்று என்று அடுக்கினார். சிறுகுன்று அளவுக்கு உயர்ந்து நின்றனன பொதிமூட்டைகள்.

அவற்றின் உச்சியில் ஏறி நின்றார் திருமூலர். ஏறி நின்று ஆர, அமர, உலகத்தைப் பார்த்தார். அணுவிலிருந்து அண்டம் வரை ஒவ்வொன்றையும் யோசித்துப்பார்த்தார்.

மக்கள், வாழ்க்கை, அவர்களுடைய போக்குகள், நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், நெளிவு சுழிவுகள், உணர்ச்சிகள், வார்த்தைகள், வார்ர்தைகளுக்குப் பின்னாலிருக்கும் அவர்களுடைய மனநிலைகள், பிறப்பு, இறப்பு, உடலியல், உயிரியல் என்று ஒவ்வொன்று பற்றியும் யோசனை வந்தது திருமூலருக்கு.

அதனால் விடாமல் தொடர்ந்து யோசித்த வண்ணமாக இருந்தார். யோசனையில் பல முடிச்சுகள் அவிழ்ந்தன. உண்மையானது - அரும்பாக இருந்த உண்மையானது. மொட்டாகி, போதாகி மெள்ள மெள்ள விரிந்தது. இதழ் இதழாக விரிந்த உண்மை கமகம என்று மணத்தது.

அடிப்படையான மூலதத்துவம் ஒன்று தான். அதுதான் அவ்வளவையும் இயக்குகிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக இயங்குவது போல் தோன்றினாலும் எல்லாவற்றுக்கும் உயிர் ஒன்றுதான்.

அந்த ஒன்றுதான் சகலமும் என்கிற பேருண்மை. அதுவே கண் முன் வந்து நிற்பது போல விளங்கிவிட்டது திருமூலருக்கு

அவ்வளவுதான் மூட்டைகளைவிட்டு இறங்கி விட்டார் திருமூலர். காலைத் தூக்கித் தரையில் வைத்தார். மக்களோடு மக்களாய் நடமாடினார். உயிருக்குயிராகவே உறவாடினார். மகிழ்ச்சி தாங்க முடியவில்லை அவருக்கு, ஆடினார், பாடினார், குதித்தார், ''ஆடலரசே, அம்பலத்தரசே'' என்று கூப்பாடு போட்டார். துள்ளித் துள்ளி விளையாண்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

தூணிலிருந்து நரசிம்ம மூர்த்திவீரகர்ஜனையோடு வெளிப்பட்டவுடன் பிரகலாதன் துள்ளிக் குதித்தான். கட்டுக்கடங்காத ஆனந்தப்பெருக்கோடு துள்ளி விளையாண்டான். திருமூலரும் அப்படியே உருண்டுபுரண்டு விளையாண்டார்.

பிரகலாதனின் ஆனந்தக்களிப்பைக் கம்பர் காட்டுகிறார்

நாடிநான் தருவன் என்ற
நல்லறி வாளன்நா ளும்
தேடிநான் முகனும்கா ணாச்
சேயவன் சிரித்தலோ டும்
ஆடினான், அழுதான்,பா டி
அரற்றினான்,சிரத்தில்செங் கை
சூடினான், தொழுதான்ஓ டி
உலகெல்லாம் துகைத்தான்துள் ளி.

இப்படிக் காட்டுகிறார் கம்பர். உண்மையைக் கண்ட திருமூலர் எப்படி எல்லாமோ துள்ளி ஆடினார் ஆனந்தக் களிப்பில். திருமூலரின் ஆனந்த விளையாட்டைப் பார்த்து தான் பிரகலாதன் மேல் அதை ஏற்றிச் சொன்னாரோ மகாகவி கம்பர் என்று நினைக்கத்தோன்றுகிறது.

உண்மையைக் கண்குளிரப்பார்த்து அதனோடு உருண்டு புரண்டு விளையாடினார் திருமூலர், அப்படி விளையாடுகிற திருமூலர் பூகோளம், சரித்திரம், கணக்கு, ரசாயனம் என்று படித்துக் கொண்டிருக்க முடியமா? பாடம், படிப்பு, பாராயணம், விளக்கம் எல்லாவற்றையும் விட்டுவிட்டார் திருமூலர்.

"கற்றன விட்டேன்
கழல்பணிந் தேனே"

என்று சொல்லிக் கொண்டே உதறி எறிந்து விட்டார். படிப்பைத் திருமூலர். கழல் என்றால் திருவருள்-நியதிதத்துவம். அதை உணர்ந்து அதனோடு தோயத் தோய படித்த படிப்பு நழுவத்தானே செய்யும்? ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவுமா?

ஏடு, எழுத்தாணி, பாடம், படிப்பு இவைகளைத்தான் திருமூலர் விட்டுவிலகினார். சிந்தனையிலிருந்து அவர் விடுபடவில்லை. சிந்தித்துச் சிந்தித்து உண்மையைப் பார்த்து உண்மையோடு உறவாடிய வண்ணமாகவே இருந்தார் திருமூலர்.

ஒரு தடவைதான் உண்மையைப் பார்த்தாயிற்றே, பிறகு மாறி மாறிப் பார்ப்பதில் என்ன இருக்கிறத புதிதாக! என்று ஏமாறிவிடக் கூடாது.

பார்க்கப் பார்க்கப் புதிது புதிதாக ஒளிவிசும் உண்மை.

மணப் பெண்ணைத்தான் நேருக்கு நேராகப் பார்த் தாயிற்றே. ஒட்டி நின்று,உரசி உரசிப் பார்த்தாயிற்றே, பிறகு என்ன இருக்கிறது பார்க்க "என்று ஒதுங்க முடியுமா மணவாளனால்

---

நான் தருவன் என்ற நல்லறிவாளன் – பிரகலாதன். இதோ காட்டுகிறேன் இறைவனை என்று தூணைக்காட்டிய பிரகலாதன். நான்முகன் – பிரமன். சேயவன் – திருமால். துகைத்தனன் – தூள் பறக்கும் படி தரையில் திம் திம் என்று மிதித்தான். அழுதல் – ஆனந்த பரவசத்தில் வரும் கண்ணீர். அரற்றுதல் – கூவுதல், அழைத்தல்.

பார்க்கப் பார்க்கத்தான் ஆனந்தம், பழகப்பழகத்தான் பேரானந்தம். அது தான் உண்மை.

இனி, யோசிக்க யோசிக்க உண்மையோடு உறவாடித் தோயத் தோய திருமூலரின் உள்ளத்துள் கிடந்த அன்பு, அருள், பொறுமை, வாய்மை முதலிய பண்புகள் ஒவ்வொன்றும் புத்துயிர் பெற்று புது அவதாரமே எடுத்து விட்டன.

அன்பு முதலிய பண்புகளைப் போல வீரதத்துவத்துக்கும் புதிய வேகமும் ஊக்கமும் வந்துவிட்டன. இதுவரை கரித் துண்டுகளாய்க் கிடந்த அன்பு முதலிய பண்புகள் கட்டி வயிரமாய் விளைந்து விட்டன. கண்ணைப்பறிக்கும் வண்ணத்தில் சுடர்வீசிஜொலிக்கவும் ஆரம்பித்துவிட்டன.

ஆனாலும் அந்தப் பண்புகளுக்கு ஒரு ஆற்றாமை. என்ன ஆற்றாமை அது? நாமும் மனிதர்களைப் போல வடிவம் பெற்று உருப்படியாக வேண்டுமே. மனிதர்களோடு மனிதர்களாய்ச் சேர்ந்து வாழவேண்டுமே, அவர்கள் போலவே நாமும் நடமாட வேண்டுமே கொஞ்சிக் குலாவி, சிரித்து மகிழ்ந்து அவர்களோடு உறவாடாமல் ஒதுங்கிக் கிடப்பதில் என்ன பலன் என்றெல்லாம் தவிக்க ஆரம்பித்துவிட்டன அந்தப்பண்புகள்.

திருமூலரின் இதயப்பண்புகளைத் தமிழ் பார்த்தது. இதயப்பண்புகளின் துடிப்புகளையும் தவிப்புகளையும் பார்த்து மனம் இளகிவிட்டது தமிழுக்கு. பரிவே உண்டாகிவிட்டது.

எப்படியும் இந்தப்பண்புகளுக்கு வாழ்வும் வளமும் கொடுத்து விட வேண்டியது தான் என்றே பரிவு பிறந்தது தமிழுக்கு.

அப்படியே திருமூலரின் இதயப் பண்புகளை எடுத்தது தமிழ். எடுத்து எடுத்து அவைகளோடு கலந்து மருவியது தமிழ். இரண்டறக் கலந்தே மருவியது தமிழ்.

தமிழில் உள்ள இசைப்பண்பு, தாளப்பண்பு, ஏன் தமிழ்ப்பண்புமே சேர்ந்து திருமூலரின் இதயஒலிக்குச் செய்யுள் உருவம் கொடுத்துவிட்டன.

ஒவ்வொரு கவியும் சிறகடித்து விண்ணுக்கும் மண்ணுக்கும் பறந்தன.

எங்கிருந்து வந்தனவோ என்று சொல்லும் படி அப்படி ஒரு புதுமை, வேகம், தெளிவு, தூய்மை, எளிமை திருமூலரின் ஒவ்வொரு பாடலிலும்.

உதாரணத்துக்கு ஒரு கவியைப் பாருங்கள்

செல்லும் அளவு
    செலுத்துமின் சிந்தையை,
வெல்லும் அளவு
    விடுமின் வெகுளியை;
அல்லும் பகலும்
    அருளொடும் தூங்கினால்
கல்லும் பிளந்து
    கடுவெளி ஆமே''

இந்தப் பாடலைத் திருமூலர் பாடினார் என்று சொல்ல முடியுமா? திருமூலரை வைத்துக் கொண்டு தமிழே பாடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு மயில் முட்டையை உடைத்தால் முட்டையில் சிரங்கை அளவு தண்ணீர் இருப்பது தெரிய வரும். ஆனால் அந்தத்தண்ணீருக்குள்–தண்ணீர் முழுவதுமே மயில் இருப்பது தெரியாது.

யூகத்தின் அடிப்படையில் மயில் ஓரளவு தெரிந்தாலும் தட்டான் ஒருவன் அங்கே உட்கார்ந்திருந்தது தெரியுமா? தெரியாது. அது போலவே அந்த ஒரு சிரங்கைத் தண்ணீருக்குள் ஒரு ஓவியனும் இருந்தான், ஒரு கூத்தாடியும் (நாடகக்காரனும்) இருந்தான். அதுவும் தெரியாது.

தட்டான், ஓவியன், கூத்தாடி மூவரும் தெரியவில்லை. மயிலும் அவ்வளவாகத் தெரியவில்லை. தண்ணீர் மட்டும் கொழு கொழு என்று இருந்தது தெரிந்தது.

தட்டான் இல்லை என்றால் கண்,காது,மூக்கு,கொண்டை, வயிறு,தோகை, கால் என்று உண்டாக முடியுமா? ஓவியன் இல்லை என்றால் எதை எதை எங்கெங்குவைப்பதென்று இடம்பார்த்து வைக்கமுடியுமா?

பொருத்தி வைத்து உருப்படியாக்கிய மயிலில் ஒரு அழகு, வனப்பு,சொகுசு, ஒய்யாரம், பொலிவு எல்லாம் மிளிர ஏற்பாடு செய்தவன் ஓவியன். ஓவியன் இல்லை என்றால் மயிலுக்குகென்று ஒரு சாயல் எப்படி வரும்.

மயில் மட்டும் இருந்தால் போதுமா, அதற்கென்று பார்வை, நடை, பசி, தாகம், காதல், கோபம், வீரம் எல்லாம் இருந்தால் தானே அது உண்மையில் மயில். இல்லையென்றால் பொம்மைதானே.

இவ்வளவும் அந்தக் கூத்தாட்டுக்காரன் தானே உடனிருந்து செய்துமுடித்தான்.

இனி மயில் முட்டைக்குள் தண்ணீர் முழுவதும் மயில் நிறைந்திருந்தது போல, தமிழுக்குள் தமிழ்ப்பண்பு சேர்ந்தே கிடக்கிறது.

இசைப்பண்பும், தாளப்பண்பும் அப்படியே தமிழோடு தமிழாய் தமிழ்ப்பண்பாகவே கிடக்கிறது.

அது மட்டுமல்ல தட்டான், ஓவியன், கூத்தாடிகளும் அப்பண்புகளுடன் சேர்ந்து கிடக்கிறார்கள்.

விஷயத்தை, அனுபவத்தை, உணர்ச்சிப் பெருக்கை தமிழானது வாங்கி மருவ மருவ எதுகை என்றும் மோனை என்றும், தமிழ்ப் பண்பை உருவாக்குகிறான் தட்டான்.

வளமான இசைப்பண்பை அதனோடு சேர்த்து நெய்கிறான் ஓவியன். கூத்தாடியோ தாளப்பண்பைக் கொண்டு எதுகை முதலிய அங்கங்களின் மூலமாக உணர்ச்சிகளின் ஒவ்வொரு சாயலையும் அபிநயம் பிடிக்க வைத்துவிடுகிறான்.

தெய்வாம்சம் பொருந்திய கவிகளாகவே விளைந்து விடுகின்றன.

திருமூலரின் இதயப்பண்புகள்–அன்பு, அருள் முதலிய இதய ஒலிகள் இப்படியாகக் கவி உருவம் பெற்று திருமூலராகவே நடமாடுகின்றது. மக்களோடு மக்களாய் வாழ்கின்றன, ஒவ்வொரு பாடலும் சிரித்து மகிழ்ந்து கொஞ்சிக்குலாவி நடமாடுகின்றன.

திருமூலரின் திருமந்திரப் பாடல் என்றால் அது திருமூலரே தான். தமிழும் அவரும் சேர்ந்தெடுத்த திரு அவதாரந்தான் பாடல் ஒவ்வொன்றும்.

பாடல் மூலம் திருமூலர் இன்றும் நம்மோடு இருக்கிறார்.

ஒவ்வொரு பாடலும், பாடலில் உள்ள முத்திரை ஒவ்வொன்றும். புதுப்புது ஒளியில் வரும். தனித்தனி வீச்சில் வந்து விழும்

'அன்பு சிவம் என்(று)

இரண்டென்பர் அறிவிலார்'

எப்படிப் பிடிக்கிறது அபிநயம் என்று பாருங்கள்.

கடவுள் எங்குமாய் எல்லாமாய் இருக்கிறார். நீதி என்கிற நியதியாகவே வடிவெடுத்திருக்கிறார் என்பதை

நீதிக்கண் ணாடி

நினைவார் மனத்துளன்''

என்று முத்திரை பிடிக்கிறது தமிழ்.

அப்படி நீதிமயமாய் நிறைந்திருக்கும் அற்புதனை எங்கே கேட்டு எப்படித் தெரிந்தேன் என்பதை

''கீதக்கண் ணாடியில்

கேட்டுநின் றேனே'' என்று ஒரு புது வீச்சில் தாண்டவம் ஆடியே காட்டுகிறது தமிழ். அப்படியே மரணபயத்தைக் கேலி பண்ணும் நையாண்டி

கிடக்கப் படுத்தார்

கிடந்தொழிந் தாரே'' என்றும்

நீரினில் மூழ்கி

நினைப்பொழிந் தாரே'' என்றும்

புதப்புதுச் சாயல்களில் அபிநயம் பிடிப்பதைப் பார்க்கலாம்

யாவர்க்கும் ஆம்பிறர்க்(கு)

இன்னுரை தானே।। என்றும்

கள்ளப் புலன் ஐந்தும்
காளா மணிவிளக்கே!! என்றும்
பார்ப்பான் பசுஐந்தும்
பாலாய்ச் சொரியுமே!! என்றும்
யார்அறி வார் எங்கள்
அண்ணல் பெருமையை!! என்றும்

அடிமேல் அடிஎடுத்து வைத்து நடனமே ஆடுகின்றன அவை, கண்ணும் இதழும் முகமும் முகவெட்டும் சேர்ந்து உணர்ச்சிகளைப் பிடித்து நிறுத்துகிற அபிநயமாக எழுந்து வருகின்றன மோனைகளும் எதுகைகளும்.

கவி என்பது மனிதச் செயலில் வருவதில்லை. அது தெய்வ கடாட்சத்தைச் சேர்ந்தது என்று அறிஞர்கள் சொல்வார்கள். திருமூலர் கவிகளைப் பார்த்தால் அறிஞர்கள் சொல்வது விளங்கும். மற்றப்படி இதை சூத்திரமாகக் கொண்டு இலக்கணமாகப் படித்தால் விளங்காது.

இனி, திருமூலர் என்பதில் உள்ள மூலர் – மூலன் என்பது தமிழ்நாட்டில் வழங்கிய பழக்கமான பெயர்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்ககாலப் புலவர்களின் பெயராக மூலன் என்பது இருந்தது. மாமூலர் என்றே ஒரு கவிஞர்.

மூலங்குடி என்று ஊருக்கும் பெயராக இருந்தது. மூலம் என்றால் ஆதி, ஆதிக்கும் ஆதி என்று பொருள். வேர் என்பதும் பொருள்தான்.

சிறுபஞ்ச மூலம் என்று நீதிநூல் ஒன்றுக்குப் பெயர். மருந்துச் செடி ஐந்தின் வேரும் அவற்றின் சாறும் உடல்ப்பிணியை நீக்கும். அது போல மனப்பிணியை நீக்கும் அறஉணர்வுகளை ஊட்டும் நூல் என்பது அதன் பொருள்.

இறைவனுக்கு மூலவர் என்ற ஒரு பெயர்.

திருமூலருடைய பெயரே அவரை முழுக்க முழுக்கத் தமிழர் என்று காட்டுகிறது. அவரது பாடல்களும் தமிழ்தானே. அப்படி இருந்தும் திருக்கயிலாயத்திலிருந்து தென்திசை நோக்கி வந்தவர் திருமூலர் என்று கதை கட்டிவிட்டிருக்கிறார்கள்.

தென்திசை நோக்கிவந்த திருமூலர் எத்தனையோ வனவனாந்தரங்களையும் காடுமேடுகளையும் கடந்து, நாடுகள் பலவற்றையும் பார்த்துவிட்டு தமிழகத்துள் வருகிறார்.

பொதிகை மலையை நோக்கி வருகிறாரோ என்னவோ? வரும் வழியில் இன்றைய திருவாவடுதுறைப் பக்கம் வரும் பொழுது பசுக்கள் பலவற்றை மேய்த்துக்கொண்டிருந்த இடையன் இறந்து கிடக்கிறான். இடையனின் பிரிவுக்கு ஆற்றாமல் பசுக்கள் சுற்றிநின்று கதறுகின்றன.

இதைப்பார்த்தார் திருமூலர். பசுக்களின் காரியம் மிக்க வியப்பைக் கொடுத்தது, பிறகு பரிவே உண்டாகிவிட்டது திருமூலருக்கு.

ஏற்கனவே அவருக்குக் கூடுவிட்டுக் கூடுபாயத் தெரியும். பசுக்களைத் சந்தோஷப்படுத்த வேண்டும் என்கிற தீர்மானம் வந்து விட்டது திருமூலரிடம். உடனே ஒரு புதருக்குள் நுழைந்தார். தன் உடலை அங்கே போட்டார்,சட்டையைக் கழற்றிப்போடுவது போல போட்டுவிட்டார். மேய்ச்சல்காரன் உடலுள் புகுந்து விட்டார்.

விழித்து எழுவது போல எழுந்தது மேய்ச்சல்காரன் மேனி. மாலை நேரம் வந்தது, மேய்ப்பாளனாய் எழுந்த திருமூலர் பசுக்களை அவரவர் வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

புதரில் வந்து தன் உடலைத் தேடினார், ஆனால் கழற்றிப்போட்ட உடம்பு அங்கில்லை. ''என்னடா இது அநியாயமாக இருக்கிறது'' என்று திகைத்தார்.

அப்படியே திருவாவடுதுறை வந்தார். கோயிலை ஒட்டி இருந்த அரசமரத்தடியில் உட்கார்ந்தார். தவம் பண்ணவே ஆரம்பித்து விட்டார். மேய்ச்சல் காரன் மேனியில்தான்.

ஒரு வருடமா? இரண்டு வருடமா? மூவாயிரம் ஆண்டுகள் தவம் பண்ணினார்.

தவத்தில் இருந்தபடியே ஆண்டுக்கு ஒரு பாடல் என்று மூவாயிரம் பாடல்கள் பாடினார்.

அந்தப் பாடல்கள் தாம் திருமந்திரம் – திருமூலர் திருமந்திரம்.

இப்படிப் போகிறது கதை.

கதை என்னவோ நம்பமுடியாத கதைதான். ஆனால் கதைக்குள் இருக்கிற கருத்தை – உண்மையைப் பார்க்க வேண்டும். அதை நம்ப வேண்டும்.

இமயமலையின் விசாலமான முற்றந்தான் சைவத்தின் தாயகம். அங்கிருந்து தான் நாலாதிசைகளிலும் கொடி வீசிப்படர்ந்தது சைவம்.

தென்திசை நோக்கியும் சைவம் வந்தது, அலை அலையாகச் சைவத்துறவிகளும், சான்றோர்களும், சாதாரண மக்களும் வந்தார்கள்.

தென்திசை வந்த சைவந்தான் பண்பாட்டுவளம், கலைவளம், ஞானவளம் என்று நன்றாக வேர்ப்போட்டு வளர்ந்தது.

வானளாவிய கோவில்கள், கோபுரங்கள், தேர், திருவிழா, தேவாரம், திருவாசகம், மேளதாளம், பரத நாட்டியம், பசுமடம், நந்தவனம், புலால் உண்ணாமை என்பதெல்லாம் தெற்கே தமிழகத்தில் தானே.

வடதிசையிலிருந்து தென் திசை வந்தவரவின் சாரம் இதுதான். திருமூலர் கதை தான்.

இன்றைக்கும் தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள் தங்களை திருக்கயிலாய பரம்பரை என்றே விலாசத்தைத் தொடங்கு வார்கள்.

சொத்து சம்பந்தமான பழைய பத்திரங்களில் கங்காகுலம், முத்துசாமி பிள்ளை, கங்காகுலம் சோமசுந்தர முதலியார் என்று இருக்கும். திருக்கயிலாயம், கங்கை எல்லாம் விட்டகுறை தொட்டகுறை தானே.

சைவத்தின் துடிப்பான சின்னம் ருத்திராட்சம், அது விளைவது இமயமலை - நேப்பாளத்தில் தான்.

சைவத்துக்கு உயிர் பசுவும் காளையுமே. நேப்பாளத்தில் – இமயமலைப்பிராந்தியத்தில் இன்றைக்கும் அந்த இரண்டும் கோயில்களாவும் குன்றுகளாகவும் எழுந்து நிற்பதைப் பார்க்கலாம்.

இமயமலைப் பகுதியிலிருந்து சைவமும், சைவப் பெரியார்களும் வந்ததை உணர்த்துகிற கருத்துத்தான் அப்படி ஒரு கதையாக எழுந்து வந்திருக்கிறது.

அதே போல திருமூலரின் கவியின் அருமை பெருமைகளை உணர்த்துவதுதான் மூவாயிரம் ஆண்டுக் கதையும்.

திருமூலர் பாடலை அனுபவித்துப் படிக்கிறவர்கள், அடடா! எப்படி இருக்கின்றன பாடல்கள், ஒவ்வொரு பாடலும் ஆயுள் நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டியது தான் என்று வியந்தார்கள். இத்தகைய பாடல்கள் ஒன்றுக்குப் பின் ஒன்று என்று அடுத்தடுத்து வர முடியுமா? என்றும் அதிசயித்தார்கள்! வருஷத்துக்கு ஒன்று என்று தான் வந்திருக்க வேண்டும் பாடல்கள், அதுவும் தவமிருந்து வருஷத்துக்கு ஒன்றாகப்பெற்றெடுத்திருக்க வேண்டும் இந்தப் பாடல்களை என்று மனம் கசிந்து அனுபவித்தார்கள்.

இன்னும் சிலர் பாராட்டு வேறொரு முறையில் வந்தது. ''திருமூலர் ஒவ்வொரு பாடலையும் இருபது வருஷம் முப்பது வருஷம் தவத்திலிருந்து தலைமுறைக்கு ஒன்று என்று தான் பாடி இருக்க முடியும். ஏதோ சொற்களைக் கோத்துவாங்கி சப்பரம் கட்டின காரியம் இல்லை அவர் பாடல்கள்'' என்று அடித்துச் சொன்னார்கள்.

கவியை அனுபவித்த அனுபவம் தான் ஆண்டுக்கொரு பாடலாக திருமூலர் பாடினார் என்றும், மூவாயிரம் வருடங்கள் அவர் இருந்தார் என்றும், அதுவும் தவக்கோலத்திலேயே இருந்தார் என்றும் கதையாக வந்திருக்கிறது.

விஷயத்தை அப்படியே நேரில் சொன்னால் அதற்கு ஆயுள் குறைவு. நீண்டநாள் அதனால் நிற்க முடியாது. கற்பனை கலந்த கதையுள் வைத்து விஷயத்தைக் காட்டினால் நீண்ட நெடுங்காலத்துக்கு அது நிற்கும். அதனால் தான் சைவத்தின் வரவு, திருமூலர்தவம், கவி அருமை எல்லாவற்றையும் கதையாகப் புனைந்திருக்கிறது.

திருமூலர் எத்தனை பாடல்கள் பாடினார் என்று நமக்குத் தெரியாது. ஆனால் கிட்டத்தட்ட மூன்றாயிரம் பாடல்களைத் திரட்டி இவை எல்லாம் திருமூலர் பாடிய பாடல்கள் என்று சேர்த்து வைத்திருக்கிறார்கள். அப்படிச் சேர்த்த பாடல்களின்

திரட்டுக்குத் திருமந்திதரம் என்று பெயர். திருமூலர் திருமந்திரம் என்றும் பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

திருமூலர் திருமந்திரம் என்று அச்சிட்ட புத்தகத்தை அப்புத்தகத்தில் உள்ள பாடல்கள் எல்லாவற்றையுமே படித்தேன். ஒரு முறைக்கு இரு முறை. இரு முறைக்கு மூன்று முறை, அதற்கும் மேலே பல முறை என்று கூடச் சொல்லலாம். அப்படி விழுந்து விழுந்து படித்துப் பார்த்தான்.

இத்தனை தடவை மாறி மாறித் திருமூலர் திருமந்திரத்தைப் படித்த பிறகும் எனக்கு விளங்கிய பாடல்கள் எண்பத்து எட்டுத்தான்.

விளங்கியது என்று குறிப்பிடுவது வெறும் பொருளை உணர்த்தும் உரையை அன்று. பத உரை, பொழிப்புரை, குறிப்புரை என்பவற்றை மட்டும் அன்று.

ஒரு உண்மையைக் கண்டு திருமூலர் அனுபவிக்கும் அனுபவம், அனுபவம் முதிர முதிர அது வடித்துக் கொடுக்கிற ஆனந்தம், அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்து இசையோடும் தாளத்தோடும் சிறகடித்து வட்டமிடும் கவி உருவம் இவைகளையே விளக்கம் என்று குறிப்பிடுகிறோம்.

அப்படிக் கவியாக அவதாரம் எடுத்த பாடல்கள் தான் விளங்குகின்றன. உணர்ச்சியோடு தோய்ந்தும் மருவுகின்றன.

உணர்ச்சியைக் குழைத்துப் பிசைகின்றன என்றே சொல்லலாம் அந்தப் பாடல்களை. அதாவது விளங்கும் பாடல்களை.

தமிழும், இசையும், தாளமும் சேர்ந்து அனுபவத்துக்கும் ஆனந்தத்துக்கும் புதுப்பிறவியையே கொடுத்தது. அது போலவே, உணர்ச்சிக்கும் புதிய பிறவியைக் கொடுத்து விடுகிறது.

உண்மையான கவியைப் பார்க்கப் பார்க்க அனுபவிக்க அனுபவிக்க புதிய பிறவியே நமக்குக் கிடைத்து விடுகிறது.

ஒரு கவியானது விளங்குகிறது என்றால் இதுதான். மற்றப்படி பதவுரை, குறிப்புரை, தெளிவுரை அல்ல.

இப்படி எனக்கு விளங்கிய கவிகள் மூவாயிரத்தில் எண்பத்து எட்டுத்தான்.

மற்றப் பாடல்களுக்கு வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் பொருள் சொல்லத் தெரியும். ஆனால் ஏதாவது அதன் மூலம் விளங்கியதா என்றால் இல்லை. ஒன்றுமே விளங்கவில்லை என்று தான் சொல்ல முடியும். அவ்வளவும் இருட்டடிப்பாக கும்மிருட்டாகவே உள்ளன என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது.

எனக்கு விளங்கிய பாடல்களைத் தானே மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுக்க முடியும். விளங்காத பாடல்களைக் கொடுக்க முடியுமா?

ஆகவே எனக்கு விளங்கிய எண்பத்து எட்டு பாடல்களை மட்டும் மற்றவர்களும் பார்க்க வேண்டுமே என்கிற ஆர்வத்தில் கொடுக்கிறேன்.

விளங்கிய பாடல்களை நான் எப்படி அனுபவித்தேன்; அந்தப் பாடல்கள் எனக்கு எப்படி வெளிச்சம் கொடுத்தன என்பவற்றையும் பாடல்களோடு சேர்த்துக் கொடுத்திருக்கிறேன். பாடல்களின் மூலம் எனக்கு ஏற்பட்ட அனுபவமும் கிடைத்த வெளிச்சமும் சிறு சிறு விளக்கமாகக் கொடுத்திருக்கிறது பாடல்களின் முகப்பில்.

பாடல்களின் அரும்பதங்களுக்கு உரிய பொருளை மட்டும் அந்தந்தப் பாடல்களின் அடிக்குறிப்பில் கொடுத்திருக்கிறது.

விளக்கம், குறிப்புரை இவைகளைத் தொட்டோம் விட்டோம் என்று இருக்க வேண்டும். ஒரு தடவை பார்த்து விட்டு அப்படியே அவற்றை விட்டு விட வேண்டும்.

ஆனால் பாடலை மட்டும் விடக்கூடாது. மாறி மாறிப் பார்க்க வேண்டும். மனம் விட்டுப் படிக்க வேண்டும். வாய் விட்டுப் பாடிப் பாடியே அனுபவிக்க வேண்டும் பாடல்களை.

பாடப் பாடத் தான் திருமூலரின் அனுபவம் கண்முன் வந்து நிற்கும். அவருடைய ஆனந்த பரவசமும் அப்படியே கண்முன் வந்து நிற்கும்.

கையால் தொட்டுப் பார்க்கும் அளவுக்கு நம் எதிரில் வந்து நம்மை ஒட்டியே நிற்கும் அவை. இசைப்பயிற்சி இல்லையே,

எப்படிப் பாடுவது பாடலை, பாட வருமா பாட்டு என்றெல்லாம் யோசிக்கக்கூடாது.

இசை என்பது எல்லோரிடமும் இருக்கிறது. மூச்சு எப்படி இயல்பாய் இருக்கிறதோ அப்படியே இசையும் எல்லோரிடமும் இயல்பாய் இருக்கிறது.

பாடினால் போதும் தானாக வந்து விடும் இசை. பாடப் பாட இசையானது பழுத்துக் கனிந்து தேன் சொட்டும்.

குரல் என்று ஒன்று இருந்தால் இசை இருக்கத் தானே செய்யும். அதுதான் எல்லோரிடமும் இருக்கிறதே!

தங்களிடம் இசை இருக்கிறது என்பதை ஒருவரும் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே இசைக்குப் பயிற்சி என்று ஒன்றை ஏற்படுத்தினார்கள்.

பாடலைப் பாட விடாதபடி தடுத்தார்கள். சுரங்களைப்படி, என்றார்கள். அதில் மாத்திரைகளைப் போடு என்றார்கள். பிறகு அதைப் பிடித்துக் கொண்டே ஏறு என்றார்கள். பிறகு இறங்கு என்றார்கள். ஏறும் போதும் இறங்கும் போதும் ஒரு ஒரு உதறு உதறு என்றார்கள்.

பிர்க்காக் களைப்போடு, சங்கதிகளை அள்ளி வீசு என்றும் சொல்லிக் கொடுத்து விட்டார்கள்.

இவ்வளவையும் தாண்டி எப்படி இசை வரும். பாட்டில் தானே சங்கதி இருக்கிறது. பிர்க்கா இருக்கிறது, சுரங்கள், தானங்கள், கணக்குகள் எல்லாம் இருக்கின்றன.

அப்படியானால் பாட்டைத் தானே பாட வேண்டும். பாடப் பாட பிர்க்கா முதலியன வரத்தானே செய்யும் என்றால் கேட்க மாட்டார்கள் பாகவதர்கள்.

கேட்டால் பிழைப்பு என்னாவது, சங்கீத சாம்ராட் என்கிற அந்தஷ்து அதிகாரம் எல்லாம் போய் விடுமே! அதனால் எடுத்த எடுப்பிலேயே இலக்கணத்தைச் சொல்லிக் கொடுத்து விட்டார்கள். இலக்கணம் பையனை விடுவதாக இல்லை. பையனும் அப்படியே. பாடலையே பாட விடாதபடி செய்து விடுகிறார்கள் பாகவத சிரோன்மணிகள். அப்படி ஒரு மூக்கணாம் கயிறு இலக்கணம்.

இனி, தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த பேராசிரியர் கீழ்க்கண்டபடி கேட்டார். அதற்கு விளக்கமும் வேண்டும் என்றார்.

''இதோ இருக்கிறானே இவன் என் உறவினன். தேவாரம் பாடும் பரம்பரையில் வந்தவன். பொறி இயல் துறையில் படித்துப் பட்டம் பெற்றுள்ளான். ஆனால் சினிமாவில் வருகிற மெல்லிசை போதும் என்கிறான். பாடலை சாகித்யமாகவோ, பதமாகவோ பாடுவது ஏன்? என்னத்துக்கு என்கிறான். அந்த இசை யாருக்கு வேண்டும் என்றே கேட்கிறான்'' இதற்கு என்ன காரணம் என்றார்.

''இந்தப் பையன் ஒருவன் மட்டும் அல்ல. இவனைப் போலவே பல இளைஞர்கள் இருக்கிறார்கள். ஐம்பது அறுபது சதம் பேர் இருக்கிறார்கள். அந்த அளவு காணாது, நூற்றுக்கு நூறு சதம் பேர் இந்த இளைஞர் போல வர வேண்டும்'' என்று பதில் சொல்ல நேர்ந்தது.

பேராசிரியர் திகைத்துப் போனார். அவர் திகைப்பை நீக்க வேண்டுமே?

''சபாக்களிலோ, ஏனைய இசை அரங்குகளிலோ பாகவதர்கள் பாடுகிற பாடல்களுக்கு ஏதாவது விபரம் தெரிகிறதா? மணிக்கணக்காகப் பாடுகிறார்களே அதில் கடுகளவு அர்த்தமாவது தெரிகிறதா? வெறும் சத்தத்தை கூப்பாட்டை சங்கீதம் என்று நீங்கள் தலையாட்டலாம். அடடா, பேஷ் பேஷ் என்று கும்மாளி போடலாம். ஆனால்

''பாலிருக்கும் பழமிருக்கும்'' பசி இருக்காது
பஞ்சணையில் காற்று வரும் தூக்கம் வராது

என்பதை இசை என்று ஏன் சொல்லக் கூடாது? பொருளோடு வந்து உணர்ச்சியைத் தொடுகிற இந்த இசையை ஏன் இவன் பாராட்டக் கூடாது. இதுதான் இசை, இது போதும் எனக்கு என்று ஏன் அவன் அடித்துச் சொல்லக் கூடாது என்று கேட்டேன்.

இப்படி நான் சொல்லச் சொல்ல B.E. பட்டதாரிக்கு ஒரே எக்களிப்பு. பேராசிரியரும் மெள்ள மெள்ளப் பார்க்க ஆரம்பித்து விட்டார் விஷயத்தை.

''உழுகிறவன், வண்டி ஓட்டுகிறவன், மீன் பிடிக்கிறவன், வெளுக்கிறவன், பெண்கள், குழந்தைகள், மாடு மேய்க்கிறவன், பண்டாரம், பரதேசி எல்லோருமே பாடுவார்கள்.

வேலை செய்து கொண்டிருக்கும் போதே பாடுவார்கள். அப்படிப் பாடிப் பாடியே இசையானது பண்பட்டது. மெருகேறியது.

இப்படி வீட்டு வீட்டுக்கு முழக்கமிட்டுக் கொண்டிருந்தது இசை. அதை யார் ஒழித்துக் கட்டியது? நாம் தானே?

இசை என்றால் அதை ஒரு பாடமாக எடுத்துப் படிக்க வேண்டும். குரு சிஷ்ய முறையிலேயே படிக்க வேண்டும். பல வருடங்கள் படிக்க வேண்டும். படித்து முடித்த பிறகு தான் பாட வேண்டும். அப்படிப் பாடினால் தான் இசை என்று நாம் தானே சமாதி கட்டினோம் இசைக்கு.

மனம் விட்டுச் சிரியுங்கள் என்கிறார்களே தவிர, மனம் விட்டுப் பாடுங்கள் என்று ஒருவராவது சொல்வதுண்டா?

பாடிப் பக்குவப்படாத மனம் எப்படிச் சிரிக்க? 'மூச்சை இழுத்து விட வேண்டும். ஆனால் எப்படி இழுத்து விட வேண்டும். எப்படி இழுத்து விடக் கூடாது மூச்சை? என்று பாடம் கேட்டுப் படிக்கக் கூடாது. படித்தால் உருப்படாது மூச்சு. பாட்டையும் பாட வேண்டும். எப்படிப் பாட வேண்டும் பாட்டை என்று பாடம் படிக்கக்கூடாது.

இவ்வளவும் சொல்லி முடித்த பிறகு தான், பேராசியருக்கு, முன்னாள் துணைவேந்தருக்கு மூச்சு வந்தது.

ஆகவே திருமூலர் பாடல்களைப் பாட வேண்டும். பாடி அனுபவிக்க வேண்டும். தமிழ்ப் பாட்டு ஒவ்வொன்றும் பாடுவதற்கு என்றே வந்தவை தான். ஒவ்வொரு பாடலையும் பாடிப் பாடியே அனுபவிக்க வேண்டும். பயப்படக் கூடாது. தமிழனாகப் பிறந்து தமிழில் உள்ள பாடலைப் பாடவே ஒருவன் பயப்படுகிறான் என்றால் அவன் மனுசனா? உருப்படுவானா அவன்?

அந்த அளவுக்கு மக்களைக் கோமாளிகளாக்கி விட்டது இசைப்பயிற்சி. அதாவது பயிற்சி இசை.

இனி சமயத்துறையை எடுத்துக் கொண்டால் அதிலும் மோசடிகளுக்கு அளவில்லை சித்தாந்த நிபுணர் ஒருவர் அவரைத் தேடி இன்னொரு பெரிய சித்தாந்த நிபுணர் வந்தார். இருவரும் சித்தாந்தத் தோழர்கள்.

நிபுணர் வீட்டில் மதிய உணவு. வீட்டம்மாள் பரிமாறுகிறார். பொரியலை வைக்க வேண்டிய இடத்தில் அவியலை வைத்து விட்டார் அம்மையார். அதே போல அவியலை வைக்க வேண்டிய இடத்தில் பச்சடியை வைத்து விட்டார்.

அவ்வளவுதான் விருந்தாட வந்த சித்தாந்தச் செம்மலுக்கு முகம் கோணி விட்டது. ''என்ன இது? ஆசார விரோதமாக இருக்கிறதே'' என்றே கேட்டு விட்டார்.

விருந்தளிக்கும் சித்தாந்தச் செம்மல் சொன்னார்? ''இன்று என்ன நாள்? அம்மாவாசை கழிந்த ஐந்தாம் நாள். இந்த நாளில் இப்படித்தான் படைக்க வேண்டும். பண்டங்களை தேவர்களுக்கு அதுதான் உவப்பைக் கொடுக்கும்'' என்று.

''ஓகோ, அப்படி ஒரு விதி இருக்கவா செய்கிறது? இவ்வளவு நாளும் தெரியாதே இது. கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு'' என்று தோல்வியை ஏற்றுக் கொண்டார் விருந்தாட வந்த சித்தாந்த பூஷணம்.

இப்படி அவரவர் இஷ்டத்துக்கு ஏற்றபடி, சௌகர்யத்துக்கு ஏற்றபடி, தேவைக்குத் தக்கப்படி சேர்த்துச் சேர்த்து வைத்த மூட்டைகள் வண்டி வண்டியாய்க் கிடக்கின்றன சமய தத்துவத்தில். சாஸ்திரங்களில் முக்கால்வாசி இந்தக் கோமாளித்தனந்தான்.

கோமாளித் தனங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. பாடல் தான் நமக்குத் துணை. பாடலுக்குத் துணை நாம் தான் என்று நேரடி உறவு வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி உறவு வைப்பதற்கு வழி காட்டுகிறது. திருமூலர் கண்ட திருக்கோவில் என்னும் இந்நூல்.

படிக்க வேண்டும். பயன் பெற வேண்டும். அதுவே பிரார்த்தனை.

இப்படிக்கு,

**வித்வான். ல. சண்முகசுந்தரம்**

(நூலாசிரியர்)

## பொன்மொழி

**தீப. நடராஜன்** *தென்காசி*

அன்புள்ள நண்பர் ல.ச. சார் அவர்களுக்கு,

வணக்கம்,

இந்த வீட்டில் வந்து பிறந்ததை நினைத்து எப்போதுமே பெருமையும், நன்றியுணர்வும் கொள்பவன் நான்.

ஒவ்வொருவரும் தம் பிறப்பையும், சுற்றத்தாரையும் கருத்தில்க் கொண்டால் நல்லெண்ணம் ஏற்படவே செய்யும் என்று தெரிகிறது.

இப்போது கடந்த ஆறுமாத நிகழ்ச்சிகள் இந்தப் பிறவி பற்றி அதிகமாகச் சிந்திக்க வைக்கிறது.

இந்த பரந்த உலகில் ஒரு தூசி. அதற்குக் கிடைத்த ஒத்த உணர்வுகள் தான் எத்தனை, எத்தனை! நினைக்க, நினைக்க உள்ளம் பூரிக்கிறது.

இறையருளை என்னென்று சொல்ல

சோதனையின் உச்ச நிலையில் எங்களைக் கொண்டு போய் வைத்தான். அந்த நிலையிலும் நாங்கள் – குறிப்பாக ரகுநாதனும், முத்தம்மாளும், நானும் — மனங் கலங்காது, தைரியத்தோடு நின்றோம் என்றால் அது எங்களாலா?

இறைவன் அருளும் வீட்டின் பாதிப்பும் அல்லாமல் வேறு இல்லை.

'நடராஜன்' என்று உங்கள் குரல் கேட்டால் அது வெறும் அழைப்பா? அன்பும், ஆதரவும், அரவணைப்பும் கலந்த கலவை.

எந்த நேரத்தில் பெரியவர்கள் வேண்டுமோ அந்த நேரத்தில் வேண்டும். உங்கள் உடல் நலக்குறைவையும் ஒதுக்கி வைத்துவிட்டு வந்தது தான் எனக்கு பலம்.

சங்கரியும் ரகுவும் இங்கு வந்து ஒரு மாதம் ஆகிறது.

இன்னும் உடல் நிலை பாதிப்பு முழுமையாகக் குணத்துக்கு வரவில்லை, காலில் சீழ் சிறிது வந்து கொண்டுதான் இருக்கிறது. எவ்வளவோ குறைந்திருக்கிறது. நாள் செல்லச் செல்ல நல்ல குணம் கிடைக்கும் என்று திருச்சி டாக்டர் சொல்லி அனுப்பியிருக்கிறார்.

மனசைப் பற்றி என்ன சொல்ல முடியும்? காலத்தின் கையில் நாம் இருக்கிறோம்

செல்லையா – உமாமஹேஸ்வரி கலியாணம் அடக்கமாக கார்த்திகை மாதம் குமரர் கோவிலில் நடந்தது. இரு வீட்டார் மட்டுமே கலந்து கொண்டோம்.

சென்னை வடபழனிப் பகுதியில் குடித்தனம். சிவகாமி உடனிருக்கிறாள்.

லஷ்மியின் உடல் நிலை நல்ல சௌகரியம் அடைந்திருக்கும் என்று நம்புகிறேன்

மாடசாமி எப்படி இருக்கறார்?

பிள்ளைகளெல்லாரும் நலந்தானே?

என் இரு கட்டுரைகளும் உங்கள் பார்வைக்கு வந்திருக்குமா என்று தெரியவில்லை.

ராஜாஜியும் – டி.கே.சி. யும் எஸ்.வி.எஸ் நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது (1993). பின்பு "ஓம் சக்தி" இதழில் அச்சேறியது.

இன்னொன்று வானொலியில் ஒலித்தது.

*உங்கள் அன்புக்குரிய*

**தீப. நடராஜன்**

---

*குறிப்பு* : ரசிகமணி டி.கே. சியின் பேரன் திரு. தீப. நடராஜன். நான்கு மாதத்துக்கு முன் அவர் குடும்பமே கார் விபத்தில் சிக்கியது. உற்ற உடன் பிறப்பு, பேரன் முதலிய செல்வங்களை - இழக்கக் கூடாத செல்வங்களையே இழந்து நின்றார் நடராஜன்.

அந்த நிலையிலும் நிலைகுலையாமல் உயர்ந்தோங்குகிறது அவர் மனம். அப்படி நிற்பது தானே மெய்யுணர்வு.

*ஆசிரியர்.*

# திருமூலர் கண்ட திருக்கோவில்

## குடி இருந்த கோயில்

## (1)

பேரண்டமே ஒரு கட்டிடந்தான். அண்டங்கள் எல்லாம் அப்படித்தான்.

சின்னஞ்சிறிய அணுகூட ஒரு கட்டிடந்தான். நுட்பத்துக்கும் நுட்பமான பரமாணுக்கூட அணுவுள் அணு என்கிறார்களே அது கூடக் கட்டிடந்தான்.

ஆனால் இவை எல்லாம் யாரோ ஒருவரால் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் இல்லை. கொத்தனாரோ, தச்சரோ எழுப்பிய கட்டிடங்கள் இல்லை.

தாமே முளைத்தெழுந்த கட்டிடங்கள் இவை. சுயம்புலிங்கம் என்று சொல்வார்களே அப்படிப்பட்ட சுயம்புலிங்கங்கள் தாம் பரமாணுவிலிருந்து பேரண்டம் முடிய உள்ள அத்தனை கட்டிடங்களும்.

பரமாணுவே கட்டிடம் என்றால் மனிதன் மட்டும் என்ன, ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மனுசியும் கட்டிடந்தான்.

மரம், செடி, மலர், இலை, பறவை, விலங்கு, கல், நீர், காற்று எல்லாமே கட்டிடங்கள் தாமே.

காற்றுக்குள் அனலம், நீரகம் என்றெல்லாம் அடுக்கடுக்காகப் பொதிந்துதானே வைத்திருக்கிறது.

கட்டிடம் என்றால் அடுக்கு மாடிகளைக் கொண்ட சாதாரணக் கட்டிடங்கள் அல்ல இவை. கூட கோபுரங்களோடு கூடிய மாட மாளிகை மட்டும் இல்லை இவை.

இந்தக் கட்டிடம் ஒவ்வொன்றும் கோவில்கள்.

இறைவன் எழுந்தருளிக் கொலு வீற்றிருக்கும் அற்புதக் கோவில்கள் இவை.

கருவறை என்ன, அதைச் சுற்றி உட்பிரகாரம் என்ன, வெளிப்பிரகாரம் என்ன, கோபுரம் என்ன, ஆசார வாசல் என்ன, மதில்கள் என்று சொல்லக்கூடிய கல்க்கோட்டைகள் என்ன, சூடத்தட்டிலிருந்து கண்டா மணிகள் வரை அவ்வளவும்

பொலிந்து இலங்குகிற திருக்கோவில்கள் தாம் ஒவ்வொரு பொருளும்.

கருவணு, நுண்ணனு, மின்அணு என்று, விதவிதமான இடைவெளி விட்டு, அளவிட முடியாத வேகத்தில் ஒவ்வொரு சின்னஞ்சிறிய அணுவும் சுழல்கின்றன.

எத்தனை வேகத்தில் சுற்றினாலும் அணுவின் கட்டுமானம் சிதைவதில்லை. கட்டி வயிரமாய் இருக்கிறது ஒவ்வொரு அணுவும்.

இனி, மின்னணு, கரு அணு முதலிய துகள்களே சுழல்கின்றன. அதனால் அந்தத் துகள்களை உள்ளடக்கிய அணுவும் சுழல்கிறது.

அணுக்களே சுழல்கின்றன என்றால் அணுக்களால் ஆகிய ஒவ்வொரு பிண்டமும் சுற்றிச் சுற்றிச் சுழலத்தானே செய்யும்.

வானம், பூமி, மலை, கடல், சூரியன், சந்திரன், இடி, மின்னல், காற்று, மழை, நட்சத்திரம் எல்லாமே சுழன்று சுழன்று சுற்றிக் கொண்டே இருக்கின்றன.

அப்படிச் சுழன்று சுற்றுவதுதான் நடனம் ஆனந்த நடனம். இறைவனுடைய ஆனந்தக் கனவு என்னும் அற்புத நடனம்.

ஆட்டமும் ஓட்டமும் எவ்வளவிருந்தாலும் மஞ்சாடி கூடச் சிந்தாது. சிதறாது. அப்படி ஒன்றோடொன்று பொருந்தி நிற்கின்றன ஒவ்வொரு கோயிலும். அதாவது ஒவ்வொரு வஸ்துவும்.

இனி நமது எண் சாண் உடம்பை எடுத்துக் கொண்டால் எத்தனை தத்துவங்கள் இதில். அத்தனையும் ஒத்து நின்று செயல்படுகின்றன. அற்புதமாய்ச் செயல்படுகின்றன.

நம்முடைய சுண்டு விரலை எடுத்துக் கொண்டாலே போதும். அது செய்கிற அற்புதத் திருவிளையாடல்களை எந்த ஒரு கம்ப்யூட்டராலும் செய்ய முடியாது என்பது தெரியும்.

கண்ணுக்குள் தான் எத்தனை விந்தைகள். கருவிழி என ஒன்று, அதனுள் ஊசி நுழைய முடியாத ஒரு துவாரம். அதற்குள்ளே மலை நுழைகிறது. கடல் நுழைகிறது. வானம், பூமி எல்லாமே நுழைந்து போய் விடுகின்றன.

இவை எங்கே நுழைகின்றன? அந்தச் சின்னஞ்சிறு ஓட்டைக்கு உள்ளே இருக்கும் ஒன்று அவ்வளவையும் தன்னுள் இழுத்துக் கொள்கின்றன.

அற்புதம் என்றால் இதுவல்லவா அற்புதம். கண் மட்டுமா, நாக்கு, மூக்கு, செவி, தோல், எலும்பு, ரத்தம், குடல் எல்லாமே அற்புதந்தான்.

நகம், ரோமம் கூட அற்புதந்தான்.

இந்த அற்புதங்களைத் தான் தத்துவங்கள் என்று முன்னோர்கள் சொல்கிறார்கள்.

அத்தனை தத்துவங்களும் நெறி முறை பிறழாமல், ஒன்றோடொன்று மோதாமல் செயல்படுகின்றன.

அண்டத்திலிருந்து பிண்டம் வரை அவ்வளவிலும் ஒன்றாயிருந்து செயல்படுகின்றன.

இனி, ஒரு பெண்ணின் வயிற்றுள் குழந்தை ஒன்று கருவாகி உருப்பெறுகிறதென்றால் உருப்படியாகி அங்கிருந்து உதித்து வருகிறதென்றால் அந்த உதரத்தை அடி வயிற்றைக் கோயில் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது.

குடியிருந்த கோவில் என்று தானே சொல்கிறோம். வயிறே கோயில் என்றால் தாயும் கோயில் தான். தந்தையும் கோயில்தான். நாமும் கோயில் தான். பேரண்டம் முழுவதும், பேரண்டத்தில் உள்ள அவ்வளவும் கோயில்களே தான்.

வெறும் கோவில்கள் அல்ல. இறைவன் எழுந்தருளி இருக்கும் கோவில்கள். அவன் ஆனந்த நடனமாடிக் கொண்டே இருக்கும் கோவில்கள் தாம் அவ்வளவும்.

இனி, அது இது என்று ஒவ்வொன்றையும் உற்றுணர்ந்து பார்க்க முடியாது நம்மால். ஆனால் நம்மை நாம் பார்க்கலாம்.

நம்மை நாம் பார்ப்பது என்றால் என்ன? நம்முடைய வாழ்க்கை தான் நாம். நம்முடைய நினைப்பு, பேச்சு, செயல், விளைவு இவை தாம் நாம். இவற்றைத் தவிர வேறு என்ன இருக்கிறது நம்மிடம்!

இவற்றை நாம் பார்க்க வேண்டும்.

எண்ணம், பேச்சு, செயல் எல்லாம் எங்கே இருந்து உதிக்கின்றன?

இந்த எண சாண் உடம்பிலிருந்து தானே, அதனால் நம் உடம்பை நாம் பார்க்க வேண்டும். நன்றாக ஆர அமர இருந்து பார்க்க வேண்டும். துருவித்துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டும் நம் உடம்பை.

அதாவது உடம்பில் நிகழும் அற்புதங்களைப் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருக்கும். கம கம என்று மணக்கும். சிவ மணமே கமழும்.

திருமூலர் அப்படிப் பார்த்தவர்

தன்னறிவு, மெய்யறிவு என்பவை எல்லாம் தன்னை உணர்தல் தான் என்று தெளிந்தவர். நம்முடைய உடம்பையும், அந்த உடம்பு கரு உயிர்த்த உள்ளத்தையும் பார்ப்பது தான் ஞானம். அந்த ஞானம் பூத்த நறுமலர்தான் தெய்வம் என்பதைக் கண்டு தெளிந்தவர் திருமூலர்.

இதை அவருடைய வாக்கு மூலத்தைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம் நாம்.

உள்ளம் பெருங்கோயில்,
ஊனுடம் (பு) ஆலையம்,
வள்ளல்ப் பிரானார்க்கு
வாய்கோ புரவாசல்,
தெள்ளத் தெளிந்தார்க்குச்
சீவன் சிவலிங்கம்;
கள்ளப் புலன்ஐந்தும்
காளா மணி விளக்கே.

கண்டா மணி, நந்தா விளக்கு எல்லாம் செவி, கண் முதலிய புலன்கள் தாம்.

---

உள்ளம் - மனம், பெருங்கோயில் - கருவறை, வள்ளல் பிரான் - இறைவன் தெள்ளத் தெளிந்தார் - ஞானிகள், காளாமணி - கண்டாமணி, விளக்கு - நந்தா விளக்கு, தூண்டாத தெய்வச் சுடர் விளக்கு.

## (2)

மாணிக்க வாசகரும் திருமூலரும் கைகோர்த்த படியல்லவா பேசுகிறார்கள்.

இனி, புழு, பூச்சியிலிருந்து யானை வரை, மனிதர்கள் உள்ளிட்ட எல்லா உயிர்களுக்கும் வயிறு இருக்கின்றது. வாயும் இருக்கின்றது.

புல், பூண்டு முதல் பெரிய விருட்சங்கள் வரை எல்லாவற்றுக்கும் கூட அப்படித்தான். வாயும் உண்டு, வயிறும் உண்டு.

பசி, தாகம், காதல் இவைகளோடு பொதிந்து வைத்திருக்கிறது உயிரை. அதனால் தான் வயிறு உண்டாகியது. வாயும் உண்டாகியது.

பல், நாக்கு இவைகளோடு வாய் உண்டானதே உணவை உண்பதற்குத்தான். மென்று குதப்பி வயிற்றுக்குள் உணவைத் தள்ளிவிட உண்டான வாய் (நாக்கு) மெள்ள மெள்ளப் பேசக் கற்று விட்டது. பாடுவதற்கே முனைந்து முன்னேறி விட்டது.

உயிரென்றால் பசி மயம். அதற்கு உணவு வேண்டும். உணவு தான் உயிருக்கு உற்ற உயிர். அதனால் கடவுளையே உணவு மயம் என்று சொல்கிறார்கள்.

---

குறிப்பு :- ஞானிகள் எல்லோருமே, இப்படித்தான். அதாவது தங்களைப் பார்த்தே உலகைப் பார்த்தார்கள். அதனால் தான் தெளிவும் உறுதியும் சேர்ந்தெடுத்த அவதாரமாகத் திகழ்ந்தார்கள்.

இதோ மாணிக்க வாசகர் சொல்வதைப் பாருங்கள்

புன்புலால் யாக்கை
புரை புரை கனியப்
பொன்னெடும் கோயிலாப்
புகுந்(து), என்
என்பெலாம் உருக்கி,
எளிமையால் ஆண்ட
ஈசனே! மாசிலா
மணி யே!

அன்ன மயம் என்று

அறிந்து கொண் டேனே!

என்கிறார் திருமூலர்.

ஐயா என்றும், அரசே என்றும் சதா போற்றிப் பரவுகின்றன பாடல்கள் இறைவனை. நினைத்தால் போதும் என்னவென்று கேட்பான் இறைவன். அப்படி அணுவுக்குள் அணுவாய் நம்முள் நிறைந்திருக்கிறான் பெருமான்.

என்னுள் இருக்கும் இளையா விளக்கினை அப்படிப்பட்டவனுடைய திருமேனி அமுதந்தான் உணவுதான்.

இனிப் பாடல்

உன்னும் அளவில்
உணரும் ஒருவனை,
பன்னும் மறைகள்
பயிலும் பரமனை,
என்னுள் இருக்கும்
இளையா விளக்கினை,
அன்ன மயம் என்று
அறிந்து கொண்டேனே!

---

உன்னும் அளவில் - நினைத்த உடனேயே. உணரும் ஒருவன் - தெரிந்து செயல்படுகிறவன். பன்னும் மறை - பாடும் பாடல்கள். இளையா விளக்கு - அணையாத ஜோதி. அன்ன மயம் - ஆகாரமயமாக.

உணவுமயமாக இருக்கிறார் கடவுள். நாமோ பசிமயமாக இருக்கிறோம்.

கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் உயிர் வர்க்கம் அவ்வளவுமே பசிமயமாகவும் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று உணவு மயமாகவும் இருக்கின்றன என்பது விளங்கி விடும்.

குறிப்பு:-''ஆற்றுக்குள் இருந்து அரகரா என்றாலும் சோற்றுக் குள்தான் இருக்கிறான் சொக்க நாதன்'' என்னும் பழமொழி அருள் வாக்குத்தான்.

மண் ஒன்று - மூலம் ஒன்றுதான். இருவகைப் பாத்திரம் - ஆண், பெண். திண் என்று இருந்தது - தனித்தனியான நிலை. ஆனாலும் தாயாக இருந்த பெண்ணும் தந்தையாக நின்ற ஆணும் போய் விடுகிறார்கள். மழை நீரில் மண் கரைவது போலவே கரைந்து விடுகிறார்கள். ஏன் அவர்களும் தாய் தந்தையரை நாடியே போய் விடுகிறார்கள்.

## (3)

ஏன் பசி மயமாக இருக்கின்றன உயிர் வர்க்கம்? குலவிருத்திக்காகத்தான். பசி இல்லை என்றால் உயிர் வர்க்கம் பட்டுப் போகும். தழைக்கவே தழைக்காது.

காதலும் ஒரு வகையான பசிதானே!

உயிர்க்குலம் புதிது புதிதாகத் தழைக்கத் தழைக்கத் தான் முன்னேற முடிகிறது. வளர்ந்து கொண்டே போகிறது.

இந்த உயர்விலும் வளர்ச்சியிலும் இறைவனுக்கு ஒரே கொண்டாட்டம்.

சீட்டாட்டம் என்றால் சீட்டுக்களை ஒன்று சேர்ப்பதும், கலைப்பதும் ஆகவுமே இருக்கும்.

அப்படியே உயிர்க்குலத்தை சேர்ப்பதும், கலைப்பதுமே இறைவனுக்குத் திருவிளையாடல்.

அதற்காகவே பசியைச் சேர்த்து வைத்து விட்டான் உயிரோடு.

அதற்காகவே ஆண் வேசம் போடுகிறான். பெண் வேசம் போடுகிறாள்.

காதல், குடும்பம், குலவிருத்தி என்று போய்க் கொண்டே இருக்கிறது நாடகம்.

அடிக்கடி திரை விழுகிறது. காட்சிகளும் மாறி மாறி வருகின்றன.

இனிப் பாடல்

மண் ஒன்று கண்டீர்!
இருவகைப் பாத்திரம்!
திண் என்(று) இருந்தது,
செய்வினை சேர்ந்தது,
விண் நின்று நீர் விழின்
மீண்டும் மண் ஆனால்ப் போல்
எண் இன்றி மாந்தர்
இறக்கின்ற ஆறே.

## (4)

ஆண், பெண் வேஷம் போடுவதோடு நின்று விடவில்லை நாடகம். காந்தமும் காந்தமும் ஒட்டுவதற்கு முனைவது போல ஆணும் பெண்ணும் ஒட்டுவதற்கு முளைகின்றன. ஒன்றை ஒன்று ஆர்வத்தோடு கனிந்து நோக்குகின்றன. பழகுகின்றன. தொட்டுப் பார்க்கின்றன. உறவாடித் திளைக்கின்றன.

சிப்பிக்குள் முத்து விளைவது போல பெண்ணின் வயிற்றில் குழந்தையாய் வந்து துளிர்த்துத் தளிர்க்கிறது தெய்வ கடாட்சம்.

இதெல்லாம் தானே நாடகம்.

இதற்கும் மேலே இருக்கிறது நாடகம். நினைத்தாலே வெட்கமாக இருக்கும். அப்படி ஒரு கோமாளி நாடகம்.

அது என்ன நாடகம்

பத்து மாதம் உயிருக்குயிராக வைத்துப் பாதுக்காக்கிறாளே தாய். அவளுக்குத் தான் வைத்திருக்கும் குழந்தை எப்படி வந்தது? ஏன் வந்தது? எங்கிருந்தது வந்தது என்று தெரியுமா? இல்லை அது எப்படி எப்படி தன்னுள் உருவாகி உருப்படியாகிறது என்று தெரியுமா? அதுவும் போகட்டும். அது பிறந்து வெளியில் வரும் வரை அது ஆணா, பெண்ணா என்பது கூடத் தெரியுமா?

வாங்கிப் பாதுகாக்கிற தாயின் நிலை இப்படி என்றால் இந்தா பிடி என்று கொடுத்தானே தந்தை அவன் நிலையும் அப்படித்தான். அவனுக்கும் ஒன்றுமே தெரியாது.

எதைக் கொடுக்கிறோம், ஏன் கொடுக்கிறோம், எப்படிக் கொடுக்கிறோம் என்று ஒன்றுமே தெரியாது. என்ன செய்கிறோம் என்று தெரியாமலே செயல்படுகிறது உலகம்.

இதை விடக் கோமாளித்தனம் உண்டா?

அப்படி விளையாடுகிறான் இறைவன். அந்த விளையாட்டைத் தான் மாயை என்கிறோம்.

இனிப் பாடல்

இட்டான் அறித்திலன்,

ஏற்றவள் கண்டிலள்,

தட்டான் அறிந்தும்

ஒருவர்க்(கு) உரைத்திலன்

பட்டாங்கு சொல்லும்

பரமனும் அங்குளன்;

கெட்டேன் இம்மாயையின்

கீழ்மை எவ் வாறே!

## (5)

இந்த மாயை இதோடு போனதா? இல்லை. தொடர்ந்த வண்ணமாகவே இருக்கிறது.

பத்து மாதம் சுமந்து பெற்றதோடு நின்று விடவில்லை காரியம். பெற்றெடுத்த சிசுவை பேணி வளர்ப்பதிலும் தொடர்கிறது. தன்னைப் போலவே குழந்தையையும் ஆளாக்கி வளர்த்து விடுவதில் தாயும் தந்தையும் போட்டி போட்டுச் செயல்படுகிறார்கள்.

தகப்பனை விடத் தாயக்கு அதில் ஆர்வம் அதிகம். உயிரைக் கொடுத்து இப்படி வளர்க்கிறோமே ஏன் என்று தாயும் யோசித்ததில்லை. தந்தையும் யோசித்ததில்லை. ஆனாலும் வளர்க்கிற காரியம் விடாமல் தொடர்ந்து வருகிறது.

அதுதான் உயிர்க்குலத்தைப் பாதுகாக்கிறது. அழிவே இல்லாதபடி பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

---

இட்டான் - தந்தை. ஏற்றவள் - தாய்; தட்டான் - கண் என்றும் கா தெள்ளும், மூக்கென்றும், நாக்கென்றும் வைத்து உருப்படியாக்கும் சிருஷ்டி தத்துவம். அதற்கு விஷயம் தெரியும் ஓரளவுக்கு. ஆனால் வாய் திறந்து சொல்லாது அது. அப்படி ஒரு ஊமை அது.

பட்டாங்கு சொல்லும் பரமன் - அப்படி அப்படியே விஷயத்தை ஒன்று விடாமல் எடுத்துக் காட்டக்கூடியவன் இறைவன்தான். கூடவே தான் இருக்கிறான் அவன். அவனிடம் யார் போய்க் கேட்க? இத்தனை கூத்து நடந்தாலும் விபரம் எதுவுமே தெரியவில்லை. நல்ல வேடிக்கை (மாயை) தான் இது!

இனி, குயிலானது தன் முட்டையை எப்படியோ காக்கையின் கூட்டுக்குள் போட்டு விடுகிறது. காக்கையும் தன்னுடைய முட்டை தான் என்று அடை காக்கிறது. குஞ்சாகவும் வந்து விடுகிறது. அதன் பிறகு கொஞ்ச நாளைக்கு அது தன் குஞ்சுதான் என்று விபரம் தெரியாமல் வளர்க்கவும் செய்கிறது காக்கை.

குயில் குஞ்சு சிறகடித்துப் பறந்து போகிற நிலை வந்ததும் தான் அடடா, இது எங்கிருந்து வந்தது என்று வெட்கப்படுகிறது காக்கை.

எல்லாம் மாயைதான் விளையாட்டுத்தான்
குயிற்குஞ்சு முட்டையைக்
காக்கைக்கூட் டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை
வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லை போக்கில்லை
ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை
வளர்க்கின்ற வாறே!

## (6)

பெண்ணானவள் அழகாக இருக்கிறாள். அவள் முகத்தில் ஒரு களை - தெய்வக்களையே எப்பொழுதும் தக தக என்று ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அவளுடைய முகம், கண், வாய், பல், மேனி, பார்வை, பேச்சு எல்லாமே ஜகஜோதியாய் ஒளி வீசுகிறது.

ஒளி என்றால் சாதாரண ஒளி இல்லை. தெய்வ ஒளி. அப்படி ஒரு ஒளிக்கே ஊற்றுக் கண்ணாய் இருக்கிறாள் பெண்.

---

குஞ்சு முட்டை - குஞ்சை உள்ளே வைத்திருக்கும் முட்டை. (குயிலின் முட்டை) அயிர்ப்பின்றி - சந்தேகப்படாமல். இயக்கில்லை - விளம்பரப்படுத்தாமல். போக்கு இல்லை - தடபுடல் பண்ணாமல். அதாவது அமைதியாக முறைப்படி குஞ்சு பொரிக்கிறது காக்கை. வளர்க்கவும் செய்கிறது காக்கை. எதை? குயில் முட்டையையே.
ஏன் என்பது இல்லை. காரணம் தெரிந்தா செய்கிறது காக்கை. விபரம் தெரியாமலே போய்க் கொண்டிருக்கிறது காக்கையின் காரியம். அண்டபிண்ட சராசரம் அவ்வளவும் அப்படியே.

காரணம் என்ன ?

பெண்ணானவள் பெண்மையை எப்படிப் பாதுகாக்கிறாளோ, அப்படியே தாய்மையையும் சேர்த்து வைத்துப் பாதுகாக்கிறாள்.

தாய்மையின் காரணமாகவே பொறுப்பு வந்து விடுகிறது. பொறுமை, கருணை, அடக்கம், பண்புடைமை நாணுடைமை எல்லா வற்றுக்கும் களஞ்சியமாக இருக்கிறாது தூய்மை.

பெண்ணினுடைய தாய்மைதான் அவளுடைய பெண்மைக்கே ஒளி கொடுக்கிறது. அழகு ஊட்டுகிறது. அழகுக்கு அழகே ஊட்டிவிடுகிறது.

மன்னுயிர் வர்க்கம் உண்டாக - நிலைத்து நிற்க அவளுடைய வயிறல்லவா மூலப் பெருங் கோயிலாக விளங்குகிறது.

இல்லை என்றால் உலகின் கதி அதோ கதிதானே. திருமூலர் இந்த உண்மையை அனுபவித்து அனுபவித்து ஆனந்திக்கிறார். ஆனந்தம் எப்படி வருகிறது கவியில்?

அண்ட பிண்ட சராசரம் அவ்வளவுமாக உரு வெடுத்துவள் இறைவன் தான். அவ்வளவுக்கும் கட்டுப்படாமல் அவற்றை எல்லாம் தாண்டியும் நிற்கிறான். அவன் ஆனாலும் பெண்களின் கருணையைவிட்டு, பொறையுடையை விட்டு, அவைகளால் ஆன பொலிவை விட்டு விட்டு அவனால் விலகி ஒட முடிய வில்லை.

பெண்ணின் அழகோடு அழகாய்க் கட்டுண்டு கிடக்கிறானாம் பெருமான்.

இப்படி அனுபவித்து ஆனந்தத்தில் துள்ளி மகிழ்கிறார் திருமூலர். திருமூலருடைய துள்ளலும் எக்களிப்பும் எப்படிக் கவியாக வருகிறது என்று பாருங்கள்.

அமரத் துவம் கடந்து,
அண்டம் கடந்து,
தமரற்று நின்ற
தனிமையன் ஈசன்;
பவளத்தின் முத்தின்
பனிமொழி மாதர்
துவளற்ற சோதி
தொடர்ந்து நின் றானே.

---

அமரத்துவம் - மனம். சிந்தனை, தமரற்று - ஒன்றுக்கும பிடிபடாமல் தனித்து ஒதுங்கி. பவளத்தின் முத்தின் - செம் பவளம் போன்ற அதரத்துள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கிற முத்துப் போன்ற பற்கள். பனி மொழி - குளிர்ந்து தண்ணென்ற அமுதம் போன்ற சொற்கள். இவ்வளவும் எங்கே குடி கொண்டுள்ளன. மாதர் - பெண்மை கொலுவிற்றிக்கும் தாய்மைத்தத்துவம் பொங்கு கிற பெண்களிடந்தான். துவளற்ற சோதி - தளராத தெய்வ ஒளியோடு கூடிய அழகு. பெண்களின் பொலிவு, தொடர்ந்து நின்றான் - அந்தப் பொலிவோடு பொலிவாய் நீக்கமற நிறைந்து நிற்கின்றான் பெருமான்.

## மெய்ப்பொருள் விளக்கம்

*(7)*

*மனம் என்பது அதாவது சிந்தனை - யோசனை என்ப தெல்லாம் மனிதர்களிடந்தான். அதனால் தான் வாழ்க்கை என்று ஒன்று மனிதர்களிடம் மட்டுமே இருக்கிறது. வாழ்க்கைக்கு உதவியாக விவசாயம், வியாபாரம், தொழில், முயற்சி, ஊக்கம், எல்லாவற்றையும் மனிதன் படிப்படியாக உண்டாக்கிவளர்த்து வந்திருக்கிறான். மருத்துவம் பொறி இயல் சோதிடம், இசை, நடனம், ஓவியம், இலக்கியம் முதலியவற்றையும் படைத்து வளர்த்து வருகிறாள். எல்லாவற்றுக்கும் மேலாக மொழியையே உருவாக்கிப்பத்தி ரமாகக் காப்பாற்றி வருகிறாள்.*

*இப்படியாக எகப்பட்ட வசதிக்கும் - செல்வத்துக்கும், செல்வாக்குக்கும் அதிபதியாக விளங்குகிறான்.*

*இப்படிப் பொறுப்புக்கு மேல் பொறுப்பு மனி தனிடம் வந்து குவியக் குவிய வாழ்க்கையில் ஒரு ஒழுங்கு தேவைப்பட்டது. நெறிமுறையும் தேவைப்பட்டது.*

*அது காரணமாக சட்டம், நீதி, தர்மம், என்றெல்லாம் வந்து அமைந்தன.*

*பறவைகளுக்கோ, விலங்குகளுக்கோ குற்றவியல் சட்டம், சொத்து முறைச்சட்டம் என்று உண்டா ?*

*இவ்வளவு ஏகபோகத்துக்கும் பாதுகாப்புக்கும் நாயகனாக விளங்கும் மனிதன் எதை எதையோ யோசிக்கிறான் - சம்பந்தம் இல்லாத விஷயங்களைப் பற்றிக் கூடயோசித்துப் பார்க்கிறான் மனிதன் தன்னைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்க வேண்டாமா ?*

*தன்னுடைய காரியங்கள், பேச்சுக்கள், நினைப்புக்கள் இவை எல்லாம் எப்படி எப்படி என்று யோசனை பண்ணிப் பார்க்க வேண்டாமா?*

*தன்னுடைய உடம்பைப் பற்றியாவது யோசிக்க வேண்டாமா? எப்படி எப்படி எல்லாம் பாடுபட்டு தன்னையும் நம்மையும் பாதுகாக்கிறது இந்த உடம்பு என்று யோசிக்க வேண்டாமா?*

தன்னை யார் என்றே பார்க்க முடியாத மனிதன் தன்னுடைய காரியம் (வாழ்க்கை) எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்று பார்க்க முடியாத மனிதன் வேறு என்னத்தைப் பார்த்து விடுவான்.

தன்னையே காணமுடியாவிட்டால் பிறகு கடவுளைக் கண்டு விடமுடியுமா?

தன்னை உணர்ந்து உணர்ந்து பார்த்தால் போதும். பார்க்கப் பார்க்க வேற்றுமை விலகும். ஒற்றுமை ஊறும். அன்பு பெருகும். பொறுமை, அடக்கம், பணிவு எல்லாம் வந்து நிறையும்.

சிக்கலே இருக்காது வாழ்க்கையில். மேலும் மேலும் தித்திக்கும் வாழ்க்கை.

இனிப் பாடல்

தன்னை உணர்ந்திடும்
    தத்துவ ஞானிகள்
முன்னை வினையின்
    முடிச்சை அவிழ்ப்பர்கள்;
பின்னை வினையைப்
    பிடித்துப் பிசைவர்கள்
சென்னியின் வைத்த
    சிவனரு ளாலே

முன்னைவினை - நோய்நொடி, பின்னைவினை-பயம், மயக்கம், சென்னி-சிந்தனை, தெளிவு.

## (8)

தினந்தோறும் உணவை உண்கிறோம். அந்த உணவு தான் நம்மை உயிரோடு வைத்திருக்கிறது. ஆனால் அந்த உணவு எப்படி வந்தது, எங்கிருந்து வந்தது என்று யோசிக்கிறோமா? ஒரு நாளும் யோசித்துப் பார்த்ததில்லை.

யோசித்துப் பார்த்தால் பூமியை மதிக்கத் தோன்றும், நீரை (மழையை) மதிக்கத் தோன்றும்.

விவசாயத்தை விவசாயப் பெருங்குடி மக்களை எல்லாம் மதிக்கத் தோன்றும்.

*தவசங்களையும் காய்களையும் சமைத்துப் பக்குவமாக அமுதாக்கி ஊட்டுகிறார்களே பெண்கள் அவர்களின் கையைத் தொட்டுக் கும்பிடத் தோன்றும்.*

*பிறகு பக்தியே உண்டாகி விடும்!*

*அது உண்டாக உண்டாக நான் என்கிற கொழுப்பு (ஆணவம்) கொஞ்சம் கொஞ்சமாக இளகும். மெள்ள மெள்ளக் கரையவும் செய்யும்.*

*பக்தி இருக்கட்டும் அப்படி. உணர்ந்து பார்த்தவனுக்கு அன்னம் (உணவு) எவ்வளவு உயர்வாகத் தெரியும். கண் கண்ட தெய்வமாகவல்லவா தெரியும்.*

*அப்படி உணர்ந்து தெரிந்தவன் உணவை மதிப்பான். ஆற அமர உண்பான். மென்று, ரசித்து, ருசித்துச் சாப்பிடுவான். அவசரப்படமாட்டான்.*

*சாப்பாட்டை மதிக்கத் தெரியாதவன் தான் அதாவது நம்முடைய காரியம் என்ன, கணக்கென்ன? இந்தச் சாப்பாடு கேவலம். நமக்குச் சாதாரணம் என்று அலட்சியம் பண்ணுகிறவன் தான் லபக் லபக் என்று வாய்க்குள் அள்ளிப் போடுவான் அன்னத்தை. அது அவன் ரத்தத்தோடு ஒட்டுமா? புத்தியோடு தான் ஒட்டுமா?*

*''வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்''*

*சாப்பாட்டையே மதிக்கத் தெரியாதவன் முறைப்படி அதை அனுபவிக்கத் தெரியாதவன் மற்றவர்களை மதிப்பானா? கடவுளைத்தான் மதிப்பானா?*

*கட்டின பெண்டாட்டியைத் தான் மதிப்பானா?*

*பெண்ணை மதிக்கிறவன் என்ன செய்வான்? புனிதமான மங்கலப் பொருளாக பெண்ணை நினைப்பான். கடவுள் கொடுத்த வரப்பிரசாதம் தான் பெண் என்று ஆனந்த பரவசத்தில் திளைப் பான்.*

*பெண்ணிடம் (மனையாளிடம்) மரியாதையோடு பழகுவான். அப்படியே உறவாடுவான்.*

*ஆர, அமர யோசித்து மதித்து உறவாடி மகிழ்வான். பொறுப்பில்லாமல் மிருகம் போல் நடந்து கொள்ள மாட்டான்.*

*ருசித்துச் சாப்பிடுகிறவன், ரசித்து உறவாடுகிறவனிடந்தான் ஆனந்தம். அவனிடந்தான் ஆரோக்கியம். அவன்தான் தூயோன். இனியன், எளியன் என்கிற சொற்கள் எல்லாம் அவனை நோக்கியே நிற்கின்றன.*

*''உண்டி சுருங்க உயிரார் வலுப்படும்''*

இனி இந்த உலகத்தில் குடிசையிலிருந்து அரண்மனைவரை எல்லாவற்றையும் கட்டி முடித்தவன் மனிதன் தான்.

சிங்கமோ, புலியோ, மானோ, மயிலோ இல்லை.

விவசாயம், வியாபாரம், கணிதம், மருத்துவம், இசை, நடனம், கோயில், வழிபாடு, தேர், திருவிழா எல்லாம் மனிதன் உண்டாக்கியவை தான்.

சகல பாக்கியங்களுக்கும் நாயகன் மனிதன்.

ஆனால் அதை எப்பொழுதாவது உணர்ந்தானா? அந்த உணர்ச்சி, மெய்யுணர்வு இருந்தால் பயம் என்பது அவனிடம் இருக்குமா? ஜம்பம் பண்ணுவானா? பொய்யையே பெருக்கி வளர்ப்பானா?

ஜம்பம் அவ்வளவும் பயத்திலிருந்து வந்தவை. பயமேரி பொய்யிலிருந்து வந்தது மனிதன் படித்ததெல்லாம் பொய்யை. காது கொடுத்துக் கேட்டதெல்லாம் பொய்யைத்தான்.

கெட்டிக்காரானாக அகட விகட சாமார்த்தியனாக இருக்கத்தான் படிப்பையே படிக்கிறானே தவிர, நல்லவனாக இருக்கப் படிக்கவில்லை.

இதை விட வேறு என்ன பொய் வேண்டும். எது தேவை, எது தேவை இல்லை என்கிற மெய்யைக் கற்றிருந்தால் பாவலாப் பண்ணுவானா? ஜம்பம் அடிப்பானா? பித்தலாட்டம் செய்வானா?

மிருகங்களுக்கோ, பறவைகளுக்கோ காவல் நிலையங்கள் உள்ளனவா, நீதி மன்றங்கள் இருக்கின்றனவா? சிறைச்சாலைகள் உண்டா? இல்லை மருத்துவமனைகள் தாம் உண்டா?

எல்லாம் மனிதர்களுக்காகத்தான்.

எல்லாச் செல்வங்களையும் உண்டு பண்ணி, இந்த மண்ணுலகையே பொன்னுலாக மாற்றிக் கொண்டிருக்கிற மனிதன் தான் பயப்படுகிறான், தடுமாறுகிறான், துன்பப்படுகிறான், தவிக்கிறான், அவமானம், தண்டனை முதலியனவற்றுக்கும் ஆளாகிறான்.

அதானல் வாழ்க்கையைக் கண்டே பயப்படுகிறான். அதை அனுபவிக்கத் தெரியாமல் திணறுகிறான். எரிச்சலிலேயே கிடக்கிறானே தவிர சிரித்து மகிழ மாட்டேன் என்கிறான்.

பொய் தொலைந்தால் போதும் ஆனந்தம் வந்து விடும். வாழ்க்கையே ஆனந்தமயமாகத் தித்திக்கும்.

மனைவி, மக்கள், உற்றார், உறவினர், கலை, இலக்கியம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் எல்லாமே இனிக்கும்.

பருகப்பருகப் பரமானந்தமாக இனிக்கும்.

இதை எப்படி இறைவன் மேல் வைத்துச் சொல்கிறார் திருமூலர்.

அண்டபிண்ட சராசரம் அவ்வளவுக்கும் தந்தையாய்த் தாயாய் இருந்து பேணிப் பாதுகாக்கும் பெருமான் ஒரே எக்களிப்பில் இருக்கிறானாம்.

எக்களிப்பு நடனகோலத்திலேயே இருக்கிறதாம். ஆனந்த நடனமாக (ஆனந்தக் கூத்தாகவே) இருக்கிறதாம்.

அவன் ஆனந்தமாக இருப்பதால் சகலமும் அவனுக்கு ஆனந்தமாகவே இருக்கின்றனவாம்.

இனிப்பாடல்

ஆனந்தம் ஆடரங்கு
ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் பல்லியம்;
ஆனந்த(ம்) மாக
அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக்
கூத்துகள் தானுக்கே.

---

ஆடரங்கு - நடனசபை, வாச்சியம் - குழல் முதலிய வாத்தியங்கள், பல்லியம் - மத்தளம் முதலிய பக்க வாத்தியங்கள். அவன் ஆனந்தமாக ஆடுகிறான். அதனால் ஆனந்தமாகவே உள்ளன எல்லாம் அவனுக்கு.

## மனம் போல வாழ்வு

### *(9)*

*மனம் என்பது பளிங்கு போலத் தூய்மையானதுதான். ஆனாலும் நாளாக நாளாக எப்படியோ அது அழுக்காகி விடுகிறது.*

*வாழ்க்கையோடு உருண்டு உருண்டு புரள வேண்டி இருக்கிறது மனிதனுக்கு. இது ஒரு காரணம்.*

*மனிதனால் தனித்து வாழ முடியாது. சேர்ந்துதான் குடும்பம், சமூகம், இனம் என்று சேர்ந்து தான் வாழ வேண்டி இருக்கிறது. அதனால் பிரச்சினைகள் வருகின்றன.*

*பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டி இருக்கிறது. அதனால் வியாபாரப் பொருளாகி விடுகிறது வாழ்க்கை.*

*வாழ்க்கை என்ன வாழ்க்கை. மனித மனமே அப்படி ஆகி விடுகிறது.*

*ஓட்டப்பந்தயத்துக்கு ஆளாகி விடுகிறது மனம். அதனாலும் அழுக்கு ஏறி விடுகிறது உள்ளத்தில்.*

*அழுக்கை நீக்க வேண்டும். அதற்குக் குருவின் துணை வேண்டும். குருநாதர் நமக்கு உள்ளேயே இருக்கிறார். நம் மனத்தின் ஒளியாய் இருக்கிறார். மனச்சாட்சி என்பது தான் குருநாதரின் பெயர்.*

*நம்மை நாமே - அதாவது நம்முடைய காரியங்களை செயல்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அடிக்கடி சோதித்துப் பார்க்க வேண்டும்.*

*மனச்சாட்சிக்கு ஒவ்வாதனவற்றை விட்டு விட வேண்டும். ஒத்தனவற்றை விடக்கூடாது.*

*அப்பொழுதுதான் ஆணவம் (பொய்) விலகும். உண்மை பிரகாசிக்கும்.*

*ஞானம் (அறிவு) என்றால் இதுதான். நம்முடைய மனச்சாட்சி தான் ஞானகுரு.*

*ஆணவத்துக்குப் பெயர் குருடு.*

*ஞானமும் ஆணவமும் ஒட்டியே கிடக்கின்றன. சொல்லிலும் அப்படியே செயலிலும் அப்படியே. (குருடு - டு = குரு)*

ஆனால் ஆணவத்தை வட்டியும் முதலுமாகப் பெருக்குகிறதையே ஞானம் என்று ஏமாந்து விடுகிறோம்.

இனிப்பாடல்

குருட்டினை நீக்கும்
குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக்
குருவினைக் கொள்வர்:
குருடும் குருடும்
குருட்டாட்டம் ஆடிடக்
குருடும் குருடும்
குழி விழும் ஆறே!

## (10)

திருநெல்வேலியை அடுத்து மதுரை நெடுஞ்சாலையில் கை காட்டிப் பலகையோடு தூண் ஒன்று நிற்கிறது. 'மதுரை 92 மைல்' என்று அதில் எழுதி இருக்கிறது.

இதை ஒருவன் பார்த்தான். என்ன இது? எண்ணோடும் எழுத்தோடும் நின்று விட்டதே! மதுரை வரைக்கும் நீள வேண்டாமா பலகை? நீண்டு கொண்டே போய் மதுரையில் விட வேண்டாமா நம்மை'' என்று மயங்கி விட்டான் அவன்.

இப்படி ஒரு மயக்கம் எல்லா மனிதர்களிடமும் இருக்கிறது.

உண்மையைத் தேடிப் புறப்படுகிற பொழுது இது ஏற்படுகிறது.

இந்த வழியே போக வேண்டும். இங்கிருந்து 92 மைல் போக வேண்டும். போனதும் மதுரையைப் பார்க்கலாம் என்று வழியைத் தான் காட்டும் கை காட்டிப் பலகை. ஆசாமியை அப்படியே தூக்கிக் கொண்டு போய் மதுரையில் இறுக்கி விடாது கை காட்டிப் பலகை.

---

குருட்டினை நீக்கும் குரு - மனச்சாட்சி, பொய்யை அதாவது ஆணவத்தைத் துடைத்தெறிந்து விட்டு உள்ளத்தை ஒளிர வைப்பது அதுதான். கொள்ளார் - ஆனால் இந்த உண்மையை சாதாரணமாக மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. குருட்டினை நீக்காக் குருவினை கொள்வர். ஆணவத்தை வளர்க்கும் புள்ளி விபரங்களைச் சொல்லிக் கொடுப்பவர்களையே குருநாதர் என்று வழிபடுகிறார்கள் மக்கள்.

இனி எங்கும் நிறைந்து வியாபித்திருக்கிறது கடவுள் தத்துவம். (உண்மை) அந்த உண்மையை உணர்ந்து பார்க்கிற வழி இன்னதென்று எழுதி வைத்திருக்கிறது ஏடு (நூல்)களில் அந்த ஏடுகள் பாதையைக் காட்டுவதோடு சரி, பரம் பொருளைக் கொண்டு வந்து 'இந்தா பிடி' என்று கையில் வைத்துத் திணிக்காது.

கை காட்டிப் பலகை மாதிரிதான் ஏடுகள்.

காட்டும் குறியும்

கடந்தவர் காரணம்

ஏட்டின் புறத்தில்

எழுதி வைத்(து) என் பலன்?

மனதை வளைத்து அதன் குரல் வளையையும் நெறித்துக் கொண்டிருக்கிறது. ஆணவம் - பொய், அதாவது குருட்டுத்தனம். அதை இளக்க வேண்டும், கரைக்க வேண்டும்.

ஆணவத்தைக் கரைக்கிறதுதான் கல்வி. குரு உபதேசம். அந்தக் குரு மனச்சாட்சிதான். அதைத் தூண்டத் தூண்டத்தான் பிரகாசிக்கும். இருட்டு விலகி ஓடும்.

இந்த அற்புதச் சித்தைத்தான் நந்தி என்று சொல்லி இருக்கிறது. குரு நந்தி என்று சொல்லி இருக்கிறது.

குரு நந்தியின் துணை இருந்தால் கடவுளின் கையை பற்றலாம். அதாவது தன்னுணர்வு பெற்று தக தக என்று ஜொலிப்பான் மனிதன்.

கூட்டும் குரு நந்தி

கூட்டிடின் உண்டு ...

தெளிவு (ஆனந்தம்) வேண்டுமா, மயக்கம். (தொல்லை) வேண்டுமா என்பதுதான் கேள்வி.

தெளிவு தான் வேண்டும் என்றால் மனச்சாட்சியைத் தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

விழிப்பு நிலை என்றால் அதுதான்.

இனி நோயாளி ஒருவன். ரத்தசோகை அவனுக்கு. எலும்பும் தோலுமாய் மெலிந்து விட்டான். ஏதேதோ மருந்துகளைச் சாப்பிட்டுப் பார்த்தான். வசத்துக்கு வரவில்லை.

கடைசியாக நாட்டு வைத்தியரிடம் வந்து முறையிட்டாள். எப்படியாவது தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சினான். வைத்தியருக்கு மனம் இளகி விட்டது. நோயாளியைப் பார்த்துச் சொன்னார்.

''காலையில் எழுந்த உடன் ஆட்டுக் கிடை (மந்தை)க்குப் போ. பாலாட்டின் மடுவில் வாய் வைத்து உறிஞ்சி, வயிறு முட்ட ஆட்டுப் பாலைக்குடி, நாற்பது நாள் இப்படித் தொடர்ந்து குடிக்க வேண்டும். அதன் பின் வா பார்த்துக் கொள்வோம்'' என்று.

நோயாளிக்கு ஆடு இன்னதென்று தெரியும். ஆனால் மந்தைக்குப் போனதில்லை. பாலாடு, வெற்றாடு என்கிற வேற்றுமையையும் அவன் கண்டதில்லை.

ஆனாலும் உயிர் மேல் உள்ள ஆசை காரணமாக அதிகாலையே எழுந்தான். ஆட்டு மந்தை எங்கே இருக்கிறது என்று விசாரித்தான். ஓடோடி வந்தான். மந்தைக்குள் துள்ளிப் பாய்ந்தாள். நாற்பது நாளும் வாய் வைத்துச் சூம்பிச் சூம்பிச் சப்பினாள். ஆனால் உடல் நிலை மட்டும் அப்படியே தான் இருந்தது.

தாங்க முடியவில்லை வேதனை. என்ன செய்ய இனி என்கிற கவலையோடு வைத்தியரிடம் வந்து நின்றான்.

வைத்தியர் இவனைப் பார்த்தார். அவருக்கும் ஒன்றுமே ஓடவில்லை. ஒழுங்காகக் குடித்தாயா பாலை'' என்றார். ஆமாம் தொடர்ந்து குடித்தேன் என்றான் ஆசாமி.

அப்படியானால் நான் பார்க்க நீ குடிக்க வேண்டும். ஆட்டுப் பாலை என்றார் வைத்தியர்.

வைத்தியரும் ஆசாமியும் மறுநாள் அதிகாலை ஆட்டு மந்தைக்கு வந்தார்கள். மந்தையை நெருங்கினானோ இல்லையோ நாலு கால்ப் பாய்ச்சலில் மந்தைக்குள் பாய்ந்தான் நோயாளி. ஒரு ஆட்டைக் கட்டிப் பிடித்து வாய் வைத்துச் சப்புச்சப்பென்று உறிஞ்சினான் நோயாளி.

வைத்தியருக்கு கோபம் ஒரு பக்கம். சிரிப்பு ஒரு பக்கம்.

சப்பி விட்டுப் பக்கத்தில் வந்த நோயாளியைப் பார்த்து ''தம்பி நீ வாய் வைத்து உறிஞ்சியது பாலாட்டின் மடுவில் இல்லை. கிடாய் ஆட்டின் தாடையில்.

தாடையில் எப்படியப்பா பால் வரும். அதோ இருக்கிறதே அதுதான் பாலாடு. அதன் அடிவயிற்றில் தொங்குகிறதே அதுதான் மடு. நாளை முதல் அதில் வாய் வைத்துக் குடி'' என்றார். தாடையில் வாய் வைத்துப் பால் குடித்த நோயாளி அவன் ஒருவன் மட்டுமா? ஆணவத்தைக் கருவியாக வைத்துக் கொண்டு அறிவை (பரம்பொருளை) அளந்து பார்க்கிற அவ்வளவு பேரும் அதே இனந்தான்.

ஆட்டின் கழுத்தின்
அதர்கிடந் தற்றே

இனிப் பாடலின் முழு உருவம்

காட்டும் குறியும்
கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தின்
எழுதி வைத்(து) என்பலன்?
கூட்டும் குருநந்தி
கூட்டிடின் உண்(டு); அன்றேல்
ஆட்டின் கழுத்தின்
அதர்கிடந்(து) அற்றே!

---

காட்டும் குறியும் கடந்தவர் - மேற்கோள், விளக்கம் இவைகளை எல்லாம் தாண்டி அப்பால் நிற்கிறது உண்மை - கடவுள் தத்துவம். ஏட்டின் புறத்தில் எழுதி வைத்து என் பலன் - அது எப்படி எழுத்தில் அடங்கும். பனை ஓலையின் மேல் எழுத்தாணி கொண்டு, எழுதி வைத்தால் போதுமா? அதிலாசிக்கும் கடவள் தத்துவம். கூட்டும் குருநந்தி - தன்னுணர்வு, அதர் - தாடை, அற்றே - தாடையை மடு என்று ஏமாந்த கணக்குத்தான்.

## (11)

நாம் நன்றாக இருக்க வேண்டும். நம்மைச் சேர்ந்தவர்களும் நன்றாக இருக்க வேண்டும். ஊர், உலகம் எல்லாமே நன்றாக இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க வேண்டாமா மனிதன்.

வாழ்க்கை என்றால் மேடும் இருக்கும். பள்ளமும் இருக்கும். லாபமும் வரும். நஷ்டமும் வரும். இவை எல்லாம் இயல்பு தான் என்கிற தெளிவு வேண்டும்.

அப்படி ஒரு தெளிவு இருந்தால் நிலை தடுமாறாமல் உறுதியாக இருக்க முடியும். அதற்கு வழி எளிமை தான். எளிமை இருந்தால் தூய்மை தேடி வரும்.

எளிமைக்கு வழி காட்டுவது மனந்தான். மனந்தான் நமக்கு உற்ற துணை.

யோசனைதான் மனம். யோசிக்க யோசிக்க அது விரியும். விரிய விரிய அப்படியே ஒடுங்கும்.

இனிப்பாடல்

சிந்தைய (து) என்ன
சிவன் என்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே
சிவனும் வெளிப்படும்;
சிந்தை தெளியத்
தெளியவல் லார்கட்கு
சிந்தையின் உள்ளே
சிவன்இருந் தானே.

## (12)

நம்மைப் பற்றியே யோசிக்க முடியவில்லை என்றால் கடவுளைப் பற்றி எப்படி யோசிக்க முடியும். நம்மைப் பற்றி நமக்கு ஆர்வம் இல்லை என்றால் பிறகு கடவுளைப் பற்றிய ஆர்வம் வரவா செய்யும்.

---

சிந்தை - யோசனை. சிவன் - இறைவன் அதாவது மெய்ப்பொருள்.

தன்னுணர்வு இல்லாததனால் தான் கடவுளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு மனிதன் சண்டை போடுகிறான். அதோடு விடவா செய்கிறான். சித்தாந்தம், வேதாந்தம் பற்றி எல்லாம் ஆராய்ச்சி பண்ணுகிறான். விரிஉரை நிகழ்த்துகிறான். பட்டிமன்றம், வழக்காடு மன்றம் என்றெல்லாம் வைத்துக் கொடி கட்டிப் பறக்கிறான் மனிதன்.

என்ன கோமாளித்தனம் இது.

திருமூலரும் இந்தக் கோமாளித்தனத்தில் சிக்கித் தவித்தவர் தான் முதலில். பிறகு எப்படியோ அதை உதறி எறிந்து விட்டார்.

சொந்த அனுபவத்தை வாக்குமூலமாகவே கொடுக்கிறார் திருமூலர்.

எப்படி

நான் என்றும் தான் என்றும்
    நாடினேன், நாடலும்
நான் என்று தாள் என்று
    இரண்டில்லை என்பதை
நான் என்ற ஞான
    முதல்வனே நல்கினான்;
நான் என்று நானும்
    நினைப்(பு)ஒழிந் தேனே!

## (13)

ஆணவம் ஒடுங்கினால் போதும். மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய ஐம்புலன்களும் அமிர்தமாகச் சொரியும். உடம்பு முழுவதும் உடம்பின் ஒவ்வொரு அணுவும் அமிர்த கலசமாக இருக்கும். பொங்கி வழியும் அமிர்தம்.

---

நான் என்றும் தான் என்றும் நாடினேன் - நான் வேறு கடவுள் (உலகம், வாழ்க்கை, உண்மை எல்லாம்) வேறு என்று நினைத்து ஆராய்ச்சியிலேயே இறங்கி விட்டேன். இரண்டில்லை என்பதை நல்கினான். எல்லாம் ஒன்றுதான். உனக்குள்ளேயே எல்லாம் இருக்கிறது என்பதை இறைவனே காட்டி விட்டான். நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேன். மனசோடு தோயத்தோய ஆணவம் போய் விட்டது.

பிறகு மனம் துள்ளி விளையாடத்தானே செய்யும்.

அப்படித் துள்ளி விளையாட வேண்டுமானால் சும்மா இருக்கக்கூடாது மனம். யோசிக்கிற பழக்கம் வேண்டும் அதற்கு.

நம்முடைய காரியம் என்ன, செயல் முறை என்ன என்று அடக்க ஒடுக்கத்தோடு மரியாதையோடு யோசிக்க வேண்டும். அப்படி இல்லாமல் தடபுடல் பண்ணிக் கொண்டு வம்புதும்பில் போய் மாட்டிக் கொள்ளக்கூடாது.

ஐம்புலன்களோடும், மனசோடும் கூடிய இந்த எண்சாண் உடம்பிற்கு பார்ப்பான் அகம் என்று பெயர். யோசித்துப் பார்க்கிறவன் தானே பார்ப்பான். ஐம்புலன்களுக்கும் மொத்தத் தில் பெயர் பசு என்பதுதான்.

மெய்ப்பொருளைத் தேடி மனம் யோசிக்கிறதுதான். பசுக்களை ஒழுங்காக வைத்து மேய விடுகிற காரியம்.

ஒழுங்காக மேயாவிட்டால் பசுக்கள் அமிர்தம் சொரியவா செய்யும். அதாவது மெய்ப்பொருள் தரிசனம் கிடைக்கவே கிடைக்காது.

இனிப்பாடல்

பார்ப்பான் அகத்திலே
    பாற்பசு ஐந்துண்டு,
மேய்ப்பாரும் இன்றி
    வெறித்தே திரிவன;
மேய்ப்பாரும் உண்டாய்
    வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும்
    பாலாய்ச் சொரியுமே.

---

மேய்ப்பாரும் இன்றி - மேய்ச்சல்காரன் இல்லை என்றால் அவன் ஒழுங்காய் மேய்க்கவில்லை என்றால் அதாவது மனமானது நிலை கொண்டு நிற்கவில்லை என்றால். வெறித்தே திரிவன - ஐம்புலன்களாகிய ஐந்து பசுக்களும் கிறுக்குப் பிடித்து கண்டதே கோலம் கொண்டதே காட்சி என்று அலைந்து திரியும். பார்பான் என்றால் ஒரு சாதியை உணர்த்தும் சொல் அன்று. மனதை உணர்த்தும் சொல் அது. யோசித்து உண்மையைப் பார்பது மனம் தானே?

## (14)

நமது எண்சாண் உடம்பிற்கு இல்லம் (வீடு) என்று பெயர். வீடு என்றால் குடிசையோ, பங்களாவோ இல்லை. மாபெரும் அரண்மனை. அதைவிடக் கோயில் என்று சொல்வதுதான் நூற்றுக்கு நூறு பொருத்தம்.

கோயில் வீடாகிய இந்த உடம்பைக் கட்டி ஆள்கிற அதிபதியார்? மனம் தான் அந்த அதிபதி. விலங்கு பறவைகளுக்கு எப்படியோ? நம்மைப் பொறுத்தவரை மனந்தான் உடம்புக்குக் கட்டளைத் தம்பிரான்.

அதனால் மனத்திற்கு இல்லம் உடையார் என்று பெயர்.

இனி எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குப் பெயர் என்ன தெரியுமா?

கள்ளர் என்பதுதான் பரம்பொருளின் திருநாமம்.

மனத்துக்குத் தெரியாமலே மனத்துக்குள் வந்து ஒளிந்து கிடக்கும் ஆசாமியைத் திருடன் அல்லது பக்காத் திருடன் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது.

மனமும் கடவுளும் சேர்ந்துதான் இருக்கிறார்கள். ஆனாலும் ஒருவரை ஒருவர் சந்தித்து உறவாடாமலே இருக்கிறார்கள். அப்படி ஒரு திரை - இரும்புத்திரை மனதுக்கும் இறைவனுக்கும் நடுவில் கிடக்கிறது.

திரை விலக வேண்டும். விலகின மாத்திரத்திலேயே ஆனந்தந்தான். பேரானந்தந்தான். விடுதலை, வீடு பேறு என்பதெல்லாம் அதுதானே.

இது சம்பந்தமாக திருஉந்தியார் என்னும் நூலில் உள்ள பாடல்களில் ஒன்று.

கள்ளரும், இல்லம்
 உடையாரும் கைகூடின்,
வெள்ள வெளியாம் என்(று)
 உந்தீ பற;
வீடும் எளிதாம் என்(று)
 உந்தீ பற.

வீடும் - மோட்சமும்

கள்ளரும் இல்லம் உடையாரும் ஒருவர் கையை ஒருவர் பிடிக்க வேண்டும். பெண்ணும் மாப்பிள்ளையும் போலக் கரம் பற்ற வேண்டும்.

அதற்கு என்ன வழி.

மனம் சும்மா கிடந்து துருப்பிடித்து விடக்கூடாது. துறுதுறு என்று இருக்க வேண்டும். கூர்மையாக இருக்க வேண்டும். பிரகாசமாக வேண்டும்.

உண்மையின் மேல் தாகங்கொண்டு யோசிக்க வேண்டும். யோசிக்க யோசிக்க பொய் தேயும். பித்தலாட்டம், ஆணவத்தின் கொடுக்கு, வால் அறுபடும்.

இனி, அதுஇது என்கிற வேற்றுமை இருந்தால் தானே பொறாமை வரும். பொறாமை நிறைவேறாத நிலையில் பகை உணர்வு முளைக்கும். அதுவும் முனை முழுங்கி விட்டால் எரிச்சல் வரும்.

யோசிக்கிற பழக்கம் இருந்தால் மனம் தன்னுணர்வு பெற்றுத் திளைக்கும். அதாவது அங்கே இங்கே என்று ஓடாது. யோசனையோடு யோசனையாக ஒன்றுபடும். அப்படி ஒன்றுபட ஒன்றுபட கருணை சுரக்கும். அருளானது ஒளி வீசும்.

பிறகு வெறுப்புக்கு இடம் ஏது, ஆங்காரத்துக்குத்தான் இடம் ஏது.

இதற்கு ஏற்ற வழி, எளிதான வழி தன்னுணர்வுதான். யோசிக்கிற பழக்கந்தான்.

அப்படி ஒரு வாய்ப்பு இல்லாதவர்கள் மனசை ஒரு நிலையில் நிறுத்த வேண்டுமே, அமைதி பெற வேண்டுமே, சினத்தைத் துடைத்தெறிய வேண்டுமே என்பதற்காகப் படாதபாடுபடுகின்றனர். யோகம் என்றும் தவம் என்றும் திண்டாடித் தெருவில் நிற்கின்றனர்.

எப்பாடுபட்டாவது பலனைப் பெறுங்கள் என்று ஆத்திரப்படுகிறார் திருமூலர். அவ்வளவு பரிவு அவருக்கு

அவருடைய பரிவு
வெல்லும் அளவு
விடுமின் வெகுளியை,

செல்லும் அளவு

செலுத்துமின் சிந்தையை;

அல்லும் பகலும்

அருளொடும் தூங்கினால்

கல்லூம் பிளந்து

கடுவெளி யாமே.

---

வெல்லும் அளவு - வேரறக் களையும் வரை வெகுளி - கோபம். செலுத்துமின் சிந்தையை உண்மையை நாடி மனதைத் தேட விடுங்கள். அல்-இரவு. அல்லும் பகலும் - எப்பொழுதும் அருளொடு தூங்கினால் பேதம் அற்ற சமநிலையில் திளையுங்கள். அப்படியானால் தான் கல்லும் பிளக்கும் - முடிச்சுகள் அவிழும். இறுகக் கட்டி நம்மைத் தொங்கப் போட்டிருக்கும் முடிச்சு அவிழும். அதுதான், கடுவெளி - மோட்சம் அதாவது விடுதலை, வீடு பேறு.

## கவியாய் எழுந்து வருகிறது

## (15)

இனி, சிந்தனை (யோசனை) மயமானது மனம். சிந்தனையை வசப்படுத்துதல் என்பது ஒரு வகை.

உணர்ச்சியின் ஊற்றுக் கண் சிந்தனை. காந்தம், மின்சாரம், கவர்ச்சி (ஈர்ப்பு விசை) என்பனவெல்லாம் பொங்கித் ததும்பும் உணர்ச்சியின் ஊற்றுக் கண்ணாகிய மனதில்.

அதனால் மனசை வேறொருவகையில் வசப்படுத்து கிறவர்கள் சிலர். அவர்கள் மற்றவர்கள் மருளும்படியான காரியங்களைச் செய்வார்கள். அப்படிச் செய்பவர்களுக்குச் சித்தர் என்று பெயர். அவர்கள் செயல்களுக்கு சித்து - சித்து விளையாட்டு என்று பெயர். செப்படி வித்தை என்று கொஞ்சம் இளக்காரமாகவும் சொல்வதுண்டு.

சிந்தனையிலிருந்து வந்தது சித்தம். சித்தத்தில் உதித்தது சித்து. அது கிடக்கட்டும். மனசை இன்னொரு வகையில் வசப் படுத்துவதற்கு அதாவது நினைப்பை ஒருமுனைப்படுத்தி ஒரே காரியத்தில் இறக்கி அதை நிற்க வைப்பதற்கு யோகம் என்று பெயர்.

உத்தியோகம் (ராஜயோகம்) ஞானயோகம் என்று விதவிதமாக உண்டு அதில்.

யோகம் சித்து என்பவையெல்லாம் வெறும் பொம்மலாட் டந்தான். உண்மை என்பது எள்ளளவு கூட அவற்றில் இல்லை.

உண்மையை உணர உணரத்தான் உண்மை புலப்படும். மனச்சாட்சியைத் தூண்டத் தூண்டத் தான் அந்த உணர்வு வரும்.

நுட்பமான இந்த மெய்ப்பொருளை கண்ணால் கண்டு மகிழும்படி உருவகத்தில் வைத்துக் காட்டுகிறார் திருமூலர்.

ஆனைகள் ஐந்தும்<br>
அடக்கி, அறிவென்னும்<br>
ஞானத் திரியைக்<br>
கொளுவி, அதனுள்ப்புக்(கு)<br>
ஊனை இருளற<br>
நோக்கும் ஒருவற்கு

வானகம் ஏற
வழிஎளி(து) ஆமே.

**(16)**

மனிதனுக்கு லட்சியம் வாழ்க்கை. வாழ்க்கைக்கு லட்சியம் செம்மையான திருத்தமான கூட்டுறவு.

இதற்கு வேண்டியது உண்மை.

பொய்க்கு இடம் கொடுக்காத உண்மை இருந்தால் போதும். தெய்வாம்சம் நிறைந்து பொங்கும்.

இனிப்பாடல்

நினைவதும் வாய்மை
மொழிவதும் அல்லால்
கனைகழல் ஈசனைக்
காண அரிதாம்;

---

ஆனைகள் ஐந்து - மெய், வாய், கண் முதலிய ஐம்புலன்கள். மதங்கொண்ட யானை போன்றவை தாம் ஒவ்வொரு புலனும். ஞானத் திரியைக் கொளுவி - ஞான விளக்கில் திரியை ஒளிமயமாக ஏற்றி வைத்தல், அதாவது மெய்யை நாடி யோசனையை மேலும் மேலும் தூண்டல். அப்படி தூண்டினால் தான் இருள் (பொய்) விலகும். ஊனை இருள் அற நோக்கும் ஒருவற்கு உடம்போடு ஒட்டிப் பிறந்த ஆணவம் அறுபட யோசித்துப் பார்க்கிறவர்களுக்குத்தான்.

வானகம் ஏற வழி எளிது ஆகும் - மேசட்ச சாம்ராஜ்யத்துள் போய் ஆனந்த பரவசத்துள் திளைக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அதாவது மனசைப் புடம் போட்டுப் புடம் போட்டுச் சுத்தமாக வைத்திருப்பவர்களுக்குத்தான் விடுதலை, வீடு பேறு.

குடும்பம், சுற்றம், நட்பு, பக்தி, பரவசம் எல்லாம் அவர்களிடந்தான்.

நினைவதும் மொழிவதும் வாய்மை அல்லால் - நினைப்பும் சொல்லும் உண்மையாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், வாய்மை - உண்மை. கனைகழல் ஈசனைக் காண அரிது - இறைவனைப் பார்க்க முடியாது. அவனருள் கிட்டாது. கனைகழல் - ஆரவாரத்தோடு முழக்கமிடும் கால்ச் சலங்கை. ஈசனைக் காண்குறவல்லார் - உண்மையோடு தோய்ந்து தோய்ந்து தெய்வாம்சம் பெற்றவர்கள். அதாவது அருளாளர்கள். போற்ற வல்லார் மற்றவர்களால் வழிபடத்தக்கவர்கள். புனைகழல் நீர் கொண்டு போற்றவல்லார் - அவர்களுடைய திருப்பாதங்களை நீர் விட்டுக் கழுவி வழிபடுவார்கள் அடியார்கள்.

கனைகழல் ஈசனைக்
காண்குற வல்லார்
புனைகழல் நீர் கொண்டு
போற்றவல் லாரே.

## (17)

உண்மையோ உணர்ச்சியோ இல்லாமல் படித்தபடிப் பெல்லாம் வெற்றுப் படிப்புத்தான். தொண்டை கிழிய அவர்கள் என்ன கத்துக் கத்தினாலும் சரி தெய்வதரிசனம் அவர்களுக்குக் கிடையாது.

விடுதலை இன்பத்துக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லை. ''கற்ற பசுக்கள் கதறித்திரியினும்'' பலன் இல்லை.

இனி, சித்து, யோகம் என்றெல்லாம் வைத்துக் கொண்டு மற்றவர்கள் பயந்து வழிபடும்படி கோலோச்சி நிற்கிறார்கள் சிலர், அவர்கள கதையும் அப்படி அப்படித்தான்.

''கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்'' அப்படித்தான்.

இவர்கள் எல்லோரும் பிறரை ஏமாற்றுகிறவர்கள். ஆனந்தம் கிடைக்காமல் ஏமாந்தவர்கள்.

இவர்களை என்னவென்று சொல்கிறார் திருமூலர்.

வெறும் வறள் பசுக்கள் இவர்கள் என்கிறார். அதாவது மலட்டுப் பசுக்கள் இவர்கள் என்கிறார்.

உண்மையை உணர்ந்து அனுபவிக்கிறவர்களும், மற்றவர்களுக்கும் அந்த அனுபவ ஆனந்தத்தை அள்ளி அள்ளி வழங்குபவர்களுந்தான் உற்ற பசுக்கள் என்கிறார். அதாவது தெய்வத்துக்கு உகந்த குழந்தைகள் இந்த ஞானிகள் தாம் என்கிறார்.

இனிப்பாடல்

கற்ற பசுக்கள்
கதறித் திரியனும்,
கொற்ற பசுக்கள்
குறிகட்டி மேயினும்
உற்ற பசுக்கள்
ஒரு குடம் பால் போதும்,
மற்ற பசுக்கள்
வறள்பசு தாமே.

## என்னத்தைக் கண்டோம் நாம்

## *(18)*

உண்மைக் கல்விக்கும் பொய்க்கல்விக்கும் சம்பந்தமே இல்லை. இரண்டும் வேறு வேறு. முதலாவது பண்பாடும் சீலமும் நிறைந்த அருள் ஞானம்; இரண்டாவதோ பிழைப்புக்கு வழி தேடும். ஆணவத்தை வளர்க்கும் கோமாளித்தனம்.

இது சம்பந்தமாகத் திருமூலர் வெட்டொன்று துண்டிரண்டு என்றே போட்டு உடைத்து விடுகிறார்.

ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்க்கிறோம். எழுத்துச் சரியாகத் தெரியவில்லை. உடனே கண்ணாடி போட்டுப் பார்க்கிறோம். தெளிவாய்த் தெரிகிறது எழுத்து. ஆனாலும் எழுத்தைப் பார்ப்பது நம் கண் தான். கண்ணாடி இல்லை. கண்ணுக்குக் கண்ணாடி உதவி செய்கிறது அவ்வளவுதான்.

இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் அறிவு தான் பார்க்கிறது. கண்ணைக் கண்ணாடியாகப் போட்டுக் கொண்டு அறிவுதான் பார்க்கிறது என்பது விளங்கும்.

மேலும் கொஞ்சம் யோசனைக்குள் இறங்குவோமானால் நம்முடைய அறிவு கூடப் பார்க்கவில்லை. அந்த அறிவை இயக்குகிற பேரறிவுதான் பார்க்கிறது என்பது தெரியும்.

கண்ணாடியானது கண்ணுக்குக் கருவி. கண்ணோ அறிவுக்குக் கருவி. அறிவோ அதன் பின்னாலிருந்து தூண்டும் பேரறிவுக்குக் கருவி.

அந்தப் பேரறிவுதான் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தது.

நான்தான் பார்க்கிறேன் என்று கண்ணாடி சொன்னால் அது பொய். கண் சொன்னாலும் பொய் தான். புத்தகப்படிப்பால் வந்த அறிவு சொன்னாலும் அது பொய் தான். அறியாமை தான்.

ஆனால் உண்மையைக் காண வேண்டுமே என்கிற ஆர்வமும் வேகமும் இருந்தால் போதும் அறிவு வந்து விடும். இதை எப்படி அழுத்தி அழுத்திக் காட்டுகிறார் திருமூலர் என்று பாருங்கள்.

பாடல்

அறிவு அறி(வு) என்றிங்கு
அரற்றும் உலகம்;
அறிவறி யாமை
யாரும் அறியார்;
அறிவறி யாமை
கடந்தறி(வு) ஆனால்
அறிவறி யாமை
அழகிய ஆறே.

## (19)

இனி உண்மை அறிவு பெற்றவர்கள் தாம் ஞானிகள். அவர்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்து தவம் செய்ய மாட்டார்கள். மக்களோடு மக்களாய்த் தான் இருப்பார்கள்.

அன்பு கொண்டு உறவாடுவார்கள். அருளோடு பார்ப்பார்கள். பொறுமை பூத்துக் குலுங்கும் அவர்களிடம். தைர்யமாக இருப்பார்கள் அவர்கள்.

தங்கள் வாழ்க்கையின் மூலமாகவே மற்றவர்கள் வாழ வழி காட்டுவார்கள்.

அவர்களுக்கு அறவோர் என்று பெயர். திறவோர் என்றும் சொல்வதுண்டு அவர்களை.

திருமூலரும் அறவோர்தான். திறவோர் தான். கடவுளைப் பற்றி உண்மையைப் பற்றி எடுத்துச் சொல்ல விளக்கம் கொடுக்க திருமூலர் போன்றவர்களால் தான் முடியும்.

அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

---

அறிவு அறிவு என்று உலகோர் கூப்பாடு போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். உலகம் - மக்கள். அரற்றும் - கத்துகிறார்கள். அறிவு - நாம் படித்துத் தெரிந்த அறிவு என்பது. அறியாமை - உண்மையில் அது அறிவில்லை. மூடத்தனந்தான் அது. யாரும் அறியார் - இந்த உண்மை ஒருவருக்கும் விளங்க மாட்டேன் என்கிறதே. அறிவு அறியாமை கடந்து ஏட்டுப்படிப்பில் உள்ள வெற்றி தோல்விகளைத் தாண்டி. அறிவு ஆனால் உண்மை அறிவை மனச்சாட்சி கொண்டு யோசித்துப் பார்த்து விட்டால் இந்த பொய்யறவு, அறியாமை - ஆணவமயக்கம் என்று தெரிந்து விடும். அழகிய ஆறு - பேஷ் பேஷ் அப்படியா ஆட்டம் போடுகிறது ஆணவம்?

யோசனைக்கும் வார்த்தைக்கும் அடைபடாமல் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது கடவுள் தத்துவம்.

ஒரு சின்னஞ்சிறு புல்லின் நுனிக்குள் நடக்கிற காரியமே நம் புத்தியைச் சிதற அடித்து விடும். பிறகு அளவற்ற அண்டங்கள், பேரண்டங்கள் எல்லாவற்றையும் எப்படி அளந்து கணிப்பது.

இத்தனைக்கும் மூல தத்துவமாய் இருக்கிற கடவுளைப் பற்றி என்ன சொல்ல.

இதுதான் அவர்களுடைய வாக்குமூலம்.

இதோ பாடல்

யார் அறி வார் எங்கள்
அண்ணல் பெருமையை,
யார்அறி வார்அவ்
அகலமும் நிகளமும்
பேரறி யாத
பெருஞ்சுடர் ஒன்(று) அதன்
வேர் அறி யாமல்
விளம்புகின் றேனே

## (20)

இப்படிக் கையை விரிக்கிற திருமூலரால், எனக்கு என்ன தெரியும் அந்த அற்புதம் பற்றி என்று கலங்குகிற திருமூலரால் சும்மா இருக்க முடியவில்லை.

கண்ட காட்சியை கொண்ட அனுபவத்தை மற்றவர்களும் பார்க்க வேண்டுமே என்று துடிக்கிறார்.

அப்படி ஒரு கருணை அவருக்கு. நம் மேல் கொண்ட பரிவு என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனாலும் நினைப்பில் இருக்கிறது அனுபவம். நினைக்க நினைக்க தித்திக்கிறது அந்த அனுபவம். அதனால் வார்த்தைகளில்

---

நிகளம் - நீளம். பெருஞ்சுடர் ஒன்று - ஒரே ஒளிமயம். வானம் கடந்த பூமியைத் தாண்டிய ஒளி. வெள்ளம் அது. பேர் அறியாத - பேரேது ஊரேது அதற்கு. வேர் அறியாமல் - அடிமூலம் - அணுவளவு அறிவு கூட இல்லாமல்

வடிக்க முடியவில்லை அனுபவத்தை. கவி உருவம் எடுத்துக்கூட எளிதில் வர மாட்டேன் என்கிறது அந்த அனுபவம்.

அவ்வளவு கனமானவை அந்தக் காட்சிகள் அழுத்தமானவை அந்த அனுபவங்கள்.

எப்படியாவது வார்த்தைகளில் இறக்கி கவிகளாக வடித்தெடுத்து விட வேண்டுமே என்னும் ஆத்திரம் திருமூலருக்கு.

அதற்காகவே தவம் கிடந்தார் திருமூலர். ஒரு கவிக்காக வாரக் கணக்கில் மட்டுமா மாதக் கணக்கில் கூடத் தவம் கிடந்தார் திருமூலர். ஏன், வருடக்கணக்கில் கூடத் தவம் கிடந்திருக்கிறார் திருமூலர்.

அப்படித் தவம் கிடந்து தவம் கிடந்து திருமூலர் பெற்றெடுத்த கவிகள் மூன்று ஆயிரம்.

இந்த மூவாயிரம் பாடல்களையும் பார்த்தால் அவைகளில் முப்பது வகையான உபதேசங்கள் இருப்பது தெரியும். இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால் முன்னூறு வகையில் உபதேசங்கள் (மந்திரங்களாய்) ஜொலிக்கிற பாங்கும் தெரியும்.

எது எப்படி இருந்தால் என்ன. உலகம் (மக்கள்) கடவுள் (பேருண்மை) பாசம் அதாவது பந்த பாசக் கட்டுக்களில் சிக்கித் தவிக்கும் வாழ்க்கை இந்த மூன்றைப் பற்றியுமே எல்லாக் கவிகளும்.

சிக்கல் இல்லாமல் மக்கள் ஆனந்தமாக வாழ வேண்டும். அதற்கு இறைவனுடைய திருவருள் வேண்டும் என்பதுதான் விஷயம்.

அப்படியானால் பதிபசுபாசம் என்கிற மூன்றுக்கும் விடை ஆனந்தந்தான்.

ஆனந்தம் என்கிற ஒன்றே ஒன்று தான்.

இப்படியாக முப்பது, முந்நூறு, மூவாயிரம் என்று ஏறிக் கொண்டே போகிற கணக்கு மறுபடி மூன்று, ஒன்று என்று சங்கமித்து விடுகிறது.

இது ஒரு அதிசயந்தானே.

அதிசயம் எப்படிக் கவியாய் எழுந்து வருகிறதென்று பாருங்கள்.

மூலன் உரை செய்த
　　முப்ப(து) உபதேசம்
மூலன் உரை செய்த
　　முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த
　　மூவா யிரம்தமிழ்
மூலன் உரைசெய்த
　　மூன்றும்ஒன் றாமே!

---

உரை செய்த - விளக்கம் கொடுத்து எடுத்துச் சொன்ன. முப்பது உபதேசம் - உபதேசங்கள் முப்பது.
மூவாயிரம் தமிழ் - மூவாயிரம் பாடல்கள். தமிழ் என்றால் பாடல்.
உரை செய்த மூன்றும் - தெளிவுபடுத்திய பசுபதிபாசம் என்கிற மூன்றுமே.
ஒன்று ஆ(கு)மே - யோசித்துப் பார்த்தால் ஒன்றுதான். ஒன்றே ஒன்றுதான்.
குறிப்பு :- கூடு விட்டுக் கூடு பாய்வதில் வல்லவர் திருமூலர் என்று சொல்வதுண்டு. அதற்கு ஆதாரமாக இருக்கிறது இந்தப்பாடல். தன்னுடைய பாடல்கள் பற்றி வேறு யாரோ சொல்வது போலக் கூடு விட்டுக் கூடு பாய்ந்து காட்டுகிறார் திருமூலர்.

ஊன் (உடம்பு) உயிர், உணர்ச்சி என மூன்று தத்துவங்கள். இவற்றில் உணர்ச்சி என்பது இதயத்தோடு சேர்ந்தது.

தேகதத்துவம் முழுவதும் நிறைந்திருக்கிறது. உணர்ச்சி அது இல்லாத இடம் இல்லை. அப்படி அணுவுக்குள் அணுவாய் உடம்பு முழுவதும் நிறைந்திருக்கிறது.

யோசித்துப் பார்த்தால் உணர்ச்சிதான் உயிர் என்று தெரியும்.

இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் ஒரு உடம்பில் உயிர் மயமாக இருக்கிற உணர்ச்சிதான் பேரண்டம் முழுவதும் நிறைந் திருக்கிறது.

அப்படியானால் என்ன பொருள்? உணர்ச்சி அதாவது உணர்வு என்கிறதாக ஒன்று. அது ஒன்று தான். அதைத்தவிர வேறு எதுவும் இல்லை. அந்த ஒன்று தான் கோடான் கோடி வடிவங்களில் அண்ட பிண்டசராசரங்களாக உருவெடுக்கின்றது. வடிவெடுத்தது மட்டுமல்ல அந்தப் பொருள்களுக்குள் உயிரென்றும், சக்தி என்றும் இலங்குகின்றது.

'மூன்றும் ஒன்று ஆம்'

## (21)

உடம்பாக எழுந்து நிற்பதும் உணர்வு தான். உயிராகப் பரிமளிப்பதும் அதே உணர்வுதான்.

ஆனாலும் ஊன், உயிர், உணர்வு என மூன்று தத்துவங்கள் தனித்தனியானவை என்றே நாம் நினைக்கிறோம்.

நினைப்பது மட்டுமா? உயிரையே நான் வளர்க்கப் போகிறேன். அதற்குத் தேவையான பக்குவங்கள் எனக்கு அத்துபடி என்று பலர் செயல்படுகிறார்கள்.

மூச்சை இழுத்தல், நிறுத்துதல், பிறகு வெளியிடல் இவைகளில் ஒரு முறையைப் பின்பற்றிச் செயல்படுகிறார்கள் இவர்கள்.

மூச்சுத்தான் உயிர். அதை வசப்படுத்திக் கொண்டால் உயிருக்கு நிலை பேறுதான் என்பது இவர்கள் கொள்கை.

மூச்சை முறைப்படுத்தும் இவர்கள் செயலுக்கு வாசியோகம் என்று பெயர்.

ஆனால் ஒன்று. மூச்சைக் கட்டுப்படுத்துகிற இவர்கள் உயிரை வளர்க்கிறேன் என்று சொல்கிறார்களே தவிர அதை வளர்ப்பதில்லை.

உயிர் வளர்வதும் இல்லை. தேய்வதும் இல்லை.

இவர்களுடைய மூச்சுப் பயிற்சியில் இவர்களுடைய தேகத்துக்கு ஒரு பளபளப்பும் மினுமினப்பும் கிடைக்கிறது. வலுவும் உறுதியுங் கூட தேகத்துக்குக் கிடைக்கிறது என்று சொல்லலாம். அவ்வளவுதான்.

இனி, மனதைப் பக்குவப்படுத்துகிறேன். அதைக் கட்டுப்படுத்துகிறேன். ஒருமுனைப்படுத்தி அதை ஒரு நிலையில் நிற்க வைக்கிறேன் என்று பலர் பாடுபடுகிறார்கள்.

அக்கம் பக்கம் பிறழாத படி ஒரு நிலையில் மனசை நிற்க வைத்து விட்டால் போதும், நினைத்ததை நினைத்தபடி செய்ய முடியும். என்று இவர்கள் நம்புகிறார்கள். அதற்காகவே யோகம், தவம் என்றெல்லாம் கடின செயல்களில் இறங்குகிறார்கள்.

பூஜை, தியானம், மந்திர உச்சாடணம் முதலிய செயல்களில் ஈடுபடுகிறவர்களும் உண்டு.

ஆனாலும் நினைத்ததை நினைத்தபடி செய்ய முடிகிறதா இவர்களால் என்று தான் கேட்க வேண்டி இருக்கிறது.

சாதாரண மக்கள் மிரண்டு வியக்கும்படி சில சித்து விளையாட்டுக்களை மட்டுமே இவர்களில் ஒரு சிலரால் செய்ய முடிகிறது.

உயிரை வளர்க்கிறேன் என்று மூச்சுப் பயிற்சியில் இறங்குகிறவர்கள் உயிரை விட்டு விட்டு உடம்பைக் கட்டு முட்டாக வைத்துக் கொள்கிறார்கள். அதே போலத்தான் மனதைப் பக்குவப்படுத்துகிறேன் என்று சொல்லிக் கொண்டு மனதை விட்டு விடுகிறார்கள். இவர்களுடைய சாதனையால் உடல் நிலை தேறி நிற்கிறது. முகத்தில் ஒரு களை வருகிறது மற்றவர்களை வசீகரிக்கும் ஒரு ஆற்றலும் இவர்களுடைய பேச்சில், பார்வையில், நடவடிக்கைகளில் வெளிப்படுகிறது. அதோடு சரி காரியம்.

உயிரை வளர்க்கிறேன், உள்ளத்தை வளர்க்கிறேன் என்று சொல்லிக் கொண்டு திரிகிறவர்கள் ஏதோவொரு வகையில் உடம்பை நன்கு வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடி உடம்பு ஓரளவுக்குக் கேட்டு நடக்கிறதே தவிர உள்ளமோ உயிரோ இவர்களை முகங்கொடுத்துப் பேசுவதில்லை.

வாசியோகம், மனோலயம் இவைகளை நடத்துகிறவர்களுக்கெல்லாம் உடம்பானது மெழுகாய் இளகுகிறது. வெண்ணெயாய்த் திரள்கிறது. ஆனால் மனம் என்னவோ கல்லாய் கருங்கல்லாய் இறுகித்தான் போகிறது.

கருணை, நீதி, பொறுமை, பணிவு, மரியாதை என்பவை எல்லாம் இவர்களை நெருங்குவதில்லை.

ஏன் இந்த விபரீதம்

உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்கிறேன். அதை வலுவாக உறுதியாக வைத்துக் கொள்ளப் பாடுபடுகிறேன் என்று சொன்னால் அது உண்மை.

அந்த உண்மையை விட்டு விட்டு நான் உயிரை வளர்க்கிறேன், உள்ளத்தை வளர்க்கிறேன் என்கிற பொய்க்கு ஏன் இடம் கொடுக்க வேண்டும்.

அதுக்கு இடம் கொடுப்பதனால் தான் பித்தலாட்டம் முதலிய போக்கிரித் தளங்கள் ஒட்டுகின்றன.

உயிரை வளர்க்கிறேன் உள்ளத்தை மேலே மேலே உயர்த்திக் கொண்டு போகிறேன் என்கிற பொய்யை முதலில் விட வேண்டும். ஏமாறக்கூடாது. மற்றவர்களை ஏமாற்றவும் கூடாது.

நமது உடம்பை நாம் பார்த்தால் போதும். உடம்பை என்றால் கையையோ, காலையோ, வாயையோ, வயிற்றையோ, முகத்தையோ அல்ல.

உடம்பில் நடக்கிற அற்புதங்களைப் பார்க்க வேண்டும். எத்தனை எத்தனை தத்துவங்கள் இந்த எண் சாண் உடம்பில் நின்று ஒன்றுபட்டு ஒரு தன்மைத்தாய்ச் செயல்படுகின்றன என்று பார்க்க வேண்டும்.

பரவசம் உண்டாக வேண்டும் பார்க்கிற பார்வையில். அந்தப் பரவசத்தில் நான் என்பது கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய வேண்டும்.

அப்படிக் கரையக் கரைய உள்ளம் பளிங்காக மிளிரும். முகம் வைத்து முகம் பார்க்கலாம். அப்படித் தக தக என்று ஒளிரும்.

பாரமே இருக்காது மனதில். பறவையின் இறகு போல கனமே இருக்காது மனசில். அப்படியானால் நோய் மூப்புப் பிணி வந்து ஒட்டுமா? தெளிவாக இருக்கும் உள்ளம் உறுதியாகவும் இருக்கும் அது.

கருணை, நீதி, அன்பு, எளிமை, பணிவு முதலிய பண்புகள் கசிந்து கசிந்து ஊறும் அங்கே.

மனவளர்ச்சி என்பது அதுதான். அதை ஒட்டி உடம்பும் சுத்தமாகி விடும். அதே நேரத்தில் கட்டி வயிரம் போலத் திடமாகவும் இருக்கும்.

குழந்தையானது மேலும் மேலும் வளர வளர தாயின் பார்வை முக்கியம். பெற்றோர்களின் பராமரிப்பு (ஆர்வம் கசியும் பார்வை) தான் குழந்தைகளுக்கு உயிர்ச்சத்து.

அதே போலத்தான் உடம்பைப் பார்க்கிற பார்வையும் தன்னை மறந்து - தன்னையே இழந்து அதிசயத்தோடு தேகதத்துவங்களின் நுட்பங்களை நோக்கும் நோக்கே தேகமும் நன்கு வளர உதவும்.

மனம் போல வாழ்வு என்றால் அதுதான் தேகத்தை அதிசயத்தோடு பார்க்கிறவன் அதோடு நின்று விடுவானா? உற்றாரை அப்படியே பார்ப்பான். உறவினர்களை நண்பர்களை வீடு, வாசல் தட்டுமுட்டுச்சாமான், கலை, பண்பாடு, பழக்க வழக்கம் எல்லாவற்றையுமே கூர்ந்து உணர்ந்து பார்ப்பான்.

பார்க்கப் பார்க்க உடம்பக்கு யோகம். உள்ளத்துக்கு ஞானம். பார்க்கிற நபருக்கோ ஆனந்தம். பரமானந்தம் என்றால் அதுதான்.

கள்ளம் கபடம் இல்லாமல் பக்தியோடும் பரவசத்தோடும் இப்படிப் பார்க்கிறவர்கள் சிலர்.

அவர்களிடந்தான் தெய்வாம்சம் என்பது முளைக்கும். துளிர்க்கும். தளிர்க்கும்.

பசுவில் அமிர்தம் (பால்) சுரப்பது போல இவர்களிடம் கசிந்து ஊறும் நீதியும் கருணையும்.

அப்படி ஊறும் பண்புகள் வெள்ளமாய்ப் பெருகும். அருவியாய்க் கொட்டும். கருணைக் கடலாய் ஞானப் பேராறாய்ப் பொங்கும். கழுமணி ஆறு என்று பெயர். அதற்கு.

அதோடு ஒட்ட ஒட்ட உறவாட உறவாட ஆனந்தந்தான். வானத்துக்கும் பூமிக்குமாக ஓங்கி உயர்ந்து ஒளி வீசும் மனச்சாட்சி. அதை அல்லவா பார்க்க வேண்டும்? பார்வை என்றால் அதுவல்லவா பார்வை.

ஒளிமயமான மனச்சாட்சியையே உள்ளம் ஊறிப் பெருக்கெடுக்கும் புனித நீர் என்கிறார் திருமூலர். வினை மாசு தீர முங்கி முங்கிக் குளிக்கலாம் அந்தப் புனித நீரில் என்கிறார்.

தீர்த்தமும் அதுதான் தீர்த்தம் ஆடுவதற்குரிய படித்துறையும் அது தான் என்கிறார்.

தன்னுணர்வு பெற்றவர்கள் நீராடித் திளைப்பது அதில் தான். அங்குதான் என்று அடித்துச் சொல்கிறார் திருமூலர்.

பாடல்

உள்ளத்தின் உள்ளே
உளபல தீர்த்தங்கள்,
மெள்ளக் குடைந்துநின்(று)
ஆடார் வினைகெட
பள்ளமும் மேடும்
பரந்து திரிவரே
கள்ள மனம் உடைக்
கல்விஇல் லோரே!

**(22)**

உண்மையை உணர்ச்சியோடு தேடத்தேட மனச்சாட்சி கூர்மைப்படும். அது தான் வழி காட்டும் விளக்கு. நம் முன்னே நின்று 'வா வா' என்னைத் தொடர்ந்து வா என்று பரிவோடு நம்மை விடாமல் கூட்டிக் கொண்டே செல்லும் தெய்வ விளக்கு அதுதான்.

அதைக் கடவுள் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல.

அதை ஏற்றி ஒளிர விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அந்த வெளிச்சத்தில் எதை வேண்டுமானாலும் தேடலாம். கடவுள் எங்கிருக்கிறார் என்று கூடத் தேடிப் பார்க்கலாம்.

ஆனால் அதை அணைத்து விடக்கூடாது. அணைத்து விட்டு எதையும் தேட முடியாது. கடவுளைத் தேடுவதும் வீண்தான்.

---

குடைந்து நின்று ஆடார் - மூழ்கி முக்குளித்து நீராட மாட்டார்கள். யார்? கல்வி இல்லோர் - உண்மையைக் கற்காத பித்தர்கள். பொய்யையே மெய்யென்று படித்த பின் புத்தி எப்படி இருக்கும்? திருட்டுப் புத்தியாகத் தான் இருக்கும். பள்ளம் - கடல், ஆறு, மேடு - மலை, அருவி.

எப்படிக் கும்மாளி போட்டுக் கொண்டு சொல்கிறார் திருமூலர் இந்த அனுபவத்தை.

*உள்ளத்(து) ஒருவனை,*
*உள்ளுறு சோதியை*
*உள்ளம் விட்(டு) ஒரடி*
*நீங்கா ஒருவனை*
*உள்ளமும் தானும்*
*உடனே இருக்கினும்*
*உள்ளம் அவனை*
*உருஅறி யாதே*

## *(23)*

மனத்தில் தான் தெய்வம் என்பதில்லை. மனந்தான் தெய்வம்.

நம்முடைய வாழ்க்கை பூத்து மலர்வதே மனம் என்னும் செடியில் தான். இந்த உலகில் மனிதன் உண்டாக்கிய அத்தனை பொருள்களுக்கும் மூல நாயகம் மனந்தான்.

யோசித்துப் பார்க்கிறது என்கிற ஒன்று அதாவது மனம் என்ற ஒன்று மனிதனிடந்தான் இருக்கிறது. அப்படி மனிதனிடம் மட்டும் அது முளைப்பதற்கு என்ன காரணம்?

நம்முடைய உடம்புதான் காரணம். லட்சோபலட்சம் ஆண்டுகளாகத் தவம் இருந்து தவமிருந்து நம் உடம்பு திருந்தி வந்திருக்கிறது. நிமிர்ந்து நிற்க ஆரம்பித்த உடனேயே இந்தத் திருத்தம் தொடங்கி விட்டது.

வால் கரைந்து விட்டது. அதன் ஆற்றல் மண்டைக்குள் மூளையில் போய் அமர்ந்து விட்டது.

கையை உதறி நடக்க ஆரம்பித்து விட்டான் மனிதன். கண், மூக்கு, நெற்றி, கன்னம், உதடு, பல், நாக்கு, ஏன் செவி கூடத்

---

உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவன் - மனதை விட்டு ஒரு எட்டுக் கூட எடுத்து வைக்கமாட்டான் இறைவன். அப்படி நம்மோடு நம் மனத்தோடு சேர்ந்தே இருக்கிறான். ஆனாலும் பார்க்க முடிய வில்லை.

திருந்தித் திருந்திப் பக்குவப்பட்டுவிட்டன. மனித உடம்பு படிப்படியா அப்படிச் செம்மைப்பட்டு வந்திருக்கிறது.

உடம்பின் அந்தப் பக்குவ நிலையில் உண்டானது தான் சிந்தனை.

அந்தச் சிந்தனைதான் கலை, பண்பாடு, சட்டம், ஒழுங்கு, அரசியல், பொருளாதாரம், சமயம், வழிபாடு எல்லாவற்றுக்கும் தாயகம்.

அப்படியானால் நாமே நம் மனத்துள் தான் இருக்கிறோம். நம்மைப் படைத்த கடவுளும் நம்மோடு சேர்ந்து மனத்துள் தான் இருக்கிறார். ஆனாலும் கடவுளை நம்மால் பார்க்க முடியவில்லை. நம்முடன் அவர் இருப்பது தெரியாமல் எங்கெங்கோ ஓடி ஆடித் தேடுகிறோம். கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டே நெய் எங்கே நெய் எங்கே என்று அலைகிறோம்.

இனிப்பாடல்

கடல்உடை யாள்,மலை
யான், ஐந்து பூதத்து
உடலுடை யான்,பல
ஊழிதோ றூழி
அடல்விடை ஏறும்
அமரர்கள் நாதன்
இடம்உடை யார்நெஞ்சத்(து)
இல்இருந் தானே

---

கடல் உடையான் - கடல் முழுவதும் நீராய் நிறைந் திருக்கிறாள். பசும்புல்லின் தேகத்தில் உதிரமாக ஓடும் பனி நீரிலிருந்து மழை, அருவி, கடல் எல்லாமே நீர் என்கிற தத்துவந்தான். அது இறைவன்மயம். அப்படித்தான் மலையும். ஐம்பூதத்து உடன் உடையாள். நிலம், நீர் முதலிய ஐந்து பூதத்துவங்களும் இறைவனுடைய தோற்றந்தான். அதாவது அவனுடைய உடம்பு மாதிரித்தான் அவை. அடல் விடை ஏறும் ஆற்றல் மிக்க காளையில் வலம் வரும். காளை என்பது மனதுக்கு ஒரு அடையாளப் பெயர். அமரர்கள் நாதன் - சகல தத்துவங்களுக்கு மூல நாயகம். இடம் உடையார் நெஞ்சத்து - யோசித்து (கூர்ந்து) பார்க்கிறவர்களிடமே. இல் இருந்தான் - குடியேறி இருக்கிறான்

## கலை தான் கடவுளைக் காட்டும் கண்ணாடி

## (24)

அண்டபிண்ட சராசரம் அவ்வளவிலும் நிறைந்திருக்கிறாள் இறைவன். அவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லும்படி அப்படி நிறைந்திருக்கிறான் இறைவன். ஆனாலும் அவனுக்கு ஆனந்த பரவசம் ஊட்டும் சொகுசு வீடு அதாவது கோயில் என்பது மனிதர்களாகிய நம்முடைய மனந்தான்.

மனதோடு மனிதாக நிறைந்திருக்கிறான் இறைவன். ஆனால் நம் கண்ணுக்குப் புலனாவதில்லை அவன்.

எள்ளுக்குள் இருக்கிற எண்ணெய் நமக்குப் புலனாகவா செய்கிறது.

உருப்படியே இல்லாதபடி எள்ளை அறைத்துப் பிழிந்த பிறகுதான் எண்ணெய்யை ப் பார்க்க முடியும்.

மனதையும் அப்படி உருக்கிக் கரைக்க வேண்டும். உருகி உருகி உள்ளமானது கரையக் கரைய இறைவன் அங்கு எழுந்தருளி வெளிப்படுவான். என்னப்பா, என்ன தேடுகிறாய்? இதோ பார் என்னை என்பான்.

உள்ளத்தை எப்படி உருக்குவது, எப்படிக் கரைப்பது?

யோகம், தவம், ஜெபம் இவை எல்லாம் மனசை இறுக்குமே தவிர இளக்காது.

கலை ஒன்று தான் மனசைக் கரைய வைக்கும். இசை, நடனம், ஓவியம், கவி முதலிய கலைதான் சாதனம்.

இசை, நடனம் இவைகளை விடக் கவிதான் நூற்றுக்கு நூறு வாய்ப்பான சாதனம்.

கவியில் கரைந்து திளைக்கிறவர்கள் கண்முன் வந்து நிற்பான். கையைப் பிடிப்பான். கட்டியும் தழுவுவான் இறைவன்.

இனிப்பாடல்

உள்ளத்(து) ஒடுங்கும்
    புறத்துளும் நான் எனும்
கள்ளத் தலைவன்
    கமழ்சடை நந்தியும்;

வள்ளல்ப் பெருமை

வழக்கம்செய் வார்கள்தம்

அள்ளல்க் கடலை

அறுத்துநின் றானே.

## (25)

உண்மையைக் காண்பதற்கு கண்டு உறவாடுவதற்கு உரிய சாதனம் கலைதான். அதுவும் கவி என்கிற தெய்வக்கலை தான்.

இதை, கடவுளைப் பார்ப்பதற்கு உரிய வாசல். ஆசார வாசல். அதாவது கோபுர வாசல் கலைதான் - கவிதான் என்று சொல்லி இருக்கிறது.

''கலையாயின உணர்வார் காண்பார்'' என்று தெளிவுபடுத்துகிறார் காரைக்கால் அம்மையார்.

கலை உலகின் மகாராணி கவிதான்.

''பாட்டலி காட்டுதும் பாலவி யாமே''

இனி, பூர்வகாலத்து மக்களுக்கு பசுவும், காளையுந்தான் கண் கண்ட தெய்வம்.

அவர்களின் வாழ்வே பசுவையும் காளையையும் வைத்துத்தான் நடந்தது.

---

உள்ளத்து ஒடுங்கும் மனதுக்கு உள்ளே ஒளிந்து கொள்வான். தேடத் தெரியாமல் தேடினால் காண முடியாது அவனை. இனி தேடும் முறையில் தேடினாலோ அதாவது அவனுடைய கருணைமயமான வள்ளல் தன்மையை கவிகளின் மூலம் எடுத்து வழங்கினால். புறத்துளும் நான் எனும் - எதிரில் (வெளியே) வந்து என்னைத்தானப்பா தேடுகிறாய் என்றபடியே தோள் மேல் கை போட்டு விடுவான்.

கள்ளத்தலைவன் - அப்படி ஒரு மாய விளையாட்டுப் போடும் பொல்லாத ஆசாமி அவன். கமழ்சடை நந்தி - கொன்றை மலர் மணம் வீசிப் பூத்துக் கிடக்கும் சடைமுடி உடையவன். அவனுக்கு நந்தி என்றும் ஒரு பெயர். அள்ளல் கடலை - ஓயாத துன்பத்தை மனக்கவலையை, அறுத்து நின்றான் - வேரற வெட்டிச் சாய்த்து விடுவான்:

குறிப்பு : காட்சி கொடுப்பதோடு முடிந்து விடாது அவள் காரியம். அருள் பாலிப்பான் அவன்.

அதனால்ப் பசுவை உயிரென்றும், உயிருக்கு உயிர் என்றும் சொல்லி இருக்கிறது. ஆவுடை நாயகம் என்றால் அதுதானே பொருள். (ஆ - பசு)

லிங்கத்தைத் தாங்கி நிற்பதற்கு ஆவுடையார் என்று தானே பெயர். அதே போல இறைவனுக்கு நந்தி என்றும் ஒரு பெயர், அந்தப் பெயர் இறைவன் தங்கி இருக்கும் மனத்துக்கும் வந்தது. மனத்துள் உதிக்கும் அறிவு (ஞானத்து)க்கும் அதே நந்தி என்பதுதான் பெயர் ''விரிசடை நந்தி''.

இனி இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுப்பதற்கு நம்மிடம் ஒன்று தான் இருக்கிறது. அதுதான் (நம்முடைய) ஆணவம்.

இறைவனும் அதைத்தான் நம்மிடம் வேண்டிப் பெறுவான். வாங்கி அதை நிர்மூலம் (பஷ்மம்) ஆக்கி விடுவாள். சாம்பலாய் நிர்மூலம் ஆக்கினாலும் ஆணவம் முற்றும் அழியாது. அதனால் அந்தச் சாம்பலாயே குழைத்து விபூதியாகப் பூசிக் கொள்வான் இறைவன்.

நம்முடைய ஆணவம் அப்படி எல்லாம் விளையாட்டுப் பொருளாகிறது பெருமானு (நந்தி)க்கு.

வேட்டவி உண்ணும்

விரிசடை நந்திக்கு

அந்தப் பெருமானுக்குச் சமைத்துப் போட (நைவேத்யம் காட்ட) நம்மிடம் ஒன்றும் இல்லை. காட்டவும் நாம் இலம்...

ஆனாலும் வேளா வேளைக்கு அதாவது காலை மாலை (பகல், இரவு) எப்பொழுதும் அவனுக்கு வயிறார ஊட்டுவதற்கு தமிழ் இருக்கிறது. பாடல்கள் இருக்கின்றன. அந்தப் பாடல்கள் அவள் பசியை ஆற்றுவதோடு நின்று விடாது. அவன் உள்ளத்தையே புளகாங்கிதப்படுத்தி விடும்.

அவனுக்குப் பாலாபிஷேகம், பன்னீர் அபிஷேகம் எல்லாம் பாடல்களில்தாம்.

வேட்டவி உண்ணும்
விரிசடை நந்திக்குக்

காட்டவும் நாம் இலம்
காலையும் மாலையும்
ஊட்டவி ஆவன
உள்ளம் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும்
பாலவி யாமே!

## (26)

அணுவுக்குள் அணுவாய் இருக்கிறான் பெருமான். அப்படியே, பேரண்டமாகவும் இருக்கிறான். நாமும் அவன்தான். உடல், பொருள், ஆவி எல்லாமாகவும் இருப்பது அவன் தான்.

அப்படியானால் அவன் ஒருவன்தான் சகலமுமாக விளைகிறான், விளைந்தவண்ணமாகவே இருக்கிறான்.

உண்மை என்பது இதுதான்.

இப்படி எல்லாமாகிவிளைகிறவன் - விளைந்தவண்ணமாக இருக்கிறவன் எப்படி நம்மைப்போல முக்கும் விழியுமாக ஒரு உருவத்தில் தனியே இருக்கமுடியும்?

மனம் என்கிற கண்ணாடியைப் போட்டுக் கொள்ளவேண்டும். அப்படிப் போட்டுக் கொண்டுபார்த்தால் மனச்சாட்சி தெரியும்.

அது தெரிந்தால் போதும் அவ்வளவுமாக அவன் விளை கிற விந்தையே தெரியும். பல பலவாக அவன் உருவெடுப்பதும் தெரியும்.

அப்படியானால் அண்ட பிண்ட சராசரம் அவ்வளவும் ஒன்றுதான். நாமும் அதனோடு சேர்ந்தே இருக்கிறோம். வேற்றுமை என்பதே இல்லை இந்த உண்மை மிக்கபிரகாசத்தோடு தெரியும்.

---

வேட்டவி (வேட்டம் + அவி) ஆணவம், மனிதர்களின் ஆணவந் தான் இறைவனுக்கு அவிப்பகாம். வேட்டம், ஆசை, அதாவது ஆணவத் தின் செயல்பாடு.

பாட்டவி (பாட்டு + அவி) பாடல்கள்தாம் இறைவனுக்குரிய நைவேத்தியம். பாலவி - பாலாபிஷேகம்.

நாம் தனியல்ல என்பது பிரகாசமாகத் தெரிய வேண்டும் அந்தப்பிரகாசந்தான் நீதி.

சட்டத்தின் மூலம் தேடிக் கண்டு பிடிக்கிற காரியம் இல்லை நீதி.

அவரவர் கற்பனைக்கு ஏற்றபடி, கருத்துக்கு ஏற்ற படியே மூர்த்தியாகக் காட்சி கொடுக்கும். அந்தத் தெய்வநீதி.

இதை எப்படிச் சொல்கிறார் திருமூலர்.

நீதிக் கண்ணாடி

நினைவார் மனத்துளன்.

வேற்றுமை அற்ற, வெறுப்பற்ற அன்புமயமான உண்மைதான் நீதி. அந்த நீதியின் பிரகாசத்தில் தெய்வாம்சம் புலனாகும்.

மனசையே கண்ணாடியாகப்போட்டுப்பார்த்தால் தான் இது முடியும். அப்படிமனசையே கண்ணாடியாகப் போட்டுப் பார்ப்பதற்கு பாடல்கள் தாம் உற்றதுணை.

இதை எப்படி விளக்குகிறார் திருமூலர்.

நீதிமயமாக மனதுள் நிறைந்து பிரகாசிக்கும் பெருமானை காதால் கேட்டு அப்படியே ஒன்றுபட்டு விட்டேன். இரண்டாறக் கலந்து அவனுடன் ஒன்றிநின்றுவிட்டேன்.

இப்படிவிளைக்குகிறார் திருமூலர்.

கீதகண் ணாடியில்

கேட்டுநின் றேனே.

மனதைக் கண்ணாடியாகப் போட்டுக் கொண்டு உண்மையைத் தேடுகிறவர்கள் ஞானிகள். ஆனால் பலருடைய காரியம் அப்படி இல்லை தங்களையே கண்ணாடியாகப் போட்டுக் கொண்டு எதை எதையோ தேடி ஓடுகிறார்கள் அவர்கள்.

விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்று கூட நான் என்கிற கண்ணாடியில் வர்ணம் பூசி இருக்கும். ஆனால் உண்மையைப் பார்க்க முடியுமா என்றால் முடியாது.

யோகம், தவம் என்று படாதபாடுபட்டாலும் இறைவனை (உண்மையை) ப்பார்க்முடியாது. தலை கீழாகத் தெரியும் உண்மை. அதாவது மெய்ப் பொருள்.

வேதக்கண் ணாடியின்

வேறே வெளிப்படும்''.

நம்மில் இருக்கிற பரம் பொருள்தான் அண்டபிண்டசராசரம் அவ்வளவிலும் அமர்ந்திருக்கிறது. எல்லாம் ஒன்றுதான் என்னும் உண்மை - நீதியானது விளங்கப் பாடல்கள்தாம் சாளரங்கள். வாயில்கள்.

இனிப்பாடலின் முழுஉருவம்

பூதங்கண் ணாடியில்ப்
புகுந்திலன், போதுளன்,
வேதக்கண் ணாடியில்
வேறே வெளிப்படும்;
நீதிக்கண் ணாடி
நினைவார் மனத்துளன்,
கீதக்கண் ணாடியில்க்
கேட்டுநின் றேனே.

## (27)

யோசித்துப்பார்க்கிறது மனம். ஏன் யோசிக்கிறது என்றால் எப்படியாவது உண்மையைக்காணவேண்டும் என்கிற வேட்கை காரணமாகத்தான்.

இப்படியோசிக்கிற மனம் மனிதனிடந்தான் இருக்கிறது. மனிதன் யோசிக்கயோசிக்க அதாவது உண்மையைத் தேடத் தேடவளர்ந்து கொண்டே போகிறான்.

---

பூதக்கண்ணாடி - பஞ்சபூதங்களும், அவற்றாலான வஷ்துக் களும் இறைவன் மயந்தான். அதனால் எல்லாவஷ்துக்களுமே இறைவனைப் பார்ப்பதற்கு வசதியான கண்ணாடிகள்தான். புகுந்திலன் - வஷ்து வோடு வஷ்து வாக இறைவன் இரண்டறக்கலந்து கிடப்பதால் பார்க்கமுடியாது. மனித மனம் ஒன்றில்தான் வெளிப்படும் . வேதம் - சிந்தனை இல்லாத வெறும் விஞ்ஞானம், மெய்ஞானமுந்தான்.

மொழி, கலை, பண்பாடு, வாழ்க்கை, தொழில், என்று வளமாய்க் கொழிக்கிறான். இந்த வளமும் பெருக்கமும் உணர்ச்சிகளைப்பளபள என்று ஜொலிக்கவைக்கின்றன. மனச் சாட்சியைத் தூண்டிக் கொண்டே இருக்கின்றன. கடவுளைக் காண்பது என்பது இதுதான்.

மனம் என்கிற ஒன்றில்லை - யோசிக்கிற பழக்கம் என்பது இல்லை என்றால் ஆடு, மாடு, கோழி, குதிரை போல இருந்த இடத்திலேயே இருக்கவேண்டியதுதான் மனிதனும்.

அதனால் மனிதனுக்குக் கண்கண்ட தெய்வம் மனந்தான். உண்மையை மேலும் மேலும் தேடும் யோசனைதான்.

இருள்மயமான தடா கத்துள்ளிருந்து தாமரை மலர் பூத்துப் பொலிவது போல உடம்புக்குள்ளிருந்து மனம் பூத்துமிளிர்கிறது.

அதனால் மனதுக்கு விளக்கு என்று பெயர் வெளிச்சம் கொடுக்கிற விளக்குத்தானே என்று சும்மா போட்டு விடக்ககூடாது மன விளக்கை. நெய்விட வேண்டும், தூண்டி விட வேண்டும். அந்த மன விளக்கை.

கலையால் அதிலும் கவிக்கலையால்தான் இதைச் செய்யமுடியும்.

இப்படிமன விளக்கைத்தூண்டும் கவிக்கு விளக்கு என்று பெயர். விளக்கை விளக்கும் விளக்கு என்றே பெயர்.

பாடல் களைப் பாடிப்பாடி அனுபவித்து ஆனந்தத்தில் திளைக்கிறவர்களுக்கோ விளக்கை விளக்கும் விளக் குடையார் என்றே பெயர். கடவுளுக்கு என்ன பெயர் தெரியுமா? விளக்கவர் என்றே பெயர்.

இனிப்பாடல்

விளக்கிளை ஏற்றி
வெளியை அறிமின்,
விளக்கினின் முன்னே
வேதனை மாறும்;
விளக்கை விளக்கும்
விளக்குடை யார்கள்

விளக்கின் விளங்கும்

விளக்கவர் தாமே

## (28)

ஒரு கதை

படைக்கும் கடவும் பிரம்மா, காக்கும் தெய்வம் விஷ்ணு, இவர்களுக்குள் யார் பெரியவர் என்கிற நினைப்புவந்து விட்டது. அது பெரிய விவகாரமாகவே உருவெடுத்துவிட்டது.

வழக்கு சிவ பெருமானிடம் வந்தது. விசாரித்து விட்டு பெருமான் சொன்னார்.

நான் ஒளிப்பிழம்பாக செம்மலைக் சிவமாக மாறுகிறேன். என் தலை முடியை ஒருவர் தேடிப்போங்கள். காலடியை ஒருவர் தேடிப்போங்கள். யார் முதலில் கண்டுபிடித்து வருகிறார்களோ அவர் தான் பெரியவர்'' என்று.

இருவரும் ஏற்றுக்கொண்டார்கள்.பிர்மா அன்னப்பட்சியாக மாறி தலையைதேடிப் பறந்தார். விஷ்ணுவோ பாதத்தைத் தேடிப் பன்றி அவதாரம் எடுத்துப் பூமியைத்தோண்டினார்.

ஊழிஊழிகாலமாக முயன்றும் முடியையும் காணமுடியவில்லை. அடியையும் காணமுடியவில்லை அவர்களால்.

களைத்துப் போய் இரண்டு பேரும் பெருமான் முன் வந்து நின்றார்கள்.

என்ன கண்டீர்கள் என்றார் பெருமான்.

---

விளக்கிளை ஏற்றி - மனசைத்தூண்டி யோசனைபண்ணி, வெளியை அறிமின் - வெட்டவெளியை அதாவது மாசற்ற உண்மையை. அறிமின். பாருங்கள். வேதனைமாறும் - சிக்கல் அவிழும். விளக்கின் விளங்கும் - கவிமூலம் விளக்கினால் தான் உண்மை தெரியும். எது? விளக்கவர் - கடவுள். அதாவது நம் மனச்சாட்சி.

உண்மைநாட்டம் இல்லை என்றால் மனமானது வெறும் வறட்டு அறிவாக (புத்தியாக) உருவெடுக்கும். அந்தப்புத்தி கெட்ட அறிவே வார்த்தை. செயல் என்றெல்லாம் பலபல காரியங்களாக (சித்தியாக)ப் பரிணமிக்கும். பிறகு அதைச் செய்தேன் இதைச் செய்தேன் என்று அகங்காரமாக (ஆணவமாக) நிமிர்ந்து தண்டா முண்டாப் பண்ணும்.

காண்பதற்கு என்ன இருக்கிறது! படைப்பது, காப்பது எல்லாம் நாம் தான் என்று அதை பொத்திப் பொத்திவைத்தோம். அதனால் கிறுக்குப்பிடித்துவிட்டது மனம். அதைவிட்டுவிட்டு தேவரீரைத் தேடும் முயற்சியில் இறங்கினோம் விஷயம் விளங்கிவிட்டது.

''நம்முடையது என்று ஒன்றும் இல்லை. எல்லாம் அதுஅது பாட்டுக்கு ஒழுங்காகத் தான் நடக்கின்றன. பார்த்து அனுபவிக்கவேண்டும். அதற்குப்பக்குவம் வேண்டும். அந்த பக்குவத்தைத் தேவரீர் அருளால் பெற்றோம்'' என்றார்கள் இருவரும் ஒருசேர

இப்பொழுது தான் எங்களுக்கு நிம்மதி என்றும் சொல்லிவிட்டார்கள்

பெருமானும் வாய்விட்டே சிரித்துவிட்டார்.

இந்த உண்மையயை உணர்த்த ஆண்டு தோறும் திருக்கார்த்திகை அன்று திருவண்ணாமலையில் ஜோதிவழிபாடு நடக்கிறது.

லட்சக் கணக்கான மக்கள் அந்த ஜோதியைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருப்பார்கள்.

ஜோதியை வழிபட்டு மனமாசு நீங்க வினை மாசு போக்குவார்கள்.

அப்பொழுது பக்தர்கள் எல்லோரும் ஒரே குரலில் அண்ணாமலைக்கு அரோகரா, அண்ணாமலைக்கு அரோகரா என்று முழங்குவார்கள்.

அந்த ஒலி எட்டுத்திக்கும் முட்டி எதிரொலிக்கும். காதில் விழுந்தால் போதும் அந்தஒலி. மனதைப்பிடித்து ஆட்டுகிற கிறுக்கு ஓடிவிடும் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

அரோகர என்ற சொல்லுக்கே அப்படிஒரு சக்தி இருக்கிறது சக்தி இருப்பதினாயே மந்திர மாகிவிடுகிறது சொல்.

இந்த மந்திரசக்தி எப்படி வந்தது சொல்லுக்குள்? மக்களும், அவர்களுடைய மனமும், பக்திப்பிரவாகமும் சேர்ந்து உருவெடுத்தனால்தான்.

அனுபவமும் ஆனந்தமும் சேர்ந்தால் ஒரு சொல்லுக்கே மந்திர சக்தி வந்துவிடுகிறது. அப்படிகயானால் அந்த அனுபவம் தேவகானமாய் தெய்வத்திரு நடனமாய் கவியாகி உருவெடுத்து வரும் பொழுது அதன் சக்தியை அளக்கமுடியுமா.

அண்ணாமலைக்கு அரோகரா என்பதிலுள்ள அரகர என்னும் ஒலி யானது செவி வழியாக மனதுள் இறங்க இறங்க பக்தர்கள் (மக்கள்) பளிச் சென்று தெரிவார்கள். பக்தியும் இன்னதென்று (மனம்) தெரியும்.

உண்மையானது வானத்துக்கும் பூமிக்குமாக ஒரே ஜோதிவடிவில் ஓங்கி உயர்ந்து நிற்பதும் தெரியும், நம்மனதுக்குள்ளேயே அது நிமிர்ந்து நின்று ஒளிவீசுவது தெரியும்.

இனிப்பாடல்.

அரகர என்ன
அரியதொன் றில்லை,
அரகர, என்ன
அறிகிலர் மாந்தர்;
அரகர, என்ன
அமரரும் ஆவர்
அரகர என்ன
அறும்பிறப்(பு) அன்றே

## (29)

திருமூலர் மனதையே துருவித்துருவிப்பார்த்தவர். அப்படியே உடம்பை - உடம்பினுள் நிகழும் அற்புதத்தை உணர்ந்து உணர்ந்து பார்த்தவர். பாடல்களைவைத்தே பாடிப்பாடிப் பரசவப் பட்டவர்

பார்க்கப் பார்க்க அவருக்கு ஒரே அதிசயம். ஒரே ஆனந்தம்.

---

அரியது ஒன்ற இல்லை - அதைவிட உயர்ந்தது எதுவும் இல்லை. அறிகிலர் மாந்தர் - அதன் பெருமைஇன்னதொன்று தெரியவில்லை மனிதர்களுக்கு அமரரும் ஆவர் - மெய்றவு பெற்றுவிடுவார்கள். பிறப்பு அறும் - ஆணவம் மயக்கம் தொல்லை எல்லாம் ஒழிந்துவிடும்.

எல்லாம் ஒன்றுதான், எல்லாவற்றிலும் ஒரே ஒரு நியதி தத்து வந்தான் என்கிற உண்மையே விளங்கிவிட்டது அவருக்கு.

உண்மையே நேருக்கு நேராக எதிரில் வந்து தரிசனம் கொடுத்துவிட்டால் சும்மாஇருக்க முடியுமா?

துள்ளிக் குதிக்கிறார் திருமூலர்.

எப்படி என்று பாருங்கள்.

கண்டேன் கமழ்தகு
கொன்றையி னான் அடி,
கண்டேன் கரிஉரி
யான்தன் கழல் இணை,
கண்டேன் கமல
மலர்உறை சேவடி;
கண்டேன் கழல(து) என்
அன்பினுள் யானே.

## (30)

பாடிப்பாடிப்பரவசப்பட்டார் திருமூலர். பாட்டின் மூலம் ஆட்டமே உண்டாகிவிட்டது. இரண்டும் சேர்ந்து நான் என்பதையே மறக்கவைத்துவிட்டது திருமூலரை. நான் என்பதை இழக்கவே வைத்துவிட்டது அவரை.

அடடா, பாடல்களுக்கு எவ்வளவு தெய்வ ஆற்றல் இருக்கிறது? இதைப்பற்றிக் கூடச் சிந்திக்கமாட்டேன் என்கிறார்களே மனிதர்கள் என்று வருந்துகிறார் திருமூலர் மற்றவர்களின் அறியானமயைத் தன்னுடைய அறியா மையாக வைத்தே சொல்கிறார் திருமூலர்

அப்படி ஒரு பரிவுணர்ச்சி அவருக்கு.

---

கமழ்தகு கொன்றையினான் - கமகம என்று மணக்கும் கொன்றைப் பூவைத்தலையில். சொருகவைத்திருக்கும் சிவ பெருமான். அடி-திருவருள். கழல் என்பதும் அருள்தான், கரிஉரியாள் - யானைத் தோவைப் போர்த்தியவன். கரி-யானை அன்பினுள் - உணர்ச்சிக்குள். உணர்ச்சிமயமான மனதுக்குள்.

பாடவல் லார்நெறி
    பாடி அறிகிலேன்,
ஆடவல் லார்நெறி
    ஆடி அறிகிலேன்,
நாடவல் லார்நெறி
    நாடி அறிகிலேன்,
கூடவல் லார்நெறி
    கூடகில் லேனே.

---

பாடவல்லார் - தம்மை மறந்து பாடிப் பரவசம் அடைகிறவர்கள். நெறி - வழி. அவர்களைப் போல - அவர்களைப் பின்பற்றி. பாட அறிகிலேன் - பாடிப் பரவசம் அடைய முடியவில்லை என்னால்.

பாடல் இல்லை என்றால் ஆடல் வருமா? பாடலும் ஆடலுந்தான் மனதைச் சுத்தப்படுத்தும்.

சுத்தப்பட்ட மனதுக்குத்தான் இறையருளில் நாட்டம் உண்டாகும். தேடுவதற்கு யோசிக்கும். யோசித்து யோசித்து தேடிக் கண்டுபிடித்துக் கூடி குலாவியே விடும்.

கடவுளைக் காட்டும் கண்ணாடி கவிதான். கவியை அனுபவித்துப் பாடி ஆடிப் பரவசப்பட வேண்டும்.

சாதாரண மக்களிடம் இந்தப் பழக்கம் உண்டு. ஞானி (அறிஞர்) களிடமும் உண்டு.

ஆனால் புத்தகத்தையே - பாடத்தையே உண்மை என்று நம்பிப் படித்தவர்களிடம் இந்தப் பண்பு இல்லை.

''புத்தகப் பேய்களுக்(கு)
    எங்கித்த தோஅரன்
        பொன்னடி யே''

எங்கித்ததோ - கண்முன் வந்து நிற்கவா செய்யும். அரன் பொன் அடி - இறையருள்.

## தூக்கமா விழிப்பா

## (31)

சிவபெருமான் அதாவது சிவம் என்பது உண்மையைக் குறிக்கும் அடையாளம்.

உண்மையைத் தேடி யோசிக்க யோசிக்க மனம் தூய்மை பெறும். பளிங்கு போலத் துப்புரவாகி விடும் மனம்.

குழப்பமோ, மயக்கமோ இருக்காது. அதனால் படபடப்பு, ஆத்திரம், ஆவேசம், அவசரம், வேகம் என்று ஒன்றும் தலை நீட்டாது.

அடக்கமாகப் பொறுமையோடு இருக்கும் மனம். மனதை அப்படி வைத்திருப்பவர்கள் தாம் அறிஞர் (ஞானி)கள்.

இனி, பச்சை மதலை என்று சொல்கிறோமே குழந்தையை அந்தக் குழந்தையிடம் கபடம் உண்டா?

ஆனந்தமாக இருக்கும் குழந்தை. சிரித்த முகம் என்றால் அதன் முகந்தான்.

குழந்தையின் முகம் மட்டுமா, உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அதன் மேனி முழுவதுமே சிரிக்கும்.

ஆனந்தம் அப்படிச் சிரிப்பாகப் பொங்கி வழியும் குழந்தையிடம்.

ஞானிகளும் அப்படித்தான். குழந்தைதான் அவர்கள், ஒவ்வொரு ஞானியும் ஒவ்வொரு ஞானக் குழந்தை.

குழந்தையின் முன்னே ஒரு மாந்தளிரைப் போட்டால் போதும். ஆசையோடு அதைப் பார்க்கும் குழந்தை.

மாந்தளிரின் குளுமை, பசுமை, வண்ணம், பொலிவ ஒவ்வொன்றிலும் ஒன்றி விடும் குழந்தை.

மாந்தளிரோடு மாந்தளிராகத் தோய்ந்து கலந்து விடும் குழந்தை.

அறிஞர்களும் அப்படித்தான். உண்மையோடு உண்மை யாய்த் தோய்ந்து கலந்து விடுவார்கள்.

எந்தவிதமான வம்பு தும்புக்கும் இடம் கொடுக்க மாட்டார்கள். சில்லரைக் காரியங்கள் எதிலும் ஈடுபடமாட்

டார்கள். உண்ணல், உறங்கல் போன்ற சொந்தக் காரியங்களில் கூட குறியாய் இருக்க மாட்டார்கள்.

அவர்கள் யோசிக்கிற உலகம் தனி. பார்க்கிற உலகமும் அதுதான். நடமாடுவதும் அங்குதான். அக்கப்போர்களில் நினைப்பே இல்லாமல் அப்படி ஒதுங்கி விடுகிறார்கள். அவர்கள்.

சாதாரண மக்கள் அவர்களைப் பைத்தியம் என்று கூடச் சொல்வார்கள். பிழைக்கத் தெரியாத ஜென்மம் என்று கூடச் சொல்லி விடுவார்கள். கொஞ்சம் லௌகீகமாகப் பேச வேண்டும் என்கிற நினைப்பில் பேசுகிறவர்கள் வெறும் சோம்பேறி; என்று பட்டம் சூட்டுவார்கள்.

வெளிப்பார்வைக்குத்தான் இவர்கள் சோம்பர்கள். உண்மையில் இவர்கள் உற்சாகமானவர்கள். சுறுசுறுப்பானவர்கள். ஜாக்கிரதைமிக்கவர்கள்.

உண்மையைத் தேடி உள்ளே உள்ளே போய் மேலே மேலே உயருகிறவர்கள் இவர்கள்.

சாதாரணமானவர்களுக்கு இவர்களைப் பற்றி அப்படி ஒன்றும் தெரியாதுதான்.

ஆனால் திருமூலருக்கோ இவர்களைப் பற்றி அத்து படி.

அது எப்படிக் கவியாய் எழுந்து நிற்கிறது என்று பாருங்கள்.

சோம்பர் இருப்பதும்
சுத்த வெளியிலே,
சோம்பர் கிடைப்பதும்
சுத்த வெளியிலே.

---

சோம்பர் இருப்பது - ஞானிகள் தேடுவது, பார்ப்பது, அனுபவிப்பது எல்லாமே. சுத்தவெளியில் மனதோடுதான். உண்மையை நாடும் சிந்தனையில் தான். சோம்பர் கிடைப்பதும் - ஞானம் வந்து கூடுவது, அதாவது சத்திய தரிசனம் கிடைப்பதும். சுத்த வெளியிலே - அதே மனம் - யோசனை மூலந்தான். சோம்பர் உணர்வு - ஞானிகளின் அனுபவந்தான். சுருதி முடிவில் - வேதாந்த சித்தாந்தங்கள். அதாவது சட்டம், நீதி, தருமம் எல்லாம் அவர்களுடைய அனுபவ வெளியீடுகளே, அச்சுருதிக் கண் தூக்கம் - அந்த உண்மையோடு உருண்டு புரண்டு விளையாடுவதும், கொஞ்சிக் குலாவுவதுமே, சோம்பர் கண்டார். தங்கள் காரியமாக ஞானிகள் பெற்றனர்.

இரண்டாவது வரியில் உள்ள சோம்பர் ஞானம்.

சோம்பர் உணர்வு

சுருதி முடிவிலே,

சோம்பர்கண் டார்அச்

சுருதிக்கண் தூக்கமே.

## (32)

தூக்கம் என்பது சாதாரண மக்களைப் பொறுத்தவரை உறக்க நிலை, உணர்வற்று கண்ணை மூடிப் படுக்கையில் செயலற்றுக் கிடக்கிற நிலை.

ஆனால் ஞானிகளுக்கோ தூக்கம் என்றால் விழிப்பு நிலை, உண்மையைக் கண்டு எக்களிப்போடு அதைக் கட்டித் தழுவி அனுபவிக்கும் ஆனந்த நிலை.

அனுபவமும் ஆனந்தமும் கூடக் கூடத் தம்மையே மறந்து விடுவார்கள். ஞானிகள். தம்மையே இழந்து கூட விடுவார்கள். ஆனாலும் உணர்வற்று செயலற்றுப் படுக்கையில் சவம் போலக் கிடந்து உறங்க மாட்டார்கள்.

குழந்தை போலச் சிரித்து மகிழ்ந்து புளகாங்கிதம் அடைந்து கொண்டிருப்பார்கள்.

இது சம்பந்தமாக ஒரு குறிப்பு

பிராங்ளின் ரூஷ் வெல்ட் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். 1944-45-ம் ஆண்டாக இருக்கலாம்.

அணுசக்தியின் மூலம் என்னென்ன பெறலாம் என்று தீர்மானிக்க விஞ்ஞானிகளிடம் ஆலோசிப்பதற்காக ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

கூட்டம் வெள்ளை மாளிகையில் நடைபெறுவதாக இருந்தது. குறிப்பிட்ட நாளில் பிற்பகல் மூன்று மணிக்கு ஜனாதிபதி முன்னிலையில் விஞ்ஞானிகள் கருத்தரங்கம் நடைபெறுவதாக இருந்தது.

பேராசிரியர் ஆல்ப்ர்ட் ஐன்ஸ்டைன் முதன்மையாளராக அழைக்கப்பட்டிருந்தார் அக்கூட்டத்துக்கு.

பிற்பகல் இரண்டு மணி நாற்பது நிமிடத்திலிருந்தே விஞ்ஞானிகள் வர ஆரம்பித்து விட்டனர். இரண்டு மணி ஐம்பத்தைந்து நிமிஷங்களுக்குள் எல்லோரும் வந்து விட்டனர்.

ஆனால் ஐன்ஸ்டைன் ஒருவர் மட்டும் வரவில்லை. மணி மூன்று ஐந்து, மூன்று பத்து, மூன்று பதினைந்து என்று ஏற ஏற எல்லோரும் திகைத்து விட்டனர்.

ஐன்ஸ்டைன் பணியாற்றும் அலுவலகத்தோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டு விசாரித்தார்கள். ஜனாதிபதி மாளிகைக்கு 2.35க்கே புறப்பட்டு விட்டார் என்று பதில் வந்தது.

ஐன்ஸ்டைன் வீட்டுக்கும் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்துக் கேட்டார்கள். அவர்களும் அப்படியே சொல்லி விட்டார்கள்.

''இன்று வெள்ளை மாளிகையில் அணுசக்தி சம்பந்தமாக ஒரு கூட்டம். அதற்குப் போய் விட்டு வருகிறேன் என்று ஏற்கனவே சொல்லி இருந்தார்'' என்று பதிலுரைத்தார்கள் வீட்டார்.

ஜனாதிபதி உள்ளிட்ட எல்லோருக்குமே பதட்டம் உண்டாகி விட்டது. பல்வேறு இடங்களில் விசாரித்துப் பார்த்தார்கள். மணி மூன்றரை, மூன்றே முக்கால் என்று கூடிக் கொண்டே போனது. ஆனால் ஐன்ஸ்டைனைப் பற்றிய துப்பு மட்டும் கிடைக்கவில்லை.

சரியாகப் பிற்பகல் நான்கு மணிக்கு அவருடைய கார் வெள்ளை மாளிகைக்குள் வந்தது. அவருடைய முகத்தில் மகிழ்ச்சி பொங்கித் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. ஒரே ஆனந்தக் களிப்பில் குழந்தை போல மகிழ்ச்சி பொங்கப் பொங்க விஞ்ஞானப் பேரவையுள் நுழைந்தார் ஐன்ஸ்டைன்.

ஒருவருக்கும் ஒன்றுமே ஓடவில்லை. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மட்டும் மிக்க ஆதங்கத்தோடு உங்களைக் காணாமல் நாங்கள் மிகக் கவலையோடு இருந்தோம்'' என்று சொன்னார்.

உடனே ஐன்ஸ்டைன் குழந்தை போலத் துள்ளிச் சிரித்தார். சிரித்துக் கொண்டே சொன்னார்.

நான் இத்தனை நேரமும் பேரானாந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் எனக்காக வருத்தப்பட்டிருக்கிறீர்கள் என்று.

ஜனாதிபதிக்கு விளங்க வில்லை இது. திகைத்தார். உடனே ஐன்ஸ்டைன் விளக்கினார். பிற்பகல் 2.40க்கு வெள்ளை மாளிகைக்குப் புறப்பட்டு வந்தேன். வரும் வழியில் குழந்தைகள்

விளையாடிக் கொண்டிருந்தார்கள். மகிழ்ச்சியோடு அவர்கள் துள்ளி விளையாடுவதைப் பார்த்தேன். நாமும் அவர்களுடன் கொஞ்ச நேரமாவது விளையாட வேண்டும் என்று தோன்றியது. அவர்களுடன் சேர்ந்து விளையாடினேன். முதலில் என்னை விளையாட்டில் சேர்க்க குழந்தைகள் தயங்கினார்கள். பிறகு நான் விளையாடுவதைப் பார்த்து வியந்தார்கள். தினசரி எங்களோடு விளையாட வர வேண்டும் என்றார்கள். நேரம் கிடைக்கிற பொழுதெல்லாம் வருகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். ஆனந்தமாக இருந்தது அவர்களுடன் சேர்ந்து விளையாடியது.

பிற்பகல் ஒரு மணியிலிருந்தே அவர்கள் விளையாடு கிறார்களாம். அதனால் நான்கு மணிக்குள் முடித்து விட்டார்கள். நானும் புறப்பட்டு வந்தேன். இப்படிச் சொன்னார் பேராசிரியர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்.

ஐன்ஸ்டைன் போன்றவர்களுக்குத்தான் சோம்பர் என்று பெயர். அவர்களுடைய காரியங்களுக்கும் ஆனந்தத்துக்கும் தூக்கம் என்று பெயர்.

நாம் பேசுவது மனித மொழி. இதில் சோம்பர், தூக்கம் என்றால் பொருள் வேறு. ஆனால் தெய்வமொழி என்றுஒன்று. அதில்தான் சோம்பர், தூக்கம் என்பதற்கு அப்படிப் பொருள்.

அந்த மொழிக்குத்தான் அடையாள மொழி என்று பெயர். திருமூலருக்கு அடிக்கடி அந்த மொழி வந்து கை கொடுக்கும்.

இனிப்பாடல்

தூங்கிக்கண் டார்சிவ
லோகமும் தம்முளே,
தூங்கிக்கண் டார்சிவ
யோகமும் தம்முளே,
தூங்கிக்கண் டார்சிவ
போகமும் தம்முளே,
தூங்கிக்கண் டார்நிலை
சொல்வதெவ் வாறே!

---

சிவலோகம், சிவயோகம், சிவபோகம் என்பவை எல்லாம் ஆனந்தத்தை உணர்த்த வந்த அடையாள மொழிகளே. மனசோடு உறவாடி உண்மையைப் பார்க்கிறவர்களுக்கு ஆனந்தம் மேலே மேலே பொங்கி வழியும். அவர்கள் நிலை (காரியம்) தனி, சாதாரண மக்களின் பிரவர்த்திகளும் தனிதான்.

## கண்டதும் காதல்

## (33)

வானத்தை யாராவது அளக்க முடியுமா? அதன் நீளம் என்ன, ஆழம் என்ன என்றெல்லாம் கணக்குப் போட முடியுமா? கோடான கோடி அண்டங்கள், அகண்டங்கள் எல்லாம் இந்த வெளியில் சுழல்கின்றன. கடலில் கப்பல்கள் மிதப்பது போல வான்வெளியில் மிதக்கின்றன அண்டங்களும் அகண்டங்களும்.

அப்படிப் போகப் போகப் போய்க் கொண்டே இருக்கிறது வான்வெளி. முடிவே இல்லை. என்று சொல்லும்படி மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது வான்வெளி.

கணக்கு வழக்கில்லாமல் பெருக்கெடுத்து ஓடும் வானம் வெறும் சூனியம் இல்லை வெட்ட வெளி என்று பேர் தானே தவிர அது சூனியம் இல்லை.

ஆற்றல் என்கிற சக்தி வானம் முழுவதும் நிறைந்திருக்கின்றது. முட்டித் ததும்பி நிற்கிறது அந்த சக்தி.

மின்சாரம், காந்தம், கவர்ச்சி என்றெல்லாம் விதவிதமான கோலத்தில் வானம் முழுவதும் நிறைந்திருக்கிறது அந்த சக்தி.

அப்படி நிறைந்திருக்கிற பரசக்தியையே பராசக்தி என்கிறோம்.

நம்முடைய எண் சாண் உடம்பு முழுவதும் ஊடுருவி நிற்கிற மனம் இருக்கிறதே இதுவும் (ஒரு) வானந்தான். இதையும் அளக்க முடியாது. இதனிடமும் அதே சக்தி நிறைந்துள்ளது.

இனி, சிற்றூர், பட்டிக்காடு என்று சொல்வார்களே குக்கிராமம். அந்தக் கிராமவாசிகள் வானத்தை மானம் என்பார்கள்.

வானம் பார்த்த பூமி என்பதை மானம் பார்த்த பூமி என்றே சொல்வார்கள்.

அந்த மானந்தான் நம் மனம். அளப்பரிய இந்த மாமனத்தை வசப்படுத்து, கட்டுப்படுத்து என்றால் அது நடக்கிற காரியமா? நம்மை நாமே ஏமாற்றுகிற கோமாளித்தனமாகி விடும் அது.

அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும். ஒன்றும் செய்ய வேண்டாம். சும்மா இருந்தால் போதும். அதாவது மனம் ஒன்றி சுறுசுறுப்போடு செயல் பட்டால் போதும்.

சும்மா இருந்தால் தான் ''இது என்ன விந்தையாக இருக்கிறதே'' என்று மனதைப் பார்க்கத் தோன்றும். பார்த்துப் பார்த்து அதனோடு உறவாடத் தோன்றும். உறவாட உறவாட உண்மை விளங்கும்.

ஒன்றே ஒன்று தான். அதுதான் அண்டபிண்ட சராசரம் அவ்வளவும். நாமும் அந்த ஒன்று தான் என்கிற உண்மை விளங்கும்.

அவ்வளவும் ஒன்றுதான் என்பதை - இறைவன் ஆடிக் களிக்கும் திருவம்பலம் தான் எல்லாம் என்பதை நயம்படச் சொல்கிறார் திருமூலர்.

அண்டம் எழு கோடி
　　பிண்டம் எழு கோடி
தெண்திரை சூழ்ந்த
　　திசைகள் எழு கோடி
எண்திசை சூழ்ந்த
　　இரங்கம் எழு கோடி
அண்டன் நடம் செய்யும்
　　ஆலயம் தானே.

## *(34)*

பேரண்டம் முழுவதும் ஒரே சக்திதான். இடைவெளி இல்லாமல் நிறைந்திருக்கிறது அது. அதுதான் பேரண்டங்களையே உள்ளடக்கிய வான்வெளி. உணர்வு மயமானது அது. அதைத்தான் இறைவன் என்கிறோம். பிறகு அவரவர்களுக்கு விருப்பப்பட்ட வழிகளில் பெயர் சூட்டி அழைக்கிறோம்.

உணர்வு மயமான சக்தியை இறைவன் என்று சொல்லலாமா என்றால் ஏன் சொல்லக்கூடாது. தாராளமாகச் சொல்லலாம். பசுவை அம்மா என்று சொல்லவில்லையா? தாயே என்று அதை தடவிக் கொடுக்கவில்லையா?

---

எழு கோடி - அளவற்றன. பிண்டம் - வித்து, பரமாணுக்கள். தெண்திரை சூழ்ந்த - தெளிந்த அலைகளோடு கூடிய சமுத்திரங்களையே சுற்றி வளைத்துக் கிடக்கிற. திசைகள் - இட எல்லைகள். எண் திசை சூழந்த - தெற்கு வடக்கு என்று போலியான உருவெளித் தோற்றம் கொண்ட எட்டுக் கோணங்கள். சூழ்ந்த - அவைகளை எல்லாம் கடந்த நட்சத்திர வட்டங்கள். இரங்கம் - நட்சத்திரம். அண்டன் - இறைவன்.

புதுப்புதுப் பெயரிட்டு அழைப்பதெல்லாம் உணர்ச்சிக்கும் அனுபவத்துக்கும் கொடுக்கிற அடையாளங்கள் தாம்.

இறைவன் தான் அந்த சக்தி என்று தெரிந்த பின் அவன் நடனமாடுகிறான். அந்த ஆனந்தக் கூத்தின் விளைவுதான் இத்தனை பேதா பேதத் தோற்றங்களும் என்பது விளங்கத்தானே செய்யும்.

இதை அனுபவத்தில் கொண்டே சகலவற்றையும் இறைவன் படைத்தான் (அளித்தான்) என்று சொல்கிறோம்.

இதை ஒரு விளையாட்டு என்று தான் சொல்ல வேண்டும். வேறு என்ன சொல்ல இதை.

இதற்கும் மேலே இன்னொரு விளையாட்டு. பேரண்டம் முழுவதுமாக - அண்ட பிண்ட சராசரம் அவ்வளவுமாக தானே விளைந்து பரிமளிக்கிற உண்மையை நாம் கண் கொண்டு காண அவனே காட்டிக் கொண்டே இருக்கிறான். நம் மனம் (சிந்தனை) என்னும் கண்ணாடி வழியாகவே காட்டிக் கொண்டிருக்கிறாள்.

யோசித்துப் பார்க்கிறவர்களுக்கு இந்த உண்மை தெரியும். திருமூலர் யோசனை செய்து யோசனை செய்து பார்த்தவர்.

இனிப்பாடல்

> அளித்தான் உலகெங்கும்
> 
> தானான உண்மை,
> 
> அளித்தான் அமரர்
> 
> அறியா உலகம்
> 
> அளித்தான் திருமன்றுள்
> 
> ஆடும், திருத்தாள்;
> 
> அளித்தான் பேரின்பத்(து)
> 
> அருள்வெளி தானே.

---

அளித்தான் - வெளிப்படுத்திக் காட்டினான். அமரர் அறியா உலகம் - பேரின் பத்து அருள்வெளி - பேருண்மை. எல்லாம் ஒன்று என்கிற பேருண்மை . அமரர் - தத்துவம்.

## (35)

பரம்பொருள் (உணர்வுமயமான சக்தி) ஒன்றுதான் இத்தனை வேஷம் போட்டு ஆடுகிறது. நாமும் அதில் தான் அடக்கம் என்பது தெரிந்து விட்டால் கூடவே அன்பு ஊறத்தானே செய்யும். பேதங்கள் கரையக் கரைய அன்பு பெருகும்.

அந்த அன்பு போதும். அதுதான் உண்மை. அதுதான் தெய்வம்.

இதை எப்படி அழுத்தி அழுத்திக் காட்டுகிறார் திருமூலர்.

அன்பு சிவம் இரண்(டு)
　　என்பர் அறிவிலார்;
அன்பே சிவம் என்ப(து)
　　யாரும் அறிகிலார்;
அன்பே சிவம் என்ப(து)
　　யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய்
　　அமர்ந் திருப்பாரே.

## (36)

அன்பு பெருகப் பெருக அதுதானே காதல்.

உண்மையின் மேல் காதல் - கடவுள் மேல் காதல் என்பதெல்லாம் அதுதான்.

நாயகன் நாயகி பாவம் என்பது அப்படி உண்டாவதுதான்.

உண்மையைக் கண்டவர் திருமூலர். கண்ணாரக் கண்டு களிக்கிறவர் அவர் களிக்கக் களிக்க அது கடவுளாகவே காட்சி கொடுக்கிறது அவருக்கு.

---

அறிவிலார் - உண்மை அறிவில்லாதவர்கள். அவர்கள் தான் அன்பு வேறு, கடவுள் வேறு என்று மயங்குவார்கள். யாரும் அறிகிலார் - ஒருவருக்கும் விளங்கவில்லையே. அறிந்த பின் - தெரிந்து விட்டால் போதும். அமர்ந்திருப்பார் - ஆனந்தமாய் இருப்பார்கள்.

குறிப்பு :- கடவுள் அன்பு மயமாய் இருக்கிறார் என்பதையே அன்பானது கடவுள் மயமாக இருக்கிறது என்று சொல்வதில் வேகம் அதிகம். அழுத்தமும் அதிகம்.

திருமூலர் தமிழ்நாட்டுக்காரர். பச்சைத்தமிழர் தமிழ்நாட்டில் கோவில், குளம், தேர், திருவிழா என்று ஏராளம். தென்னாடுடைய சிவனே எந்நாட்டுக்கும் இறைவன் என்கிற உறுதிப்பாட்டில் கோவில் தோறும் எழுந்தருளப் பண்ணியிருக்கிறது இறைவனை.

இதைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார் திருமூலர்.

தெய்வமாக ஒளி வீசிய உண்மை சிவனாகவே தெரிகிறது திருமூலருக்கு.

சிவன் மேல் அன்பு ஊறி காதல்க் கொடியையே வீசி விடுகிறது.

எத்தனை ஆர்வத்தோடு காதல்க் கொடி இறைவனைச் சுற்றி வளைக்கிறது என்று பாருங்கள்.

பொன்னைக் கடந்திலங்
　　கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து
　　மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த
　　சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்த(து) என்
　　பேரன்பு தானே

## (37)

உண்மை தான் கடவுள் என்று தெளிவு பெற்றாலும் அந்தக் கடவள் ஒரு உருவத்தில் தான் தோன்றுவார். அதுவும் சமுதாயம் உருவாக்கிய ஏதாவது ஒரு உருவத்தில் தான் தோன்றுவார்.

திருமூலருக்கும் அப்படியே தோன்றுகிறது. தெய்வமாக வந்த உண்மை சிவபெருமானாக - புலித்தோல் கட்டி, இளம்பிறை சூடி, சாம்பல் பூசி திம், திம் என்று ஆடுகிற பெருமானாகவே தோன்றுகிறது.

---

பொன்னைக் கடந்து இலங்கும் - தங்கத்தை விடப் பிரகாசமாக ஒளிரும். புலித்தோலினன் - புலியின் தோலை உரித்து அதையே ஆடையாகக் கட்டியிருக்கும் சிவன். மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை - செஞ்சடையோடு சேர்த்துக் கட்டியதால் மினுக் மினுக்கென்று மிளிரும் பிறை. சுடுபொடி ஆடி - நீறணிந்து ஆடும் பெருமான்.

அப்படிக் கையால் தொட்டுப் பார்க்கிற படி கண்ணுக்குத் தெரிந்தால் தானே காதல் வரும். அது பக்தியாய்ப் பரிமளிக்கும்.

பெருமானை வளைத்து இறுக்கிப் பின்னித்தழுவுகிறது என் ஆர்வம் என்று வாய் திறந்தே சொல்ல வைக்கிறது காதல் மயமான பக்தி.

மேலும் என்ன சொல்கிறார். எப்படி எல்லாம் ஆசைப் பெருக்கை அள்ளிக் கொட்டுகிறார்.

''சகல தத்துவங்களாலும், மந்திர, தந்திரங்களாலும் காண முடியாதவன் என் நாயகன். அவனை நான் கண்டு களிப்பேன். காண்பது வரை ஆர்வம் பொங்கிக் கொண்டு தான் இருக்கும். அந்த வேகத்தில் வாய் விட்டுக் கூட அழைப்பேன். சில சமயம் கூப்பாடு போட்டே அழைப்பேன்.

அன்பின் வல்லமை தெரியாதவர்களுக்கு இது பைத்தியமாகவே படும்.

என்ன செய்ய நான்?''

இனிப்பாடல்

முத்தனில் முத்தை
முகிழ்இள ஞாயிற்றை,
எத்தனை வானோரும்
ஏத்தும் இறைவனை;
அத்தனைக் காணா(து)
அரற்றுகின் றேனைஓர்
பித்தன் இவன் எனப்
பேசுகின் றாரே.

---

முத்தினில் முத்து - பத்து மாதம் கருவிலிருந்து முத்தின் வயிற்றில் பிறந்த முத்து எப்படியிருக்கும்? அப்படித் தண்ணென்று குளிர்ந்த அருளாளன் அவன். முகிழ்இள ஞாயிறு - அடிவானம் சிவந்து அதன் உள்ளிருந்து எழுந்து வரும் இளஞ்சூரியன் போன்ற அழகன். வானோர் - தத்துவங்கள், அத்தன் - தலைவன், நாயகன். காணாது அரற்றுகின்றேன் - அவனைப் பார்க்க வேண்டுமே என்று ஏங்கிப் புலம்புகிறேன்.

## (38)

இதயத்தில் எத்தனையோ ஊற்றுக்கண்கள். அவற்றில் ஒரு கண் திறந்தாலே போதும். அன்பானது பெருக்கெடுத்து ஓடும். ஆர்வம் பொங்கும். பிறகு நட்பாக அதாவது காதலாகவே உறவு முறை கொண்டாடும்.

காதல் முதிர முதிர எல்லாவற்றையும் அர்ப்பணிக்கும். தன்னையே அர்ப்பணித்து விடும். அதுதான் பக்தி. அதாவது பரவசம்.

சரி, இந்த அன்பு உண்டாவதற்கு என்ன காரணம்? அன்பு உண்டாவதற்கு அன்பு தான் காரணம். வேறு யாதொரு காரணமும் இல்லை.

அன்புக்கு லட்சியம் அர்ப்பணிப்புத்தான். அதனால் அன்புக்கு இடம் கொடுத்த உள்ளம் ஏங்கும். தவிக்கும், உருகும், வெறி கொண்டு ஆவேசமாகக் கூப்பாடு கூடப் போடும்.

திருமூலருடைய அன்பு எப்படிக் கூப்பாடு போட்டுக் கதறுகிறது என்று பாருங்கள்.

அன்புள் உருகி
    அழுவன், அரற்றுவன்,
என்பும் உருக
    இராப்பகல் ஏத்துவன்;
என்பொன் மணியை
    இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன்
    திருத்துவன் தானே.

---

அன்பு உள் உருகி - அன்புபெருக உள்ளம் உருகுவேன், அழுவன் அரற்றுவன் - நாயகனை நினைந்து, மனம் விம்மும். அதனால் அழுகையே வந்து விடும். கண்ணீரோடு கண்ணீராய் அவனைக் கூவி அழைப்பேன். என் பொன் மணியை - என்னுடைய மாணிக்கத்தை, வயிரக்கட்டியை, மரகதப் பச்சையாய் ஒளிரும் என் நாயகனை. இராப்பகல் ஏத்துவன் - இரவென்றும் பாராமல் பகலென்றும் பாராமல் நினைத்த நேரம் எல்லாம் பாடிப் பரவுவன், தின்பன் - அப்படியே விழுங்கி விடுவது போலிருக்கும் அவனைக் கண்டால். கடிப்பன் - பிடித்தால் உதறித் தள்ளுவன். திருத்துவன் - அவன் ஒதுங்கி விலகினாலோ விட மாட்டேன். வளைத்து மடக்குவேன் அவனை.

## உணர்ச்சியின் உருவந்தான் உருவ வழிபாடு

## (39)

பொன்னை எடுத்தார். அதைச் சரடாக்கினார். அதில் முத்தைக் கோத்தார். மாணிக்கம், வயிரம், மரகதங்களையும் அதில் கட்டி மாலை ஆக்கினார் திருமூலர்.

அன்பின் குறிக்கோள் ஒன்று படல் தான். இரண்டறக் கலத்தல் தான், அதற்காகத் தன்னையே ஒப்படைத்து விடுகிறது அன்புடை உள்ளம்.

அப்படியானால் நான் என்கிற (ஆணவம்) சாகத்தானே செய்கிறது.

எல்லாம் ஒன்றுதான் என்று தெரிய வேண்டும். அந்த ஒன்று எத்தனை எத்தனை கோலங்கள் பூண்டு ஆடுகின்றது என்பதும் தெரிய வேண்டும். அத்தனையினும் தினுசுதினுசாக அது நின்று விளையாடுகிற அற்புதமும் தெரிய வேண்டும்.

அப்படி விபரமாகத் தெரிந்தால் தான் எல்லாம் ஒன்று என்கிற உண்மை அழுத்தம் திருத்தமாக மனதில் நிற்கும்.

அது மட்டுமல்ல, பொய் ஒழிவதும் அப்பொழுதுதான். விபரம் இல்லாமல் ஏதோ ஒரு போக்கில் மட்டும் தெரிந்தால் போதாது பொய்யொரு பக்கம் மெய்யொரு பக்கம் என்று சேர்நதே கிடக்கும். அப்பொழுது

அது பிரயோசனப்படாது. மாசுமறுவில்லாமல் சுத்தமாக உண்மை விளங்க வேண்டும். எல்லாம் ஒன்றே என்கிற உண்மை விளங்கி விட்டால் போதும் அதனிடம் அன்பு, காதல், பக்தி என்றெல்லாம் உறவு வலுப்படத் தானே செய்யும்.

அது வலுப்பட வலுப்பட உண்மையை வெறும் உண்மை என்று சொன்னால் எடுபடாது. அதைக் கடவுள் என்று சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அது எடுபடும்.

பேரண்டம் முழுவதும் ஒன்றுதான். ஒன்றே ஒன்று தான் என்று சொல்வதற்குப் பதில் எல்லாம் கடவுள் மயம் என்றால் தான் திருப்தி.

அந்தக் கடவுளையும் நம்மைப் போல மனிதராக ஆணாகவோ, பெண்ணாகவோ சொன்னால் தான் பரிபூரண திருப்தி.

சிவன், திருமால், அல்லா, பரமண்டலத்தில் உள்ள பிதா என்று ஏதாவது பெயரிட்டுச் சொல்ல வேண்டும். அப்படித்தான் சொல்ல வைக்கும் அனுபவம். திருமூலரும் அப்படியே சொல்கிறார்.

ஒருவனு மேஉல(கு)
    ஏழும் படைத்தான்
ஒருவனு மே உல(கு)
    ஏழும் அளித்தான்;
ஒருவனு மே உல(கு)
    ஏழும் துடைத்தான்;
ஒருவனு மே உல
    கோ(டு)உயிர் தானே.

## (40)

உண்மையை அனுபவித்தால் அதுவும் உணர்ச்சி மயமாக அனுபவித்தால் உண்மை என்கிற பண்பு கடவுள் என்கிற பருப்பொருளாகவே படும்.

கடவுளை அப்படியே உணர்ச்சிமயமாக அனுபவிக்க அனுபவிக்க நம்மைப் போலவே மனுச தத்துவமாக ஆணாகவோ, பெண்ணாகவோ படும்.

---

ஒருவனுமே - கடவுள் ஒருவர் தான். உலகு ஏழும் படைத்தான் - அண்டம், அகண்டம் என்று கோடான கோடிகளை உண்டாக்கியது. ஏழ் என்பது - எண்ணற்றன என்பதின் அடையாளம். அளித்தான் - பாதுகாக்கிறான், துடைத்தான் - அழிப்பது போல மறைக்கிறாள். உலகோடு உயிர் ஒருவனுமே - அந்தக் கடவுள் தான் அண்ட பிண்ட சராசரம் அவ்வளவும். இடம், காலம் என்கிற தத்துவம் எல்லாம் கடவுளின் லீலைதான்.

குறிப்பு :- பாரததேசம் என்பது மலை, காடு, ஆறு, வயல், கொண்ட நிலப்பரப்புதான். ஆனாலும், பாரதமாதா என்று தாயாக பாவிக்கத்தானே செய்கிறோம். அணுகுண்டை அரக்கன் என்று சொல்கிற பொழுது அதற்கென்று ஒரு அனுபவ உணர்ச்சி சேர்ந்து தானே வருகிறது. மதுவைக் கூட மதுவரக்கன் என்று சொல்வதில்லையா? உண்மையையும் அப்படியே ஒரு உருவத்தில் வைத்துச் சொல்கிறார் திருமூலர். அனுபவம் உணர்ச்சி எல்லாம் சேர்ந்து வெளிப்படவே செய்கிறது. ஒருவன் - ஒருவனே என்றுதேய்த்துத் தேய்த்து அழுத்தியே காட்டுகிறார் திருமூலர்.

உணர்ச்சியைக் கண் கொண்டு பார்ப்பது என்றால் அதுதான். கண்ணால் பார்த்தால் தான், கண்ணாரக் கண்டால்தான், அதுவும் கையால் தொட்டுப் பார்க்கும் அளவுக்குக் கண் கொண்டு பார்த்தால் தான் உறவு பெருகும். பக்தி, காதல், அன்பு, அர்ப்பணிப்பு என்பதெல்லாம் அதை ஒட்டித்தான்.

எல்லாம் கடவுள் மயம் என்று கண்ட திருமூலர் அந்தக் கடவுளை நடராஜனாகவே - ஆனந்த நடராஜனாகவே பார்த்து அனுபவிக்கிறார்.

உம்பரில்க் கூத்தனை,
உத்தமக் கூத்தனை
செம்பொன் திருமன்றுள்
சேவகக் கூத்தனைச்;
சம்பந்தக் கூத்தனைத்
தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன்
அன்புள்வைத் தேனே.

## (41)

ஒன்று தான் அவ்வளவும். அப்படியானால் அது தங்கத்தில் தங்கமாக இருக்கும். இரும்பில் இரும்பாக இருக்கும்.

நீரில் குளிர்ச்சியாகவும், தீயில் வெப்பமாகவும் அது இருக்கும். அணுவில் அணுவாகவும், பரமாணுவில் பரமாணுவாகவும் அது இருக்கும். இப்படி இருப்பது தான் ஒற்றுமை. ஒக்க நிற்றல் என்று அதற்கு ஒரு பெயர். இறைவன் அப்படி ஒக்க நிற்கின்றான்.

ஒக்கநின் றாளை,
உலப்பிலி, தேவர்கள்
நக்கன்என்(று) ஏத்திடும்
நாதனை நாள்தொறும்

---

உம்பரில் கூத்தன்- தத்துவங்களோடு தத்துவமாக நின்றாடும் பெருமான். செம்பொன் திருமன்று - பொன்னம்பலம். மனந்தான் அது. சம்பந்தக்கூத்து - ஆனந்த நடனம். நற்பரக்கூத்து - பிரபஞ்சமாய் விளையும் கூத்து. சேவகம் - தலைமை.

பக்கம்நின் றார்அறி
யாத பரமனை
புக்குநின் (று) உன்னியான்
போற்றிசெய் வேனே.

### (42)

தேவாதி தேவர்கள் எல்லோரும் அவன் கூடத்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அவனைப் பார்க்க முடியவில்லை. ஆனால் நான் அவனைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். அனுபவித்துக் கொண்டே இருக்கிறேன். அனுபவமானது ஆனந்த உருவெடுத்து அவனை வாழ்த்திப் போற்றுகிறது.

எப்படி

அவனை வுழிய
அமரரும் இல்லை,
அவன் அன்றிச் செய்யும்
அருந்தவம் இல்லை,
அவனன்றி மூவரால்
ஆவதொன்(று) இல்லை;
அவனன்றி ஊர்புகும்
ஆரறி யேனே.

---

ஒக்க நின்றான் - எல்லாவற்றிலும் அது அதுவாக இருக்கும் இறைவன். உலப்புஇலி - இடைவெளி இல்லாமல் - தொய்வே இல்லாமல் நிறைந்திருக்கிறவன். தேவர்கள் - தத்துவங்கள், புல் பூண்டு முதல் மனிதர்கள் வரை ஒவ்வொன்றிலும் பல தத்துவங்கள் நின்று செயல்படுகின்றன. அந்தத் தத்துவங்கள் செயல்படுகின்றனவே ஒழிய உண்மையை அவற்றால் (கடவுளை) பார்க்க முடியவில்லை. ஆனாலும் கண்ணை மூடிக் கொண்டு அரகர மகாதேவா என்று கூப்பாடு போடத்தான் செய்கின்றன. நக்கன் - தலைவன். பக்கம் நின்றார் அறியாத பரமன் - கூடவே இருக்கிறார்கள். அவர்களுக்குள் இறைவன் நிறைந்தே இருக்கிறான். ஆனால் அவர்களால் பார்க்க முடியவில்லை. ஆனாலும் நான் பார்த்து விட்டேன். எப்படி புக்கு நின்று - நான் அவனுள் புகுந்து அவனாகி விட்டேன். என்னுள் அவன் புகுந்தது போல.

## மனந்தான் வழிகாட்ட வேண்டும்

## (43)

மரம் ஒன்று. அதில் இலை, பிஞ்சு, காய், கொம்பு, தூர், வேர், கிளை, களை என்றெல்லாம் தனித்தனியாகத் தோன்றும். ஆனாலும் அத்தனையும் மரந்தான். ஒரு மரந்தான் பல்வேறு கோலங்காட்டுகிறது.

அது போலத்தான் உண்மை என்று ஒன்று. அது சக்திமயமானது. அதுதான் அண்டபிண்ட சராசரங்களாகத் தோற்றம் எடுக்கின்றது. புதிதுபுதிதாக விளைந்த வண்ணமாக இருக்கிறது.

அந்த உண்மையைத்தான் கடவுள் என்று சொல்கிறோம். உண்மையின் அம்சந்தான் நாமும். அப்படியானால் நாமும் கடவுள்தான்.

உண்மைதான் நாம் என்றால் அது நம்மைத் தொடவா செய்கிறது. கடவுள் தான் நாம் என்றால் அது நம்மை கொஞ்சம் தட்டி எழுப்பவே செய்கிறது.

அப்படியானால் கடவுள் என்று ஒன்று அதுதான் எல்லாமும். அது சக்திமயமாக இருக்கிறது.

இந்த உண்மையை உமை ஒரு பாகம் கொண்ட சிவனாக உருவகம் பண்ணி இருக்கிறது. இதை விட வேறு எப்படி அடையாளம் போட்டுக் காட்ட முடியும்.

விஞ்ஞானபூர்வமாக மெய்ஞ்ஞானத்தை விளக்குவது என்றால் இதுதான்.

பரம்பொருள் சக்திமயம் என்றால் அறிவு (ஞான) மயம் என்பதுதான் கருத்து. பேருள்ளம், பேரறிவு, பெருவெளி, பேரொளி என்றெல்லாம் பெயரிட்டுச் சொல்வதுண்டு சக்தியை.

ஒளிமயமான அண்டங்களாக நட்சத்திரங்களாக உருவெடுத்தது பரம் பொருள். பிறகு தாவரங்களாக சின்னஞ்சிறிய பாசியிலிருந்து புல்லிலிருந்து பெரிய பெரிய விருட்சங்கள் வரை உருவெடுத்தது. அதற்கும் பிறகு சிறு சிறு புழுப் பூச்சிகளிலிருந்து யானை வரை உருவெடுத்து விட்டது.

உமையொரு பாகத்தின் திருமகனாக யானை முகன் நிற்பது இதை விளக்கத்தான்.

கடவுளும் சும்மா இருக்கவில்லை. தொடர்ந்து படைத்துக் கொண்டே இருந்தார். அதாவது விளைந்த வண்ணமாகவே இருந்தார்.

பூனையிலிருந்து ஆனை வரை மயிலென்ன, மானென்ன, எலி என்ன, புலி என்ன, பல்லி என்ன, முதலை என்ன, என்று என்னென்னவோ உருவம் எடுத்துப் பார்த்தார் கடவுள். திருப்தியே வரவில்லை அவருக்கு. காரணம் ஒவ்வொன்றும் கொசுவிலிருந்து சிங்கம், காண்டாமிருகம், திமிங்கலம் எல்லாமே அதனதன் காரியத்தையே பார்த்துக் கொண்டிருக் கின்றன.

உயிர் வாழ்தல் என்கிற ஒன்றுக்காகவே இருக்கின்றன அவை. அதற்காகவே ஒன்று ஒன்று வேட்டை ஆடுகின்றன. அழிக்கின்றன. பிறகு போய் விடுகின்றன. மற்றப்படி ஒரு பயனும் இல்லை இவைகளால்.

ஏதோ தெண்டத்துக்கு வந்தது போல் வந்து போகின்றனவே தவிர ஏன் வந்தோம் என்று சிந்தித்து அதற்காக ஒன்றிரண்டை உண்டாக்குகிறதாக ஒன்றும் இல்லையே என்று வருத்தப் பட்டார் கடவுள்.

பல்வேறு பொருள்களாக விளைந்து கொண்டே யோசனையும் பண்ணியபடியே இருந்தார். கடுந்தவம் புரிந்தார் என்று தான் சொல்ல வேண்டும். அப்படி ஆழமான யோசனை.

உயிர் வாழ்வதோடு நிற்காமல் பலவற்றைச் சிருஷ்டிக்கவும், சிருஷ்டிதவற்றை அனுபவிக்கவும், அதற்காக சேர்ந்து வாழவும் வாய்ப்பான அவதாரம் எடுக்க வேண்டுமே என்று பல ஊழிகாலம் தவம் இருந்தார் கடவுள். யோசித்து யோசித்துத் தவம் இருந்தார் கடவுள்.

விடாத - தொடர்ந்த அவருடைய தவத்திலிருந்து உண்டானவன் தான் மனிதன். பூவுக்குள்ளே மணத்தைப் பொதிந்து வைத்ததைப் போல அவனுக்குள்ளே மனத்தைப் பொதிந்து வைத்து விட்டார் கடவுள்.

அந்த மனமும் உடனே எல்லாவற்றையும் உண்டாக்கி விடவில்லை. உடம்போடு சேர்ந்து மனமானது உறவாடுவதற்கே பல பல நூற்றாண்டுகள் ஆயின. பிறகு அதில் கொஞ்சம் கொஞ்சமாக பலவித மாற்றங்கள் ஏற்பட்டன.

நீளமான மூஞ்சி வட்டமான முகமாக மாறியது. பின்னால் தொங்கிக் கொண்டிருந்த வால், மண்டையில் முளைத்த கொம்பு, முரட்டுத்தோல், கம்பி போன்ற ரோமம், தடித்தரம்பம் போன்ற பற்கள் எல்லாம் மெள்ள மெள்ள இளகின. இளகி மூளைக்கு உரமாகி விட்டன. அதனால் கண்கள் முகத்தின் முன் பாகத்தில் வந்து முகப்பில் அலங்காரமாய் நின்றன.

மூக்கு, நெற்றி, புருவம், காது, மண்டை, மார்பு எல்லாம் வார்த்தெடுத்தமாதிரி அளவோடு ஒழுங்குபட்டு நின்றன.

உதறவும், வீசவும், மடக்கவும், பற்றவும், பிடிக்கவும், பழக்கப்பட்டு விட்டன கைகள்.

மனமும் கடவுளைப் போலத்தான். உடம்பைத் திருத்திக் கொண்டே தன்னையும் பக்குவமாக வளர்ந்து கொண்டது.

அப்படி உள்ளமும் உடம்பும் ஒரு சேர ஒரு பக்குவத்துக்கு வந்த உடனே மொழி பிறந்து விட்டது. பேச்சு, எழுத்து, இசை, கவி, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், சட்டம், அரசியல், சோதிடம், மருத்துவம் என்று என்னென்னவோ உண்டாகின.

அதற்கு முன்பிருந்தே விவசாயம், உணவு, உடை, தொழில், கொடுக்கல் வாங்கல் உண்டாகி விட்டன.

குடும்பம், உற்றார் உறவினர், ஊர், நாடு என்று மாபெரும் சாம்ராஜ்யத்தையே படைத்து விட்டான். மனிதன் மேலும் மேலும் அதை வளப்படுத்திக் கொண்டே இருக்கிறான் மனிதன்.

மனிதனை உண்டாக்கின பிறகு தான் அதாவது மனிதனாக உருவெடுத்த பிறகு தான் கடவுளுக்கு நிம்மதி. அதன் பிறகு தான் அவருக்கு பேரானந்தம்.

கொஞ்சி விளையாடுவதற்கு மனிதனைப் போல வேறு என்ன இருக்கிறது கடவுளுக்கு. யானை முகனுக்குப் பிறகு முருகப் பெருமான் அவதரித்தது அதைத்தான் சொல்கிறது. ஞானவேல், சூரசம்காரம், மயில் வாகனம், சேவல் கொடி,

வாடா இளமை அழகு இவை எல்லாம் மனித வளர்ச்சிக்கு அடையாள முத்திரைகள். இவ்வளவுக்கும் காரணம் என்ன? மனந்தான் காரணம்!

ஆனால் அந்த மனத்தையே மறந்து விட்டது போல வெறி பிடித்து அலைகிறது மன்பதைக்கூட்டம்.

நாம் யார், எங்கிருந்து வந்தோம், ஏன் வந்தோம், எங்கு போகிறோம் என்கிற ஆராய்ச்சிகள் இருக்கட்டும், எப்படி அது இது என்று யோசனை வருகிறது, அது ஏன் வருகிறது, எப்படி வருகிறது, எங்கிருந்து வருகிறது என்று கூடப் பார்க்க வேண்டாமா?

நம்மோடு சேர்ந்துதானே இருக்கிறது மனம். நம் கையில் தானே இருக்கிறது மனம். அதை அல்லவா பார்க்க வேண்டும்.

எளிதான வழி என்றால் இதை விட வேறு என்ன இருக்க முடியும்.

எளிதாக இருப்பதனாலேயே அதை அலட்சியப் படுத்துகிறோம்.

இது சம்பந்தமாக சிவவாக்கியர் சொல்கிறார். ''பரமாணுவிலிருந்து பேரண்டங்கள் முடிய எல்லாமே இறைவன் தான். அப்படியானால் அவை அத்தனையும் இறைவனைப் பார்ப்பதற்குரிய சாளரங்கள் தாம். வாயில்கள் தாம். ஆனாலும் நம் கையிலேயே எளிதான வாசல் இருக்கிறது. எப்பொழுது வேண்டுமானாலும் அதன் மூலம் பார்க்கலாம். அந்த வாசல் தான் மனம். ஜகஜோதியாய் அவன் நம் இதயத்திலேயே கொலு வீற்றிருப்பது தெரியும். அந்த வாசல் வழி.

அண்ட வாசல்
ஆயிரம், அ கண்ட
வாசல் ஆயிரம்,
ஆறி ரண்டு
நூறு கோடி
ஆனவாசல் ஆயிரம்;

இந்த வாசல்

ஏழை வாசல்,

எம்பி ரான்இ

ருந்த வாசல்

ஏக போக

மான வாசல்

யாவர் காண

வல்லி ரே!

ஆயிரம் என்றால் எண்ணிறந்தன என்று பொருள். ஆறிரண்டு நூறு கோடி என்றாலும் பொருள் அதுதான். ஆயிரத்து இருநூறு கோடி என்றோ வெறும் ஆயிரம் என்றோ அர்த்தம் பண்ணி விடக்கூடாது. இந்த வாசல், ஏழை வாசல் என்றெல்லாம் குறிப்பிடுவது மனதைத்தான்.

சிரமமே இல்லாமல் இறைவனைப் பார்க்க வேண்டும். நேருக்கு நேராகப் பார்க்க வேண்டும். கண் குளிரப் பார்க்க வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி மனம் தான்.

மனத்தின் மூலமாக (உண்மையைப் பார்க்கப் பார்க்க மனம் தூய்மை பெறும். அழுக்கெல்லாம் கரைந்து ஓடி விடும். பொறாமை, வேற்றுமை, எரிச்சல், பகைமை, கொடுமை எல்லாம் அனலில் பட்டபஞ்சாய் பொசுங்கி விடும்.

அப்படிச் சொல்வதை விட அருவி நீரில் கரைந்தோடுகிற அழுக்காய் ஓடி விடும் என்று சொல்லலாம். காரணம் பொறாமை முதலிய அழுக்குகள் கரையக் கரைய இதயத்தில் கனமே இருக்காது. குளுமை பெறும் உள்ளம். அமைதி பெறும் உள்ளம். அன்பு, பொறுமை, ஒற்றுமை, இனிமை, நன்மை முதலிய பண்புகள் தளிர்த்துத் துளிர்க்கும் உள்ளத்தில்.

அதனால் தான் யோசனையை பளிங்கு போன்ற தெள்ளிய அருவி நீர். ஆற்று நீர் என்றெல்லாம் சொல்லி இருக்கிறது.

கழுமணி ஆற்று நீர் என்றே சொல்லி இருக்கிறது. நுங்கு நுரை இல்லாத தூய அருவி நீர் என்றே சொல்லி இருக்கிறது.

இதோ திருமூலரின் பாடல்

வரையிடை நின்றிழி
    வான்நீர் அருவி
உரைஇலா உள்ளத்(து)
    அகத்துநின் (று) ஊறும்;
நுரை இல்லை மாசில்லை
    நுண்ணிய தெண்ணீர்
கரை இல்லை எந்தை
    கழுமணி ஆறே.

## (44)

மனிதன் கடவுளோடு ஒன்று பட வேண்டும். ஒன்றுபட்டுத் திளைக்க வேண்டும். திளைத்துத் திளைத்து ஆனந்தத்தில் மிதக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஊஞ்சலில் படுத்து உறங்குவது போல் திருப்பாற்கடலில் படுத்து மிதந்து யோக நித்திரை புரிகிறார் திருமால்.

அப்படி ஒரு யோக நித்திரை - இறைவனோடு இரண்டறக் கலந்து திளைக்கும் சமாதி நிலை பெற வேண்டும் என்று சொல்கிறார்கள்.

மனம் அமைதிப்படுவதைத் தான் அப்படி எல்லாம் ஒன்றுபடல் என்றும், சமாதி நிலை என்றும் சொல்கிறார்கள்.

அமைதி பெற்ற மனந்தான் எதையும் ஒழுங்காகப் பார்க்க முடியும். பார்ப்பது மட்டும் போதாது. பார்த்துப் பார்த்து அதனோடு ஒன்றுபட வேண்டும்.

---

வரையிடை நின்று இழி வான் நீர் அருவி - மலையிலிருந்து இறங்கி வருகிற புனிதமான நீர். வரை - மலை. வாள் நீர் - உணர்ச்சிமயமான தெய்வத் தீர்த்தம். அது ஊறும் இடம் எங்கே? உரை இலா உள்ளத்து அகம் - அமைதியான உள்ளத்தின் யோசனை தான் அது ஊறும் இடம். (அப்படியானால் மலை என்பது மனம்) உள்ளத்து அகம் - உள்ளத்தின் உள்ளே இருந்து எழுந்து வரும் யோசனை. உண்மையைத் தேடி வரும் யோசனை. மாசில்லை - குற்றம் அற்றது. தெள்நீர் - தெளிந்த நீர். கரை இல்லை - போகப் போக அது போய்க் கொண்டே இருக்கும். முடிவே இல்லை அதற்கு. எந்தை - இறைவன். அவன் தான் கழுமணி ஆறாக யோசனையில் ஊறுகிறான்.

சின்னஞ்சிறிய புல் ஒன்று போதும். அதை ஒழுங்காகப் பார்த்து, அதனுள் நடைபெறுகிற காரியங்களைப் பொறுமையோடு உணர்ந்து புளகாங்கிதம் அடைந்தால் போதும். மனம் அதிசயத்தோடு அதிசயமாக ஒன்றுபட்டுத் தோய்ந்து விடும்.

அப்படித் தோய்வதுதான் சமாதி நிலை. அதுதான் இறைவனோடு ஒன்றுபட்டு இரண்டறக் கலக்கும் ஆனந்த நிலை.

இனி சூரியனைப் போல கோடான கோடி நட்சத்திரங்களைத் தன்னகத்தே கொண்டது அண்டம்.

பல கோடி அண்டங்கள் சேர்ந்து கிடப்பது அகண்டம் அல்லது பேரண்டம். பேரண்டங்கள் கோடான கோடி உண்டாகிக் கொண்டே இருக்கிறது பிரபஞ்ச வெளியில்.

அறிவு (ஒளி) மயமானது பிரபஞ்ச வெளி. கருணைமயமானது அந்த அறிவு. அதனால் அது நீதிமயமானதுங்கூட.

அந்தப் பிரபஞ்ச வெளிதான் நம் மனம். கடலை விட்டு விலக முடியாமல் அலையானது சேர்ந்தே கிடக்கிறது. என்ன தான் துள்ளினாலும், உருண்டாலும், புரண்டாலும் சமுத்திரத்தை விட்டு விலக முடியுமா அலையால்? அதே போலத்தான் நம் மனமும். பிரபஞ்ச வெளியோடு சேர்ந்தே இருக்கிறது. அதை விட்டு மஞ்சாடி கூட விலக முடியாது மனதால்.

அதனால் பிரபஞ்ச வெளியில் நிறைந்து நிற்கிற ஒளியும் (அறிவும்), கருணையும், நீதி (அளி)யும் மனதுக்கும் உண்டு. மனதிலும் அவை நிறைந்தே கிடக்கின்றன.

ஆனால் மனம் எதை எதையோ நாடி ஓடுவதால் புத்தி கெட்டு விடுகிறது. பரம்பொருளாகிய பரவெளிதான் நாம் என்பதை மறந்து விடுகிறது. அந்த நினைப்பே இல்லாதபடி தறி கெட்டு அலைகிறது.

தறி கெட்டு அலைவது நின்றால் நாமும் இறைவனும் வேறுவேறல்ல. ஒன்றுதான் என்கிற ஞாபகம் மனதுக்கு வந்தால் அமைதிப்படும். ஆனந்தத்தில் திளைக்கும் மனம்.

இதைத் தெரிவதில் ஒன்றும் சிரமம் இல்லை. லகுவான காரியந்தான் இது. ஆனாலும் எளிமை என்றால் வேண்டாம் என்கிறது. ''எளிமையா அது? அப்படியானால் சாதாரணம் அது! மட்டத்திலும் மட்டம் அது!! என்று ஒதுங்குகிறது மனம்.

எளிமை தான் தூய்மை என்று நம்பிக்கை வந்தால் போதும். அந்த ஒளி கிடைத்தால் போதும். அப்படி ஒரு தெளிவு வந்து விட்டால் போதும் அதுதான் ஞானம். சிவ ஞானம் என்றால் அதுவே தான்.

இனிப்பாடல்

வெளியில் வெளி போய்
விரவிய ஆறும்
அளியில் அளிபோய்
அடங்கிய ஆறும்,
ஒளியில் ஒளி போய்
ஒடுங்கிய ஆறும்
தெளியும் அவரே
சிவசித்தர் தாமே.

## (45)

'போது' என்று ஒரு சொல் அது 'காலம்' என்னும் பொருளில் வரும். 'இவன் எப்போது வந்தான்' என்னும் தொடரில் போது என்பது நேரம், அதாவது காலம் என்னும் பொருளைக் காட்டுகிறது.

---

வெளி - பேரண்டங்களையே உள்ளடக்கிய பரவெளி. அதாவது இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்த கடவுள்த் தத்துவம். நம்முடைய மனமும் அந்தப் பரவெளி தான். கடவுள் மயந்தான். ஆனால் விபரம் தெரியாமல் நான் வேறு அது வேறு என்று கிறுக்குப் பிடித்து அலைகிறது. கிறுக்கு ஒழிய வேண்டும். ஒன்றே என்று தெரிய வேண்டும். அளி - கருணை. அதாவது பரவெளி முழுவதும் நிறைந்திருக்கிற கருணை மயமான பெருநீதி. ஒளி - ஞானம் பேரறவு.

போது என்னும் இதே சொல் பூவையும் உணர்த்தும். பூ என்றால் மலர்ந்த மலரை இல்லை. மலரும் பருவத்திலிருக்கிற அதாவது மலர்ந்து கொண்டிருக்கிற பூவையே உணர்த்தும்.

மலராக மலர்வதற்கு முன் அரும்பாக இருக்கிறவரை அதனிடம் மணம் தெரியவில்லை. அரும்பானது பருத்து ஒரு பக்குவத்தில் மொட்டாக நிற்கிற பொழுதும் மணம் வெளிப்படுவதில்லை. மொட்டானது விம்மிப் புடைத்துப் பருவம் அடைகிற பொழுதும் பிறகும் மணமானது அடங்கித்தான் கிடக்கிறது. பிறகு பருவம் அடைந்து அது இதழ் இதழாகச் சுண்டி அவிழும் போது - போதாகி விரிகிற பொழுது தான் மூக்கைத் துளைக்கிறது மணம்.

பூத்து விரியும் நேரம் பார்த்து மணக்கிறது போது. அப்படியானால் பூவானது காலம் என்கிற கண்ணுக்குப் புலனாகாத தத்துவத்தில் கரு இருக்கிறது. அங்கிருந்து அது பிரசவமாகும் போது மணக்கிறது.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் பூ மட்டும் இல்லை. அண்டபிண்ட சராசரம் அவ்வளவுமே காலம் என்னும் நுட்பமான தத்துவத்தின் கருவறையில் தான் கிடக்கின்றன என்பது தெரிய வரும்.

ஒவ்வொன்றையும் குழைத்துப் பிசைந்து, உருட்டித் திரட்டி உருப்படியாக்கி புதுப்புதுக் கோலத்தில் காட்டுவது காலம் என்கிற தத்துவந்தான் இதுவும் யோசிக்க யோசிக்கத்தான் விளங்கும்.

யோசித்துப் பார்க்கிற நிலைக்கும் காலம் அல்லவா களிந்து வர வேண்டி இருக்கிறது.

எல்லோருக்கும் அந்த நல்ல காலம் வரத்தான் செய்கிறது. சந்தர்ப்பம் பார்த்து அது வரும். வந்து ஒளி கொடுக்கும். வழி காட்டும்.

ஆனாலும் அப்படி வாய்ப்பாய்த் தேடி வரும் கால அனுகூலத்தை பல பேர் நழுவ விட்டு விடுகிறார்கள். ஒரு சிலர் மட்டும் லட்சத்தில் ஒருவர், பத்து லட்சத்தில் ஒருவர் என்கிற கணக்கில் ஒன்றிரண்டு பேர் மட்டும் காலத்தின் அனுகூலத்தைப் பெற்று அனுபவிக்கிறார்கள்.

அவர்களும் என்ன சொல்கிறார்கள் கேட்டால்.

''எல்லாம் அவன் அருள். அவனுடைய கிருபா கடாட்சத்தால் தான் எனக்கு இந்த நிலை வந்தது. அவளை வணங்க வேண்டும். வழி பட வேண்டும். அவளை நம்ப வேண்டும் என்கிற புத்தியே அவன் அருளால் தான் கிட்டியது'' என்கிறார்கள்.

''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'' என்று மாணிக்க வாசகரே சொன்ன பிறகு வேறு யார்தான் வேறு என்ன சொல்ல முடியும்.

துள்ளி ஓடுகிற மனம் நின்று நிதானித்து யோசனை பண்ணுகிறது என்றால் அது ஒரு அற்புத சக்தி தானே. அதானல் தான் அதை இறை அருள் என்கின்றனர்.

நம்முடைய கெட்டிக்காரத்தனத்தில் அது வரவில்லை. தானாக நம்மைத் தேடி வந்த கருணைமயமான் அருள் தான் அது என்று சொல்கிறார்கள்.

திருமூலர் அதை நந்தி என்று சொல்கிறார்

பாடல்

களிம்பறுத் தான் எங்கள்
கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான் அருள்க்
கண்விழிப் பித்து;

களியம்பணு காத
கதிர்ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம்
பதித்தான் பதியே.

---

களிம்பு - நான் என்கிற ஆணவ மயக்கம். அறுத்தான் - வழித்துத் துடைத்தெறிந்து விட்டான். கண்ணுதல் - இறைவன். நெற்றியிலே கண்ணுடைய சிவபெருமான். நந்தி - இறைவனுடைய அருள் மயமான சக்திக்கு நந்தி என்று பெயர். யோசனையில் இறங்கி உண்மையைத் தேடும் உள்ளத்துக்கும் நந்தி என்று தான் பெயர். அருள்க் கண் விழிப்பித்து - உள்ளத்துக்குள் உறங்கிக் கொண்டு கிடக்கிறது அருள். நீதியே உருவான கருணை. அதைத் தட்டி எழுப்புகிறவன் நந்தி. தட்டி எழுப்பி அந்த அருள் மூலமாகவே மனத்தில் ஒட்டிக் கிடக்கும் களிம்பைத் துடைத்தெறிந்து விடுவான். கதிர்ஒளி - ஞான ஒளி. எல்லாம் ஒன்று என்கிற அறிவுச் சுடர். அதை ஏற்றி வைத்தாலே போதும் ஆணவக் களிம்பு உருகி ஓடி விடும். மனச்சாட்சி என்கிற விளக்கை ஏற்றி ஆணவத்தைக் கரைத்து வெளி ஏற்றியதும் என்ன செய்தாள். பளிங்கில் பவளம் பதித்தான் - பளிங்கு போன்ற இறை அருளோடு பல பல வண்ணங்களில் ஒளி வீசும் மனதை ஒன்றுபடுத்தி விட்டான். பதி - அண்ட பிண்ட சராசரம் அவ்வளவுக்கும் அதிபதியாகிய இறைவன்.

குறிப்பு :- ஆசனம் போடுகிறேன் அதுவும் யோகாசனம் போடுகிறேன் என்று சப்பணம் போட்டு உட்காருவார்கள். நிமிர்ந்து விறைப்பாக - சுண்டி விட்ட மூங்கில் பிரம்பு போல விறைப்பாகவே உட்காருவர்கள். மடக்கி வைத்த கால்களில் ஒன்றைத் தூக்கி இன்னொன்றில் வைப்பார்கள். முழங்கால்களைத் தாண்டி கைகளை விறைப்பாக நீட்டுவார்கள். பெரு விரலையும் ஆள்காட்டி விரலையும் வட்டமாக வளைத்துச் சேர்ப்பார்கள். அப்படியே பார்வையை முகத்துக்குத் திருப்புவார்கள். மெள்ள மெள்ள மூக்கை நோக்குவார்கள். கடைசியாக இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் நெற்றிப் பொட்டையே பார்ப்பார்கள்.

பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு என்று வெளிச்சம் விழும். கண்கட்டி வித்தை மாதிரிதான் இதுவும். மனசோடு மனசை ஒன்ற வைக்காது இது.

பளிங்கில் பவளம் என்று திருமூலர் சொல்வது மனசை மனசோடு அதாவது இறைவனோடு ஒன்றச் செய்வது. ஆசனம் நெற்றிப் பொட்டைப் பார்க்கிறதை அன்று.

## (46)

இனி, பரம்பொருளின் சக்தி உமையம்மையாக பரம் பொருளோடு சேர்ந்தே இருக்கிறது. அதே சக்தியை பெருமான் அடக்கி ஆள்கிறான் என்கிற பொழுது காளை (நந்தி) வாகன மாகவும் ஆகி விடுகிறது. எல்லாம் அடையாளமாகத்தான்.

உடம்பு சுத்தப்படச் சுத்தம் பட நோய் நொடி அணுகா. உள்ளமும் துள்ளி மகிழும். உள்ளம் சுத்தப்படச் சுத்தப்பட பொய் தொலையும். ஆணவம் கரையும். உடம்பும் துள்ளி விளையாடும்.

உடம்பும் சரி, மனமும் சரி, எதானாலும் எடுத்த எடுப்பிலேயே வசப்பட மாட்டா? நம் விருப்பத்துக்கு இணங்கிச் செயல்பட மாட்டா.

அதட்டியோ, மிரட்டியோ, கட்டளையிட்டோ அவற்றை வசப்படுத்த முடியாது. தட்டிக் கொடுத்து, விட்டு கொடுத்து, கொஞ்சிக் குலாவி உறவாடி உறவாடித்தான் நம்முள் அவற்றை ஒன்றுபட வைக்க வேண்டும்.

கெட்டிக்காரத்தனம் பண்ணியோ, குறுக்கு வழியில் தந்திர மந்திரங்களில் இறங்கியோ அவற்றை வசியப்படுத்துவது பலன் தரா.

ஒத்த கருத்தும், ஒருவர் மேல் ஒருவர் உயிரும் வைத்திருக்கிற ஆராத அன்பும் உடைய காதலர்கள் கூட சேர்ந்து அனுபவிக்கிற இன்பந்தான் இன்பம். மற்றப்படி உருட்டி மிரட்டியோ, அதட்டியோ, நயவஞ்சகம் பண்ணியோ சேர்வது இன்பமாகாது. இன்பம் போல பாவலாப் பண்ணுகிற ஓயாத துன்பம் அது.

புலன்களையும் மனசையும் அன்போடு, உறவாடி இணங்க வைத்து உண்மையைத் தேடினால் அது ஆனந்தமாக இருக்கும். அப்படி இல்லாமல் உடலையோ உள்ளத்தையோ கசக்கிப் பிழிந்து வேலை வாங்கினால் துன்பந்தான் பெருகும்.

முன்னதில் ஆணவம் கரையும். பின்னதில் ஆணவம் தடிக்கும்.

உடம்போடு மனது ஒன்றுபடுவது பொய்யை தொலைத்துக் கட்டுவற்குத்தான், பொய் ஒழிந்தால் தான் உண்மை தரிசனம் கொடுக்கும்.

நான் தனி என்கிற நினைப்புக்கு மிஞ்சின பொய் வேறு என்ன இருக்கிறது. பொய் என்றால் அதுதான் பொய். அந்தப் பொய்யிலிருந்து தான் பொறாமை, பேராசை, வன்கண்மை, சினம், பகை, பழிபாவத்துக்கு அஞ்சாத திருட்டுத்தனம் என்று அடுக்கடுக்காய் உற்பத்தி ஆகின்றன.

சகல கொடுமைகளுக்கும் ஊற்றுக் கண்ணாக இருக்கிறது நான் (தனி) என்கிற பொய். எதற்கும் இடம் கொடுக்காத இரும்பு மலை அது.

அதைத் தவிடு பொடியாக நொறுக்க வேண்டும். கிரவுஞ்ச கிரியை ஞானவேலால் நொறுக்கி எறிந்தானே முருகப்பெருமான்; அப்படி நொறுக்கி எறிய வேணடும்.

அந்தப் பொய்யை, ஆணவத்தை, தடித்தனத்தை உடைத்தெறிந்த பிறகு தெரிவதுதான் உண்மை. மாசற்ற உண்மை, ஒளி ஊற்று என்றால் அதுதான்.

இனி, தேர்வு எழுதி மதிப்பெண் பெற்ற பையனிடம் நீ பெற்ற மதிப்பெண் எவ்வளவு என்று கேட்கிறோம். தான் பெற்ற மதிப்பெண்ணைக் கூட்டாமல் குறைக்காமல் அப்படியே பதிலாக நம்மிடம் சொல்கிறான் பையன்.

இப்படிச் சொல்வது இயல்பு. தண்டவாளத்தில் ரயில் ஓடுவது மாதிரி இயல்பு. இதைப் போய் உண்மையை உணர்த்தும் ஒளி விளக்கு நான் என்று பையன் தமுக்கடிக்கலாமா.

இதிலும் ஒருவன் பொய் சொல்கிறான் என்றால் அவன் கயவன்.

மனம் சுத்தப்படுவதுதான் உண்மை உணர்ச்சி. விடுதலை, வீடு பேறு, தெய்வநிலை என்கிற ஒழிவில் ஒடுக்கம் என்பனவெல்லாம் மனச்சுத்தத்தை வைத்துத்தான்.

மனசில் அழுக்கில்லை என்றால் எந்த வேஷமும் வேண்டியதில்லை. யோகம், தவம், காஷாயம், தாடி, மந்திரம், தந்திரம், ஒன்றுமே தேவை இல்லை. வீட்டிலேயே இருக்கலாம்.

மனைவி, மக்களுடன் சேர்ந்தே இருக்கலாம். உற்றார், உறவினர், நண்பர், கலை, பண்பாடு, கோவில், குளம், வியாபாரம், விவசாயம், படிப்பு, உத்யோகம் எல்லாமே ஆனந்தமாகவே இருக்கும். ஒவ்வொன்றும் தெய்வாம்சமாகவே இருக்கும். உறவாடும் பழகும்.

அழுக்கு இருந்தாலோ அவ்வளவும் நஞ்சாகி விடும் ஒவ்வொன்றும் தொல்லை தான். ஓயாத தொல்லை தான்.

இனித் திருமூலர் இது சம்பந்தமாக வழங்கும் தீர்ப்பு என்னவென்று பார்ப்போம்.

ஒன்றே ஒன்று தான். அது எங்கும் நிறைந்திருக்கிறது. உண்மை என்றும் அதைச் சொல்லலாம் கடவுள் என்றும் அதைச் சொல்லலாம்.

அநாதியான தத்துவம் அது. காலங் கடந்தது அது.

நாம் என்று நினைக்கிற நினைப்பும் அதுதான். சமுத்திரத்தில் தண்ணீரோடு தண்ணீராய் இருக்கிற ஒரு துளி மாதிரிதான் நாம்.

ஆனாலும் உடம்போடு ஒட்டிப் பிறந்ததால் நான் தனி என்கிற பேதம் உண்டாகி விட்டது.

உடம்போடு ஒட்டிப் பிறந்தாலும் முதலில் பச்சை மதலையாகத் தாள் இருக்கிறது ஆணவம். குப்பன், சுப்பன் என்று பெயர் வைத்த உடன் மெல்லத் தலையைத் தூக்குகிறது ஆணவம். பிறகு படிப்பு, தொழில், வருமானம், வீடு, வாசல், மனைவி, மக்கள் கொடுக்கல் வாங்கல் என்று விரிய விரிய ஆணவம் தடிப்பேறி விடுகிறது.

இப்படியாக ஒரே உண்மையை - கடவுள் தத்துவத்தை பதி என்றும், பசு என்றும், பாசம் என்றும் மூன்றாகப் பார்க்கிறோம். மூன்றும் வெவ்வேறு (அநாதி) தான் என்கிற நினைப்பே உறைப்பாக நிற்கிறது.

நான் தனி என்கிற கொழுப்பை வேரறக் கிள்ளி எறிந்து எல்லாம் ஒன்று என்கிற உண்மையைக் காண வேண்டும். அதற்குத் தான் உடம்பையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்த வேண்டும். எளிமைக்கு உறைவிடமாக்க வேண்டும்.

உடம்பைப் பக்குவப்படுத்தி அதன் பிறகு உள்ளத்தைப் பக்குவப்படுத்துவது என்பது சுற்று வழி. கையில் இருக்கும் அன்னத்தை நேராக வாய்க்குள் போடாமல், முகத்தை ஒரு சுற்றுச் சுற்றி வாயில் போடுகிற காரியம் அது.

மனதை நேரடியாகச் சுத்தப்படுத்த வேண்டும். உடனே எடுத்த எடுப்பிலேயே பொய் - ஆணவம் ஓடி விடும். விண்ணுக்கும் மண்ணுக்குமாக நிறைந்து உண்மையானது ஜகஜோதியாய்த் தகதக வென்று பிரகாசிக்கும்.

பொய்யை ஒழித்துக் கட்ட வேண்டும். உடனே உண்மை தெரியும். தூய்மை என்பது அதுதான். அதற்குத்தான் மனத்தூய்மை என்று பெயர்.

கடவுள் என்றும் மோட்சம் என்றும் சொல்வது அந்த மனத்தைத்தான். அழுக்கில்லாத மனத்தைத்தான்.

இது சம்பந்தமாகச் சிவவாக்கியர் சொல்வதைச் சாட்சியமாக வைத்து திருமூலர் சொல்வதைத் தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளலாம்.

இதோ சிவவாக்கியர்

மனத்தகத்(து) அழுக்கறாத
மௌன ஞான
யோகி கள்
வனத்தகத்(கு) இருக்கினும்
மனத்தகத்(து) அழுக்கறார்;
மனத்தகத்(து) அழுக்கறுத்த
மௌன ஞான
யோகி கள்
முலைத்தடத்(து) இருப்பினும்
முத்தி காண
வல்ல ரே.

அழுக்கு அறாதயோகிகள் - மடத்தடிகள். அழுக்கறுத்த யோகிகள் - மனத்துள் அடியார்கள், ஞானிகள்.

இனி திருமூலர்

பதிபசு பாசம்

எனப்பகர் மூன்றில்

பதியினைப் போல்பசு

பாசம் அநாதி!

வேடிக்கைதான். ஒன்றே ஒன்று மூன்றாக மயக்குவதும் வேடிக்கைதான். அதை விட வேடிக்கை அந்த ஒன்று போலவே நாங்களும் அனாதியான தத்துவங்களே என்று ஏனைய இரண்டும் தோள் தட்டுகிற காரியம்.

இனி இப்படி எல்லாம் தோள் தட்டி ஆரவாரிக்கிற பொய்யும் மயக்கமும் உண்மையின் (பதியின்) பக்கம் வரவா செய்யும்.

பதியினைச் சென்றணு

காபசு பாசம்

கடவுள்த் தத்துவந்தான் உண்மை என்கிற புத்தி வந்து விட்டால், யோசிக்கிற பழக்கம் வந்து விடும். அதாவது பதிதான் உண்மை என்று யோசித்துப் பார்க்கிற பழக்கம் வந்தால் தான். பசு, பாசம் என்கிற பொய்யும் மயக்கமும் ஓடி விடும். ''பதி அணுகில் பசு பாசம் நிலாவே''.

பாடலின் முழு உருவம்

பதிபசு பாசம்

எனப்பகர் மூன்றில்,

---

பதி - இறைவன். பசு - உயிர், பாசம் - ஆணவம், எனப் பகர் மூன்றின் இப்படியாகச் சொல்லப்படுகின்றன மூன்று என்று. உண்மையில் ஒன்றுதான். பதிஅணுகில - இறைவனையே உண்மை என்று ஒட்டினால்

எங்கே ஒட்டுவது, அவன் அருளால் அவனைப் பற்றிய உணர்வு வந்தால் தான் ஒட்ட முடியும். அப்படியானால் இறைவனே இரக்கப்பட்டு நான் என்பதையும் எனது என்பதையும் கலைக்க நெருங்கினால் (தான்) பசுவும் ஓடும், பாசமும் அறுபடும். அதாவது நான் என்பது உலரும். எனது என்பது வறளும்.

குறிப்பு - மனம் சுத்தப்பட வேண்டும். நான் என்பதும் ஓடி விட வேண்டும். அதுதான் தெய்வநிலை.

*பதியினைப் போல் பசு*

*பாசம் அநாதி!*

*பதியினைச் சென்றணு*

*காப்பசு பாசம்;*

*பதிஅணு கில்ப்பசு*

*பாசம் நிலாவே*

## (47)

புலிக்குப் பசி எடுத்தால் ஆங்கார வெறி உண்டாகும். தீப்பந்தம் போல எரியும் அதன் கண்கள். புதருக்குள் கிடந்தபடி எது வருகிறது, எங்கிருந்து வருகிறது என்று நோட்டம் பார்க்கும் புலி. அப்பொழுது அதன் நாக்கு வெளியே தொங்கும். சொட்டுச் சொட்டாக அதிலிருந்து நீர் கசியும்.

மனமும் அப்படித்தான். மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐம்புலன்களையும் தொங்கப் போட்டப்படியே வெறியோடு அங்கே இங்கே என்று பாய்கிறது மனம்.

*அறிவைம் புலனு*

*னேநான்ற தாகி*

அறிவு - மனம். நான்றாதாகி - தொங்கப் போட்டப்படியே

இனி நீரின் ஆழத்துள் போகப் போக நீளம், அகலம் தெரியாது. ஆழமும் இன்னதென்று தெரியாது. போகப் போகப் போய்க் கொண்டே இருக்கும். அப்படிப் போய்க் கொண்டே இருக்க வேண்டும். மனம் என்கிற அறிவு. எங்கே போய்க் கொண்டிருக்க வேண்டும். உண்மையைத் தேடி யோசனைக்குள் யோசனைக்குள் யோசனைக்குள் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

போகப் போகத்தான் தெரியும் இறுதி இல்லாதபடி எங்கும் நிறைந்தது கடவுள் தத்துவம் என்று. நாமும் அந்தமயந்தான் என்கிற உண்மை.

இனிப் பாடலின் முழு உருவம்

*அறிவைம் புலனுடே*

*ளேநான்ற தாகி*

நெறிஅறி, யாதுற்ற
நீராழம் போல
அறிவறி(வு) உள்ளே
அழிந்தது போல
குறிஅறி விப்பான்
குருபரன் ஆமே.

## (48)

போகப் போகப் போய்க் கொண்டே இருக்கிறது பிரபஞ்ச வெளி. ஆரம்பம் எது முடிவு எது என்கிற நிலையில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது அந்தவெளி.

பார்ப்பதற்கு அது வெட்ட வெளியாகத் தோன்றும். ஆனால் வெற்றிடம் என்பதே இல்லாமல் நிறைந்திருக்கிறது அதனில் சக்தி.

சக்திதான் அண்டபிண்ட சராசரம் அவ்வளவாகவும் விளைந்து கொண்டே இருக்கிறது. விளைந்தது போல வளர்ந்து கொண்டே இருக்கிறது. பிறகு கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து கொண்டும் இருக்கிறது.

விளைந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு நிலை. அப்படியே வளர்ந்து கொண்டிருக்கும் போதும் ஒரு நிலை. மறைந்து கொண்டிருக்கும் போதும் ஒரு நிலை.

முதல் நிலையில் உமை என்று பெயர். சக்திக்கு அப்பொழுது அவள் நிறம் நீலம். வளர்ந்து கொண்டிருக்கும் போது பெயர் லட்சுமி. அப்பொழுதைய நிறம் மாந்தளிர் போன்ற பொன் வண்ணம். மறைந்து கொண்டிருக்கும் நிலையில் பெயர் காளி. அப்பொழுது கருப்பு நிறம்.

---

அறிவு அறிவு உள்ளே அழிந்தது போல் - தங்கத்தின் இயல்பு இது செம்பின் இயல்பு இது என்று தெரிந்தது அறிவு. பிறகு இரண்டிலும் ஒரே வகை அனுதான் என்று கண்டது அறிவு. முந்திய அறிவு அப்பொழுது காலாவதியாகி விட்டது. இப்படி ஒவ்வொன்றாய் காலாவதி ஆகிறது பொய்யறிவு. மிச்சம் உண்மை அறிவு ஒன்றுதான். வேண்டுவது மெய்யறிவே.

இப்படி எல்லாம் புதிது புதிதாகக் கற்பனைகள் உண்டாகி இருக்கின்றன நம்மவர்களுக்கு. அவைகளுக்கு ஏற்றபடி புதிதுபுதிதாகவும் பெயர் சூட்டி உள்ளனர். என்னதான் சுற்றிச் சுற்றி வந்தாலும் விஷயம் இதுதான்.

இறுதி இல்லாதபடி எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறது பிரபஞ்ச (வெளி)ம். அது சக்தி மயமாக இருக்கிறது. அந்த சக்தியே பல்வேறு கோலங்களில் பூத்துச் சொரிக்கிறது.

பிரபஞ்சவெளி சிவம். சக்தி என்பது சிவசக்தி. அது சிவத்தோடு சேர்ந்தே இருக்கிறது. பொருளும் சக்தியும் தனித்தனியாகப் பிரிந்தா இருக்கும். சேர்ந்துதான் இருக்கும்.

அப்படி உமை ஒரு பாகமாய்ச் சேர்ந்தே இருக்கிறது சிவசக்தி.

அது சதா செயல்பட்ட வண்ணமாகவே இருக்கிறது. சிற்றெறும்பிலிருந்து யானை வரை, புல்லிலிருந்து பிரமண்டமான நட்சத்திரம் வரை உருவெளிப் பாட்டோடு செயல்பட்ட வண்ணமாகவே இருக்கிறது. அப்படிச் சதா செயல்படுவதால்தான் அது சதா சிவம்.

இது சம்பந்தமாகப் பழம் பாடல் ஒன்று

நீல மேனி
வாலிழை பாகத்(து)
ஒருவன் இருதாள்
நிழல்க்கீழ்
மூவகை உலகமும்
முகிழ்த்தன முறையே.

(ஐங்குறு நூறு கடவுள் வாழ்த்து)

---

நீலமேனி வாலிழை - உமை. வால் - வெள்ளை. அதாவது ஒளிமயமான. இழை - ஆபரணம், பாகத்து ஒருவன் - உமை ஒரு பாகன். சதாசிவன். இருதாள் நீழல் - திருவடி நீழல். அதாவது அருள் நிழல். திருவருள். மூலகை உலகம் - நிற்பன, நடப்பன, பறப்பன என்ற மூன்று வகைப்பட்ட பொருட்கள். ஆசாமி (இறைவன்) ஒருவன். திருவடி இரண்டு,.உலகமோ மூன்று. சரியான கணக்குத்தான்.

நிற்பன என்றால் மரம், செடி கொடிகள் மட்டுமல்ல, கல், மலை, கடல், போன்றவையும் கூடத்தான். நடப்பன - ஆடு, மாடு, பன்றி, யானை, எறும்பு, மனிதன் முதலாக பல. பறப்பன - ஈ, கொசுவிலிருந்து பெரிய பெரிய கழுகு, கருடன் அவ்வளவும். மொத்தத்தில் ஒன்றே ஒன்று. சக்தி மயமான ஒன்று. அது பல்லாயிரம் கோடியாக தோன்றுவதும் மறைவதுமாக இருக்கிறது. அலைகளாக எழுந்து எழுந்து கடலானது மடங்குவது போலத்தான் இதுவும்.

அதனால் தான் மகா கவி கம்பர்

பல்லா யிரம்கோடி

அண்டம் பனிக்கடலுள்

நில்லாத மொக்குள் என

நின் உழையே தோன்றுமரல்

என்றார். மொக்குள் - குமிழ் முதலியன.

அப்படி உண்டாகி மறைகிறவற்றுள் மனிதர்களாகிய நாமும் ஒன்று.

அணுவிலிருந்து அண்டம் வரை ஒவ்வொன்றுமே எல்லையற்ற பெருவெளியின் அம்சந்தான். அவதாரந்தான். ஒவ்வொன்றிலும் அந்தப் பரவெளியைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால் இந்த உண்மை ஒன்றுக்கும் விளங்க மாட்டேன் என்கிறது. விளங்கிக் கொள்ள வேண்டுமானால் அதற்குரிய வாய்ப்பு மனிதனைத் தவிர வேறு ஒன்றுக்கும் இல்லை.

மனிதனுக்குத் தான் உண்மையை உணர்ந்து அனுபவிக்கிற வாய்ப்பு - மனம் என்கிற அரிய சாதனம் - சிந்தனை என்கிற ஞானக் கண்ணாடி இருக்கிறது. ஆனாலும் அதைப் பயன்படுத்த மாட்டேன் என்கிறான் மனிதன்.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பார்களே அது போல வாய்ப்புக் கிடைத்தும் அதைப் பயன்படுத்த முடியவில்லை மனிதனால்.

சக்திமயமான விஷ்வப் பெருவெளிதான் (நம்) மனம்.

அதுதான் உடம்பாக உருவெடுத்தது. உடம்பு முழுவதும் உணர்ச்சிமயமாக உயிராக - உயிருக்கு உயிராக நிறைந்திருப்பது அந்த மாசற்ற வெளிதான்.

அந்த மாசற்ற வெளி என்கிற மாகடலில் மிதக்கிற குமிழ்தான் நாம் என்பது விளங்க வேண்டும். ஆனால் விளங்க மாட்டேன் என்கிறதே.

விளங்கி விட்டால் போதும்.

''மாசற்ற பெருவெளியை

மனவெளியில் அடைப்பாம்''

என்று பாடிப் பாடி ஆட வேண்டியதுதான். மாசற்ற பெருவெளியில் மனவெளி கலந்து விடும். பேதமற்று ஒன்றாய் விடும். அதைத்தான் மனவெளியில் பெருவெளியை அடைப்போம் என்று பெருமிதத்தோடு சொல்கிறார்.

வாய்ப்பை நழுவவிடாமல் உண்மையை உணர்ந்து பார்ப்பதுதான் - உணர்ந்து உணர்ந்து பார்த்துப் பார்த்து அனுபவிப்பதுதான் இறையருள்.

அந்த இறையருளை சூரியன் என்று ஒரு அடையாளம் போட்டு வைத்துக் கொள்வோம்.

அப்படியே யோசித்துப் பார்க்கும் மனதை ஒரு ஞானக்கண்ணாடி என்றும் வைத்துக் கொள்வோம். இந்த ஞானக்கண்ணாடியை தற்கால வழக்கில் குவி ஆடி (Convex Lens) என்று ஒரு பட்டத்தை அதற்குச் சூட்டுவோம்.

குவி ஆடியை சூரியனுக்கு நேரே வைத்துப் பிடித்தால் அதன் ஒளி ஒருமுகப்பட்டு கண்ணாடி வழி இறங்கும். ஒளியோடு உஷ்ணமும் சேர்ந்தே இறங்கும்.

அப்படியானால் குவி ஆடிக்குக் கீழே கிடக்கிற குப்பையோ, கூளமோ, சண்டோ, சருகோ, தாளோ எதனாலும் உஷ்ணம் தாங்க முடியாமல் வெந்து தணலாகி விடும்.

இது நாம் அறிந்ததுதான். இனி, எண்ணிப் பார்க்கும் உணர்ச்சி நினைப்பு இல்லாது போனதால் ஒரு நிலையில் நிற்காமல் எங்கெங்கோ தாவித் தாவி ஓடுகிறது எண்ணம். எதை எதையோ தொட்டுப் பார்க்கிறது. முகர்ந்தும் பார்க்கிறது. சுவைத்தும் பார்க்கிறது.

இப்படியே பார்த்து பார்த்துச் சேர்த்த குப்பைகூளம், சண்டு, சருகு, அவ்வளவையும் வண்டி வண்டியாய்ச் சேர்த்து தன்னுள் கொட்டி வைத்துக் கொண்டது, மூளை - நினைப்பு.

அதனால் தூயமனம் பழுது பட்டு விட்டது. நான், எனது என்கிற கொழுப்பு அடை சேர்ந்து விட்டது மனதில்.

கொழுப்பு கரைய வேண்டும். சண்டு சருகு எல்லாம் வெந்து சாம்பலாக வேண்டும். அதற்கு வழி என்ன.

எல்லாம் ஒன்று என்கிற எண்ணம் வர வேண்டும். அது மனவழியாக இறங்க இறங்க சண்டு, சருகு, குப்பைகூளம் எல்லாம் வெந்து சாம்பலாய் விடும். அந்த எண்ணந்தான் சூரியன். மனந்தான் சூரிய காந்தக்கல்.

சூரிய காந்தமும்
சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம்
சூழ்பஞ்சைச் சுட்டிடா;
சூரியன் சந்நிதி
யில்ச்சுடும் ஆறுபோல்
ஆரியன் தோற்றம்முன்
அற்ற மலங்களே.

---

சூரியகாந்தம் - சூரிய காந்தக்கல். குவி ஆடி மாதிரி. மனம் என்கிற உள்ளந்தான் அது. சூழ்பஞ்சு - உள்ளத்தை அடை சேர்ந்திருக்கிற குப்பை கூளங்கள். ஆணவம், மாயை, கன்மம் முதலியன.

நில்லாத மனந்தான் இவற்றைத் தேடிச் சேர்த்தது. அப்படி இருக்க அந்த மனமே தான் தேடிச் சேர்த்தவற்றைப் பொசுக்குமா? பொசுக்காது. சூரியன் இல்லாமல் வெறும் குவி ஆடியால் பொசுங்குமா சண்டும், சருகும்

அவை பொசுங்க வேண்டும் என்றால் சூரியக்காந்தக்கல் என்கிற மனம் வழியாக உண்மை உணர்வு என்கிற எண்ணம் - சூரிய ஒளி இறங்க வேண்டும். இறங்கி வேரூன்ற வேண்டும். பிடி சாம்பலாய் நீறி விடும் அவ்வளவும்.

ஆரியன் - இறைவன். இறையருள்.

## (49)

ஒரு மின்மினிப்பூச்சியின் தேக அமைப்புக்கும் ஒரு பலாப்பழத்தின் கட்டுமான அமைப்புக்கும் எத்தனை விதமான நெளிவு சுழிவுகள். வேறுபாடுகள்

ஒரு வாழையின் உடல் கட்டுமானமும் ஒரு திமிங்கலத்தின் உடல்கட்டுமானமும் ஒன்றுக்கொன்று உறவே இல்லை என்று சொல்லத் தோன்றும்.

இனி மனித உடம்பு ஒரு தனி உலகம்

முதுகுத் தண்டு - தண்டு வடம் என்று ஒரு எலும்புத்தூண்.

தூணின் உச்சியில் மூளை. செந்தாமரையும் வெண் தாமைரயுமாக பூத்துச் சொரிகிறது அது.

தண்டுவடத்தின் அடியில் எரு வாசல், சிறுநீரோடை, அல்லது கரு வாசல்.

எருக்குழிக்கு மேலே உள்ப்பக்கமாக அதே தண்டுவடத்தில் முளைத்த ஒரு ரசாயன சாலை, சிறுகுடல், பெருங்குடல், பித்தப்பை, மூத்திரப்பை, கல்லீரல், மண்ணீரல், மலக்குடல் என்றெல்லாம் தனித்தனிப் பிரிவுகள் அந்த ரசாயன சாலையில். அதற்கும் மேலே உள்பக்கமாகவே முளைத்த மாபெரும் பௌதீகக் கூடம். அங்கே மூச்சோட்டம் (காற்று) ரத்த ஓட்டம் (நீர்) ரத்த சுத்தி அதாவது பிராண வாயு (அக்கினி) இவ்வளவும். அதற்கும் மேலே அதே தண்டு வடம் கண்டம் என்றும், குரல் வளை என்றும், உதடு (இதழ்)கள் என்றும் முகம் (மலர்) என்றும், பல்வரிசை என்றும், நாக்கு என்றும், மூக்கு என்றும், கண் என்றும், காது என்றும், நெற்றி என்றும், புருவம் என்றும் எழுந்து நிற்கும் அற்புதக் கோலம்.

ஒரு முதுகுத்தண்டு அதாவது ஒரு எலும்புத்தூண் எப்படி எல்லாமோ பொன்னாய்ப் பூக்கிறது. பூவாய்ச் சொரிகிறது. இப்படி ஒரு கற்பக விருட்சமாய்ப் பூத்துக் குலுங்கும் எலும்பு மண்டலம் நடமாடத்தான் கால்கள்.

கால்களின் ஒரு பகுதியே கைகள் ஆயின. எலும்பு மண்டலம் பொலிவோடு கவர்ச்சியாக இருக்க சதை, தோல் என்று சேர்த்து வைத்துப் பூசி இருக்கிறது.

நீர், நெருப்பு, காற்று என்கிற பூதங் (தத்துவங்)கள் மட்டுமல்ல, உடம்பில் மண்டைக்குள் இருக்கிற மூளையைப் பார்த்தால் ஆகாயமே அதனுள் தெரியும். அப்படி ஆகாயமயமாய் - வான்வெளியாய் இருக்கிறது மூளை.

அப்படியானால் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கிற நான்கு தத்துவங்களும் சேர்ந்தது உடம்பு. அது மட்டுமா முதுகம் தண்டு, மண்டை ஓடு, நெஞ்சுக்கூடு, விலா எலும்பு, கை, கால் எலும்பு, காது, குரல் வளை, முட்டி, கணுக்கால், பல், நகம், ஏன் ரோமங்கூட எலும்பு மயந்தானே.

இந்த எலும்புதானே பாறை அதாவது மண். ஆக மண், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐந்து பூதங்களும் இந்த எண் சாண் உடம்பில். அப்படியானால் பிரபஞ்ச(மே) வெளியே நம்முள் தான். கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் இப்படியே தான். அற்புதமான இந்த அதிசயத்தைப் பார்க்க வேண்டும். அனுபவிக்க வேண்டும்.

முன்னோர்கள் நன்றாக இந்த அற்புதத்தைப் பார்த்திருக்கிறார்கள். பார்த்துப் பார்த்து அனுபவம் ஏற ஏற பேதம் மறைந்து விட்டது. எல்லாம் ஒன்று. ஒன்றே ஒன்றுதான் அவ்வளவும் என்பது விளங்கி விட்டது அவர்களுக்கு.

உண்மையை அனுபவித்து அனுபவித்து மாந்தினார்கள். மாந்த மாந்த உடம்பே உச்சி முதல் உள்ளங்கால் வரை இன்பக் களஞ்சியமாகி விட்டது. ஆனந்த அரங்கமாகவே ஆகிவிட்டது அவர்களுக்கு.

அதனால் வாழ்க்கை தேனாகத் தித்தித்தது. மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர், போவோர், வருவோர் எல்லோருமே தித்திக்கும் தீங்கனிகளாகி விட்டனர்.

அதுமட்டுமல்ல உண்மை தெரிந்து ஆனந்தம் ஊற ஊற சும்மா இருக்க முடியவில்லை. சோம்பலை உதறி எறிந்தனர். மற்றவர்களுக்கும் தாம் கண்ட காட்சியை உற்ற உண்மையை எடுத்துச் சொன்னார்கள். அதற்காக தேசயாத்திரை என்று நாலா திசையிலும் போனார்கள். தீர்த்தயாத்திரை, தலயாத்திரை என்றெல்லாம் போய் மூர்த்தியை வழிபட்டார்கள் ஒன்றாகக் காண்பதே காட்சி என்னும் அனுபவ உண்மையை எல்லோருக்கும் எடுத்துச் சொன்னார்கள்.

சொல்லச் சொல்ல எளிமைப்பட்டது உண்மை. அதனால் அதற்கு வல்லமை கூடியது.

யாவர்க்கும் ஆம்இறை
　　வற்கொரு பச்சிலை,
யாவர்க்கும் ஆம்பசு
　　வுக்கொரு கைப்பிடி,
யாவர்க்கும் ஆம்உண்ணும்
　　போதொரு வாயுறை
யாவர்க்கும் ஆம்பிறர்க்(கு)
　　இன்னுரை தானே.

இப்படிப் பாடலே உண்டாகிவிட்டது அவர்களால் முகத்திலிருக்கும் கண்ணை மட்டும் திறந்து பார்த்தால் போதாது. மனக்கண்ணையும் அதாவது உணர்ச்சி என்கிற கண்ணையும் திறந்து பார்க்க வேண்டும். இதற்குத்தான் நெற்றிக் கண் என்று பெயர். முகக் கண்ணோடு மனக்கண்ணையும் திறந்து ஒரு இலையைப் பார்த்தாலே போதும் அதிசயத்தில் கரைந்து விடும் மனம்.

என்ன பச்சை, எத்தனை தூய்மையான, குளுமையான, சொகுசான பச்சை. இந்தப் பச்சையில் தான் எத்தனை எத்தனை வகை. சரி அது கிடக்கட்டும்.

ஒவ்வொரு பூண்டின் இலையும் ஒவ்வொரு வகையான பச்சையை லட்சோப லட்ச வருடங்களாக விடாமல் தொடர்ந்து பற்றிக் கொண்டு வருகிறதே? அது எப்படி? இந்த ஞாபகசக்தி எப்படி வந்தது தாவரத்துக்கு? என்று அதிசயத்துக்கு மேல் அதிசயமாகப் பொங்கும்.

---

யாவர்க்கும் ஆம் - எல்லோருக்கும் எளிதில் நடக்கும். ஆம் - ஆகும், நடக்கும். இறைவற்கு ஒரு பச்சிலை - குளு குளு என்றிருக்கும் இலையையோ, பூவையோ பறித்து மூர்த்தியின் மேல் போடுவதில் யாருக்குத்தான் என்ன சிக்கல்.

கைப்பிடி - கையால் பிடித்துக் கொடுக்கும் பசும் புல். வாயுறை - உணவு, இன்னுரை - நல்லுரை

குறிப்பு - இலையையோ, மலரையோ பறித்து கண்ணை மூடிக் கொண்டு வண்டி வண்டியாய்க் கொட்டினாலும் புண்ணியம் இல்லை. கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும் இலையை, பூவானாலும் அப்படித்தான்.

இதில் யாருக்கு என்ன சிரமம்?

யாவர்க்கும் ஆம்இறைவற்கொரு பச்சிலை

பொங்கிப் பெருகி வெள்ளமாய் வருகிற அந்த அதிசயத்தில் நான் என்கிற ஆணவம் இருக்கவா செய்யும்?

பிறகு சும்மா இருக்க முடியுமா? நந்தவனம் வைக்க வேண்டியதுதான். பாத்தி கட்டல், நீர் பாய்ச்சல், களை பறித்தல் எல்லாம் வந்து விடும்.

பசுவைத் தேடி புல்லையே கொடுக்க வைக்கும்
யாவர்க்கும் ஆம்பசு வுக்கொரு கைப்பிடி

புல்லைப் பசுவுக்குக் கொடுத்துப் பழகப் பழகப் பசு மடமே வைக்க வைத்து விடும். பிறர் பசியால் துடிக்க நான் மட்டும் சாப்பிட என்ன உரிமை இருக்கிறது என்கிற ஞானமும் வந்துவிடும் பிறகு வேற்றுமை இருக்குமா? ஊரார் உலகோர் எல்லோரும் நாமாகி விடுவார்கள். யாரிடத்திலும் வெறுப்பு வராது. எல்லோரிடமும் சிரித்து மகிழ்ந்து ஆனந்தமாகவே இருப்பான் மனிதன்.

யாவர்க்கும் ஆம் உண்ணும் போதொரு கைப்பிடி

மேலும் மேலும் அது யோசனையைத் தூண்டியது. யோசிக்காத நேரத்தில் ஏதாவது வேலை செய்யத் தோன்றியது. அப்படி ஒரு துறுதுறுப்பு உள்ளத்துக்கும் உடலுக்கும் வந்தது.

அதனால் உண்மைக்கு - அனுபவத்துக்கு வடிவம் கொடுத்தார்கள். கோவில் கட்டினார்கள், கோபுரம் கட்டினார்கள், தேர் திருவிழா என்றெல்லாம் ஜோடித்துப் பார்த்தார்கள்.

பசு மடம் என்ன, அன்னதானம் என்ன, பணிவான இன்சொல் என்ன என்றெல்லாம் அது வளர்ந்தது.

யாவர்க்கும் ஆம்இறை
வற்கொரு பச்சிலை,
யாவர்க்கும் ஆம்பசு
வுக்கொரு கைப்பிடி,
யாவர்க்கும் ஆம்உண்ணும்
போதொரு வாயுறை
யாவர்க்கும் ஆம்பிறர்க்(கு)
இன்னுரை தானே.

## விட்ட குறை தொட்ட குறை

## (50)

உண்மையைத் தெரிந்தவர்கள் உணர்ந்து அனுபவித்தவர்கள் அது பற்றி மற்றவர்களுக்கும் சொன்னார்கள். ஊர் ஊராய்ப் போய்க் கூடச் சொன்னார்கள்.

சொன்னார்கள் என்றால் அதற்கு என்ன பொருள்? தங்களைப் போல மற்றவர்களையும் யோசிக்க வைத்தார்கள். அதனால் உண்மை, அனுபவம், உணர்ச்சி என்பவை எல்லாம் எளிதாகவே கிடைத்தன. யாரும் சிரமப்படவில்லை.

சமுதாய உணர்ச்சியோடு இரண்டறக் கலந்து பரிமளித்தது உண்மை. எழுத்துக்களையே உயிர், மெய், ஆய்தம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு வந்து விட்டது இலக்கணம்.

ஒரு வினைச் சொல்லில் இடம், காலம், கருவி, செயப்படு பொருள், செய்வோன் என்றெல்லாம் செயலோடு சேர்ந்து கிடப்பதைப் பார்க்கவும் வைத்து விட்டது அது.

அவனன்றி அணுவும் அசையாது என்றெல்லாம் சொல்ல வைத்து விட்டது. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்றும் சொல்ல வைத்து விட்டது.

உண்மையானது உணர்வோடு அப்படி ஒன்றித் திளைத்தது.

மற்றவர்களையும் யோசனை பண்ணும்படியாகத் தங்கள் அனுபவத்தை எடுத்துச் சொன்னார்கள் அவர்கள்.

இது இது இப்படி இப்படி என்று வெறும் உண்மையை மட்டும் சொன்னால் அதைக் கேட்ட யாரும் யோசனையில் இறங்கி விட மாட்டார்கள்.

அனுபவத்தையும், ஆனந்தத்தையும் சேர்த்துச் சொன்னால் தான் யோசனையில் இறங்குவார்கள்.

அனுபவ ஆனந்தத்தோடு உண்மையை எடுத்துக் காட்டி யோசனை பண்ண வைத்தவர்களை மக்கள் மதித்தார்கள். உபசரித்தார்கள். கைகட்டி வாய் பொத்திக் கூட அவர்களிடம் உபதேசம் கேட்க ஆரம்பித்தார்கள். காலில் விழுந்து வணங்கியும் வழிபட்டும் கேட்டார்கள்.

குருவென்றும், தெய்வத்துக்கு நிகரானவர் இந்தக் குருநாதர் என்றும் பாராட்டினார்கள்.

உபதேசம் என்றும், பணிவிடை என்றும், தட்சணை என்றும் பலபடியாகக் குவிய ஆரம்பித்து விட்டன குருநாதரிடம்.

பணம், அதிகாரம், பதவி இவை பெருகப் பெருக ஆனந்தம் போய்விட்டது. அனுபவமோ இல்லாமலே போய்விட்டது.

குருமூர்த்திகளிடம் பயம் வந்து விட்டது.

மற்றவர்களும் உண்மையைத் தெரிந்து விட்டால் யோசிக்கிற பழக்கம் வந்து அவர்களும் புத்திசாலிகளாகி விட்டால் நம் கதி என்னாவது என்று பதற ஆரம்பித்து விட்டார்கள். குருமாமணிகள். அதனால் பித்தலாட்டம் பண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

உடம்பை நேரடியாக, உள்முகமாகப் பார்ப்பதைத் தடுத்தார்கள். எப்படி? இந்த உடம்புக்குள்ளேயே ஐந்தாறு உடம்புகள் இருக்கின்றன என்றார்கள். ஒவ்வொரு உடம்புக்கும் ஒவ்வொரு தத்துவம் உண்டு என்றார்கள்.

அதே போல மனம் என்பதும் பல. ஒன்றுக்குள் ஒன்றாக எத்தனையோ மனங்கள்! ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம், ஒவ்வொரு நிறம், ஒவ்வொரு மணம், ஒவ்வொரு ருசி என்றெல்லாம் ஜோடித்தார்கள்.

அது மட்டுமா தூக்கத்தில் பல, விழிப்பில் பல, கனவில் பல, மூச்சில் பல, ஆதாரங்கள் பல, வேதாந்த சித்தாந்த தத்துவங்கள் பல பல என்றும் பட்டம் கட்டிப் பறக்க விட்டார்கள்.

பிரணவம், ஓம், எட்டெழுத்து, ஐந்தெழுத்து என்றெல்லாம் உழப்பினார்கள்.

அ, உ, ம் ஆக மூன்றும் சேர்ந்ததுதான் ஓம். அ என்பது பிரம்மா, உ என்பது விஷ்ணு, ம் என்பது ருத்திரன்.

ஒன்று வாயைத் திறக்கும். அடுத்தது வாய் (உதடு) குவியும். மூன்றாவது வாயை மூடியே விடும். இதுதான் படைத்தல், காத்தல், அழித்தல். அதனால்தான் இது பிரணவம் ஆயிற்று என்றெல்லாம் செப்படி வித்தையே பண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

விஞ்ஞான மயமானது உண்மை. அதை மதமாக்கி விட்டார்கள். அதனால் போகப் போகத் தெளிவு விலகி விட்டது. குழப்பமே உருவாகி விட்டது.

காரணம் மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது உண்மை என்கிற சுயநலந்தான். இந்த சுயநலம் இன்றளவும் இருக்கவே செய்கிறது. அரிய பெரிய தொழில் நுட்பங்களை, விஞ்ஞான விளைவுகளை மறைத்து வைக்கத்தானே செய்கிறார்கள் இன்றும். அதற்கு ரகஸ்யம் என்று பெயர் வேறு சூட்டத்தானே செய்கிறார்கள்.

எல்லாம் பயத்தில் வந்த வினை. இந்த பயந்தான் இனம், மதம், ஜாதி, நாடு, மொழி என்றெல்லாம் மனித குலத்தைத் துண்டு துண்டாகச் சிதறடித்தது.

உண்மையைக் காணக் குருமார்களை நம்பியவர்கள் பலர். அவர்கள் குழம்பிப் போனார்கள். கிறுக்குப் பிடித்து விட்டதோ என்று பிறர் சொல்லும் அளவுக்குக் குழம்பியே போனார்கள்.

அது காரணமாகவே ஞானக் கோட்டி என்கிற தொடரே உண்டாகி விட்டது. காமக்கோட்டி மாதிரித்தானே ஞானக் கோட்டியும்.

இந்தச் செப்படி வித்தை மாணிக்க வாசகரையே வாட்டி எடுத்திருக்கிறது. அவர் எத்தனையோ குருமார்களை நம்பி மோசம் போயிருக்கிறார். ஆனாலும் மனத்தைச் சிதறவிடவில்லை அவர். பொய் என்று தெரியத் தெரிய உடனுக்குடன் உதறி எறிந்து விட்டார்.

எப்படியும் உண்மையைத் தெரிந்தே ஆக வேண்டும் என்கிற ஆவேசம் மேலோங்கி இருந்தது மணி வாசகப் பெருமானிடம்.

அப்படியே ஒரு உத்தம குரு வாய்த்தார். வெட்டொன்று துண்டிரண்டு என்கிற கணக்கில் உண்மையைப் பிட்டுப் பிட்டு வைத்து விட்டார் குருநாதர்.

ஐந்து நிமிஷத்துக்குள்ளேயே சுயமாக உள்நோக்கிச் சிந்திக்கும் ஆவலைத் தூண்டி விட்டது குருநாதரின் ஆனந்தமயமான அனுபவ வெளியீடு.

மாணிக்க வாசகரின் பாடல் தோறும் இந்த அதிசயத்தைப் பார்க்கலாம். அவர் எப்படி எல்லாம் ஆற்றாமைப்பட்டுத் தவித்திருக்கிறார் என்பதை இந்த அதிசயத்தின் மூலம் தெளிவாகப் பார்க்கலாம்.

இறைவனே குருநாதனாக வந்து எனக்கு உண்மையைக் காட்டினான் என்று சொல்லும் அளவுக்கு அதிசயம் ஊறியது மணிவாசகரிடம். இல்லை என்றால் கல்வி என்னும் பல்கடல் பிழைத்து வந்து விட்டேன் நான் என்று மார்பு தட்டுவாரா மணிவாசகர். அதற்கும் மேலே

''நூலறி(வு) உண ரா

நுண்ணியோன் காண்க'' எப்படி வழங்குகிறார் தீர்ப்பை.

இனி, மாணிக்க வாசகர் காலத்தில் மட்டும் இல்லை. திருமூலர் காலத்திலும் இந்த அலங்கோலம் இருந்திருக்கிறது.

பித்தலாட்டம் என்பது அநாதியான தத்துவந்தான்.

எளிமையினும் எளிமையானது உண்மை. ஆனால் அதை அடைவதற்கு எத்தனை எத்தனை தடங்கல்கள்.

மகாபாரதத்தில் வருகிற ஏகலைவன் கதையும் இதைத்தானே காட்டுகிறது.

பார்த்தார் திருமூலர். சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலிலேயே விழுந்து விட வேண்டியது தான் என்று தீர்மானித்து விட்டார்.

மனித குருக்களைத் தேடி அலைவது வீண். மனம் என்கிற குருமகா சன்னிதானம் இருக்கத்தானே செய்கிறது. நாமும் இருக்கத்தானே செய்கிறோம். பேசாமல் அதனுடன் உறவாடி விட வேண்டியதுதானே என்று இறங்கி விட்டார் செயலில்.

பசித்தவுடன் தாய்ப்பசுவைக் கன்று நாடுவது போல் நான் நாடினேன். கூப்பிட்டேன். கதறியே அழைத்தேன். ஞானப் பாலைக் குடம் குடமாகக் கொட்டி விட்டது சிந்தனைப்பசு. இப்படித் துள்ளிக் குதிக்கிறார் திருமூலர்.

ஆன் நின்(று) அழைக்கும்

அதுபோல் என் நந்தியை

நான் நின்(று) அழைத்தனன்
ஞானம் கருதியே.

மனத்தைத்தான் நந்தி என்கிறார் திருமூலர். அதில் தானே உட்கார்ந்திருக்கிறான் பெருமான். நந்தி (காளை)யில் உட்கார்ந்திருப்பது போல.

இடி மின்னலோடு மழை மேகம் தண்டோராப் போட்டு விவசாயிகளைக் கூப்பிடுவது போல - விதைப் பெட்டியை எடுங்கள் என்று அழைப்பது போல - 'இங்கே வாப்பா' என்று வலிய வந்து அழைக்கவா செய்யும் மனத்தின் வழியாக இதையருள்?

அது நம்மைக் கூப்பிடும் என்று எதிர்பார்த்து ஏமாறுகிறார்கள் பலர் என்கிறார். திருமூலர்

வான் நின்(று) அழைக்கும்
மழை போல் இறைவனும்
தான் வந் (து) அழைக்கும்கொல்
என்றே தயங்குவர்.

இனிப் பாடலின் முழு உருவம்

வான் நின்(று) அழைக்கும்
மழை போல் இறைவனும்
தான் வந்(து) அழைக்கும்கொல்
என்றே தயங்குவர்;
ஆன் நின்(று) அழைக்கும்
அதுபோல் என் நந்தியை
நான் இன்(று) அழைத்தனன்
ஞானம் கருதியே

---

வான் நின்று - ஆகாயத்தில் இருந்து. மழை - மழை மேகம். ஆன் - பசு. அழைக்கும் அது - கன்று. நந்தியை - யோசனையை. அழைத்தனன் - தூண்டினேன்.

குறிப்பு - மனம் ஒரு கண்ணாடி போன்றது. வேறொரு பொருளின் நிழல் பட்டால் அது ஊடுருவ இடம் கொடுக்கும். இல்லை என்றால் பிம்பமாகப் பிரதிபலிக்கும்.

## (51)

மனதில் ஏறி அமர்ந்திருக்கிறான் பெருமான். காளை (நந்தி) யின் மேலும் ஏறி அமர்ந்திருக்கிறான் பெருமான். அதனால் மனத்தைக் காளை (நந்தி) என்றும் சொல்லலாம்.

மனமாகிய நந்தி யோசனையில் இறங்கினால் அதாவது சிந்திக்கச் சிந்திக்க சித்தம் ஆகும். மனம் அப்பொழுது சிந்தனை - மயமாகும் மனம்.

சித்தம் உருவாக உருவாகப் புத்தி வரும். அதனால் மனத்தை நந்தி என்று சொன்னது போல சிந்தனையைப் புந்தி (புத்தி) என்று சொல்லி இருக்கிறது. புத்தியை யானை முகன் என்பது ஒரு மரபு. இதுகாரணமாக நந்தியின் மகன் என்றே நயம்படச் சொல்லி இருக்கிறது யானைமுகனை.

யானை முகனாகிய விநாயகனை சித்தி விநாயகன், புத்தி விநாயகன் என்று எவ்வளவு பொருத்தமாய்ப் பெயர் வைத்துள்ளார்கள்.

சகல சக்திகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது காளை. அதாவது நந்தி.

அந்தக் காளைக்கு மிக்க பலம் பொருந்திய யானை தான் கன்று. அதாவது பிள்ளை குழந்தை.

இனிப்பாடல்

ஐந்து கரத்தனை
ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை
ஞான கொழுந்தினை
புந்தியுள் வைத்தடி
போற்றுகின் றேனே!

## (52)

மனுசன் உண்டாகி எவ்வளவு காலம் ஆகியது என்பது தெரியாது.

மனுசன் கூடவே அவன் மனமும் உண்டாகி விட்டது.

மனம் உண்டானதினால் தான் மனுசனே உண்டானான். இதுதான் உண்மை.

ஆனால் மனிதன் உண்டாகி நீண்ட நாட்களாக மனம் வேலை செய்யவில்லை. அதாவது யோசனையில் இறங்கவில்லை.

நீண்ட நெடுங்காலத்துக்குப் பிறகு தான் கண்ணைக் கசக்கி விழித்துப் பார்த்தது மனம். கூடவே சிந்தனை வந்து விட்டது.

கொஞ்சம் கொஞ்சமாக யோசனை வலுப்பட்டது. ஒவ்வொன்றாய்த் தெளியவும் ஆரம்பித்தது.

யோசிக்க யோசிக்க எல்லாமே புதுமையாக இருந்தது. அவ்வளவும் உண்மையாகவே இருந்தது.

பொய் என்று ஒன்று அப்பொழுது உண்டாகவே இல்லை.

கொஞ்சம் கொஞ்சமாக உண்மையானது உருண்டு திரண்டு ஒரு வடிவம் பெற ஆரம்பித்தது. ஒளி உருவமே பெற்று எழுந்தது. அவ்வளவு தான் அதன் நிழல் போல பொய்யும் எழுந்து நிற்க ஆரம்பித்து விட்டது. அதுவும் உருண்டு திரண்டு ராட்சத உருவம் பெற்று உண்மையை அமுக்கி மறைக்கவே ஆரம்பித்து விட்டது.

எல்லாவற்றிலுமே பொய். அதன் ஆதிக்கந்தான் அவ்வளவிலும் என்றாகி விட்டது.

---

ஐந்து கரத்தனை - கருப்பு மேலங்கி அணிந்த நீதிமான்களுக்கு கை நான்கு என்பது போல தேவர்களுக்கும் பொதுவாக நான்கு கரம். அத்துடன் யானை (தும்பி)க் கையையும் சேர்க்க ஐந்து. ஆனை முகன் - முகம் தான் யானை. முதுகு, நெஞ்சு, வயிறு, கால், கை எல்லாம் மனித தத்துவந்தான். இந்தின் இளம் பிறை போலும் எயிறு - பிறைச் சந்திரன் போன்ற வளைந்த தந்தம். புந்தி - புத்தி.

குறிப்பு - மனிதனுக்கு மூலம் குரங்கு என்று ஒரு ஆராய்ச்சி. குரங்கில்லை, குரங்குக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட பிராணி முதல் ஆதாரம். அந்தப் பிராணி இப்பொழுது இல்லை. மறைந்து விட்டது என்று அதற்கொரு திருத்தம்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பதை விட யானை வழியாக, சிங்கம் வழியாக முன்னேறி வந்தவன் மனிதன் என்றால் கொஞ்சம் குளுமையாகத் தானே இருக்கும். பாதி யானை - பாதி மனிதன் என்று கவனமாக வைத்திருக்கிறது பூர்வீக ஆராய்ச்சி.

பொய்யைப் பரப்புவதற்கென்றே பல சாஸ்திரங்கள், வியாக்யானங்கள், வாதப் பிரதிவாதங்கள், சூத்திரங்கள், முடிச்சுகள், இருட்டடிப்புகள், என்றெல்லாம் புற்றீசல் போல முளைத்தன.

விஷயம் போகிறபோக்கைத் தெரிந்தவுடன் சுயநலவாதி யாகி விட்டான் மனிதன். தான் என்கிற ஆணவம், கொழுப்பு கொங்சங் கொஞ்சமாகத் தடிப்பேறி விட்டது மனிதனிடம்.

பொய்க்கு அதுதான் காரணம். எல்லாவற்றிலுமே உண்மையானது பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. பொய்யின் அட்டகாசந்தான். அவ்வளவிலும் என்று ஆன பிறகு மனுசன் எப்படி யோசிப்பான்?

யோசித்தாலும் பொய் தானே யோசனைக்கு வரும். எப்படி எப்படிப் பித்தலாட்டம் பண்ணலாம் என்றுதானே யோசனை ஓடும்.

இந்த லட்சணத்தில் உண்மையை அதுவும் பேருண்மையை மெய்ப்பொருளை மனிதன் யோசிக்கவில்லையே என்று அங்கலாய்ப்பதில் என்ன புண்ணியம்.

அவ்வளவும் பொய். மெய்யைத் தேட வேண்டிய படிப்பே பொய். சட்டம், நீதி, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானங்களில் கூடப் பொய் தான் கொடி கட்டிப் பறக்கிறது.

இந்த விதமாகப் பொய்யே சகலவற்றிலும் முன்னே வந்து நிற்பதால் பொய்யைப் பற்றிய நினைப்பே இல்லாமல் போய் விட்டது.

பொய்யைப் பொய்யென்று தெரிந்தால் அல்லவா மெய்யை எங்கே என்று தேடத் தோன்றும். அதைப் பார்க்க வேண்டுமே என்கிற ஆவல் உண்டாகும்.

உண்மையைப் பற்றிய நினைப்பே இல்லாமல் போய் விட்டது. தப்பித் தவறி அது பற்றி நினைப்பு வந்தாலும் ''இது எதற்கு நமக்கு? இது (உண்மை) இல்லாமலேதான் பிழைப்பு ஒழுங்காக நடக்கிறதே'' என்று அதை ஒதுக்கவே தோன்றுகிறது.

எப்படியாவது உண்மையைக் கண்டு விட வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறவர்களைக் கூட ஒரு தட்டுத் தட்டி விடுகிறது பொய்.

அப்படி உண்மையோடு சேர்ந்து உட்கார்ந்து கொண்டே உண்மையையே மூடி மறைத்து நயவஞ்சகம் பண்ணுகிறது பொய்.

இது காரணமாகப் பல சித்தர்கள், ஞானிகள், அருளாளர் கூட. இதுதான் பொய், இதுதான் மெய் என்று நம்மால் இனம் காண முடியாது. இறையருள் இருந்தால் தான் அது முடியும் என்று கையை விரித்து விட்டார்கள். இதுசம்பந்தமாக இறைவனிடம் சொல்வதாக தாயுமான சுவாமிகளின் பாடல் ஒன்று.

பொய்யைப் பொய் என்றுணரும்
போதத்துக்(கு) ஆதரவுன்
மெய்யருளே அன்றோ
விளம்பாய் பராபரமே!

''பொய்யைப் பொய் என்று தெரிகிற ஞானம் (போதம்) வர வேண்டும் என்றால் அதற்கு உன் அருள் வேண்டும். பெருமானே! உம்முடைய அருளில்லை என்றால் பொய்யையே மெய்யென்று அதில் கிடந்து உழல வேண்டியதுதான்''.

இப்படி வாக்குமூலம் கொடுக்கிறார் தாயுமானவர் இறைவனிடம்.

பொய்யைப் பொய்யென்று தெரிந்தால் தான் உண்மை இன்னதென்று தெரியும். சிந்திக்கச் சிந்திக்கத்தான் ஒவ்வொரு அம்சத்திலும் நூலாம்படை போலப் படர்ந்து கிடக்கிற பொய் இன்னதென்று தெரியும். உடனுக்குடன் இதை எப்படி ஒழித்துக் கட்டுவது என்பதும் தெரியும்.

அப்பொழுதுதான் மெய் வரும். உண்மையைக் கண்டபின் தான் உள்ளத்துக்குக் களை. அதுதான் அதற்கு ஒளி, உயிரும் அதுதான்.

மிக மிகப் பழங்காலத்தைச் சேர்ந்த ஞானி ஒருவரே இது சம்பந்தமாக விஞ்ஞான முறையிலே சொல்கிறார்.

எப்படி

பொய்யாத உள்ளமே

மெய்யாதல் வேண்டுமே

களையைப் பறித்து எறிந்தால் தானே பயிரானது தலை தூக்கும். அப்படித்தான் இதுவும். பொய்யைத் தேய்த்து அழிக்க அழிக்கத்தான் மெய்யானது சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

கடவுளோடு ஒன்றுபடுவது, இரண்டறக் கலப்பது, பேரின்ப நிலை, மோட்சம் என்பதெல்லாம் பொய்யில்லாத மெய்தான். அதாவது உண்மையை மெய்ஞ்ஞானமாகக் கண்டு தெளியும் விஞ்ஞானச் சிந்தனைதான்.

அந்த நினைப்பில் விடாமல் தொடர்ந்து ஈடுபட்டு ஒன்றுவது தான்.

(அகல்) விளக்கைப் பொருத்தினால் சுடர் விட்டு ஒளிரும். விளக்கில் திரி இருக்கிறது. அதில்தான் பொருத்துகிறோம். அதுதான் எரிகிறது. ஒளிர்கிறது. ஆனால் விளக்கில் நெய் இருக்க வேண்டும். நெய் (எண்ணெயில்) முங்கி நனைய வேண்டும் திரி.

அப்படியானால் தான் எரியும்.

நெய் இல்லை என்றால் ஒளிராது திரி, இனி திரி இல்லை என்றால் நெய்யாலும் பிரகாசிக்க முடியாது. திரியும் நெய்யும் ஒன்றாக வேண்டும். இரண்டு(ம்) கரைய வேண்டும். அப்படியானால் ஒளி என்கிற ஒன்று கிடைக்கும்.

அது போலத்தான் யோசனையும் உண்மையும் ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட ஒன்றுபட இரண்டு(ம்) கரையும். பேரின்ப நிலை என்கிற ஒன்று கிடைக்கும்.

அதைத்தான் இறைவனுடன் ஒன்றுபடல் (செய்யானைச் சேர்தல்) என்று சொல்லி இருக்கிறது.

இனிப் பழம் பாடலின் முழு உருவம்.

நெய்யொடு திரிஒக்க,
செய்யானைச் சேர்வார்க்குப்;
பொய்யாத உள்ளமே,
மெய்யாதல் வேண்டுமே!

பாடல் மிகப் பழமையான பாடல். செய்யுள் உருவமே அதன் பழமையைக் காட்டுகிறது.

பொய்யை வெறுக்கிறது. அதை ஒழித்துக் கட்டுவது. ஆவலோடு மெய்யைத் தேடுவது அதற்காகவே சிந்திப்பது. விடாமல் மேலும் மேலும் சிந்திப்பது என்கிற பழக்கம் இருந்தால் போதும். மென்று குதப்புவதற்கு வார்த்தை கிடைத்தால் போதும். பொருளோ உணர்ச்சியோ அவசியம் இல்லை என்கிற கோமாளித்தனம் வராது.

பாட்டு என்னத்துக்கு வசனம் போதும், ஏன் பாட வேண்டும் பாடலை? வாசித்தால் போதாதா? தப்பித்தவறிப் பாடினாலும் வெறும் சப்தம் மட்டும் போதாதா? அர்த்தம் தெரிந்து ஆகப் போவது என்ன? என்கிற பரிதாபம் யோசிக்கிற பழக்கம் இருந்தால் வருமா?

யோசிக்கிற பழக்கமே இல்லாமல் போனதால் தான் உண்மையும், ஒழுங்கும், நேர்மையுமா சோறு போடுகிறது? வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் பொய்யோ, பித்தலாட்டமோ, கயமையோ, கொடுமையோ எதானாலும் அதுக்குக் கூசக்கூடாது. துணிந்து செயல்பட வேண்டும் என்கிற பரிதாபமே வந்து தொலைத்தது.

எளிமை, தூய்மை, பொறுமை, அன்புடைமை, வீரம் இப்படிப்பட்ட உண்மைப் பண்புகளுக்கு இனி இடம் இல்லை. ஆடம்பரம், படாடோபம், அட்டகாசம், கொடுமை, கூழைக்கும்பிடு இவை இருந்தால் தான் பிழைக்க முடியும்'' என்கிற போலித்தனந்தான் தலை தூக்குகிறது. காரணம் யோசிக்கிற பழக்கம் போய்விட்டது.

சடங்குகள் மட்டும் போதும். சடங்குகள் உணர்த்துகிற நெறிமுறைகள், பண்பாடு ஒன்றும் தேவை இல்லை என்கிற முரட்டுப் புத்திக்குக் காரணமே யோசிக்கிற பழக்கம் இல்லாமல் போனது தான்.

தாய்மொழியில் ஒன்றும் எனக்கு விளங்காது. அன்னிய மொழியில் தான் விளங்கும். எழுதப் படிக்க எதானாலும் அன்னிய மொழியில் தான் முடியும் என்கிற தடித்தனமே அந்த முரட்டுப் புத்தியிலிருந்து வந்ததுதான். யோசிக்கிற பழக்கமே

வேண்டாம் என்கிற தடித்தளம், முரட்டுப் புத்தி இரண்டும் மனசைத் தேய்க்கத் தேய்க்க உடம்புக்குத் தினவெடுத்து விடுகிறது.

''விக்கிரகம் இருந்தால் போதும். அது உணர்த்துகிற — அதற்குப் பின்னால் இருக்கிற மெய்ப்பொருளைப் பற்றிக் கவலை இல்லை'' என்கிற அளவுக்கே மனசை அமுக்கி விடுகிறது உடம்பின் தினவு.

பழிபாவத்துக்கு அஞ்சாமல் கொள்ளையடிக்கவும் அது தூண்டுகிறது. கொள்ளையடித்ததை கோவிலுக்கு கட்டளை என்றும், அறப்பணி என்றும், நன்கொடை என்றும் கொடுக்கவும் வைக்கிறது. எல்லாம் அந்தப் பொல்லாத தடித்தனந்தான்.

நான் என்கிற ஆணவத்தைத்தான் - கொழுப்பைத் தான் இறைவனுக்குக் காணிக்கையாகப் பலி கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்து விட்டால் தப்பான வழியில் சுருட்டி மடக்கப் புத்தி போகாது.

கையில் இருக்கிறதைக் கூட உற்றார் உறவினர், கலைஞர், ஏழை, எளியவர், பண்பாளர் இவர்களைப் பார்த்து அவர்களுக்கு அர்ப்பணிக்க வைக்கும்,

யோசிக்கிற பழக்கம் இருந்தால் ஆணவம் கரையும். பக்தி பெருகும். மற்றவர்களிடம் அன்பும் ஆதரவும் ஓங்கி உயரும். யோசிக்கிற பழக்கம் இல்லாததால் மனிதர்களை வஞ்சிக்கிறான். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாகிய உடன்பிறப்புக்களையே மனித குலத்தையே ஏமாற்றிக் கொள்ளையடிக்கிறான், திருடுகிறான்.

கொள்ளையடித்ததை கோவிலுக்கென்று கல்லுக்கும் சுண்ணாம்புக்கும் எழுதி வைக்கிறான்.

பலாவின் தேனொழுகும் மதுரம் மிக்க சுளையை எறிந்து விட்டுக் கொட்டையைக் கடிக்கிறான். பல்லுடையவே கடிக்கிறான்.

இப்படி எல்லாம் நடக்கிற அலங்கோலத்தைப் பார்க்கிறார் திருமூலர். அவர் உள்ளம் கொதிக்கிறது. கொதிப்பு ஆறி எப்படிச் சிரிப்பும் கும்மாளியுமாய் வருகிறதென்று பாருங்கள்.

படம் ஆடும் கோயில்
　　பகவற்கொன்(று) ஈயில்
நடமாடும் கோயில்
　　நம்பர்க்கங் (கு) ஆகா;
நடமாடும் கோயில்
　　நம்பர்க்கொன்(று) ஈயில்
படமாடும் கோயில்
　　பகவற்க(து) ஆமே.

## (53)

மக்களுக்குச் செய்ய மாட்டேன். கோவிலுக்குத் தான் செய்வேன் என்பது யோசனை இல்லாத காரியம்.

மக்களுக்கு உதவினால் போதும். அவர்களிடம் அன்பாக, ஆதரவாக இருந்தால் போதும். அதுதான் இறைவனுக்கு உகந்த காரியம்.

அதுதான் இறைவனுடைய திருவுள்ளம். ஆனால் மனிதனோ தோசையைத் திருப்பிப் போடுவது போல கடவுளையே திருப்பிப் போட்டு விடுகிறான்.

---

படுமாடும் கோயில் - ஓவியம். கோபுரம், சிலை என்றெல்லாம் கலையழகு நடமாடும் கோவில். பகவன் - கோவிலில் மூர்த்தியாய் எழுந்தருளி இருக்கும் இறைவனுக்கல்ல. இறைவன் பெயருக்கு என்று பொருள். ஒன்று ஈயில் என்றால் ஏதோ ஒன்றைக் கொடுத்தல் என்பதில்லை பொருள். இது சாமி பேருக்கு என்று நேர்ந்து விட்ட தருமம். அதாவது கோவிலுக்கும், சிலைக்கும், கோபுரத்துக்கும்தான் என்னுடைய அறப்பணி என்கிற காரியம்.

அதில் யாருக்கு என்ன பலன். ஒரு புண்ணியமும் இல்லை அதில்.

நடமாடும் கோயில் நம்பர் - மனிதர்கள் தாம் கண்கண்ட தெய்வம். நடமாடும் கோயில் என்றால் அவர்கள்தாம். அந்த மக்களுக்கல்லவா - மக்களை நோக்கி அல்லவா தான தருமம் இருக்க வேண்டும்.

உணவோ, உடையோ, மருந்தோ, வீடோ, பாட்டோ, ஆட்டமோ எல்லாம் அவர்களுக்குத் தானே தேவை. நம்பர் - நம்மவர்.

எல்லாம் யோசிக்கிறதை விட்டதால் வந்த வினை.

பேராசிரியர் ஐன்ஸ்டைன் என்றால் எல்லோருக்கும் புரியும். படித்தவர் படியாதவர் எல்லோருக்குமே அவருடைய பெயர் அத்துபடி.

ஆறு மேதாவிகளின் அனுபவங்கள் என்று ஆறு கட்டுரைகளை கொண்ட ஒரு நூல். அந்நூலின் பெயர் நான் நம்புகிறேன். (ஐபெலீவ்) என்பது.

அதில் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் கட்டுரையும் ஒன்று.

கட்டுரையின் ஒரு பகுதி இப்படி இருக்கிறது. ''இந்த உலகுக்கு பல உதவிகளை நான் (ஐன்ஸ்டைன்) செய்திருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். பாராட்டவும் செய்கிறார்கள்.

''மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்தப் பாராட்டு உண்மை போலத் தெரியும். யோசித்துப் பார்த்தால் தான் அது உண்மை அல்ல என்று விளங்கும்.

''இந்த உலகந்தானே என்னை உருவாக்கியது. வளர்த்தது. காப்பாற்றியது. காப்பாற்றுகிறது.

''என் உடம்பு வளர்வதற்கும் வாழ்வதற்கும் நானா காரணம். யார் யாரோ எங்கெங்கோ இருந்து உண்டாக்கின தவசங்களும் காய்கனிகளும் அல்லவா காரணம்.

''உணவு மாதிரிதானே உடையும். அது பாதுகாப்பது போலத் தானே இதுவும் பாதுகாக்கிறது உடம்பை.

இப்படி என்னைப் பாதுகாக்கும் உடைக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்.

ஒரு இழைப் பஞ்சைக் கூட என்னால் உண்டாக்க முடியுமா.

''அப்படியே தான் என் கல்வியும். எத்தனை எத்தனையோ நூல்களைப் படிக்கிறேன். உண்மையைத் தேடி அலைகிறேன். யோசிக்கிறேன். ஆனந்தபரவசம் அடைகிறேன்.

''உண்மையைத் தேடி யோசிக்க வைத்த நூல்களை நானா எழுதினேன். யார் யாரோ எழுதி வைத்துப் போனவை அவை.

''இப்படியாக உலகின் பல்வேறு சக்திகளும் சேர்ந்து உருவாக்கிய ஒரு பொம்மை தான் நான்''.

''இந்த உலகம் எனக்குச் செய்த உபகாரம் கடல் அளவு என்றால் என் கண்டுபிடிப்புகளும் விளக்கங்களும் ஒரு துளி அளவுகூட இல்லை''.

இப்படிப் போகிறது ஐன்ஸ்டைனின் யோசனை. யோசனை என்றால் இப்படி யோசிப்பது தான். அது தான் யோசனை. உண்மை என்றால் அது இப்படித்தான் எழுந்து வரும்.

பத்தால் பத்தைப் பெருக்கினால் என்ன வரும் தொகை என்று ஒருவர் கேட்கிறார். அவருக்கு நூறு (என்று வரும் தொகை) என்கிறோம். இப்படிச் சொல்வதே உண்மை. இதை விட வேறு என்ன உண்மை இருக்கிறது என்றால் அது போக்கிரித்தனம்.

இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை என்றால் அது சத்திய தரிசனம் ஆகி விடுமா?

அது போலத்தான் நீதிமன்றம் கேட்கிற கேள்விகளுக்கு நடந்ததை நடந்தபடியே சொல்வதும்.

கடவுள் எங்கே இருக்கிறார் என்றால் தூணிலும் இருக்கிறார். துரும்பிலும் இருக்கிறார் என்று கண்ணை மூடிக் கொண்டு சொன்னால் அதற்குப் பெயர் உண்மையா?

இவை எல்லாம் (மனித) இயல்பு. இதற்கு மாறுபட்டால் அது கோணல்.

உண்மை என்றால் அது மற்றவர்களையும் பண்படுத்த வேண்டும். தூய்மையாக்க வேண்டும். யோசிக்க வைக்க வேண்டும். அதுதான் அதன் பலன்.

அப்படிப் பலன் தரும் சொல்தான் சொல். பேச்சென்றால் அதுதான். பலன் தராத பேச்சு பயனில் சொல். அது முன்பின் யோசனை இல்லாதவர்கள் பேசுவது உண்மையோ, உணர்ச்சியோ, அனுபவமோ இல்லாதவர் பேசுகிற பேச்சு அது. மற்றவர்களுக்குப் பிரயோசனப்படாத வெற்றுரையையே உண்மை - நான் கண்ட உண்மை என்று தம்பட்டம் அடிக்கிறவன் மனிதன் இல்லை என்கிறார் குறளாசிரியர்.

அவன் ஒரு பதர். யோசனையோ, அனுபவமோ இல்லாத வெறும் கிலுகிலுப்பை, உமியை விட மட்டமான தூசி, காற்றில் பறக்கும் தூசி என்கிறார் குறளாசிரியர்.

பயனில் சொல் பாராட்டு
வானை மகன் எனல்
மக்கள் பதடி
எனல்

மகன் எனல் என்றால் அவனை மனிதன் என்று நினைத்து விடாதே என்று பொருள். மக்கள் பதடி எனல் என்றால் மனிதரில் அவன் ஒரு பதர் என்பது பொருள்.

இனி, கம்பர், மாணிக்கவாசகர், குறளாசிரியர், ஆண்டாள், பெரியாள்வார், திருமூலர் போன்றவர்கள் உண்மையை ஆவலோடு தேடியவர்கள். அதற்காகவே மாறி மாறி யோசித்தவர்கள். உண்மையைத் தேடுவதிலும் அதற்காக யோசிப்பதிலும் அடங்காத ஒரு வெறி அவர்களுக்கு.

விஞ்ஞானிகள் என்றால் அவர்கள்தாம். மெய்ஞ்ஞானிகள் என்றாலும் அவர்கள்தாம். ஆனாலும் அவர்கள் தங்களை அடியார்கள் - அதாவது பணியாளர்கள் என்றே தெரிவித்தனர். அப்படி ஒரு அருளுள்ளம் அவர்களிடம்.

உண்மையைக் காண வேண்டும் என்கிற ஆவலில் தொடர்ந்து யோசிக்கும் ஞானிகளையே மதித்து உபசரிக்க வேண்டும். அவர்களுடைய தன்னலமற்ற தியாகத்தை நினைந்து நினைந்து உருக வேண்டும். உருகி உருகிக் கரைந்து விட வேண்டும்.

ஞானிகளை மதிக்கிற காரியத்தை எப்படிச் சொல்கிறார் திருமூலர்.

ஞானிகளுக்கு ஒன்றிரண்டு பழங்களைக் கொடுத்தாலே போதும் என்கிறார் திருமூலர். அந்த ஈடுபாட்டில் நமக்கும் புத்தி வந்து விடும் என்பது கருத்து.

ஞானிகள் அடிக்கடி யோசனையில் இறங்கி விடுவார்கள். எப்பொழுதுதான் அவர்கள் யோசனையை விட்டு விலகுவார்கள் என்று சொல்ல முடியாது.

யோசனை வந்து விட்டால் தன்னையே மறந்து விடுவார்கள் ஞானிகள். உள்ளே உள்ளே இறங்கிப் போய்க் கொண்டே இருக்கும் யோசனை.

யோசிக்க யோசிக்க உண்மையானது ஒளி ஊற்றாய்ப் பொங்கி வரும். பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று புதுப்புது வண்ணத்தில் ஒளி வீசி ஜொலித்துக் கொண்டு வரும் உண்மை.

உண்மையோடு உண்மையாய் ஒன்றித் திளைப்பார்கள் அவர்கள். தான் என்கிற நினைப்பே இருக்காது. அதனால் பசி, தாகம் என்று ஒன்றுமே ஏற்படாது.

இதைத்தான் தூக்கம் என்று சொல்வது. ஆழ்துயில், சமாதி நிலை, ஒடுக்கம் என்பதெல்லாம் இதுதான். இரவு பகல் என்று இல்லாமல் பல நாட்கள் தொடர்ந்து கூட இந்த ஒடுக்கத்தில் ஒன்றித் திளைப்பார்கள் ஞானிகள்.

எப்பொழுது அவர்களின் ஞான உறக்கம் கலைகிறதோ, யோசனையிலிருந்து விடுபடுகிறார்களோ அப்பொழுதுதான் அவர்களுக்கு அது பகல். பேச்சு, பழக்கம், பசி, தாகம், தூக்கம், வீடு, வாசல் பற்றிய நினைப்பெல்லாம் அதன் பிறகுதான்.

அப்பொழுது காணிக்கையாக அவர்களிடம் ஒரு வாழைப்பழத்தைக் கொடுத்து வழிபட்டாலே போதும். பெரிய புண்ணியம் அது. ஆயிரம் கட்டளை (அகரம்)களை எழுதிக் கோவிலுக்குக் கொடுப்பதை விட, கும்பாபிஷேகம், திருப்பணி, கொடிமரம், கோபுரம் என்றெல்லாம் உண்டாக்குவதை விட இதுதான் பெரிய புண்ணியம் என்கிறார் திருமூலர்.

இனிப்பாடல்

அகரம் ஆயிரம்
        ஆரியற்(கு) ஈயில்என்?
சிகரம் ஆயிரம்
        செய்து முடிக்கில்என்?

பகரும் ஞானி
பகல்உண் பலத்துக்கு
நிகர்இலை என்பது
நிச்சயம் தானே.

---

அகரம் - விளக்குக்கு என்றும், புஷ்பத்துக்கென்றும், சந்தனத்துக்கென்றும், மண்டகப் படிக்கென்றும் கோவிலுக்கு எழுதி வைக்கும் கட்டளைகள். ஆயிரம் ஈயில் என் பலபடியாக எழுதி வைப்பதுக்கும் உண்மையைக் கண்டு தெளிவதற்கும் என்ன சம்பந்தம்? ஒரு சம்பந்தமும் இல்லை. ஆரியன் - அரியவன், அருமையானவன் அதாவது தத்துவங்களைக் கடந்து காட்சிக்குப் புலனாகாமல் மனதுள் மறைந்து கிடக்கும் பரம்பொருள்.

சிகரம் - கோபுரம், மண்டபம், கலசம், சிலை.

பகரும் ஞானி - எல்லாம் இறைவன் திருவருளே. நாம் என்றோ நம்முடையது என்றோ எதுவும் இல்லை என்கிற உண்மையை வாழ்வின் மூலம் எடுத்துரைக்கும் அருளாளர். பலம் - பழம். நிகர் இலை - ஒரு பழத்துக்கு ஈடாகாது கோவில், கோபுரம், பூஜை, நைவேத்தியம் எதுவும்.

அப்படியானால் என்ன பொருள் - கோவில், வழிபாடு, தேர், திருவிழா எல்லாம் வேண்டியதுதான். ஆனால் அவை எல்லாம் உண்மையை உணர - அதற்காக யோசிக்க, பார்க்க சாளரமாகவே இருக்க வேண்டும். இல்லை என்றால் வெறும் பொம்மலாட்டந்தான்.

குறிப்பு :- விஞ்ஞான உலகுக்கு எத்தனையோ அரிய பெரிய உண்மைகளை நன்கொடையாக வழங்கியவர் நியூட்டன் என்னும் பேராசிரியர்.

தன்னுடைய வீட்டில் ஒரு சிறிய அறையில் இருந்தபடியே அண்டங்கள், அகண்டங்கள், அணுக்கள், பரமாணுக்கள் என்று ஒவ்வொன்றையும் கண்டு தெளிகிறவர் பேராசிரியர் ஐசக் நியூட்டன். எட்டாத வானவெளியில் வீசி எறிந்து பந்தாடப்படுகிற அத்தனை கிரகங்களின் இயக்கம், வேகம், சக்தி எல்லாவற்றையும் அளந்து, நிறுத்துக் கணக்குப் போட்டுக் காட்டி விடுவார். எல்லாம் யோசனையின் மூலந்தான். நுட்பமான கருவிகள் ஒன்றும் கிடையாது.

கணக்குப் போட்டுக் காட்டுகிறார் என்றால் என்ன பொருள்? கண்டு தெளிகிற உண்மையோடு அதன் ஒவ்வொரு அம்சத்தோடும் இரண்டறக் கலந்து தோய்கிறார் என்பது தான் பொருள்.

தன்னைக் கொடுத்து உண்மையை வாங்குபவர் நியூட்டன். ஞானிகள் என்றால் அப்படித்தான். அவர்களை மதிப்பது தானே பக்தி.

பசி, தாகம் இவைகளை மட்டுமல்ல, இடம், காலம் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஒன்றாகக் காண்பதே காட்சி என்று ஒன்றி விடுவார் நியூட்டன்.

ஆராய்ச்சி முடிந்து ஜட உலகத்துக்கு எப்பொழுது வருவார் நியூட்டன் என்று சொல்ல முடியாது. ஆனால் யோசனையில் அவர் ஆழ்ந்திருக்கும் போது அவர் எதிரில் ஒரு தட்டில் சாப்பாடு கொண்டு வந்து வைப்பார்கள்.

தியான மயமான யோசனையிலிருந்து அவர் ஜட உலகத்துக்கு வந்த பிறகு தான் அவருக்குப் பசியும், தாகமும், எதிரில் இருக்கும் உணவை அப்பொழுதுதான் எடுத்து உண்பார் நியூட்டன்.

நியூட்டன் ஆழ்ந்த யோசனையில் இறங்கி பிரபஞ்ச நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு சமயம். அப்பொழுது அவருடைய நண்பர்கள் இருவர் அவரைப் பார்க்க வந்தனர். நியூட்டனுக்கு எதிரே தட்டில் இருந்த உணவை இருவரும் பங்கு போட்டு உண்டனர். உண்டு விட்டு வராந்தாவில் உலாவினர். ஏதோதோ பேசிக் கொண்டே உலாவினர்.

தியானத்திலிருந்து இறங்கி வந்த நியூட்டன் எதிரில் இருக்கிற உணவுத் தட்டைப் பார்த்தார். பார்த்து விட்டுக் கடகட என்று சிரித்தே விட்டார். ஏன் இப்படிச் சிரிக்கிறீர் என்று நியூட்டனிடம் நண்பர்கள் விசாரித்தனர். ''எனக்கு வந்த உணவை ஏற்கனவே நான் சாப்பிட்டு விட்டேன். அந்த ஞாபகம் இல்லாமல் மறுபடியும் தட்டைப் பார்த்து ஏமாந்து போனேன். அதுதான் சிரிப்பாய் வந்தது'' என்றார் நியூட்டன்.

இதைக் கேட்டதும் நண்பர்கள் அசந்து விட்டார்கள். அடடா! தியான நிலையில் இருந்தல்லவா ஆராய்கிறார் நியூட்டன்'' என்று.

## (54)

ஞானிகள் என்றால் அவர்களின் யோசனை என்றால் அப்படித்தான். யோசனை என்பது உண்மையைத் தேடுவதாக இருக்க வேண்டும். பிரபஞ்சவெளியில் சுற்றிச் சுழலும் வீடுகள் (கிரகங்கள்) அரண்மனைகள் (நட்சத்திரங்கள்) ஆனாலும் சரி,

சின்னஞ்சிறிய புல்லானாலும் சரி எதைப் பற்றி யோசித்தாலும் உண்மையைக் காண வேண்டும் என்கிற ஆவலும் துடிப்புமே இருக்க வேண்டும்.

அப்படியானால் அதிசயந்தானே வரும். அதிசயத்தில் நான் என்பது கரையத்தானே செய்யும்.

நான் என்பதைக் கரைய வைப்பதற்கு மாறாக அதைக் கொழுக்க வைக்கிற முறையில் போய் விடக்கூடாது யோசனை.

மனிதர்களில் தான் எத்தனை விதம். அவர்களுடைய பேச்சு, செயல் முதலியவற்றில் தான் எத்தனை எத்தனை சாயல்கள், போக்குகள்.

ஒன்றைப் பற்றியாவது ஏன், எப்படி என்று யோசித்தாலே போதுமே.

ஒரு துளி தண்ணீருக்குள் எத்தனை அணுக்கள் சேர்ந்து நின்று சுழல்கின்றன. இந்த அணுக்கள் தானே தீப்பொறியிலும் நிறைந்து நின்று சுழல்கின்றன. என்ன வேடிக்கை இது, என்ன விளையாட்டு இது என்று யோசித்தால் சுயநலம் நிற்குமா? ஓடி விடும் சுயநலம்.

தண்ணீரைப் பதப்படுத்திக் குடம் குடமாக விற்றால் எவ்வளவு பணம் வரும். அவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு யார் யாரை மிரட்டலாம். யார் யாரை வசியப்படுத்தலாம். யார் யாரை ஒழித்துக் கட்டலாம் என்று யோசனை போனால் தன்னலம் தடிக்கத்தான் செய்யும்.

இதயத் தமனியை நோக்கிப் பாய்கிற ரத்த ஓட்டத்தை எப்படிக் கொழுப்பானது தடுத்து நிறுத்துகிறதோ, அப்படியே சிந்தனையை நோக்கி ஓடி வருகிற இறையருளை ஆணவக் கொழுப்பு தடுத்து நிறுத்தி விடும்.

ஆனால் ஒன்று, இந்தத் தண்ணீரைப் பதப்படுத்தி ஆயிரக் கணக்கானவர்கள் தாகத்தைத் தீர்க்கலாமே, பயிர் பச்சைகளின் பசியைப் போக்கலாமே, பூமாதேவியைக் குளிர வைக்கலாமே, உயிரினங்களையும் குளிர வைக்கலாமே என்று யோசித்தால் அதில் சுயநலம் தலைகாட்டாது. அப்படியானால் அதுவும் ஆணவத்தை - கொழுப்பை அழித்தொழிக்கவே செய்யும்.

இது சம்பந்தமாக ஒரு சம்பவத்தைச் சொன்னால் விஷயம் தெளிவுபடும்.

தென்னாப்பிரிக்காவில் ரயிலில் முதல் வகுப்பில் பிராயாணம் செய்தார் காந்தி. இரவு நேரம். பனி கொட்டுகிறது. நடுநசியில் ஒரு நிலையத்தில் ரயில் வந்து நின்றது. காந்தி இருந்த பெட்டியில் ஒரு ஆங்கில கனவான் ஏறினார். காந்தியைப் பார்த்து நீர் வேறு இடத்துக்குப் போய் விடும் என்றார் துரை.

ஏன் என்றார் காந்தி.

ஆங்கிலேயர்களுக்குத்தான் முதல் வகுப்பு. கறுப்பர்களாகிய உங்களுடன் நாங்கள் பிரயாணம் செய்யக் கூடாது என்றார் துரை.

அப்படியானால் நீங்கள் வேறு பெட்டிக்குப் போகலாம் அல்லவா என்றார் காந்தி.

அது முடியாது வெள்ளையர் வந்தால் கறுப்பர் இறங்கி ஓட வேண்டும் என்றார் துரை. நான் பணம் கொடுத்து முதல் வகுப்பு டிக்கெட் எடுத்திக்கிறேன். இதில் நான் பிரயாணம் செய்ய எனக்கு அனுமதி அளித்திருக்கிறது ரயில் நிர்வாகம். அதனால் நான் என் இடத்தில் தான் இருப்பேன் என்றார் காந்தி.

துரைக்குக் கோபம் வந்து விட்டது. காந்தியின் பெட்டி படுக்கையை எடுத்து நடைபாதையில் வீசினார். காந்தியையும் பிடரியில் கை போட்டு வெளியே தள்ளி விட்டார்.

கும்மிருட்டு, கொட்டும் பனி, முன்பின் தெரியாத இடத்தில் அநாதை போல நின்றார் காந்தி.

அப்போது என்ன யோசனை வந்தது அவருக்கு.

ஒரு பார் அட்லா ஆகிய எனக்கே இந்தக் கதி என்றால் சாதாரண மக்களின் கதி இந்த நாட்டில் என்னாவது. அந்தச் சாதாரண மக்களின் அவலத்தை நீக்க வேண்டும். யோசித்து எப்படி எப்படிப் பணியாற்ற வேண்டுமோ அப்படி அப்படிப் பணியாற்ற வேண்டும். அதுதான் எனக்கு வாழ்க்கை.

இப்படி வந்தது காந்திக்கு யோசனை. அதுதான் தன்னலம் இல்லாத யோசனை. நான் யார்? பார் அட்லா. இந்த

வெள்ளைக்காரன் மாதிரி ஆயிரம் வெள்ளைக்காரன்களின் வழக்கை விசாரிக்கத் தகுதி பெற்ற பார் அட்லா. என்னை இப்படி அவமானப்படுத்திய அவனை விட மாட்டேன். எப்படி எப்படி அவனுககுப் பாடம் புகட்ட வேண்டுமோ அப்படி அப்படிப் பாடம் புகட்டுவேன். அதுதான் எனக்கு வேலை.

இப்படி யோசனை வந்திருந்தால் அது ஆணவம். கொழுப்பு.

காந்திக்கு வந்த யோசனையிலும் நான் என்பது இருக்கிறது. ஆனால் அது மற்றவர்களுக்காக இருக்கிறது.

காந்திக்கு வந்த யோசனைக்கு நேர் எதிரான யோசனையில் இருக்கிற நான் என்பதிலே நூற்றுக்கு நூறு தன்னலம் மட்டுமே வெறியாட்டம் போடுகிறது.

உண்மையை நோக்கி எழுகிற யோசனையில் தன்னலம் இருக்காது. அதுக்குத்தான் உண்மை என்று பெயர்.

தன்னலம் குறித்து எழுகிற யோசனைகளில் பொய்தான் இருக்கும். அதுக்குத்தான் ஆணவம் என்று பெயர்.

கொழுப்பு, இருட்டு, களிம்பு, மலம், மாயை என்பனவெல்லாம் இந்தப் பொய்யின் புனை பெயர்கள்தாம்.

பொய்யை மூட்டை கட்டி வைத்துக் கொண்டு கடவுளைப் பார்க்க முடியுமா? இருட்டுக்குள் என்ன தெரியும்.

''பொய் வளரும் நெஞ்சினார்கள்

காணாத காட்சியை'' என்று

எவ்வளவு தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

இனி உண்மைதான் ஞானம். ஆனந்தமும் அதுதான் என்று எதைப் பற்றியும் யோசனை பண்ணலாம். உடம்பைப் பற்றியும், உடம்பில் நின்று செயல்படும் தத்துவங்கள் பற்றியும் யோசிக்கலாம். ஏன், உயிரைப் பற்றியும் யோசனை செய்து பார்க்கலாம்.

யோசிக்க யோசிக்க உண்மை தெரியும். ஒரே கடவுள் தான் அத்தனையிலும் உயிராக நிறைந்திருக்கிறார் என்கிற உண்மையே விளங்கி விடும்.

பாடல்

சீவன் எனச்சிவன்
　　என்ன வே(று) இல்லை
சீவ னார்சிவ
　　னாரை அறியார்
சீவ னார்சிவ
　　னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ
　　னாய்இட் டிருப்பரே.

## (55)

உயிர் தான் கடவுள். கடவுள் தான் உயிர். இரண்டும் ஒன்றுதான்.

நிலத்தில் நடமாடும் பொழுது நீர், நிலத்தை விட்டு கொஞ்சம் மேலே வானில் நடமாடும் பொழுது மேகம். அது கொட்டும் போது மழை. மலையிலிருந்து அதுவே குதிக்கும் போது அருவி. அலைகளாய் எழுந்து கூத்தாடுகிற பொழுது கடல்.

நீர் என்கிற ஒன்று பல பெயர் பெறத்தானே செய்கிறது. அப்படித்தான் கடவுளும். உடம்பு, உயிர், மனம், உணர்ச்சி என்றெல்லாம் பெயர் கடவுளுக்கு.

நாமும் கடவுளும் ஒன்றுதான் என்கிற உண்மை உயிருக்கு வர மாட்டேன் என்கிறது. வந்து விட்டால் போதும். எங்கும் நிறைந்த கடவுள் தத்துவந்தான் உயிர் என்பது தெரியும்.

---

சீவன் என்றால் உயிர். சிவன் என்றால் இறைவன். அதாவது கடவுள் தத்துவம். இடைவெளி இல்லாமல் எங்கும் நிறைந்தது கடவுள் தத்துவம். எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்து நிற்பதால் கடவுள் தத்துவம் தனியாகப் புலனாகாது கண்ணுக்கு.

குறிப்பு :- கடவுள் தத்துவம் அறிவுமயமாக - ஆனந்த மயமாக இருக்கிறது. அதனால் உணர்ச்சிமயமாக மனம் என்கிற தத்துவமாக உருவெடுக்கிறது. அப்படியே உடலாக எழுந்து வருகிறது. கடலிலிருந்து அலைகள் எழுந்து வருவது போலவே மனமாகவும், தொடர்ந்து உடலாகவும் எழுந்து வருகிறது கடவுள் தத்துவம்.

உயிரை எந்த வகையிலும் பார்க்க முடியாது. அதற்கு அணு அளவு வடிவம் கூட இல்லை. வடிவம் என்று உயிருக்கு உண்டென்றால் அது நம்முடைய உச்சி முதல் உள்ளங்கால் வரை உள்ள உடம்பு முழுவதுந்தான். உயிரின் வடிவம் உடம்புதான். மற்றப்படி தனியான வடிவம் அதற்கு இல்லை.

உயிர்தான் உடம்பாக வாட்டசாட்டமாக நிமிர்ந்து எழுந்திருக்கிறது என்று திருமூலர் போன்ற ஞானிகள் வளைத்து வளைத்துச் சொல்லத்தான் செய்கிறார்கள். ஆனாலும் கேட்கமாட்டேன் என்கிறது நம்மனம். கேட்டாலும் நம்ப மாட்டேன்கிறது. திருப்திப்பட மாட்டேன் என்கிறது.

உயிர் என்று தனியாக ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அது உடம்புக்குள் பதுங்கிக் கிடக்கிறது. புற்றுக்குள் நல்ல பாம்பு கிடப்பது போல் உடம்புக்குள் ஒளிந்து கிடக்கிறது. அதைப் பார்க்க முடியும். பார்க்கப் போகிறேன். பார்க்காமல் விட மாட்டேன் என்றெல்லாம் அடம் பிடிக்கிறார்கள் பலர்.

அதற்காக யோகங்களை ஒன்று மாற்றி ஒன்று என்று செய்து கொண்டிருக்கிறார்கள். மூலாதாரம் என்கிறார்கள். சகஷ்ரதளம் என்கிறார்கள். குண்டலினியை எழுப்பி இங்கிருந்து அதை அங்கு கொண்டு போனால் உயிர் கண்முன் வந்து நிற்கும் என்கிறார்கள்.

அப்படி வந்து நிற்பதை அவர் பார்த்தார் இவர் பார்த்தார் என்றும் சொல்கிறார்கள்.

அது மட்டுமா? உயிரானது பல வடிவங்களில் உள்ளது. ஒன்றுக்குள் ஒன்றாக உள்ளது. பிராணன் என்றும், சீவன் என்றும், ஆத்மா என்றும் தனித்தனியாக உள்ளது உயிர் என்றும் அடித்துச் சொல்கிறார்கள்.

பார்வையை ஒருமுகப்படுத்தி இரண்டு புருவங்களுக்கும் இடையே நெற்றியின் நடுப்புள்ளியில் நிறுத்தினால் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் என்று ஒவ்வொரு வண்ணத்தின் உயிரின் ஒவ்வொரு பிரிவும் எழுந்து வந்து நிற்கும் என்றும் சொல்கிறார்கள்.

உயிரைக் கண்டேன், கண்டுபிடிப்பேன் என்று நாலுகால்ப் பாய்ச்சலில் அலைகிற கூட்டத்தை பார்த்து திருமூலர் போன்ற ஞானிகள் சிரிக்கிறார்கள்.

சிவவாக்கியர் என்னும் ஞானியோ கொஞ்சம் கோபக்காரர். தாஜாப் பண்ணிப் பேசுகிற பழக்கம் அவரிடம் கிடையாது. கன்னத்தில் அறைந்தது போல இருக்கும் அவர் பேச்சு.

இது சம்பந்தமாக அவர் என்ன சொல்கிறார். சோதி வடிவமானது பரம்பொருள். பிரபஞ்சவெளியே அதுதான் அண்டபிண்ட சராசரம் அவ்வளவும் அதுதான். உடம்பு, உயிர், உணர்ச்சி எல்லாம் அதுதான். வேறு எதுவும் இல்லை. அணுவுக்குள் அணுவாய், பரமாணுக்குள் பரமாணுவாய் இறுதி இல்லாதபடி எங்கும் புகுந்து நிறைந்திருக்கிறது அந்த ஜோதி.

விஷயம் இப்படி இருக்க நான் உயிரைக் கண்டு பிடிக்கிறேன் என்று அலைகிறார்களே சிலர். என்ன பரிதாபம் இது என்று முடிக்கிறார் சிவவாக்கியர்.

இனி அவர் பாடல்

ஓடி ஓடி
ஓடி ஓடி
உட்புகுந்த
ஜோதியை
நாடி நாடி
நாடி நாடி
நாட்களும்
கழிந்து போய்,
வாடி வாடி
வாடி வாடி
மாண்டு போன
மாந்தர் கள்
கோடி கோடி
கோடி கோடி
எண்ணி றந்த
கோடி யே!

உயிரைக் கண்டுபிடிக்கிறேன் கண்டுபிடிக்கிறேன் என்று உயிரைத் தான் விட்டார்கள். அவ்வளவு பேரும்! பைத்தியக்கார

ஜென்மங்கள்!! என்று சாட்டை கொண்டே அடிக்கிறார். சிவவாக்கியம் வார்த்தைகளாலாகிய அவர் சாட்டையோ தேள்க் கொடுக்கால் செய்த சாட்டை போல தோலையே உரித்து விடுகிறது. அப்படி எல்லாம் காரசாரமான முறையில் சாட்டையடி கொடுக்க மாட்டார் திருமூலர்.

வாழைப்பழத்தில் ஊசி இறக்குகிற மாதிரி நயமாக, சொகுசாக, சிரிக்கச் சிரிக்கச் சொல்லி விளக்குவார் திருமூலர்.

உயிரை நேருக்கு நேராகப் பார்த்து விடுகிறேன். கையில் எடுத்துக் காட்டுவது போல அதை மூக்கோடும் விழியோடுமே பார்த்து விடுகிறேன் என்று முரண்டு பிடிக்கிறவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வர.

சாட்டையடி கொடுத்தால் துடைத்துப் போட்டு விடுகிறார்கள். அதனால் ஒரு கணக்கைப் போட்டு மாயக் கணக்கையே போட்டு அவர்களை வசியம்பண்ணுகிறார் திருமூலர்.

எப்படி

ஐயா, பெரியவர்களே! ஆராய்ச்சிச் சுரங்கங்களே! உயிரையா தேடுகிறீர்கள். அது நுட்பத்துக்கும் நுட்பமாச்சே'' என்கிறார் திருமூலர்.

அப்படி என்ன நுட்பம். நுட்பத்துக்கும் நுட்பம் என்று இடக்காகக் கேட்கிறார்கள் சித்தாந்த வேதாந்த சமுத்திரங்கள்.

என்ன நுட்பமா? பசுவின் ரோமம் ஒன்றை பிடுங்கி எடுங்கள். அதை ஆயிரம் கோடி பாகமாகச் சிதையுங்கள். ரோமத்தின் நீளத்தை அல்ல. அதன் கன பரிமாணத்தையே ஆயிரம் கோடி என்று பகுக்க வேண்டும். அப்படிப் பகுத்த ஒரு பாகத்தின் கன பரிமாணந்தான் உயிரின் கனபரிமாணம்.

உரோமத்தையே சரியாகப் பார்க்க முடியாது வயதான கண்ணால். அப்படி இருக்க ஆயிரம் கோடி என்று அதைப் பகுத்த பகுதியை எப்படிப் பார்க்க முடியும்.

நீங்களே யோசித்துப் பாருங்கள் என்று நய உரை பகர்கிறார் திருமூலர்.

இதோ பாடல்

மேவிய சீவன்
வடிவது சொல்லிடின்
கோவின் மயிர்ஒன்று
நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது
ஆயிரம் ஆயினால்;
ஆவியின் கூறுநூ(று)
ஆயிரத் தொன்றே!

---

மேவிய சீவன் - இடைவெளி இல்லாமல் எங்கும் நிறைந்திருக்கின்ற உயிர். அதாவது இறைவனுடைய தோற்றமாகிய உயிர். வடிவது சொல்லிடன் (அதற்கு வடிவம் இல்லை. அது பற்றிச் சொல்ல வாய்ப்பில்லை. ஆனாலும் வடிவம் எப்படி எப்படி என்று நச்சரிக்கிறீர்கள். அதனால் சொல்லித் தொலைக்க வேண்டி இருக்கிறது. கோவின் மயிர் ஒன்று - பசுவின் ரோமம் ஒன்றை எடுங்கள். கோ-பசு. நூறுடன் கூறிட்டு அதை நூறு பங்கு வையுங்கள். மேவிய கூறு அது அப்படி வைத்த பாகம் நூற்றில் ஒன்றை - ஆயிரம் ஆயினால் - ஆயிரம் பாகமாகப் பிரித்தால் என்ன வரும் பசு மயிர் ஒன்றில் லட்சத்தில் ஒரு பாகம் வரும். அதோடு முடியுமா விஷயம். ஆவியின் கூறு- உயிரின் உருவம் - கன பரிமாணம் என்ன தெரியுமா? அந்த லட்சத்தில் ஒரு பாகத்தை - நூறாயிரத்து ஒன்று மறுபடியும் லட்சம் பாகம் வைக்க வேண்டும். லட்சம் X லட்சம் என்ன ஆகும்? ஆயிரம் கோடி, ஒரு மயிரின் ஆயிரம் கோடியில் ஒன்று தான் ஆவியின் கூறு உயிரின் அளவு.

குறிப்பு :- லட்சம் பத்து லட்சம் கோடி என்பன பிர்மாண்டமானது. பிர்மாண்டத்தில் பிர்மாண்டம் அது. ஆனாலும் தமிழ்வார்த்தைகளுக்குள் சலங்கை கட்டித் தாளம் போட்டு நடனமே ஆடுகிறது. உள்ளங்கை அகல இடத்துக்குள்ளேயே நான்கு வரிகளுக்குள்ளேயே ஆடுகிறது நடனம்.

கிறுக்கை எப்படியாவது வழிக்குக் கொண்டு வர வேண்டுமே என்று ஒரே ஆத்திரம் திருமூலருக்கு.

எல்லையற்ற பரிவுணர்ச்சியிலிருந்து பிறந்த ஆத்திரம் அது.

## (56)

லட்சம், கோடி, லட்சம் கோடி என்றெல்லாம் சொன்னால் கதை ஒப்பேறாது. மிக மிகப் பொடியான அணுவைப் போட்டுப் பார்ப்போம் என்று நினைக்கிறார் திருமூலர்.

அணு, அணுவுக்குள் அணு என்று அடித்துச் சொன்னால் தான் இவர்களை மடக்க முடியும் என்றும் நினைக்கிறார் திருமூலர்.

பின்னத்தில் வைத்த சின்னத்தையே 'பூ' இவ்வளவுதானா என்று ஊதித் தள்ளியவர்களுக்கு, அணு, அணுவுள் அணு எல்லாம் எம்மாத்திரம்.

ஆனாலும் திருமூலர் புதிதாக அணுக் கணக்கைப் போட்டுக் காட்டுகிறார்.

எப்படி

உயிரை நீங்கள் சிவன் என்று சொன்னாலும் சரி, சீவன் என்று சொன்னாலும் சரி.

எதுவானாலும் அதற்கு ஒரு குறிப்பிட்ட உருவம் இல்லை.

காரணம் எல்லா உருவமும் அதுதான். பிரபஞ்சம் முழுவதும் அது நிறைந்திருக்கிறது. அணுவுக்குள் பரமாணுவாய், பரமாணுவுக்குள்ளும் நுண்ணணுவாய் நிறைந்து ஒளிந்து கிடக்கிறது.

அப்படிக் கிடக்கிறது கடவுள் தத்துவம். அந்தக் கடவுள் தத்துவந்தானே உயிர்.

உயிரைப் பார்க்க வேண்டும் என்றால் எறும்பு முதல் யானை வரை, அறுகம்புல்லிருந்து அண்ட கோளம் வரை எதைப் பார்த்தாலும் அவன் தானே. அதை விட்டு விட்டு அவனை நான் தனியாகப் பார்க்க வேண்டும் என்பது என்ன ஞாயம். ஆரவாரம் மிக்க டம்பம் அது.

இனிப்பாடல்

அணுவில் அவனும்
அவனுள் அணுவும்

கணுவற நின்ற
கலப்ப(து) உணரார்;
இணைஇலி ஈசன்
அவன் எங்கும் ஆகி
தணவற நின்றான்
சராசரம் தானே.

## (57)

எப்படியாவது இந்த புத்தகப் புழுக்களை — யோசிக்கிறதே இல்லாமல் ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று வெறி பிடித்து அலையும் தத்துவ (சாஷ்திர)க்குப்பைகளை மனுசர்கள் ஆக்கி விட வேண்டுமே என்று படாதபாடு பட்டார் திருமூலர்.

எதுவுமே பிரயோசனப்படவில்லை. கணித முறையைக் கையாண்டு பார்த்தார். பௌதீக முறையைக் கையாண்டு பார்த்தார். விஞ்ஞான மெய்ஞ்ஞான முறை எல்லாவற்றையுமே உபயோகித்துப் பார்த்தார்.

இம்மி அளவு கூட அசையவிலலை வேதாந்த சித்தாந்தச் சுரங்கங்கள்.

கூர்மை மிக்க வலுவான கடப்பாறைக்கே மசியாத கரும்பாறை சாதாரணச் சுத்தியலுக்குக் குழையவா செய்யும்.

செத்து மடிந்தாலும் மடிவோமே தவிர எங்கள் கொள்கையிலிருந்து அணுவளவு கூட நகர மாட்டோம் என்னும்

---

அணுவில் அவனும் - அணுவில் அணுவாய் நிறைந்திருக்கிறான் இறைவன். அவனுள் அணுவும் அப்படியானால் அணுக்களும் இறைவன் மயம் என்று தானே சொல்ல வேண்டும்.

கணு அற நின்ற கலப்பு அது உணரார். அணு அணுவாக இறைவனும் இறைமயமாக அணுவும் ஒன்றாய் நிற்பது பற்றி யோசிக்கமாட்டேன் என்கிறார்களே மனிதர்கள். யோசிப்பவர்களுக்கல்லவா அண்ட பிண்ட சராசரம் விளைந்ததும் அவ்வளவுமாக அவன் நிறைந்திருப்பதும் தெரியும். கணு அற - அது இது என்கிற வேற்றுமை இல்லாதபடி. தணவு அற நின்றான் - தேடுவதற்கு வேறொன்றும் இல்லாதபடி தான் ஒருவனே நிறைந்து நிற்கிறான். இணைஇலி ஈசன் - அவனுக்கு இணையாகச் சொல்ல வேறு என்ன இருக்கிறது. ஈசன் - ஏக நாயகனாகிய பெருமான்.

சண்டித்தனத்திலேயே இறங்கி விட்டார்கள் பண்டித சிரோமணிகள்.

இதுவரை நடத்தி வந்த வியாபாரத்தை 'டக்' என்று நிறுத்தி விட்டால் வேறு வழி? பிழைப்பு என்ன ஆவது? அதை விட அந்தஷ்து என்னாவது? சூறாவளிக் காற்றில் இலவம்பஞ்சு பறப்பது போலப் பறந்தோடி விடுமே கட்டி வளர்த்த அந்தஷ்து!

கடவுள்த் தத்துவம் ஒன்றுதான். அதுதான் உண்மை. மற்றப்படி உடம்பு, உயிர், உணர்ச்சி எல்லாம் பரம் பொருளின் நாடகந்தான். நடனந்தான் என்னும் உண்மைக்கு இணங்கி விட்டால் கதி என்னாவது!

கடவுள் தனி, உயிர் தனி, உடம்பு தனி, உணர்ச்சி தனி, நானும் தனி நீயும் தனி என்று சொல்லி ஒவ்வொன்றுக்கும் இயல்பு இப்படி தனித்தன்மை இப்படி என்றெல்லாம் வியாக்யானம் செய்து வந்த பொய்யை அப்படி எளிதில் விட்டு விட முடியாது.

உதறி எறிந்தால் அது விடவா செய்யும்.

ஐம்பது வருடங்களுக்கு முன் 1949-50 ல் நெல்லை மாவட்டத்தில் கழுகுமலை என்னும் ஊரில் உயர் நிலைப் பள்ளியை ஏற்படுத்தினார்கள் அன்றைய ஜில்லா போர்டார்.

கழுகு மலை சிறிய பட்டியும் இல்லை. பெரிய நகரும் இல்லை. நடுத்தரமான ஊர். சங்கரன் கோவில் கோவில் பட்டி நெடுஞ்சாலையில் அமைந்த ஊர் கழுகுமலை, அங்குள்ள முருகன் கோவிலும், கோவிலில் நடக்கும் திருவிழாவும் சிறப்பானவை.

உயர்நிலைப்பள்ளி ஆரம்பித்த பொழுதே தமிழாசிரியராக அங்கு பணிபுரியச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

பேருந்து நிலையத்தை ஒட்டி ஒரு சாப்பாட்டுக் கடை, அய்யாப்பிள்ளை என்பவர் அதை நடத்தி வந்தார். இந்த நாள் போல லாபம் என்ற பெயரில் கொள்ளையடிக்கிற பழக்கம் அப்பொழுது இல்லை. அய்யாப்பிள்ளையும் அவர் குடும்பமும் பாடுபட்டது. பட்டபாட்டுக்கு வருமானம் என்ன? குடும்பத்தை நடத்துவதற்கு உரிய வசதி! அவ்வளவுதான்.

சமையலும் சாப்பாடும் தேவார்மிதர்மாக இருக்கும். மூன்று வேளை உணவுக்கு மாதம் ஒன்றுக்கே ரூபாய் பன்னிரண்டு தான்.

ஆசிரியர்களாகிய நாங்கள் எட்டுப் பேர் அங்குதான் சாப்பிட்டோம்.

கடலை எண்ணெய்யில் தான் அவியல் பொரியல், கூட்டு, பச்சடி, சாம்பார், ரசம் எல்லாம் தாளிதம் ஆகும் அங்கு.

நல்லெண்ணெய்யை விட ஒரு பக்காவுக்கு (இன்றைய ஒன்றரை லிட்டருக்கு) ஒரு அணாதான் குறைவு கடலெண்ணெய் விலை.

அந்த வித்தியாசந்தானே அய்யாப்பிள்ளையின் குடும்பத் தைப் பாதுகாக்கும் வருமானம்.

ஒரு சமயம் கடலெண்ணெய் பக்காவுக்கு இரண்டணா கூடி விட்டது. நல்லெண்ணெய் விலை அந்த அளவுக்குக் குறைந்து விட்டது.

இந்த மாறுபட்ட விலை ஒரு ஆண்டுக்கும் மேலே தொடர்ந்து நீடித்தது.

ஒரு நாள் அய்யாப் பிள்ளையிடம் நான் கேட்டேன். ''அண்ணாச்சி நல்லெண்ணெய் விலை குறைந்து விட்டதே தாளிதம் முதலிவற்றுக்கு நல்லெண்ணெய்யை உபயோகித்தால் என்ன'' என்று.

மின்சாரத்தில் கை வைத்தவர் போல் பதறி விட்டார் அய்யாபிள்ளை. ''தம்பி! நல்லெண்ணெய் விலை இறக்கம் நிரந்தரம் இல்லை. பளிச்சென்று பழையபடி ஏறத்தான் செய்யும். அது தெரியாமல் நாம் நல்லெண்ணெயில் பழகி விட்டால் பிறகு அதை விட்டு மீள முடியாது. நஷ்டப்பட்டு விடும். கடையை மூட வேண்டியது தான்'' என்று பதட்டதோடு விளக்கமும் கொடுத்தார். உலகம் முழுவதும் அய்யாப் பிள்ளை கதைதான்.

எண்ணெயுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையே தள்ளி வைக்க முடியாமல் அதையே பிடித்துத் தொங்குகிறது வாழ்க்கை. அப்படி இருக்க கற்ற கல்வியில் கேட்ட கேள்வியில், பேசிய பேச்சில், எழுதிய எழுத்தில் உண்மைக்குப் புறம்பானவை கிடக்கின்றன என்று தெரிந்தாலும் விட முடியுமா அவற்றை.

குண்டுக் கட்டாய் மனிதனைக் கட்டிப் போட்டு தன் கைக்குள் வைத்துக் கொண்டு பேயாட்டாம் ஆடுகிறது பொய். சிந்தனை இல்லாத கல்விப் பொய். ஆராய்ச்சிப் பொய்.

ஆனாலும் இவர்களை விட மாட்டேன் என்கிறார் திருமூலர். எப்படியாவது இவர்களுக்கு உண்மையை உணர வைப்பேன் என்கிறார்.

கொடாக் கண்டன் விடாக்கண்டன் கதைதான்.

திருமூலர் சொல்கிறார்.

உயிரைப் பார்க்க வேண்டுமா? கடவுள் மூலமாகத் தான் பார்க்கலாம் உயிரை!

அணுவுக்குள் அணுவுக்குள் அணுவுக்குள் அணுவாய் இருக்கிறான் பெருமான்.

ஒரு துளி நீரில் பத்தாயிரம் கோடியில் ஒரு பாகந்தான் அணு என்று வைத்துக் கொள்வோம். அந்த அணுவைப் பத்தாயிரம் கோடி பகுதி ஆக்கினால் ஒரே சக்தி மயமாகும். இறுதி இல்லாத படி பேரண்டம் முழுவதும் நிறைந்திருக்கும் அந்த சக்தி. அதுதான் பரம்பொருள்.

அந்தப் பரம்பொருளைப் பார்த்து விட்டால் உயிரைப் பார்த்து விடலாம் என்று ஒரு சிமிட்டுச் சிமிட்டிக் கண்ணடித்துச் சொல்கிறார் திருமூலர்.

அணு பற்றிய கணக்கை அப்படித் திருப்பிப் போட்டு காட்டுகிறார் திருமூலர். தோசையைத் திருப்பிப் போடுவது போல லாவகமாக அணுக்கணக்கைத் திருப்பிப் போட்டுக் காட்டுகிறது தமிழ்.

இதோ பாடல்

அணுவில் அணுவினை
    ஆதிப்பி ரானை
அணுவில் அணுவை
    ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை
    அணுகவல் லார்கட்(கு)
அணுவில் அணுவை
    அணுகலும் ஆமே.

## (58)

உடம்பு, உயிர், உணர்ச்சி, அண்டம், பிண்டம், சரம், அசரம் எல்லாம் ஒன்றுதான். பிரபஞ்சவெளிதான். ஒரே சக்திமயமான பிரபஞ்ச வெளிதான். அந்தவெளியைத்தான் ஆதிப்பிரான் என்கிறோம்.

அந்தப் பிரபஞ்சமே ஒரு அணுவுக்குள் இருக்கிறது. அணுவுக்குள் என்று சொல்வது கூடச் சரியில்லை. அணுவுக்குள் அணுவான பரமாணுக்குள்ளேயே பிரபஞ்சம் முழுவதும் அமர்ந் திருக்கிறது. இதைத்தான். ''அணுவில்'' அணுவினை ஆதிப் பிரானை'' என்கிறார் திருமூலர்.

சகலமும் இறைவன் மயம். கடவுள் தத்துவம் தான். மற்றவை எல்லாம் அதன் தோற்றந்தான்.

உண்மை என்றால் இதுதான் உண்மை. தெரிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ யாதொரு சிரமமும் இல்லாதது உண்மை. அப்படி எளிமைக்கும் எளிமையாய் இருக்கிறது உண்மை.

ஆனாலும் நான் வேறு கடவுள் வேறு என்கிற பொய் எப்படியோ மண்டைக்குள் புகுந்து விட்டது. ஆணியடித்து படத்தைத் தொங்கப் போட்டது மாதிரி மூளையை பற்றித் தொங்கிக் கொண்டே இருக்கிறது அந்தப் பொய்.

படம் ஆடுவது போல அப்படியும் இப்படியும் துள்ளித் துள்ளி ஆடுகிறது அந்தப் பொய்.

ஏடு, எழுத்தாணி, குரு, உபதேசம் என்று என்னென்னவோ எல்லாம் ஒன்று சேர்ந்தல்லவா கைலாகு கொடுத்து அழைத்துக் கொண்டு மூளையில் ஒப்படைத்து விட்டது பொய்யை.

சும்மா இருக்குமா அது? கடவுளை எங்கே, உயிரை எங்கே என்று கேட்டுமிரட்டுகிறது. காட்டுக்கூப்பாடு போட்டே கேட்டு மிரட்டுகிறது.

உச்சிக்கே இப்படிப் பித்தம் ஏறி விட்டால் எந்த மருந்துக்குக் கட்டுப்படும் நோய். ஒரு மருந்தும் வேலை செய்யாது.

பித்தம் இறங்க வேண்டும் என்றால் அவனைத் தூங்கப் போட வேண்டும்.

திருமூலரும் அப்படித் தூங்கப் போடுகிறார். எங்கே கடவுளை; எங்கே உயிரை என்று அதட்டுகிறவர்களை வார்த்தைகளையே மந்திரமாகப் போட்டு உறங்க வைத்து விடுகிறார் திருமூலர்.

அணுவுக்குள் இருக்கிற பரமாணுவையே ஆயிரம், லட்சம், கோடி என்று பகுக்க வேண்டும். அப்படிப் பகுக்கப்பட்ட பாகத்தைக் கண் கொண்டு பார்க்க வேண்டும்.

அப்பனே உன்னால் அப்படிப் பகுக்க முடியுமா அணுவை, பகுத்த பாகத்தைக் கண் கொண்டு பார்க்க முடியுமா? முடியும் என்றால் இறங்கு செயலில். கடவுளைக் கண் குளிர பார்க்கலாம்.

இதை உணர்த்துகிறது

அணுவில் அணுவை
ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை
அணுக வல்லார்க்கு
அணுவில் அணுவை
அணுகலும் ஆமே

என்பது.

அணு என்கிற சின்னஞ்சிறிய இரண்டெழுத்துள் பைத்தியத்தையே தெளிய வைக்கிற மருந்தையே தூக்க மருந்தைச் சேர்த்து வைத்து விளையாடுகிறது தமிழ்.

அணுவில் அணுவை - பரமாணுவை. ஆயிரம் கூறிட்டு - எண்ணற்ற அளவில் பிளந்து. ஆயிரம் என்றால் அளவற்றன என்பது கருத்து. அணுவில் அணுவை - அணுவுள் இருக்கும் அற்புதத்தை. அணுக வல்லார்கட்கு - தரிசிக்கும் அருள் பெற்றவர்களுக்குத்தான். அணுவை அணுவை - கடவுள் தத்துவத்தை. அணுகல் ஆம் - பார்க்க முடியும்.

குறிப்பு :- மாசறு காட்சியவர் என்று போற்றப்படுகிற விஞ்ஞானிகள் பௌதீகத்தை வேதியியல் மூலம் புடம் போட்டுப் புடம் போட்டு சோதித்துச் சோதித்து அணுவின் எல்லைக்கே வருகிறார்கள்.

பிறகு அணுவுக்குள்ளேயே நுழைந்து பார்க்கிறார்கள். உடனே அடடா! அடடா என்று வியக்கிறார்கள்.

போகப் போகப் போய்க் கொண்டே இருக்கிறது எல்லையற்ற பிரபஞ்சம். அந்தப் பிரபஞ்சமே அணுவுக்குள் இருக்கிறதே என்று வியக்கிறார்கள்.

இறைவனும் அதுதான் பொன்னம்பலமும் அதுதான். திருநடனமும் அதுதான் என்றே வியக்கிறார்கள்.

---

குறிப்பு :- அணுவையே துளைத்து உள்ளே போவதாக வைத்துக் கொள்வோம். அங்கே பரமாணுக்கள் தாம். அவற்றையும் துளைத்து உள்ளே போனால் ஒரே சக்தி (மயம்) இறுதி இல்லாதபடி வியாபித்திருக்கிறது சக்தி.

அதுதானே பரம்பொருள். அப்படியானால் பரம்பொருளுக்கு உள்ளே சக்தி, சக்திக்கு உள்ளே பரம்பொருள்.

## (59)

விஞ்ஞானம் என்றோ மெய்ஞ்ஞானம் என்றோ பாகப் பிரிவினை கிடையாது. ஞானம் என்பது ஒன்று தான். நம்முடைய சௌகர்யத்துக்காகவே அந்த ஞானம் இந்த ஞானம் என்று பெயர் சூட்டி வைக்கிறோம்.

சிந்திக்கச் சிந்திக்க – உண்மையைத் தேடி காதல் வெறியோடு சிந்திக்கச் சிந்திக்கத்தான் ஞானம் வரும். அதற்குத்தான் அறிவு என்று பெயர்.

அறிவின் இன்றியமையாச் சிறப்பை நோக்கி மெய்யறிவு, வாலறிவு என்றெல்லாம் வாழ்த்திச் சொல்கிறோம்

சிந்தனை இல்லாத அறிவு பொய்யறிவு, பேயறிவு என்று கூடச் சொல்லலாம். ஆணவத்துக்குத் தீனி போட்டு அதைக் கொழுக்க வைக்கும் பொய்யறிவு.

கல்விக்கு அதிதேவதையாக கலைக்கடவுளாக இருக்கும் அறிவையே நாமகள் என்று பாவனை பண்ணிவைத் திருக்கிறோம் நாம்.

நாமகளுக்கு சிந்தாதேவி என்று பெயர். மனோன்மணி என்பது தான் நாமகளுக்குப் பெற்றோர் வைத்த பெயர். விஞ்ஞானியோ மெய்ஞ்ஞானியோ இவர்கள் எல்லோரும் சிந்தித்துச் சிந்தித்து உண்மையைக் கண்டவர்கள் தாம். அதனால் தான் சிந்தனையை (மனஉள் ஒளி) மனோன்மணி என்கிறோம்.

சிந்தனையாளர்களை அறிவர், திறவர் (திறவோர்) கணியர் என்றெல்லாம் பெயரிட்டு அழைத்திருக்கிறார்கள். அப்படி அழைக்கப்பட்டவர்களையே ஞானி(யர்) சித்தர், அருளாளர், தொண்டர்கள், அடிகள், நாயன்மார், ஆள்வார் என்றெல்லாம் புதுப்புதுப் பெயர் சூட்டி மகிழ்கிறோம்.

இனி, ஐசக் நியூட்டன், சார்லஷ் டார்வின், ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் போன்றவர்களை விஞ்ஞானிகள் என்கிறோம்

கம்பர், மாணிக்கவாசகர், திருமூலர், பெரியாழ்வார், குறளாசிரியர் போன்றவர்களை மெய்ஞானிகள் என்கிறோம்.

புத்தர், ஏசுநாதர், மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், விளாடிமிர் லெனின், லியோ டால்ஷ்டாய், ரோமெய்ன் ரேலண்ட் பெர்னாட் ஷா போன்றவர்களை மெய்யடியார்கள் என்கிறோம். அருளாளர்கள், நாயன்மார் என்றும் இவர்களைச் சொல்கிறோம்.

உண்மையில் இவர்கள் எல்லோருமே ஞானிகள் தாம். சிந்தித்துச் சிந்தித்து உண்மையைக் கண்ட திருவருட் செல்லர்கள் தான் இவர்கள்

நம்முடைய சௌகர்யத்துக்காக இவர்களில் சிலரை விஞ்ஞானிகள் என்கிறோம். சிலரை மெய்ஞ்ஞானிகள் என்கிறோம். தொண்டர், நாயன்மார், அருளாளர், ஆள்வார் என்றெல்லாம் சொல்கிறோம்.

மொத்தத்தில் இவர்கள் அறிவர். உண்மையை ஆவலோடு தேடித்தேடி அலைகிறவர்கள். யோசித்து யோசித்து உண்மையைத் தேடுகிறவர்கள்.

யாதொரு குறையும் இல்லாதவர்கள் இவர்கள். எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பார்கள், குழந்தைக்குக் குழந்தையாய் மகிழ்ந்து மகிழ்ந்து திளைப்பார்கள்

செல்வர் என்றால் இவர்கள் தாம். இவர்கள் கண்ட உண்மை–அதாவது அருள்தான் செல்வம். செல்வத்துள் செல்வம். அதனால் தான் இவர்களை அருட்செல்வர் என்கிறோம்.

அறிவுச் செல்வந்தான் அருட்செல்வம். குறளாராசிய இவர்களை

> "அறிவுடையர் எல்லாம் உடையர்...."
> என்று தீர்ப்பே வழங்குகிறார்.

இனி அருட்செல்வராகிய மாணிக்கவாசகரிடமிருந்து உண்மையானது எப்படிக் கோடி சூரியப்பிரகாசமாய் ஜொலிக்கிறது என்று பாருங்கள்.

பேரண்டத்துக்கு ஏதாவது எல்லை உண்டா? போகப் போகப் போய்க்கொண்டே இருக்கிறது பேரண்டம். அப்படியே அனுவுக்குள் அனுவுக்குள் என்றும் போய்க்கொண்டே இருக்கிறது அந்தப் பேரண்ட தத்துவம்.

இறுதி இல்லாத படி எங்கும் வியாபித்திருக்கிறது. அது தான் கடவுள்தத்துவம். பேரண்டமயமான பிரபஞ்சம்.

இந்த உண்மையை உணர்ந்து உணர்ந்து (யோசித்து யோசித்து) அனுபவிக்கிறார் மாணிக்கவாசகர். அவருடைய அனுபவம் ஆனந்தமாகப் பொங்குகிறது.

அனுபவம், ஆனந்தம், உண்மை எல்லாம் ஒன்று பட்டு கவிஉருவம் பெற்று கலை மணம் கமழ எழுந்துவருகிறது. எப்படி

ஒழிவற நிறைந்த
ஒருவ போற்றி

ஒழிவற – வெற்றிடம் இல்லாதபடி. வேறுஒன்றுமே இல்லாதபடி எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கிறான் பெருமான்.

நுட்பத்துக்கும் நுட்பமான கருவிகளைக் கொண்டு உண்மையை ஆராய்ந்து பார்க்கிறார்கள் தற்கால விஞ்ஞானிகள். கண்டகாட்சிகளை ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்தும் சொல்கிறார்கள்.

மாணிக்கவாசகரோ யாதொரு கருவியும் இல்லாமல் யோசித்து யோசித்தே உண்மையைப் பார்க்கிறார். தற்காலத்து விஞ்ஞானிகளை விட முழுமையாகவே பார்க்கிறார். கண்ட பேருண்மையை அவர்களை விடத்தெளிவாகவும் எளிதாகவும் சொல்கிறார்.

வெறும் வசனத்திலா சொல்கிறார் மாணிக்க வாசகர்? தாளமும் இசையும் சேர்ந்து நின்று அபிநயம் பிடிக்கும் கவியில் வைத்தே சொல்கிறார்.

"ஒழிவற நிறைந்த
ஒருவ போற்றி"
இவ்வளவு தானா

பேரண்டங்களும் அண்டங்களும் மட்டுமல்ல, எறும்பு முதல் யானை வரை, திமிங்கலம் வரை, மனிதர் வரை எல்லா உயிரும் இறைவன் தான். அவனுடைய திருவருள்தான். ஆனந்த (திருவிளையாடல்) நடனந்தான். இதை

தில்லை மூதூர்
ஆடிய திருவடி
பல்லுயிர் தோறும்
பயின்றனன் ஆகி

இப்படிச் சொல்லிவிட்டு இதற்கு விளக்கம் கொடுப்பவர் போல.

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்'' என்கிறார்.

சாளரத்தின் வழியாக வீட்டுக்குள் வரும் சூரிய ஒளியில் ஒளித்துகள்கள் ஆயிரக்கணக்கில் மொய்த்து ஆய்வது (ஆடுவது) தெரியும்.

அதுபோலவே கோடான கோடி அண்டங்கள், உருண்டை உருண்டையான அண்டங்கள் பந்துகள் போலப்பரந்தாடுகின்றன வானவெளியில். ஒவ்வொன்றும் பூமியை விடப் பல கோடி மடங்கு பெரியவை. சூரியனை விடப் பல கோடி மடங்கு பெரியவை அவை.

பொதுவாக இந்த உருண்டைகளை நட்சத்திரம் என்கிறோம். ஒரு நட்சத்திரத்திற்கும் இன்னொரு நட்சத்திரத்திற்கும் இடையில் உள்ள தூரம் பல ஆயிரம் கோடி மைல்.

அப்படிப் பலகோடி நட்சத்திரங்கள் சேர்ந்தது அண்டம். கோடான கோடி அண்டங்கள் நிறைந்தது பேரண்டம்

பேரண்டந்தான் கடவுள்த்தத்துவம். கடவுள் அப்படி இருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.

இதோ மாணிக்கவாசகர்

அண்டப் பகுதியின்
உண்டைப் பிறக்கம்
அளப்படும் தன்மைய,
வளப்பெரும் காட்சிய;
ஒன்றனுக்(கு) ஒன்று
நின்றெழில் பகரின்

நூற்றொரு கோடியின்
மேற்பட விரிந்தன;
இல்நுழைக் கதிரின் நுண்அணுப் புரைய
சிறிய ஆகப்
பெரியோன் தெரியின்

நூற்றொரு கோடி – அளவற்றன என்று பொருள். புரைய என்றால் போல என்று பொருள். இறைவனுடைய முழுமையைப் பற்றி யோசித்தால் ''பேரண்டங்களே ஒன்றன் பின் ஒன்றாக கோடிக்கணக்கில் உதித்த வண்ணமாக உள்ளனவோ அவனிடம்'' என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

''அப்படிச் சிறுத்துத் தோன்றுகிறதாம்.

அவனை நோக்கப் பேரண்டம்''

இப்படி எங்கும் நிறைந்திருக்கிற பெருமாள் – பிரபஞ்சத்தையே தன்னுள் தோற்றித்தோற்றி விளையாடும் பெருமாள் பரமாணுக்குள்ளும் நிறைந்திருக்கிறான். அங்கும் அவனுடைய திருமேனி முழுவதும் நிறைந்து நிற்கிறது. இதை

அணுத்தரு தன்மையின்
நிலையோன் காண்க என்று

சுகமாகக் கையில் எடுத்துக் கொடுக்கிறது தமிழ்.

இப்படி அருமைக்கு அருமையாய் – நமக்குள்ளேயே நம் உடல், உயிர், உணர்ச்சி எல்லாவற்றினும் நிறைந்து எளிமைக்கு எளிமையாய் விளங்குகிறாள் இறைவன்.

அளப்பரிய இந்த அற்புதத்தை என்னென்று சொல்ல. எந்தவகையாலும் சொல்லிக்காட்ட முடியாது இந்த அற்புதத்தை.

ஆனால் தமிழ் – தமிழிலுள்ள இசைப் பண்பும் தாளப்பண்பும் கவிப்பண்பும் சேர்ந்து அனுபவத்துக்கு உருவம் கொடுத்துக்காட்டிவிடும்.

எப்படி,

''அரியதில் அரிய
அரியோன் காண்க

மருவிளப் பொருளும்
வளர்ப்போன் காண்க

இப்படி எல்லாம் விஞ்ஞானம் என்றும் மெய்ஞ்ஞானம் என்றும் கை கோர்த்து விளையாடுகின்றன சிந்தனையில்

இனி எங்கும் நிறைந்திருக்கிறது கடவுள் தத்துவம். அது சக்திமயமாய் நிறைந்திருக்கிறது.

சக்தியை உமை என்றும், பரம்பொருளைச் சிவம் என்றும் சொல்லி இருக்கிறது. அப்படியானால் சக்தியானவள் சிவனுள்ளும் சிவன் சக்தியுள்ளும் அடக்கம் என்றாகிறது.

அருமையான இல்லற உறவுதான். ''பெருமானே! நீங்கள் இருவரும் ஒருவருள் ஒருவர் அமர்ந்திருக்கிறீர்கள்.''

''இருவரும் சேர்ந்து என்னுள் அமர்ந்து விட்டீர்கள்

நான் புகுந்து அமர ஒரு இடம் வேண்டாமா? தொண்டர் கூட்டத்துள் நான் ஆடிப்பாட வேண்டும்.

அதற்கு வேண்டிய ஏற்பாட்டை நீர் தான் செய்ய வேண்டும்.

இதுதான் என் வேண்டுகோள். இதை நிறைவேற்றுவது உம்பொறுப்பு''

இப்படி நெருக்குகிறார் மாணிக்கவாசகர் பெருமானை

இனி

''உடையான் உன்தன்
நடுஇருக் க,
உடையாள் நடுவுள்
நீ இருத் தி''
அடியேன் நடுவுள்
இருவீ ரும்
இருப்ப தானால்
அடியேன் உன்

அடியார் நடுவுள்
இருக்கும் அருள்
புரிவாய் பொன்அம்
பலத்தா டும்
முடியா முதலே
என்கருத் து
முடியும் வண்ணம்
முன்நின் றே.

அருமையான பாடல், மாணிக்கவாசகரின் ஆனந்தமும், எக்களிப்பும் அவருடைய அனுபவத்தோடு உருண்டு புரண்டு விளையாடுகின்றன. அதை அப்படியே பார்த்துப் பரவசமடைகிறது தமிழ். நாமும் பார்த்துப் பரவசம் அடைய வேண்டாமா? அதற்காகவே கையில் எடுத்துக்காட்டுகிறது தமிழ்.

இனி, நாம் வாழும் இந்த இருபது இருப்பத்தோராம் நூற்றாண்டுக்கு முன்–பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னே இருந்தவர் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தவர் திருமூலர்.

திருமூலருடைய பாடல்களை மாணிக்கவாசகர் படித்திருக்கிறார். அனுபவித்திருக்கிறார்.

மாணிக்கவாசகரை மேலும் மேலும் தொடர்ந்து சிந்திக்க வைத்துள்ளன திருமூலர் பாடல்கள்.

அப்படிச் சிந்திக்க வைத்த திருமூலர் பாடல்களில் ஒன்று.

பரம்பொருளிடத்தில் நிறைந்து நிற்கிறாள் சக்தி (உமையம்மை). அந்த சக்தியுள் நீக்கமற நிறைந்திருக்கிறார் பெருமான் கூடிக்குலாவி சக்தியும் சிவமும் நடனம் ஆடுகிறார்கள். அண்டபிண்ட சராசரம் எல்லாம் உமையொருபாக (சக்திமயமாகிய சிவ)ந்தான் என்பதைக் காட்டுகிறது நடனம். மலை, கடல், சூரியன், சந்திரன், மான், மயில், மனிதன், யானை, பூனை எனறெல்லாம் படம் படமாய் விரிகிறது அந்த ஆனந்த நடனம்

இனிப்பாடல்

இடம்கொண்ட சக்தியும்,
எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை
நானும் அறிந்தேன்
படம்கொண்டு நின்றஇப்
பல்உயிர்க்(கு) எல்லாம்
அடங்கலும் தாமாய்நின்(று)
ஆடுகின் றானே.

மெய்ஞ்ஞானம் எப்படி விஞ்ஞானத்தை மனந்திறந்து வாய்விட்டுச் சொல்கிறது என்று பார்த்தீர்களா?

பாடலைப் படிக்கப் படிக்க மனம் தூய்மை பெறும். உருப்படவிடாமல் ஆட்டி அலைக்கழிக்கிற பேய்பிசாசெல்லாம் மனதை விட்டு ஓடி விடும்

உண்மையே பாடலாய் உருவெடுத்து வந்திருக்கிறது.

## (60)

உண்மை என்றால் அது எளிமையாகவே இருக்கும், இனிமையாகவே இருக்கும்.

அதனால் திருமூலர் பாடல் கல்கண்டாய் இனிக்கிறது.

ஆணவத்தை (பொய்யை)க் கரைத்து விடும் பாடல் – திருமூலர் பாடல்

உண்மை இல்லை என்றால் அதில் தெளிவிருக்காது. அறிவு (சிந்தனை) இருக்காது. அழகு இருக்கவே இருக்காது.

பொய் ஒன்று தான் அதில் இருக்கும். அது தடபுடல் பண்ணிக் கொண்டு ஆடம்பரமாகவே இருக்கும்.

நோயை உண்டாக்கும் கிருமிகள் அழுகிப் போன உணவுகளின் வழியாக மட்டும் அல்ல, தண்ணீரின் மூலமாகவும் பரவும், காற்றின் மூலமாகவும் அது பரவும். உடம்புக்குள் புகுந்து அணுவுக்கு அணு என்கிற உயிர்ச்சத்தையே உறிஞ்சி எடுக்கும் அந்த நோய்க் கிருமிகள்.

பொய்யும் அப்படித்தான் கெட்ட சிந்தனை, பித்தலாட்டமான பேச்சு, தடித்தனமான செயல் இவைகள் மூலமாகப் பொய் வளரும். அது போலவே அனுபவம் இல்லாமல் வாய்க்கு வந்தபடி பேசுகிறவர்களின் பேச்சு (விரிவுரை) பொறுப்பற்ற அவர்களின் எழுத்து (நூல்கள்) இவைகளின் மூலமாகவும் பொய் பரவும், வளரும்.

மட்டமான நூல்களின் மூலம் பரவுகிற பொய் மிக மிகக் கொடியது. நஞ்சை விடக் கொடியது, ஆபத்தானது.

பொய்யான உபதேசங்களைக் கேட்டாலோ, பொய் நூல்களைப் படித்தாலோ போதும். படித்தவனைச் சும்மா விட்டு விடாது. அதில் உள்ள நஞ்சு மூளையை அரித்துக் கொண்டே இருக்கும். அந்த நஞ்சு. மெய்யைப் பார்க்க விடாது, சிந்திக்கவும் விடாது அந்தக் கொடிய நஞ்சு அதாவது பொய்.

குடை குடை என்று குடைந்து சல்லடையாகத் துளைத்து விடும் மூளையை. பிறகு சிந்தனை எங்கிருந்து வரும் முளைக்கு?

இல்லறம் என்னும் நல்லறத்தை எடுத்துக்கொண்டால் கணவனுக்கு மனையாள் ஒருவள், மனையாளுக்கு ஒருவனே கணவன் என்பது தானே நியதி.

மனிதர்களுக்குத் தேவையான – பயனுள்ள நூல்களும் ஒரு சில தான் இருக்க முடியும்?

பயனற்ற நூல்கள் பல பல என்றும் இருக்கும்.

மனத்தையே வாழவிடாது அதில் உள்ள பொய். மனத்தின் வாயில் மண்ணைப் போட்டு அதன் குடியையே கெடுத்துவிடும் பொய்.

ஒற்றுமை என்பதே அதற்குப் பிடிக்காது. வேற்றுமைப் படுத்துவது தான் அதன் வேலை.

உடல்வேறு, உயிர்வேறு, உணர்ச்சிவேறு என்று மனிதனைக் கூறு போட்டு விடும் பொய்.

நான் வேறு என்று சண்டித்தனம் வேறு பண்ணும். கடைசியில் கடவுள் வேறு நாம் வேறு என்றே கோடு போட்டுப் பிரித்துவிடும் பொய்.

எல்லாம் வல்ல இறைவனையே இந்தப் பாடுபடுத்துகிற பொய் மனிதர்களை நிம்மதியாக வாழவிடுமா?

சாதி, மதம், இனம், மொழி, பணம், அதிகாரம், புகழ் என்றெல்லாம் மனித குலத்தையே தும்பு தும்பாய்க் கிழித்தெறிந்து விடுகிறது பொய்.

உயிர், உடம்பு, உணர்ச்சி எல்லாம் ஒன்றுதான். அவ்வளவும் கடவுள் மயந்தான் என்கிறதே விளங்கவில்லை என்றால் எப்படி உருப்படுவான் மனிதன்.

உயிர் (நாம்) கடவுள் மயம் என்பது தெரிந்தாலே போதும். அப்படித் தெரிந்தவன் தான் மனிதன். தெரியவில்லை என்றால் அவன் செத்த பிணந்தான். மனிதன் இல்லை.

திருமூலர் சொல்கிறார்

உய்யவல் லார்கட்(கு)
உயிர்சிவ ஞானமே,
உய்யவல் லார்கட்(கு)
உயிர்சிவ தெய்வமே,
உய்யவல் லார்கட்(கு)
ஒடுக்கம் பிரணவம்
உய்யவல் லார்அறி(வு)
உள்ளறி(வு) ஆமே.

---

உய்யவல்லார் – வாழும் மனிதர். அவர்களுக்கு விளங்கிவிட்டது. என்னது? உயிர் சிவஞானம் – அறிவு மயமாய் இருக்கிறது உயிர் என்னும் உண்மை. அது மட்டுமா? உயிர் சிவ தெய்வம் – கடவுள் மயமாகவும் இருக்கிறது உயிர். அதாவது கடவுள்த்தத்தவந்தான் உயிர், உணர்வு எல்லாம், அப்படியானால் உடம்பும் கடவுள் தத்துவந்தானே. இது விளங்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்க அமைதி வரும் அப்பொழுது மனம் உண்மையோடு உண்மையாய் ஒன்றும். அது தான் அடிப்படையான மூலமந்திரம் மனித வாழ்க்கைக்கு. (பிரணவம்–மூலமந்திரம்) ஒடுக்கம். ஒன்றுபடல்

குறிப்பு – சாதாரண அறிவு ஒரு மரத்தைப் பார்த்தால் மரத்தின் வெளிப்புறச் செயல்களை மட்டும் பார்க்கும், மரம் முழுவதிலும் அதன் உள்ளே நடக்கும் காரியங்கள் தெரிய வேண்டுமானால் அதற்கு உள்ளறிவு இருந்தால் தான் முடியும். அதனால் உள்ளொளி என்று பெயர் உள்ளறிவுக்கு.

## (61)

பொய்யா விளக்காய் அப்படி பிரகாசிக்கிறவர்கள் அறிவு வெறும் புத்தக அறிவு இல்லை. அவர்கள் அறிவு ஒளிமயமான உள்ளறிவு.

வீட்டு மாடியில் தண்ணீர்த் தொட்டிவைத்திருக்கிறது. தொட்டியின் அடியில் ஆணி வைத்து அடித்து ஒரு சிறு ஓட்டை போடுகிறோம்.

ஓட்டைவழி சொட்டுச் சொட்டாக நீர் விழும். அப்படி விழுகிற நீர்த்துளி ஒவ்வொன்றும் ''நான் தனி, நான் தனி என்று நினைத்தால், பேசினால் அதை ஒப்புக் கொள்ளமுடியுமா? எனக்குப் பின்னால் விழுகிற துளி வேறு, நான் வேறு. அதே போல முன்னால் விழுந்த துளி வேறு நான் வேறு. தொட்டியிலிருக்கிற நீருக்கும் எனக்கும் யாதொரு உறவும் இல்லை'' என்றெல்லாம் வாய்க்கு வந்த படி புலம்புகின்றன ஒவ்வொரு துளியும். அப்படியானால் அவை கிறுக்குகள்தானே?

பச்சைப் பொய் என்றால் இந்தப் பைத்திய காரப் புலப்பந்தான் விழுந்த துளிகளும், விழப்போகிற துளிகளும் மட்டுமல்ல, தொட்டியிலிருக்கிற நீர் முழுவதும் நாம் தான். அது மட்டுமா குளம் குட்டை, ஏரி, அணை, அருவி, ஆறு எல்லாவற்றிலும் உள்ள நீரும் நாம்தான். கலிபோர்னியா கரையிலிருந்து கன்னியாகுமரிக்கரை முடிய உள்ள சமுத்திரங்களும் நாம் தான். பிராணிகளின் ரத்தமும் நாம்தான். உமிழ் நீர், கண்ணீர், வேர்வை, சுரப்பிகளின் நீர் எல்லாம் நாம் தான். வான் வழிஓடுகிற மேகமும் நாம் தான், அது கொட்டுகிற மழையும் நாம் தான்.

நாம் தனி அல்ல. எங்கும் நிறைந்திருக்கிற நீர் என்கிற தத்துவந்தான். ஒரே தத்துவந்தான் என்கிற உண்மையில் – அறிவில் எவ்வளவு நிம்மதி இருக்கிறது. எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது? நான் என்கிற தனிமையில் உண்டா அது?

அது வேறு, இது வேறு, நான் வேறு என்கிற பொய்யில் – அறியாமையில் என்ன இருக்கும். தைர்யம் இருக்குமா, ஆனந்தம் இருக்கமா? இவை ஒன்றும் இருக்காது. பயமும் கிறுக்குத் தனமுமே இருக்கும்.

எல்லாம் ஒன்று. அது தான் உண்மை. அதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதைத் தெரிய வேண்டும் என்று சொல்வது எளிது. ஆனால் தெரிவது அப்படி ஒன்றும் எளிதான காரியம் இல்லை.

தெரிந்தாலும் அதை உணர்வது மிகக் கடினம். இதை எல்லாம் அனுபவத்தில் கண்டதால் தான்

சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

வெட்டொன்று துண்டிரண்டு என்று பிட்டு வைத்தார் குறளாசிரியர்

உண்மையைத் தெரிவது கடினம். தெரிந்தவுடன் —உணர்ந்த பின்பும் அதில் நிலைத்து நிற்பது அதாவது வைராக்யம் என்று சொல்கிறார்களே அந்த உறுதியில் நிற்பது மிக மிகக் கடினம்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் உண்மையானது எளிமையாகத் தான் இருக்கிறது. மிக மிக எளிமையாகவே இருக்கிறது உண்மை. ஆனால் நாம் தான் கடினமாக இருக்கிறோம். பொய்யும் பித்தலாட்டமும் சேர்ந்து. இது தானே விளையாட்டு.

இப்படி ஒரு விளையாட்டை - அதாவது எளிமைக்கு எளிமையாக இருந்துகொண்டே மனிதர்களுக்கு அகப்படாமல் ஓடி ஒளிகிற விளையாட்டை இறைவன் தான் செய்கிறானோ என்று நினைக்கிறார் நக்கீரதேவ நாயனார் என்னும் ஞானி. அதே நினைப்பில் அவர் தோயத்தோய, ஆம், உண்மை தான். இறைவன் தான் விளையாடுகிறான். மாய விளையாட்டே விளை யாடுகிறான் என்று தெரிகிறது அவருக்கு.

உண்மையைத் தெரிந்து, அதைத் தெளிவாக உணர்ந்து, அதில் காலுன்றி நிற்கிற நேரம் பார்த்துச் செங்கலை உருவிவிடுகிறான் பெருமாள்.

மனைவி என்றும், மக்கள் என்றும், நண்பர் என்றும், உறவினர் என்றும், காட்டி ஒரு தட்டுத் தட்டி விடுகிறான் பெருமாள்.

வீடு, வாசல் , சொத்துச் சுகம், அதிகாரம், புகழ் என்றெல்லாம் காட்டி பொய்க்குள் தள்ளிவிடுகிறான் பெருமாள் என்று கடவுள் மேலேயே புகார் கொடுக்கிறார் நக்கீர தேவ நாயனார்.

கடவுளாவது செங்கலை உருவவாவது? நம்முடைய பழக்கவழக்கமே, நம்மைக் கைக்குள் போட்டுக் கொண்டு நம்மையே பொய்யின் குழியில் தள்ளிவிடுகிறது.

அரும் பாடு பட்டுக் கைக்குள் கொண்டு வந்த உண்மையை அனுபவிக்க விடாதபடி கண்ணைக் கட்டிப் பறித்து விடுகிறது பொய்.

பொய்யின் கொடுமையைத் தான் அப்படி நாடக இயலில் வைத்து இறைவனே ஏமாற்றுகிறான் என்கிறார் நக்கீர தேவ நாயனார்

பாடல்

யான்என்றும் தான்என்றும்
இரண்டில்லை என்பதனை
யான்என்றும் கொண்டிருப்பன்
ஆனாலும் – தேனின்
அளிகள்தாம் பாடும்
அகன்கயிலை மேயான்
தெளிகொடான் மாயங்கள்
செய்து

அற்புதமான பாட்டு. அனுபவமானது உணர்ச்சி மயமாக எழுந்து நின்று தமிழில் தாண்டவமே ஆடுகிறது.

---

யான் என்றும் தான் என்றும் இரண்டு இல்லை – நான் வேறு, கடவுள் வேறு என்பது பொய். எல்லாம் கடவுள் மயம் என்பது தான் உண்மை, என்பதனை – இந்த உண்மையை. யான் என்றும் கொண்டிருப்பன் ஆனாலும் – நான் தெளிவாகத் தெரிந்திருந்தாலும். தெளிகொடான் – அந்தத் தெளிவில் உறுதியாக நிற்கவிடாமல் கலைத்து விடுகிறாள். யார்? அகள் கயிலை மேயான் – கைலையங்கிரியில் எழுந்தருளி இருக்கும் சிவ பெருமான். தேனின் – தேன் போல் தித்திக்கும் இசையை – அளிகள் பாடும் – வண்டுகள் ரீங்காரமிட்டு முரலும் வளமான கயிலை. மாயங்கள் செய்து – அது இது என்று காட்டி தெளிகோடான்.

நான் தான் (நம்மிடம் உள்ள பொய் தான்) உண்மையை உணர்ந்து அதில் தோய விடாமல் தடுப்பது. ஆனாலும் கடவுள் தான் அப்படி எல்லாம் தடுத்து வேடிக்கை பண்ணுகிறார் என்று சொல்லத் தோன்றுகிறது. அப்படிச் சொல்வதில் ரசம் இருக்கிறது. வெளிச்சமும் கிடைக்கிறது.

இனி பொய் தான் அதைச் செய்கிறது. மெய் தான் சிக்கித் தவிப்பது என்றால் அது அவ்வளவாக எடுபடாது. காரணம், அது ஊனக்கண்ணுக்குப் புலப்படாது. ஞானக் கண்ணுக்கு மட்டுமே புலப்படும்.

அதனால் உண்மையைக் கடவுள் என்றும் பொய்யை மாயை என்றும் உருவகம் பண்ணிச் சொல்ல வேண்டி இருக்கிறது.

இன்னும் தெளிவாக எல்லோருக்கும் எடுபடும்படி சொல்ல வேண்டும் என்றால் அந்தக் கடவுளையே சிவன் என்றும் கயிலைங்கிரியில் இருக்கிறார் என்றும் அவர் காளை வாகன மூர்த்தி என்றும் மூர்த்தம் அமைக்க வேண்டி இருக்கிறது.

அது போலவே இச்சாசக்தி, கிரியாசக்தி, ஆணவம், கொழுப்பு, பாசபந்தம் என்றெல்லாம் நம்மோடு உறவாடும் இயல்புகளை வைத்தே உருவம் கொடுக்க வேண்டி இருக்கிறது தத்துவங்களுக்கு.

உண்மையை உணர்ந்து தெளிந்தாலும் அதில் நிலைத்து நிற்கவிடாமல் உறுதியைக் கலைத்து விடுகிறார் பெருமாள் என்று சொல்கிறார்கள் ஞானிகள். அப்படியானால் உண்மையில் நிலைத்து நின்று அனுபவித்து ஆனந்தத்தில் திளைக்கிறது என்பது வாய்த்தால் அதை இறைவன் அருள் என்று தானே சொல்ல வேண்டும்.

உண்மையில் உறுதியாக நிலைத்து நிற்கப் படாத பாடுபட்டவர் மாணிக்கவாசகர். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவிடாதபடி எத்தனையோ தடவை உண்மையைத் தட்டிப் பறித்தது பொய் (மாயை)

ஆனாலும் ஊக்கத்தோடு – ஆன்ம வீரத்தோடேயே தொடர்ந்து யோசித்து உண்மையில் நிற்கும் பேரருள் பெற்றுவிட்டார் மாணிக்க வாசகர்.

அப்பொழுது எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும் மாணிக்கவாசகருக்கு. துள்ளிக்குதித்திருக்க மாட்டாரா? அரனே! சிவனே, மங்கைமணளா என்றெல்லாம் அரற்றிக் கூவி அழைத்திருக்கத்தானே செய்வார்?

அவ்வளவு தானா?

''காட்டா தனஎல்லாம்
காட்டிச், சிவம்காட்டி
தாள்த்தா மரைகாட்டித்
தன்கருணைத் தேன்காட்டி''

என்னை அணைத்துக் கொண்டான் பெருமாள் என்றும் கூப்பாடு போட்டிருக்கத் தானே செய்வார்.

இப்படி ஓலமிட்டு உருகி உருகிக் கரைகிற மாணிக்கவாசகர்

கயல்மாண்ட கண்ணிபங்கன்
கலந்தென்னை ஆண்டலுமே

---

கயல்மாண்டகண்ணிபங்கள் – கெண்டைமீன் போன்ற கண்களை உடைய உமையொருபாகன். கயல் – மீன், மாண்ட போன்ற. கலந்து என்னை ஆண்டலும் – அருள்பாலித்து சேர்த்துக் கொண்டமாத்திரத்திலேயே, அயல் மாண்டு – வேற்றுமை போய்விட்டது. வினைச்சுற்றம் – அதைச்செய்தேன், இதைச் செய்தேன் என்னும் முளைப்பு. அவனி – உலகம். மயல் – வேண்டியவர் வேண்டாதவர் என்கிற மயக்கம். வாசகம் – பிரசங்கம். செயல் – ஆணவம்.

உண்மையைக் காண வேண்டுமே – கண்டுதெளிய வேண்டுமே, தெளிந்து நிலையாக அதில் நிற்க வேண்டுமே என்று தவியாய்த் தவித்திருக்கிறார் மாணிக்கவாசகர்

திருவாசகத்தை முறையாகப் படித்தால் மாணிக்கவாசகரின் ஆவல் மட்டுமல்ல அவருடைய தவிப்பும் ஏக்கமும் அப்படியே தெரியும்.

அது போலவே உண்மையைக் கண்டு தெளிந்து அதில் நிற்கும் பேறு பெற்றவுடன் அந்த அற்புதத்தை அனுபவித்து ஆனந்தத்தில் மாணிக்கவாசகர் திளைக்கிறதும் தெரியும்.

திருவாசகம் முழுவதும் மாணிக்கவாசகரின் ஆவலும், தேட்டமும், காட்சியும், ஆனந்தமுந்தான்

கலைமணம் கமழும் கவிகளாக – கவிக் கோவில்களாகவே எழுந்தருளிவிட்டன மாணிக்கவாசகரின் தவிப்பும் ஆனந்தமும்.

மேளதாள முழக்கத்தோடு கவியில்–தமிழில் கொலுவீற்றிருந்து அருள் பாவிக்கின்றன மாணிக்கவாசகரின் அனுபவமும் ஆனந்தமும்.

அயல்மாண்டு, அருவினைச்சுற்

றமும்மாண்(டு) அவனியின் மேல்

மயல்மாண்டு மற்றுள்ள

வாசகம்மாண்(டு) என்னுடைய

செயல்மாண்ட வாபாடித்

தெள்ளேணம் கொட்டாமோ

என்றுதானே உண்மையோடு உண்மையாய் ஒன்றித் திளைப்பார்

இனி, திருமூலரும் ஆவலோடு உண்மையைத் தேடியவர் தான். தேடித்தேடி ஏங்கியவர்தான். பிறகு அதைக்கண்டு தெளிந்தவர்தான். ஆனந்தத்தோடு ஆனந்தமாய் ஒன்றுபட்டு திளைக்கிறவர் தான். ஆனாலும் மாணிக்கவாசகரையும் திருமூலரையும் ஒன்றாய் நிறுத்தினால் உணர்ச்சி வசப்பட்டு மாணிக்கவாசகர் கரைவது தெரியும்

திருமூலர் அப்படி எல்லாம் உணர்ச்சியை எளிதில் வெளிக்காட்டமாட்டார்.

அணுவளவு கூட உணர்ச்சியை வெளிப்படுத்தாமல் சட்டத்தையே கண்ணாடியாகப் போட்டுக் கொண்டு தீர்ப்பு வழங்கும் நீதிபதி மாதிரியே தெரிவார் திருமூலர்

இனி எப்படி அவர்தீர்ப்பளிக்கிறார் என்று பார்ப்போம்

இறைவன் (சடாதரனாகிய சிவ பெருமான்) ஒருவன் தான் எங்கும் நிறைந்திருக்கிறான். காலம், இடம் எல்லாம் அவனுக்குள் தான். வெற்றிடம் (புரை) என்பதே இல்லாத படி அணுவுக்குள் அணுவாய், அண்டம், பேரண்டம் எல்லாம் அவன் தான்.

புரையற்று நின்றான்

புரிசடை யோனே

இப்படியாக இறைவன் ஒருவன் தான். வேறு ஒன்றும் இல்லை என்று ஆனபின் வேற்றுமை ஏது, பொறாமை ஏது, போர் ஏது, சமாதானம் ஏது.

நான், அவன் என்பதெல்லாம் இல்லை. மேல் கீழ், உள், வெளி என்று ஒன்றுமே இல்லை.

கடவுள்தத்துவம் ஒன்றுதான். இது எல்லோருக்கும் விளங்கமாட்டேன் என்கிறதே என்று அங்கலாய்க்கிறார் திருமூலர்

யோசித்து யோசித்து மனசைத் தெளிய வைத்தவர்களுக்குத் தான் உண்மை தெரிகிறது. அலையோ, சிறு அசைவோ இல்லாமல் பளிங்கு போல் தெளிந்திருக்குமே நீர் அது போல மனம் ஒளி வீச வேண்டும். பளபள என்று ஒளிர வேண்டும் மனம். அப்படி மனதைச் செம்மையாக வைத்திருக்கும் அறிவாளர்களுக்குத்தான் உண்மை தெரியும் என்று கண்டுபிடிக்கிறார் திருமூலர்

திரைஅற்ற நீர்போல்
தெளியவல் லார்கட்கு
புரையற்று நின்றான்
புரிசடை யோனே.

அண்டபிண்ட சராசரம் அவ்வளவும் இறைவன் தான். இந்த உண்மையைக் காட்டுவதற்கென்றே எதிரில் வந்து நிற்பதைப் போல ஞானிகளை உணரவைப்பான் அவன்.

அப்பேர்ப்பட்ட இறைவனை இறுதி இல்லாதபடி எங்கும் ஒரு தன்மைத்தாய் நிறைந்திருக்கும் கடவுள்த்தத்துவத்தை உயரம் இவ்வளவு, அகலம் இவ்வளவு, கனம் இவ்வளவு என்று கணக்குப் போட்டுச்சொல்ல முடியுமா?

அப்படித் துண்டுபட்டு, வேறுபட்டு, தனித்து ஒதுங்கி இருக்கிறவனா இறைவன்?

அப்படித் தனித்து ஒதுங்கி இருந்தால் அல்லவா அளவு படுத்திச் சொல்ல முடியும் அவனை

கரைஅற்ற ஒன்றைக்
கரைகாணல் ஆகுமோ

கரை என்றால் அளவு என்று பொருள்.

ஒன்றே ஒன்று என்றான பிறகு அதை அளக்கிறதுக்கு அளவுகோல் ஏது

மனம், வாக்கு ஆகியவைகளுக்கும் ஒரு எல்லை உண்டு. காயம் என்கிற உடலோடு ஒட்டி இருக்கிறவரை அவைகளுக்கும் ஒரு எல்லை உண்டு தான்.

எல்லைக்கு உட்பட்ட இந்த மனம் வாக்கு என்னும் அளவுகோல்களை வைத்து அளவிடமுடியாத பரம்பொருளை அளக்க முடியாது தான்.

சொல்(உரை)லின் எல்லையைக் கடந்த வனை வெறும் சொல்லால் சொல்லிச் சொல்லி (அர்ச்சனை மட்டும் பண்ணி) ஏமாற வேண்டாம் என்கிறார் திருமூலர்.

இனிப்பாடலின் முழுஉருவம்

உரைஅற்ற ஒன்றை
    உரைசெய்யும் ஊமர்காள்!
கரைஅற்ற ஒன்றைக்
    கரைகாணல் ஆகுமோ?
திரைஅற்ற நீர்போல்
    தெளியவல் லார்கட்கு
புரைஅற்று நின்றான்
    புரிசடை யோனே.

---

உரை – சொல், தர்க்கம், வியாகர்ணம், வாதம், பிரதிவாதம், வேதாந்த சிந்தாந்தம், பாராயணம், அர்ச்சனை எல்லாம் அதன் நாமாவளிகள் தாம். ஊமர்காள் – ஊமையன் போல விளங்காமல் உளறுகிற மட ஜென்மங்களே.

கரை – அளவு, எல்லை. திரை – அலை, சலனம். புரை அற்று – இடைவெளி இன்றி. நின்றான் – எதிரே நிற்பது போல் உண்மையைக் காட்டினாள். மனசில் அதை நிற்கவைத்து விட்டான்.

குறிப்பு – இழை இழையாய் உதறி கையில் வைத்துக் காட்டுவது போலவே காட்டுகிறார் உண்மையைத் திருமூலர். எள்ளளவு கூட உணர்ச்சிவசப் படாமல் ஞானமலையாய் நின்றே காட்டுகிறார் திருமூலர்.

## திரு அருள் தான் குரு அருள்

## (62)

திருமூலரின் நிலையையும் அசைவின்மையையும் பார்த்தால் கட்டுமுட்டான கணக்கர் (கறார் பேர்வழி) என்றே தெரிகிறது. கறார் பேர்வழி என்ன கறார் பேர்வழி? கல்லுளிமங்கனாகவே தெரிகிறார் திருமூலர்.

வேதாந்தம், சித்தாந்தம் என்றால் ஒன்றா இரண்டா? இவைகளில் தான் எத்தனை எத்தனை கிளைகள்

ஒவ்வொன்றிலும் முண்டுகள், முடிச்சுகள்! முடிச்சுகள் என்றால் படு முடிச்சுகள், அந்த முடிச்சுகள் ஒவ்வொன்றையும் அவிழ்க்க வேண்டும் என்றால், முண்டுகளைத் தவிடு பொடியாக நொறுக்க வேண்டும் என்றால் திருமூலர் போன்ற கல்லுளிமங்கன்களால் தான் முடியும்

''கல்லுளி மங்கன்சென்ற வழி
காடும் மேடும் தவிடுபொடி''

சிந்தனை தெளிய வேண்டும். அதுதான் உண்மை. தெளியவில்லை சிந்தனை என்றால் பொய்தான் மிச்சம். பேசுகிற பேச்சு, செய்கிற செயல் எல்லாமே பித்தலாட்டமாகத்தான் இருக்கும்.

மனைவி, மக்கள், கலை, பண்பாடு இவைகளையே நேருக்கு நேராகப் பார்க்க முடியாது பித்தலாட்டக்காரனால், அப்படி இருக்க அவன் எங்கே கடவுளைப் பார்ப்பது.

திரையற்ற நீர்போல் தெளியவல் லார்கட்கு
புரையற்று நின்றான் புரிசடை யோனே.

குரு(நாதர்) என்றால் சிந்தனைதான். சிந்தனைத் தெளிவுதான். மற்றப்படி பண்டிதர், சிரோன் மணி, வேதாந்த சமுத்திரம், சித்தாந்த பூஷணம் எல்லாம் வழி காட்டாது.

வழி காட்டாத குரு என்ன குரு?

சிந்தனை தெளியத் தெளிய ஒரு ஒளி பிறக்கும் அந்த ஒளியானது வழிகாட்டிய படியே முன்னே முன்னே போகும். அதன் பின்னே பின்னே நாம் போக வேண்டும் அவ்வளவுதான்.

போகப் போக உண்மையின் இயல் தனித்தனி அம்சமாக விளங்கும். முடிவில் முழுமையாகவே உண்மை தோன்றும்

உண்மையும் நாமும் ஒன்றாகிவிடுவோம். அப்படியாக உண்மையோடு உண்மையாக நம்மை ஒன்றவைக்கும் குரு சிந்தனைதான். சிந்தனை உதிக்கும் மனந்தான்.

சிந்திக்கச் சிந்திக்க உள்ளத்தில் உதிக்கும் ஒளிதான் உள்ளொளி. இந்த உள்ளொளியைத் தான் விளக்கு என்கிறார் குறளாசிரியர். இந்த விளக்கு வெளிச்சத்தில் தான் உண்மை தெரியும். சூரியன் சந்திரன் முதலிய அகண்ட தீபங்களாலும் காட்ட முடியாத உண்மையை இந்த விளக்குத் தான் காட்டும். அதனால் இதற்கு நிகரான விளக்கு வேறு ஏது என்கிறார் குறளாசிரியர்

எல்லா விளக்கும்
விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே
விளக்கு

இனி, பாடம், படிப்பு, பாராயணம், பிரசங்கம் இவற்றைப் பிழைப்பாக வைத்து நடத்துகிறவர்கள் உண்டு. அவர்களில் பலர் ஆச்சார்யர்கள் என்று கிளம்புவதும் உண்டு.

முடிந்தால் அவர்களுக்கு உதவலாம், அவ்வளவுதான், அதோடு விட்டுவிட வேண்டும் அவர்களை.

அவர்களிடம் உபதேசம் கேட்கிறேன் தீட்சை வாங்குகிறேன். அவர்கள் காட்டிய வழியே சென்று கடவுளைப் பார்க்கப் போகிறேன் என்றால் அது அபத்தம்.

அவர்களுக்கும் மெய்ப்பொருளுக்கும் என்ன சம்பந்தம்? குப்பை கூளம் சண்டு சருகு இவைகளையே சாஷ்திரங்கள் என்று வண்டி வண்டியாய் தலையில் அள்ளிப் போட்டுத் திணித்தவர்கள் அவர்கள்.

உண்மைக்கும், ஈடுபாட்டுக்கும், ஞானத்துக்கும் அவப்பெயர் வாங்கிக் கொடுக்கிறவர்கள் அவர்கள். 'அவமாய தேவர்' என்று பெயர் அவர்களுக்கு.

அவர்களை நம்பி உண்மையைத் தேடுவது குளிக்கப் போனவன் சேற்றை அள்ளிப் பூசிக் கொண்ட கணக்குத்தான்.

''இந்தக் கசடுகளை நம்பாதே. ஒதுங்கு என்று குறிப்புக் கொடுத்தான் இறைவன். அந்தப் குறிப்பை ஒட்டி நானும் விலகி நின்றேன்

படுகுழியில் விழாமல் தப்பினேன் என்று கும்மி அடிக்கிறார் மாணிக்கவாசகர்

அவமாய தேவர்
அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை
ஆண்டுகொண்ட பரஞ்சோதி

அந்தத் தெய்வப்பெருஞ்சோதி பிறகு என்ன செய்தது. ''நவமாய செஞ்சுடர்ஒன்று நல்கியது!

அப்படி அது நல்கிய உடனேயே ஒளி பிறந்தது!

என் சிந்தனையில் ஒரு பொறியைத் தான் அவன் தட்டிவிட்டான். அடடா! என்ன அதிசயம். கண்டும் கேட்டும் இராத ஒரு ஒளி, ஒரு தெய்வத்திரு ஒளியே என்னுள் வந்து பாய்ந்து விட்டது.

அந்த ஒளிவந்து உள்ளத்தில் பூத்ததோ, இல்லையோ அப்படியே கண்முன் வந்து நின்றது உண்மை. விண் நிறைந்து மண் நிறைந்து பேரண்டத்தையே உள்ளடக்கிய பேருண்மை அப்படியே என் கண் முன் நின்றது. சோதி மயமாய் நின்றது.

அப்படியே மருவி ஒன்றாகி விட்டேன் அதனோடு.

அவமாய தேவர்
அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை
ஆண்டுகொண்ட பரஞ்சோதி,
நவமாய செஞ்சுடர்ஒன்று
நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ!

மாணிக்கவாசகரின் பாடலைப் பாடப்பாட மனம் குளிரும். வாய் மணக்கும். நம்முடைய கர்மவினைகளும் அவற்றின் பலன்களும் சுக்கல் சுக்கலாய் நொறுங்கிச் சிதறிவிடும்.

புண்பட்டவாழ்க்கையைக் குணப்படுத்தும் மருந்தென்றால் – சஞ்சீவி என்றால் இதுவும் இது போன்ற பாடல்களுந்தான்.

நமது முன்னோர்களின் பாடல்களை முறையாகப் படித்தால் நம் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாம் பாடல்களில் இருக்கின்றன என்பது தெரிய வரும்.

மனுசனாய் வாழ என்னென்ன தேவையோ அவ்வளவையும் பாடல்களின் மூலம் நமக்கு வழங்கி இருக்கிறார்கள் முன்னோர்.

என்ன இருந்து என்ன பலன்? ஒன்றையும் அனுபவிக்க முடியவில்லை நம்மால். எடுத்து வைத்தாலும் அனுபவிக்க கொடுத்து வைக்க வேண்டாமா?

தேனும் பாலும் கனி வகைகளும் ஏராளமாக இருக்கின்றன. ஆனாலும் தீராத குடல்நோயால் வேதனைப்பட்டுத் துடிக்கிறான் மனுசன்.

என்ன இருந்து என்ன பயன். அனுபவிக்க முடியவில்லையே அவனால்.

இருந்தால் மட்டும் போதாது. இருப்பதை அனுபவிக்க அவனருள் வேண்டும்

''வகுத்தான் வகுத்த
வகைஅல்லால் கோடி
தொகுத்தவர்க்கும் துய்த்தல்
அரிது''

என்று வள்ளுவப் பெருந்தகை சும்மாவா சொன்னார்.

மனம் நம்மிடந்தானே இருக்கிறது. சிந்தனையும் அப்படித்தானே

நாமும் இருக்கத் தானே செய்கிறோம். இவ்வளவிருந்தும் மனத்தோடு சேர்ந்து உறவாடித்திளைக்கக் கொடுத்து வைத்திருக்கிறதா?

விதியின் விளையாட்டே இப்படித்தான்! இவ்வளவையும் கண்டுதெளிந்தவர் திருமூலர்.

அதனால் தான் குரு அருள் வேண்டும் என்கிறார் திருமூலர். அது இருந்தால் தான் எடுத்து வைத்ததெல்லாம் கொடுத்து வைக்கும் என்கிறார்.

யாராக இருந்தாலும் சரி மனம் (சிந்தனை) என்கிற குருவின் துணை இல்லாமல் இறைவனைப் பார்க்க முடியாது. பார்க்கவே முடியாது என்றால் பிறகு அவனோடு சேர்வது எப்படி.

எப்படி வருகிறது திருமூலர் வாக்கு என்று பாருங்கள்

குருவன்றி யாவர்க்கும்
கூடஒண் ணாதே

ஒண்ணாதே! என்று நீட்டிமுழக்குகிற தேற்றேகாரம் சுத்தியை வைத்து ஆணியை அடித்து இறக்குவது போல இருக்கிறது.

வகை வகையான கோடான கோடி உருவங்களும் இறைவன்தான். அப்படியானால் இறைவனுக்கு என்று தனி உருவம் எப்படி இருக்கும்?

தனித்த ஒரு உருவில் இறைவன் இருந்தால் அந்தந்த வடிவிலான உருவங்களில் அவர் பரிணமிக்க முடியுமா.

ஒரு குறிப்பிட்ட உருவில் இல்லை இறைவன். காரணம் எல்லா வடிவங்களிலும்–உருவங்களிலும் அவன்தான் இருக்கிறான்.

உருஅன்றி யேநின்று
உருவம் புணர்க்கும்

சகல கோடிதத்துவங்களாகவும் விளைகிற பரம்பொருளை – குறிப்பிட்ட வடிவம் என்று ஒன்று இல்லாத பிரபஞ்ச வெளியை ஒரு தாயானவள் கரு உற்று பத்து மாதம் வயிற்றில் வைத்திருந்து பெற்றெடுத்தாள் என்று நினைக்கலாமா? அப்படி நினைப்பது அபத்தம் இல்லையா?

கருஅன்றி யேநின்று

தான்கரு வாகும்

இனி,கண்ணுக்குத் தெரியாதவன் கடவுள். அவரை பார்க்கவே முடியாது என்று சொல்வதும் உண்மை இல்லை.

பேரண்டம் முழுவதும் இறைவன். ஒவ்வொரு அணுவும் இறைவன், நாமும் இறைவன், எல்லோரும் இறைவன் மயம், மாடு கன்று, நன் செய், புன்செய், நெல், கரும்பு எல்லாமே இறைவன் என்கிற பொழுது அவ்வளவிலும் இறைவனைப் பார்க்கத்தானே செய்கிறோம்.

உண்ணும் உணவும், தின்னும் வெற்றிலையும் பருகும் நீரும் எல்லாம் இறைவன் தான். ஆனாலும் பார்வைக்குப் பிடிபட மாட்டேன் என்கிறான் பெருமான். அதை உணர மறுக்கிறதே அறிவு. அந்த அறிவும் அவன் தானே.

அப்படி ஒரு மாயப்பிரானா(மாயாவியா)க இருக்கிறான் பெருமான்

அருவன்றி யேநின்ற

மாயப் பிரானை

எத்தனை மாயாவித்தனம் இருந்தாலும் சரி இறைவனிடம், குருவின் துணை இருந்தால்–அதாவது மனம் சுத்தமாக இருந்தால் போதும், தூய எண்ணம் முளைக்க முளைக்கச் சிக்கிவிடுவான் பெருமாள்.

இனிப் பாடலின் முழு உருவம்

உருவன்றி யேநின்(று)
உருவம் புணர்க்கும்,
கருவன்றி யேநின்று
தான்கரு வாகும்,
அருவன்றி யேநின்ற
மாயப் பிரானை

குருவன்றி யாவர்க்கும்
கூடஒண் ணாதே''

## *(63)*

இனி புராணங்கள் , இதிகாசங்கள், உபநிஷத்துக்கள் போன்றவைகளிலும் எத்தனையோ அம்சங்கள் தெய்வாம்சம் பொருந்தி இருக்கின்றன.

வெறுமனே படித்து அவைகளைப் பாராயணம் பண்ணினால் பிரயோசனம் இல்லை. அவை சுட்டிக்காட்டும் மெய்ப்பொருளைப் பார்க்க வேண்டும். மெய்ப்பொருளைப் பார்ப்பதற்காகத் திறந்து வைத்தசாளரங்கள் என்று கதைகளையும் சம்பவங்களையும் படித்து அனுபவிக்க வேண்டும்.

இப்படி ஒன்றிரண்டு நூல்கள், சாஷ்திரங்கள் உண்மையானவைகளாக இருக்கத்தான் செய்கின்றன.

ஒன்றே கற்க, அதுவும் நன்றே கற்க என்பதற்கிணங்க உண்மையான நூல்களையே — சிந்திக்க வைக்கும் நூல்களையே கற்க வேண்டும்.

---

அரு அன்றி நின்ற – அருவம் என்கிற சொல்லுக்கே இடம் இல்லாபடி எல்லாவடிவங்களிலும் நிலைத்து நிறைந்து. நிற்கிற மாயப்பிரான் – ஆனாலும் உண்மையை உணர விடாமல் குழப்புகிற இறைவன்.

குறிப்பு :- கண்ட கண்ட நூல்களைப் படித்து அறியாமையை வளர்க்கக் கூடாது. அதே நேரத்தில் உண்மையான நூல்களைப் படிக்காமல் ஒதுக்கவும் கூடாது.

திருமூலர், திருவள்ளுவர், காரைக்காலம்மையார், சுந்தரர், மாணிக்கவாசகர், கம்பர், ஆண்டாள், பெரியாழ்வார் போன்றவர்களின் பாடல்களைப் படிக்கவில்லை என்றால் சிந்தனை எப்படி வளரும்.

குறிப்பு – பழைய தங்கச்சங்கலி ஒன்றிருந்தது. பத்துசவரன் எடை கொண்ட இரண்டு வடச்சங்கிலி அது. அதை அழித்து இரண்டு ஜோடி வளையல்களும் நான்கு மோதிரங்களும் செய்தோம். மோதிரங்களையும் வளையல்களையும் பார்க்கும் போது சங்கிலியின் ஞாபகம் தான் வருகிறது. சங்கிலிதான் கண்ணுக்குத் தெரிகிறது. அடிப்படையான தங்கம் தெரிவதேயில்லை. மறந்தே போய்விடுகிறது. பொன்னின் நிலை போலத்தான் கடவுள் நிலையும். எந்தப்பொருளைப்பார்த்தாலும் அதனுடன் தொடர்புடைய பொருள்த் தான் தெரிகிறது. அடிப்படையான கடவுள்தத்துவம் தெரிவதில்லை. மறந்து போய் விட்டது கடவுள்தத்துவம்.

நூல்களில் உண்மையானவை என்று ஒன்றிரண்டு இருப்பது போலவே ஒன்றிரண்டு உண்மையான குருமார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களை நம்பி இறங்கலாம் செயலில். யோசனை ஒன்று போதும் இவர்கள் தேவை இல்லை என்று விட்டுவிடக் கூடாது உண்மைஞானிகளை.

யோசிக்க வைக்கிற குருமார்களும் யோசிக்கும் யோசனை போன்றவர்கள் தாம். யோசனையைத் தூண்டும் மன விளக்குப் போன்றவர்கள் தாம்.

சிந்திக்க வைக்கும் உண்மையான குரு மூர்த்திகள் சிலர்தான் இருப்பார்கள். பட்டாளம் பட்டாளமாய் ஆட்டுமந்தை போலத் திரிய மாட்டார்கள் அவர்கள், ஆச்சார்யர்கள்–குருமார்கள் என்கிறவர்களிலேயே பதினாயிரத்தில் ஒருவர் லட்சத்தில் ஒருவர் என்றுதான் உண்மையான குரு இருப்பார்.

இனி, உணிமையான நூல்(கவி) எப்படி இருக்கும் என்று சொல்ல இலக்கணம் ஒன்றும் இல்லை. அது போலத்தான் உண்மையான குருவுக்கும் விளக்கம் கொடுத்துக் காட்ட இலக்கணம் எதுவும் இல்லை.

ஆனாலும் ஒன்றிரண்டு அம்சங்களை வைத்து ஓரம் சாரமாக அடையாளம் காட்டலாம் அவர்களை.

படிக்க வேண்டியது எதுவோ அதைத்தான் அவர்கள் படிப்பார்கள், ஐயம் திரிபற அதைப் படித்து உணர்வார்கள்.

அவர்கள் படிக்கிற படிப்பு அவர்களுடைய சிந்தனையை மேலும் மேலும் தூண்டும். அதனால் அமைதியாக இருப்பார்கள். அவர்கள் நிறைந்த மனதோடு ஆனந்தமாக இருப்பார்கள். ஏக்கமோ, பயமோ அவர்களிடம் தலைநீட்டமாட்ட. வெறுப்பு விருப்புக்கு ஆளாகமாட்டார்கள். லாபம் நஷ்டம் எல்லாம் அவர்களுக்கு ஒன்றுதான்.

எல்லாம் ஒரு நியதியின் படியே நடக்கின்றன. அவ்வளவும் அந்த நியதிக்கு உட்பட்டவைகளே என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கண்டவர்கள் அவர்கள்.

வேற்றுமை உணர்வே அவர்களிடம் கிடையாது. எல்லோரும் நம்மவர்களே என்னும் நினைப்பில் திளைக்கிறவர்கள். அதனால் அவர்கள் ஒரு (பிறந்த) ஊருக்கு

மட்டுமல்ல, உலகுக்கே சொந்தம். உலக மக்கள் எல்லோருமே அவர்களின் தோழமை மிக்க நண்பர்கள் தாம்.

புறநானூறு என்னும் தொகை நூலில் இந்த விதமாக உண்மைக் குருநாதரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது

இனிப்பாடல்

யாதும் ஊரே,
யாவரும் கேளிர்,
தீதும் நன்றும்
பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும்
அவற்றோ ரன்ன,
சாதலும் புதுவ(து)
அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று(ம்)
இலமே; முனிவின்
இன்னா(து) என்றலும்
இலமே—

இனி, வானத்திலிருந்து மழையானது துளித் துளியாக விழுகிறது, அருவியாக ஓடியாடி ஆறாய்ப் பெருகுகிறது அந்த மழை.

ஆற்று நீர் நெளிந்தும் வளைந்தும் சுழலில் சுழன்றும், மடையில் தேங்கியும், மடைவாய் வழிப்பாய்ந்தும் பல விதமாகப் பிரயாணம் செய்யும்

ஆற்று நீரில் விழுந்த மரக்கட்டையும் நீரின் போக்கிலேயே போகும் மரக்கட்டைக்கென்று செயல் இல்லை, நீரின் செயல் தான் அதன் செயல்

எறும்பு முதல் யானை வரை மனிதர் வரை உள்ள எல்லா உயிரினங்களின் காரியமும் மரக்கட்டையின் காரியந்தான்

உயிருக்கென்றுயாதொரு செயலும் இல்லை. நியதி(கடவுள்)த்தத்துவத்தின் செயல்தான் உயிரின் செயல்

மின்னொடு

வானம் தண்துளி

தலைஇ ஆனாது

கல்பொரு(து) இரங்கும்

மல்லல் பேர்யாற்று

நீர்வழிப் படூஉம்

புணைபோல் ஆருயிர்

முறைவழிப் படூஉம்

என்பது திறவோர்

காட்சியில் தெளிந்தனம்.

நாம் என்பது இல்லை, நம் செயல் என்பதும் இல்லை. எல்லாம் கடவுள்த்தத்துவத்தின் (முறை–அதாவது நெறிமுறை என்கிற நியதியின்) காரியந்தான் என்று விளங்கிவிட்டது.

இப்படி விளங்கியவர்களுக்குத்தான் மாசறு காட்சியர் என்று பெயர்.

அந்த மாசறு காட்சியவர்களின் வாழ்க்கையிலிருந்தே இந்த உண்மை புலப்படுகிறது. அப்படிப் புலப்படப் புலப்பட பிறப்பு, இறப்பு என்பவை வெறும் தோற்றந்தான் என்று விளங்கும்.

மகிழ்வதற்கோ துயரப்படுவதற்கோ எதுவும் இல்லை என்பதும் விளங்கிவிடும்.

இப்படி விளக்கம் பெற்றவர்கள் பிழைப்புக்காக நாலுபேரைச் சலாம் போடுவார்களா? இல்லை நாலுபேரை மிரட்டிப் பணிய வைக்க வேண்டும் என்று அரட்டுவார்களா.

மாட்சியின்

பெரியோரை வியத்தலும்

இலமே

சிறியோரை இகழ்தல்

அதனினும் இலமே

இனிப்பாடலின் முழு உருவத்தையும் பார்க்கலாம்

யாதும் ஊரே,

யாவரும் கேளிர்,

தீதும் நன்றும்

பிறர்தர வாரா,

நோதலும் தணிதலும்

அவற்றோ ரன்ன,

சாதலும் புதுவது

அன்றே; வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்று(ம்)

இலமே, முனிவின்

இன்னா(து) என்றலும்

இலமே; மின்னொடு

வானம் தண்துளி

தலைஇ ஆனாது

கல்பொரு(து) இரங்கும்

மல்லல் பேர்யாற்று

நீர்வழிப் படூஉம்

புணைபோல் ஆருயிர்

முறைவழிப் படூஉம்

என்பது திறவோர்

காட்சியில் தெளிந்தனம்

ஆகலின்; மாட்சியின்

பெரியோரை வியத்தலும்

இலமே,

சிறியோரை இகழ்தல்

அதனினும் இலமே

---

மின் – மின்னல். கல் – பாறை, மலை. பொருது – மோதி. நீர்வழிப்படூஉம்புணை – நீரில் அகப்பட்டதெப்பம், மரக்கட்டை. ஆருயிர் – உயிர் என்னும் தத்துவம். முறை – நியதி, பேரருள், பெருநீதி. திறவோர் காட்சியில் தெளிந்தனம் – ஞானிகள் வாழும் வாழ்க்கையிலிருந்தே இந்த உண்மை விளங்கியது. மாட்சியின் – அதிகாரம், புகழ், வசதி இவை கருதி வியத்தல் பாராட்டல்.

நன்மை தீமை என்கிற இரண்டுமே அநாதியான தத்துவங்கள் தாம். யாராலும் அவற்றை உண்டாக்க முடியாது. இவர் நல்லது செய்தார் அவர் கெட்டது செய்தார் என்று சொல்வதற்கு இடமே இல்லை அதில் என்பது தெரிந்து விடும்.

இதை உணர்த்துவது தான் ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்னும் தொடர். அப்படியானால் வருந்துவதற்கோ மகிழுவதற்கோ ஒன்றும் இல்லை இதை உணர்த்துகிறது ''நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன'' என்னும் தொடர். மரணம் கூட அநாதியான தத்துவந்தான். எங்கிருந்தோ புதிதாக வந்து விடவில்லை அது. அப்படி இருக்க வாழ்வது என்பது (நியதியின் படிதானே தவிர) பேஷ் பேஷ் என்று பாராட்டவோ, 'என்ன தொல்லை இது' என்று சோர்வடையவோ ஒன்றும் இல்லை.

பாடலை ஊன்றிப் பார்க்க வேண்டும். பார்க்கப் பார்க்க ஞானிகள் யார் என்பது தெரியும். மேலோர்(வானவர்) என்றால் அவர்கள் தாம் என்பதும் தெரியும். தாமரை இலைத்தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாமலும் எப்படி அற்புதமாய் வாழ்கிறார்கள் அவர்கள் என்பதும் தெரியும்

ஞானிகளை இனம் காட்டும் இந்தப் பாடலைப் பாடியவர் கணியன் பூங்குன்றனார் என்னும் கவிஞர்.

பூங்குன்றம் என்பது அவர் பிறந்த ஊர். கணியன் என்றால் கணித வல்லான் என்பது பொருள்

''இது யார் புத்தகம் என்றால், இது மேலத்தெரு கணக்குப்பிள்ளை புத்தகம் என்று ஒருவர் பதில் சொல்கிறார்.

கணக்குப் பிள்ளையின் சொந்தப் பேர் இல்லாவிட்டாலும் அவர் தொழிலே, புலமையே அவருக்கு பெயராய் வந்து உதவுகிறது.

பூங்குன்றம் கவிஞருக்கும் அவருடைய கணிதப்புலமையே பெயராக வந்து விட்டது.

இனி விண்மீன்கள், செவ்வாய், புதன் முதலிய மண்டலங்கள் எல்லாமே ஒரு ஒழுங்கில் முறையில் இயங்குகின்றன. காற்று, மழை, பகல், இரவு, பருவநிலைகள்,

எல்லாவற்றிலும் அந்த ஒழுங்கு முறை இருக்கிறது. ரத்தஓட்டம், நாடித்துடிப்பு, பசி, தூக்கம் எல்லாவற்றிலும் அது உண்டுதான்

அந்த ஒழுங்கு முறை இல்லாமல் ஒன்றும் இல்லை. அண்டத்திலும் இல்லை. பிண்டத்திலும் இல்லை. இந்த ஒழுங்கு முறையைக் கண்ணாரக் காண்பதற்கும், கண்டு தெளிவதற்கும், (நிச்சயபடுத்துவதற்கும்) உரிய சாதனம் கணக்கு.

இலக்கியம், கலை என்பவை வாழ்க்கைக்கு எப்படி ஒளி கொடுக்கிறதோ, அப்படியே கணிதமும் ஒளி கொடுக்கிறது.

கணக்கறிந்(து) உண்மையைக்
கண்(டு)அண்டம் நிற்கும்
கணக்கறிந் தார் கல்வி
கற்றறிந் தாரே'+

என்பது திருமூலர் வாக்கு

இந்த கணிதக் கலையில் முன்னோர்கள் மிக மிக வல்லவர்களாக இருந்தனர்.

விண்மீன்கள், கோள்களின் நடமாட்டங்கள், அவைகளின் நேர் பார்வை, சந்திப்பு, ஒன்றை விட்டு ஒன்று விலகி நிற்றல் இவைகளை வைத்தே பருவங்கள் எப்படி எப்படி அமையும், பூமியில் எனனென்ன மாற்றங்கள் உண்டாகும் என்று முன் கூட்டியே கணித்துச் சொல்வார்கள் இந்த மேதைகள்.

நாள் நட்சத்திரம் அதாவது கோள்கள், விண்மீன்கள் மூலம் பூமிக்குப் பலன் சொன்ன கணக்கு வல்லார் பிழைப்பைக் கருதி மெள்ள மெள்ள மனிதர்களுக்கும் அவர்கள் வாழ்க்கைக்கும் பலன் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இந்த விதமாகவே கணிதத்துறை சோதிடக்கலையாக உருவெடுத்தது.

இது காரணமாகவே கணியன் என்கிற சொல் சோதிடர்களை உணர்த்தும் பெயராகிவிட்டது.

அப்படியானால் கணித மேதைகளை உணர்த்தத் தனியாக ஒரு சொல் வேண்டுமே? அதற்காக உண்டான சொல் தான் கணக்காயர்.

கணக்காயர்கள் (கணிதமேதைகள்) பெரும்பாலோர் கவிஞர்களாகவும் இருந்தனர்

இனி, நம் முன்னோர்கள் கண்டுபிடித்த அதிநுட்பமான கணிதக்கலை அரபுகள் மூலமாக இத்தாலிக்கும் கிரிஸுக்கும் முதலில் போனது. பிறகு ஐரோப்பா முழுவதும் பரவியது.

ஜெர்மானியர்கள் இதில் மிகவும் ஈடுபட்டு பல அரிய கருவிகளை உண்டாக்கினார்கள். ரசாயனம், மருத்துவம், பௌதீகம், முதலிய துறைகளுக்கு விளக்கம் அளிக்கும் மொழியாகவே கணிதத்தை அவர்கள் வைத்துக் கொண்டார்கள்.

நமது கணித நலன்களை மட்டும் அவர்கள் எடுத்துக் கொண்டனர், சோதிடத்தை விட்டுவிட்டனர் நாமோ சோதிடத்தை மட்டும் இறுகப்பற்றினோம். கணிதத்தை நழுவ விட்டோம்.

இனி, கணிதத்துறை இருக்கட்டும். கணியன் பூங்குன்றனார் குறிப்பிடுகிற ஞானிகளைப் பார்ப்போம். அந்த ஞானிகளும் அவர்களைப் போன்ற அருளாளர்களுமே உண்மையான குருமார்

இவர்கள் மாணவர்களை நண்பர்களாகவே வைத்து உறவாடுவார்கள். அது இப்படி இது அப்படி என்று சொல்லிக்கொடுப்பது. இவர்கள் பழக்கம் இல்லை. அவர்களுடன் சேர்ந்து தாமும் உண்மையைத் தேடுவதாக செயல்படுவார்கள்

பேச்சு அதிகம் இருக்காது இவர்களிடம் மாணவர்கள் கேள்வி கேட்டாலும் பேச்சால் பதில் சொல்வது குறைவாகத்தான் இருக்கும்.

சனகாதி முனிவர்களின் கரடுமுரடான தத்துவக் கேள்விகளுக்கு எப்படி ஆலம் விதை, இலை, வேர் என்று காட்டி சிவ பெருமான் விளக்கம் கொடுத்தாரோ அப்படியே பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் காட்டியே விளக்கம் கொடுப்பார்கள் உண்மைக்குருமார்.

பல கேள்விகளுக்கு புன்முறுவல், மௌனம், தங்கள் நடவடிக்கை, மற்றவற்றைச் சுட்டிக்காட்டல் இப்படியாகவே வரும் பதில்கள்

இனி, குருநாதரின் விளக்கங்கள் மூலமாக இருபத்துஐந்து சதவிகித ஞானம் கிடைக்கும் மாணவனுக்கு.

குருநாதருடைய வாழ்க்கையில் ஒளிரும் எளிமையும் இனிமையும் சேர்ந்து இருபத்துஐந்து சகவிகித ஞானம் கொடுக்கும் மாணவனுக்கு. மிச்சம் ஐம்பது சதவிகித ஞானத்தையும் அவன் சிந்திக்கச் சிந்திக்கப் பெறுவான்

அந்த அளவுக்குச் சிந்தனையைத் தூண்டி விடவேண்டும் குருநாதரின் விளக்கமும் வாழ்க்கையும். அப்படிப்பட்ட குருநாதர் ஒருவர். அவரோடு மாணவர்கள் சிலர். அவர்கள் பல நாட்களாகக் கேட்கிறார்கள். ''கடவுள் எங்கே இருக்கிறார். எப்படி இருக்கிறார். எல்லாவற்றிலும் அவர் ஒருவரே இருக்கிறார் என்றால் ஏன் வெளிப்படையாகத் தெரிய மாட்டேன் என்கிறார்'' என்றெல்லாம் கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள்.

குருநாதரும் மாணவர்களின் கேள்வியை ரசித்து ரசித்து அனுபவித்து வந்தார்.

ஒரு நாள் எட்டிய தூரத்திலிருந்து கட், கட் என்று ஓசை வந்தது. மாணவன் ஒருவனைக் கூப்பிட்டார். சத்தம் வருகின்ற இடத்துக்குப்போய் அங்கு என்ன (வேலை) நடக்கிறது என்று பார்த்து வரச்சொன்னார்

சத்தம் வந்த தச்சனுடைய பட்டறையை நோக்கி வந்தான் மாணவன். யானை ஒன்று தயாராகிக் கொண்டிருந்தது அங்கு. யானையின் காலுக்குக் கடைகிற கட்டைகளையும், வயிறு முதலியவற்றுக்குச் செதுக்குகிற பலகைகளையும் பார்த்தான். பிர்மாண்டமான யானையே அவன்முன் எழுந்து நின்றது. ஓடியே வந்தான். ''குருநாதரே அங்கு நடக்கிற காரியம் யானை'' என்று சொன்னான். மௌனமாகக் கேட்ட குரு நாதர் 'அப்படியா?' என்ன மரத்தில் செய்கிறார்கள் யானையை என்று மெள்ளக் கேட்டார்.

திரு திரு என்று விழித்தான் மாணவன், அதைப் பார்க்க மறந்து விட்டேன் என்று ஓய்ந்த குரலில் சொன்னான் மாணவன்.

உயிரேஇல்லை அவன்குரலில்

மரத்தை மறைத்தது

மாமத யானை.

ஆம்,யானை தான், யானையே தான் என்று பார்த்தவனுக்கு மரம் இன்னதென்றுகண்ணில் படவில்லை.

சரி என்று அவனை அனுப்பிவிட்டார் குரு, வேறொரு மாணவனை அழைத்தார். பக்கத்தில் தச்சுப்பட்டறை இருக்கிறது. அங்கு என்ன மரத்தில் வேலை நடக்கிறது என்பதைத் தெரிந்து வா என்று அனுப்பினார். அவனும் அப்படியே ஓடி வந்தான்

தச்சன் கடைசல் போடுகிற துண்டையும், அதன் சிராய்ப் பொடிகளையும் முகர்ந்து பார்த்தான் மாணவன். இழைக்கிற கட்டைகள், செதுக்குகிற பலகைகள் ஒவ்வொன்றையும் சுரண்டிப்பார்த்தான், தடவியும் பார்த்தான் மாணவன்.

மரம் தேக்கு என்று தெரிந்துவிட்டது. ஒரே பாய்ச்சலில் ஓடிவந்தான். ''குருநாதா! அங்கே தேக்குமரத்தில் வேலை நடக்கிறது என்றான் மாணவன்.

தேக்கு மரத்தில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றார் குருநாதர்

தலையைச் சொரிந்தான் பையன். தொங்கவும் போட்டுவிட்டான் தலையை. கவனிக்க முடியவில்லையே என்று சொல்லக் கூட அவனால் முடியவில்லை. அப்படி சும்மிப்போய் விட்டது அவன் குரல்.

என்ன மரம் இது என்கிற யோசனையிலேயே நின்றவனுக்கு யானையானது கண்ணில் படவில்லை. அப்படியாக மலை போன்ற யானையையே மறைத்து விட்டது சிராய்ப் பொடியும் பலகையும், அவை என்ன ஜாதி என்கிற மோப்பமும்

மரத்தில் மறைந்தது

மாமத யானை

பரம் பொருளாகிய கடவுள்தத்துவமும் அப்படித் தான். இது தங்கம், இது இரும்பு, என்று பார்க்கிற பொழுது கண்ணில் படமாட்டார் கடவுள்.

ஒவ்வொன்றையும் கடவுளாகவே-கடவுளின் திருவிளை யாடலாகவே பார்த்தால் கடவுள் நேருக்கு நேராகத் தெரிவார். இரும்பு, தங்கம் முதலியன விலகும்.

இனிப்பாடலின் முழு உருவம்

மரத்தை மறைத்தது
மாமத யானை;
மரத்தில் மறைந்தது
மாமத யானை;
பரத்தை மறைத்தன
பார்முதல்ப் பூதம்
பரத்தில் மறைந்தன
பார்முதல்ப் பூதம்

## (64)

உண்மையான குருநாதரை ஒரு சாயலில் ஒரு போக்கில் காட்டி விட்டார் திருமூலர். இப்படிப்பட்ட குரு நாதர்கள் மிகக் குறைவு. அவர்கள் துணை கிடைப்பது அரிது. கிடைத்தால் தெய்வ கடாட்சம் என்று தான் சொல்ல வேண்டும்.

தெய்வமே குருவாக வந்து கண்ணைத் திறந்து விட்டது என்று சொல்கிறார்களே, அப்படிச் சொல்வதின் பொருள் இதுதான். அரியதில் அரியது உண்மையான குருவின் தரிசனம் என்பதுதான்.

சிவபெருமானே குருவாக வந்து வழி காட்டினார் தனக்கு என்று மாணிக்க வாசகர் சொல்கிறார். அனுபவித்துச் சொல்கிற சொல் அது. ஆனால் ஒன்று. அருமையிலும் அருமையான உண்மைக் குரு மகா சந்நிதானம் நமக்குக் கிடைக்கவில்லையே என்று யாரும் கவலைப்பட வேண்டாம்.

---

பரத்தை – பரம்பொருளை. பார் முதல் பூதம் – நிலம், நீர் முதலிய பஞ்ச பூதங்களும் அவற்றாலாகிய பொருள்களும். குறிப்பு – மரத்தை என்பதில் 'ஐ' என்பது இரண்டாம் வேற்றுமை உருபு மரத்தில் என்பதிலோ ஆல் என்பது மூன்றாம் வேற்றுமையில் முடிகிறது. இந்த இரண்டையும் வேற்றுமை உருபு என்று சர்வசாதாரணமாகச் சொல்லிவிடும் இலக்கணம் ஆனால் அந்த உருபுகளைக் கொண்டு தமிழ் – கவி என்னென்ன அற்புதங்களை உண்டாக்குகின்றன என்பது இலக்கணத்துக்கு விளங்காது. நாம் தான் அந்த அற்புதத்தைப் பார்க்க வேண்டும். அந்த அதிசயத்தைப் பார்த்தாலே போதும். பார்க்கப் பார்க்க மனதிலுள்ள பாரம் அவசரம் அவசரமாக இறங்கி விடும்.

திருமூலர் பாடல் ஒவ்வொன்றும் ஞான குருதான். அதே போல மாணிக்க வாசகர், கம்பர், குறளாசிரியர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களும் ஞான குருமார்கள் தாம். மனம் ஒன்றிப் பாடல்களைப் பாடி அனுபவித்தால் குருஒளி கிடைக்கும்.

உண்மையான குரு என்றால் வெற்றுரையோ பயனில் சொல்லோ அவர் வாயிலிருந்து வரராது. பொய் என்பது உள்ளத்திலும் தோன்றாது. உதட்டிலும் நடமாடாது.

தங்களிடம் இருப்பவற்றையே மற்றவர்களுக்குக் கொடுக்கிறவர்கள் அவர்கள். தங்களையே மற்றவர்களுக்காக வழங்க வேண்டுமே என்று துடிக்கிறவர்கள் அந்த ஞானிகள்.

அப்படிப்பட்ட உத்தமர்கள் மற்றவர்களிடமிருந்து எதையாவது எதிர்பார்ப்பார்களா?

ஆனந்தமாக நிறைந்து வாழ்கிற சான்றோர் அவர்கள்.

மற்றவர்களிடம் ஒன்றை எதிர்பார்த்தால், அதுவும் பிழைப்புக்காக எதிர்பார்த்தால் அதற்கு இழிநிலை என்று பெயர்.

இழிநிலை வந்து விட்டால் போதும் பழிபாவத்துக்கு அஞ்சாத பஞ்சமா பாதகனையும் இவன் ஒரு கருணைக்கடல் என்று புளுகச் சொல்லும்.

தர்மபூஷணம், பண்பாட்டுக் களஞ்சியம், கொடைவள்ளல், நீதிக்கு வேலி, நேர்மைக்கு அரண் என்றெல்லாம் புளுகி அவனை ஏமாற்றச் சொல்லும்.

படித்தபடிப்பையே, ஏன் செம்மை நலம் மிக்க தீந்தமிழையே விலை பேசி விற்க வைத்து விடும்.

அப்படிப்பட்டவர்கள் எப்படி மற்றவர்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காவார்கள்? குருமாமணி என்று அவர்களை நம்புவது கோமாளித் தளம் ஆகி விடும். அல்லவா!

'நெஞ்சுக்குக் கீழே தாடி முளைத்தால் ஞானம் முறறினாலும் முற்றும், பேன் பற்றினாலும் பற்றும்' என்று ஒரு வசனம்.

இந்தப் போலிக் குருமார்கள் தாடியை உருவி விட்டாலும் பேன் பற்றிகள் தாம்.

காரியத்துக்காக, பிழைப்புக்காக, தடபுடலான தோரணைக்காக மற்றவர்களைப் புளுகிப் புளுகிப் பாராட்டுகிறவர்கள் பொய்யர்கள். இவர்களுடைய பொய்யும் பித்தலாட்டமும் எல்லாத் துறைகளிலும் நுழையும். நுழைந்து மூக்கை நீட்டும். சமயம், வழிபாடு, பக்தி ஆகிய துறைகளைக் கூட விட்டு வைக்காது இவர்களுடைய பொய்.

உணர்ச்சியே இல்லாமல் பக்தியோ பரவசமோ கடுகளவு கூட இல்லாமல் வெறும் வார்த்தைகளைப் போட்டே புகழ்ந்து தள்ளி விடுவார்கள் இறைவனைக் கூட!

''உண்மை இல்லாத இந்தப் பச்சைப் புளுகால் உங்களுக்கு என்ன பிரயோசனம்'' என்று அந்தப் போலிப் பண்டாரங்களையே பார்த்துக் கேட்கிறார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

யோசனையே இல்லாமல் தந்திரம் மிக்க புத்தியை வைத்தே புகழ்ச்சியை ஜோடிக்கிறீர்களே! இதை ஏற்றுக் கொள்வாரா பெருமான்.

'புந்தியால் உரை கொள்வரோ' என்றே அடித்துக் கேட்கிறார். மேலும் நீங்கள் என்னதான் பொய்யைச் சுருட்டி மடக்கி உள்ளே வைத்தாலும் அவர் கண்டுபிடிக்காமல் விடுவாரா? கண்டுபிடித்தால் இது பொய். எனக்குத் தேவை இல்லை. உணர்ச்சியோடு கூடிய மெய்தான் எனக்குத் தேவை என்று சொல்ல மாட்டாரா பெருமாள்.

'பொய் இல் மெய்யுரைத்து ஆள்வரோ?'

இறைவன் என்ன ஒன்றுமே தெரியாத அசடா?

''அன்றியே மிக அறவரோ

எமக்கு அடிகளாகிய அடிகளே.''

தெய்வநாதனாகிய பெருமான் (அடிகளாகிய அடிகள்)

ஒரே ஞானச் சுடர். அப்பேர்ப்பட்ட ஞான சூரியனையே பாராட்டுப் பத்திரத்துள் அடைக்கப் பார்க்கிறீர்களே! எதுகை, மோனை, அடுக்கு, மடக்கு என்று சொல் வலை வீசி கெட்டிக்காரத்தனமாய் உயர்த்துகிறீர்களே இது வெறும் ஜம்பந்தான். பகட்டுத்தான், இதற்கு இடம் தரக் கூடாது என்று அறிய மாட்டாரா பெருமான்.

''வந்த சாயின அறிவரோ தம்மை
வாழ்த்தினார்கட்கு நல்ல ரோ''

உங்கள் காரியம் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. உங்களைப் போல் அது இது என்று படிக்கவில்லை நான். கொஞ்சம் புரியும்படி விவரமாக எடுத்துச் சொல்லுங்கள். எனக்கு'' என்று முடிக்கிறார் சுந்தரர்.

பாடலின் முழு உருவம்

(சந்தம்)

தான தன்னன
தன்ன தன்னை
தான தன்னை
தான தன்
வந்து சொல்லுமின்
மூட னேனுக்கு
வல்லவா நினைந்து
ஏத்து வீர்!
வந்த சாயின
அறிவ ரோ? தமை
வாழ்த்தி னார்கட்கு
நல்ல ரோ?
புந்தி யால் உரை
கொள்வ ரோ? மற்றும்
பொய்யில் மெய்யுரைத்(து)
ஆள்வ ரோ?

---

வல்லவா நினைந்து ஏத்துவீர் - நம்மை வெல்ல ஆளில்லை என்கிற நினைப்பில் எப்படி எப்படியோ பாடுகிறீர்களே? வந்த சாயினை - தந்திரமான அலங்காரப் புகழ்ச்சியை. அறிவரோ. இது பொய்யென்று அறிய மாட்டாரா? புந்தி - புத்தி, பொய் இல் மெய் உரைத்து ஆள்வரோ - பொய் வேண்டாம் மெய் போதும் என்று சொல்ல மாட்டாரா? அறவரோ? எதற்கும் இடம் கொடுக்கிற அப்பாவியா அவர்.

அன்றி யேமிக

அறவ ரோ?எமக்(கு)

அடிக ளாகிய

அடிக ளே!

இனி நான் என்பது தேய வேண்டும். எனது என்பது மாய வேண்டும். அப்படியானால் மனம் துப்புரவாகும். பளிங்கு போல் மனம் தெளிந்து விட்டால் உடல், உயிர், உணர்ச்சி எல்லாமே இறைவன் என்பது விளங்கும்.

இப்படி விளங்கி விட்டால் அண்டபிண்ட சாரசரம் அவ்வளவும் கடவுள் தான் என்பது விளங்கத்தானே செய்யும்.

உண்மை அப்படித் தெளிவாய்த் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் பக்தி. மற்றப்படி காவி கட்டவோ, தாடி வளர்க்கவோ ருத்திராட்சம் போடவோ, பூசைப் பெட்டியைத் திறக்கவோ, மூடவோ, கிணு கிணு என்று மணியை அடிக்கவோ இல்லை பக்தி.

இது சம்பந்தமாகப் பரஞ்சோதி முனிவர் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

வான் என்பது முதலாகிய

மதுரேசனை வாழ்த்த

யான் என்பதும் எனதென்பதும்

வானம், காற்று, நெருப்பு, நீர், பூமி என்று ஐம்பெரும் பூதமாய் விரிந்த சொக்கலிங்க மூர்த்தியை வழிபட வழிபட, நான் என்கிற ஆணவமும் என்னுடையது என்கிற மயக்கமும் பறந்தோடி விட்டன. சதைப்பற்று, (உள்ளீடு) இல்லாத விளாம்பழம் போல மனம் சுயம்பிரகாசம் பெற்றது.

இபம் உண்ட விளாம் நேர்

தான் என்பது குறி ஆயின

மனமானது கண்ணாடி போல உண்மையைக் காட்டின பிறகு ஏன் தவக்கோலம். அது போக்கிரித்தனந்தானே.

''தவம் என்பது அவமே''

மதுரையில் கொலுவிருக்கும் சொக்கலிங்கம் பேரண்டத்தையே தன்னுள் வைத்திருக்கும் பரம்பொருள். அப்படியே பசுவுள் அமர்ந்து பால், தயிர், நெய், கோமயம், சாணம் ஐந்தையும் திருமஞ்சனம் ஆடும் கோலாகலனும் கூடத்தான்.

அவளை வழிபட வேண்டும். ஆணவ மயக்கம் விலக அது போதும்.

ஆன் என்பது தரும் ஐந்தையும்
ஆடும்பெரு மானை,
வான் என்பது முதலாகிய
மதுரேசனை வாழ்த்த
நான் என்பதும் எனதென்பதும்
இபம் உண்ட விளாம்நேர்
தான் என்பது குறியாயின
தவம் என்பது அவமே

ஆணவ மயக்கம் ஒழிய வேண்டியது. உடனே உண்மை விளங்கி விடும். பிறகு அந்த உண்மையை உணர வேண்டியதுதான். அனுபவிக்க வேண்டியதுதான். அப்படிச் செய்யாமல் இறைவனை வசியப்படுத்துகிறேன், மசிய வைக்கிறேன், அதற்காக வாழ்த்துக் கவி இயற்றுகிறேன், பாராட்டு மலர் தயாரிக்கிறேன் என்றால் அது கோமாளித்தனந்தானே.

வாழ்த்துக்கும் பாராட்டுக்குமா அவர் ஆசைப்பட்டு அலைகிறார்.

மோகத்தில் எல்லாம் பெரிய மோகம் - பொல்லாத மோகம் பெண் மோகம். அந்தப் பெண் மோகத்தையே சுட்டுச் சுடுசாம்பலாகக்கியவர் பெருமான். இத்தனைக்கும் அழகிய இளங்குமரியையே சரி பாதியாக (உமையை) சேர்த்து வைத்துக் கொண்டே காமத்தை வேரறக் களைந்தவர் அவர்.

---

ஆன் - பசு, வான் - ஆகாயம், இபம் - யானை. உள்ளீடற்ற விளாம்பழத்தை யானை உண்ட விளாம்பழம் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஆசையற்று மனம் அப்படி ஆக வேண்டும். ''விட்டதடி ஆசை விளாம்பழத்துத் தோட்டோடு''

பெண்ணாசையை (காமனையே)யே வாலை ஒட்ட நறுக்கி விட்டார் பெருமான். அப்படி இருக்க பசப்பு மொழியால் பாராட்டி மடக்க முடியுமா அவரை.

முடியும் என்றால் அந்தப் பசுப்பு மொழியில் ஒன்றிரண்டு வார்த்தைகளையாவது என்னிடம் சொல்லுங்கள் என்று நையாண்டி பண்ணுகிறார் திருமூலர். யாரைப் பார்த்து?

போலிப் பண்டாரங்களை நோக்கித்தான்

காமனை வென்ற கண்
ணாரை உகப்பது
தூமொழி வாசகம்
சொல்லுமின் நீரே.

இனி சகோதரர்கள் இருவர். இரண்டு பேரும் நாடகத்தில் நடித்து வந்தார்கள். பணம் குவிந்தது. பேரும் புகழும் வளர்ந்து உயர்ந்தது. அண்ணன் கதாநாயகனாக வருவான் தம்பி. அதற்கேற்ற வில்லனாக வருவான்.

பேச்சு, நடிப்பு, வேடம் இவைகளில் மஞ்சாடி கூட விட்டுக் கொடுக்கமாட்டார்கள் இருவரும்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இரவு பகல் பாராமல் ஒருவரை ஒருவர் எதிர்த்தே வந்தார்கள் நாடகத்தில்.

முப்பத்தைந்து வருட நாடக வாழ்க்கை முடிந்து விட்டது. இப்பொழுது ஒரே வீட்டில் கீழ் பாதி மேல் பாதி என்று குடி இருக்கிறார்கள். ஒருவர் மேல் ஒருவர் உயிரை வைத்தே உறவாடுகிறார்கள். ஒருவரை ஒருவர் எதிர்ப்பதும் இல்லை. அழிப்பதும் இல்லை. போற்றுவதும் இல்லை. தூற்றுவதும் இல்லை.

நாடகத்தோடு அவை எல்லாம் சரி. இறைவனுடைய ஆனந்தக் கனவு என்கிற நாடகமும் அப்படித்தான். வேண்டியவர், வேண்டாதவர், நண்பர், பகைவர், அன்பு, கொடுமை என்று வேசம் போட்டு ஆடுகிறது. நியதி.

அதன்படி ஆளுக்கொரு வேஷத்தைப் போட்டுக் கொண்டு ஆடுகிறோம்.

அடடா / இது நாடகமாயிற்றே என்று தெரிந்து விட்டால் போதும். வேற்றுமை தொலைந்து விடும். எல்லாம் ஒன்றாய் நின்று பரிமளிக்கும்.

பிறகு மனிதன் வேறு கடவுள் வேறு இல்லை. அவ்வளவும் ஒன்றாய் நிறைந்து நிற்கும்.

பிறகு வளைக்கவோ வாழ்த்தவோ ஒன்றும் இல்லைதானே.

இனிப்பாடல்

தான்வரை அற்றபின்
யாரை வரைவது?
தான் அவன் ஆனபின்
யாரை நினைவது;
காமனை வென்றகண்
ணாரை உகப்பது
தூமொழி வாசகம்
சொல்லுமின் நீரே!

## (65)

சமுத்திரத்தில் அலை, குமிழ், சுழல் என்றெல்லாம் உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. அப்படியே சமுத்திரத்தோடு சமுத்திரமாய் ஒன்றியும் விடுகின்றன. சமுத்திரத்தை விட்டுப் பிரிவதில்லை அவை.

பேரண்டங்கள், அண்டங்கள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்கள் எல்லாம் இறைவனிடத்திலிருந்து தான் தோன்றுகின்றன. அப்படியே இறைவனுடன் ஒன்றியும் விடுகின்றன.

---

தான் வரை அற்ற பின் - நான் என்கிற வரையறை - தனிமை போனால் எல்லாம் ஒன்றாய் நிறைந்து நிற்கும். அதன்பின் - யாரை வரைவது - வேறு யார் இருக்கிறார், எண்ணத்தில் வரைந்து மகிழ, தான் அவன் ஆனபின் - கடவுளுடன் - பூரணத்தோடு பூரணமாக ஒன்றிய பின். யாரை நினைவது - இன்னொன்று இருந்தால் அல்லவா அது பற்றி நினைப்பு வரும். கண் - நெற்றிக்கண், ஞான நோக்கு. உகப்பது - மகிழ்வதற்கு ஏற்ற வாசகம் - உபசார மொழி.

இறைவனை விட்டு எதுவும் பிரிந்து செல்வதில்லை.

அப்படியானால் இறைவன் ஒருவன் தான். உண்மை என்றால் அதுதான். அந்தப் பேருண்மைதான் பிரபஞ்சமாக வடிவெடுக்கிறது. மண்ணுக்கும் விண்ணுக்குமாய் நிறைந்து நிற்பது போலத் தோன்றுகின்றனது.

நிலத்திடை வானிடை

நீண்டகன் றானை

எப்படி வரையறைப்படுத்த முடியும்?

வரையறைப்படுத்த முடியாத ஒன்றைப் பார்க்க முடியுமா? பாவனை பண்ணத்தான் முடியுமா?

பாவனையைக் கடந்ததை எப்படி ஓவியமாக வரைய? அந்த ஓவியத்தை எந்தச் சுவரில், எந்தக் கட்டிடத்தில் தொங்க விட, ஓவியம் ஆடும் கட்டிடம் (கோயில்) என்று ஒன்று ஏற்பட வழியே இல்லை என்றால் அதை வலப்பிரதட்சணமாகச் சுற்றுவதும், விழுந்து கும்பிடுவதும் தேவை இல்லை தானே.

எப்படி வணங்க என்று எனக்குத் தெரியவில்லை. சாமி கும்பிடவே எனக்குத் தெரியாது என்கிறார் திருமூலர்.

வரைத்து வலம் செயும்

ஆறறி யேனே.

ஓ என்று சத்தம் போடுகிறது. (குலைக்கின்றது) சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தில் தான் திட்டுத் திட்டாக - கடல்த் தீவுகள் போல மிதக்கினறன. நாடுகள். நீர் பூமி. காற்று, நெருப்பு, ஆகாயம் இப்படியாக ஐம்பெரும் பூதங்கள். அவ்வளவும் இறைவன் தான். அப்படி இருக்க இறைவனை எங்கு போய்த் தனியாகப் பார்க்க.

இனிப்பாடலின் முழு உருவம்

குலைக்கின்ற நீரில்,

குவலய நீரும்,

அலைக்கின்ற காற்றும்,

அளவோ (டு)ஆ காசம்

நிலத்திடை வானிடை
நீண்டகன் றானை
வரைத்து வலம் செயும்
ஆறறி யேனே.

## (66)

உடம்பில் உள்ள உயிர்ச்சத்து குறையக் குறைய முனகல் வரும். உடல் தளர்ச்சியோடு உள்ளமும் தளர்ந்து விட்டது. என்றாள். அதன் கட்டுக்கோப்பு நெகிழ்கிறது. அவிழ்கிறது என்றால் புலப்பமே உண்டாகி விடும்.

யோசனையே செயலிழந்து புத்தி தடுமாறத் தடுமாற தனக்குத் தானே பேச்சு வரும். தன்னைப் பார்த்தே சிரிக்க வைக்கும். கிறுக்கு என்று சொல்லும்படி உளறவும் வைக்கும். பிதற்றவும் பண்ணும்.

சிந்தனை இல்லை, தெளிவில்லை, ஆராய்ச்சி மட்டும் விடமாட்டேன் என்கிறது என்றாலும் கிறுக்குப் பிடித்து விடும்.

கன்னாபின்னா என்று உளறிக் கொட்ட வைக்கும் அந்தக் கிறுக்கு.

இனி, நான், எனது, வெற்றி, தோல்வி, பணம், அதிகாரம், வீடு, வாசல், சொத்து, சுகம், மனைவி, மக்கள் இப்படிப் பலப்பல.

இவைகள் தாம்! நம்மைச் சுற்றிச் சுற்றி வருவன. இவற்றுக்குத் தான் சுற்றம் என்று பெயர். சுற்றுப்புறம் என்பதும் இதற்கு ஒரு பெயர்தான்.

இந்தச் சுற்றுப் புறத்தை விட்டு விலகியவர்கள் தாம் ஞானிகள். மெய்யடியார்கள். விலகுவதென்றால் விட்டு விடுவதில்லை. அவைகளால் வரும் ஆணவத்தை விடுவது, தங்களைச் சுற்றி சுற்றி வருவனவற்றை அவர்கள் விலகி

---

குலைக்கின்ற நீரில் - சமுத்திரத்தில் அலை முதலியன தோன்றி மறைவது போலவே. குவலயம் நிலமும், நீரும் - கடலும், அலைக்கின்ற காற்று - வீசி நடமாடும் காற்றும். அனல் - நெருப்பும். வரைத்து - நிலைப்படுத்தி. வலம் செயும் ஆறு - வழிபடும் முறை.

விட்டார்கள். ஆனால் இறைவனை விட்டு மட்டும் அவர்கள் விலக மாட்டார்கள். அவனையே சுற்றிச் சுற்றி வருவார்கள் அவர்கள். அப்படி அடியார்கள் வளைய வளையச் சுற்றி வர அவர்களுக்கு ஞான ஒளி (சோதி) மயமாய் எதிரில் நிற்கிறான் பெருமான்.

ஒளி வெள்ளமாய்ப் பொங்கும் பெருமானையே— அவனருளையே பெற்றவர்கள், மனம் தளர்வார்களா? நடை தள்ளாடுவார்களா? புலம்புவார்களா, பிதற்றுவார்களா?

சுற்றற் றவர்பற்றித்
தொடர்ந்த என் சோதியை
பெற்றுற் றவர்கள்
பிதற்றொழிந் தாரே.

பற்று பாசம் எல்லாம் கழன்று விட வேண்டும். அதே போல பாடம், படிப்பு, பாராயணம் எல்லாம் விலகி ஒதுங்கி விட வேண்டும். அப்படி ஒரு பக்குவம் வந்த பிறகு சோதி தெரியும்.

''கற்றற்றவர் கற்றுக் கருதியே கண்ணுதல்''

இனிப்பாடலின் முழு உருவம்

பற்றற் றவர்பற்றி
நின்ற பரம்பொருள்,
கற்றற் றவர்கற்றுக்
கருதிய கண்ணுதல்,
சுற்றற் றவர்சுற்றித்
தொடர்ந்த ஏன் சோதியை
பெற்றுற் றவர்கள்
பிதற்றொழிந் தாரே.

## (67)

சொத்து ஒன்று சம்பந்தமான வழக்கு ஒன்று உயர்நீதிமன்றத்தில் நீண்டகாலமாக நிலுவையில் இருந்தது. பிறகு விசாரணை முடிந்தது. தீர்ப்பு வழங்க நாள் குறித்தாகி விட்டது.

தீர்ப்பைப் பெற திருநெல்வேலியிலிருந்து ரயிலேறி வருகிறோம். சென்னையை நோக்கி வருகிறது ரயில்.

நாம் இருந்த (இருக்கையை) இடத்தை ஒட்டி வேறு சில பயணிகளும் இருந்தனர். அவர்களுடன் பல விஷயங்கள் பற்றிப் பேசினோம். ஒன்றாக இருந்து உணவருந்தினோம். பழகினோம். காரசாரமாகக் கூட விவாதம் நடத்தினோம்.

மறுநாள் காலை சென்னை (ரயில்) நிலையம் வந்தது ரயில். இறங்கி அவசரம் அவசரமாகத் தங்குவதற்கு இடம் தேடினோம். குளித்துச் சாப்பிட்டோம். ஆவலோடு நீதிமன்றம் வந்து சேர்ந்தோம். தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கிறோம்.

ரயில், ரயில் பெட்டி, சேர்ந்து வந்த பயணிகள், உணவு, உரையாடல் எல்லாம் அப்படி. அப்படியே போய் விட்டன.

தீர்ப்பு ஒன்றிலேயே குறியாக இருக்கிறோம் நாம்.

இனி, உண்மையை நாடித் தேடி உணர்வது தான் குறி. அது வாய்க்கும் வரை சிலர் நண்பர்களாகிறார்கள். சிலர் எதிர் முகாமில் இருக்கிறார்கள். அவர்களை எப்படி எப்படிச் சமாளிக்க வேண்டுமோ அப்படி அப்படிச் சமாளித்துக் கொள்கிறோம்.

உண்மை விளங்கி விட்டது. பொய் ஒழிந்தே போய் விட்டது. ஆனந்தம் பொங்கி விம்முகிறது என்றால் அனுபவிக்க வேண்டியதுதானே. அதை விட்டு விட்டு அவரை இவரை என்று தேடிக் கொண்டா இருப்போம்.

இணங்க வேண்டா
இனி உல கோருடன்

சரி, பிரசித்தி பெற்ற வழக்கறிஞர் ஒருவர். இருநூறு பக்கம் முந்நூறு பக்கம் என்று வழக்குக் கட்டு இருந்தாலும் வரி விடாமல் படிப்பார். அதில் பத்துப் பன்னிரண்டு வரிகளை மட்டும் வழக்கை உடைக்க ஆயுதமாக எடுத்துக் கொள்வார்.

அந்தக் குறிப்புகளுக்கு மெருகு கொடுப்பார். அவற்றைப் பளபளப்பாக்குவார். அவற்றில் கிடக்கிற ஓட்டை உடைசல்களைச் செப்பனிட்டு புதிய உருப்படியாகவே கடைந்தெடுத்து விடுவார் அந்தக் குறிப்புகளை.

நீதிமன்ற வாதத்தில் அம்பு விடுவது போல ஒவ்வொரு குறிப்பாக அவர் எடுத்து விடுகிற தோரணையே தனி அழகு. அலங்காரமாக இருக்கும் அது.

முடிவு என்ன? வழக்கில் வெற்றி இவருக்குத்தான்.

இனி, பெரிய ஜமீன் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்று இவரிடம் வந்தது. பலபல சிக்கல்களும் முடிச்சுகளும் விழுந்து கிடக்கிற வழக்கு அது.

வழக்குக் கட்டே ஆயிரத்து ஐந்நூறு தாள்களுக்கு மேல் இரண்டாயிரம் தாள்கள் வரை இருந்தன.

அவ்வளவையும் எழுத்தெழுத்தாகப் படித்தார். பல இடங்களில் பல குறிப்புகள், போட்டார். வழக்கையே ஒரு உதறு உதறி எறியும் நுணுக்கமான குறிப்புகள் அவை. அவற்றுக்கு அடையாளம் இட்டு சிவப்பு மையால் அடிக்கோடிட்டார்.

அந்தக் குறிப்புகளுக்கு வல்லமையும் வனப்பும் கொடுப்பதற்காக சட்டநூல்கள் பலவற்றை எடுத்துப் புரட்டிப் படித்தார். பழைய தீர்ப்புகள் பலவற்றையும் தேடி எடுத்துப் படித்தார். அவற்றிலிருந்து எடுத்த குறிப்புகளையும் எண் போட்டுக் குறித்துக் கொண்டார்.

இந்த நிலையில் அவரை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்து உத்தரவை அனுப்பி வைத்து விட்டார்கள். அவசரம் அவசரமாக வழக்கையே வேறொரு வழக்கறிஞரிடம் ஒப்படைத்து விட்டார்.

வழக்கு, வழக்குக் கட்டு, குறிப்பு, அடிக்கோடு, சட்டப்புத்தகம், பழைய தீர்ப்பு எல்லாம் அவரை விட்டு விலகி விட்டன.

அந்த வழக்கைப் பற்றிய படிப்பு அதோடு சரி.

உண்மை விளங்கியபின் தர்க்கமாவது வியாகரணமாவது. நிகண்டு, அகராதி, சொல்லிலக்கணம், எழுத்திலக்கணம் எல்லாம் தேவையா?

> நுணங்கு கல்வியும்
>
> நூல்களும் என்செயும்

உண்மைதான் கடவுள். அவனுடைய திருமேனியே, வடிவமே உண்மை தான் என்று பட்டபிறகு, தேங்காய் பழம் வைத்து கடவுளுக்கு அர்ச்சனை பண்ணுகிறேன். அவரைக் கும்பிடப் போகிறேன் என்றால் அது பொருந்துமா?

வணங்க வேண்டா
வடிவை அறிந்தபின்

வியாக்கியானம் பண்ணி பரண்டுதற்கோ பிரசங்கம் பண்ணிப் புலம்புவதற்கோ அவசியமே இல்லை.

பாடலின் முழு வடிவம்

இணங்க வேண்டா
இனிஉல கோருடன்
நுணங்கு கல்வியும்
நூல்களும் என்செயும்?
வணங்க வேண்டா
வடிவை அறிந்தபின்
பிணங்க வேண்டா
பிதற்றை ஒழிமினே

நுணங்கு கல்வி - நுட்பமான. நூல் - சாத்திர நூல்கள். பிணங்கல் - வாதப் பிரதிவாதம். பிதற்றல் - உளறல். ஒழிமின் - விட்டு விடுங்கள்.

## ஆனந்தத்தின் தொனி
## (68)

கடலில் கப்பல் போய்க் கொண்டிருக்கிறது. கப்பலின் மேல்தளத்தில் அதிகாரிகள் சிலர் பிரிஜ் ஆடுகிறார்கள்.

கடலில் அப்பொழுது வேகமாக வீசி அடிக்கிறது காற்று. கப்பல் ஆடுகிறது. மேஜையோ மிக அதிகமாக ஆடுகிறது. நிலை குலைந்து அப்படியும் இப்படியுமாகக் குலுங்கிக் குலுங்கி மேஜை ஆடுவதால் பிரிஜ் ஆட முடியவில்லை.

கப்பல் பணியாளர்கள் ஆணியும் சுத்தியலுமாய் வந்தார்கள். மேஜையின் காலை தளத்தின் சுவரோடு ஆணியடித்து இறக்கி முறுக்கி விட்டார்கள்.

மேஜைக்கு இப்பொழுது நடுக்கம் இல்லை. பிரிஜ் ஆட்டம் தொடர்கிறது. சமுத்திரமே கொந்தளித்தாலும், கப்பலே ஆடினாலும் மேஜை உறுதியாய் நிற்கிறது.

நம்முடைய காரியமும் மேஜை மாதிரிதான். இறைவன் செயலோடு நாம் ஒன்றி விட வேண்டும். ஒன்றி விட்டால் போதும்.

வான் நின்(று) இடிக்கில் என்?
  மாகடல் பொங்கில் என்?
கால் நின்ற செந்தீக்
  கலந்துடன் வேகில்என்?
தான் ஒன்றி மாருத
  சண்டம் அடிக்கில்என்
நான் ஒன்றி நாதனை
  நாடுவன் நானே

---

வான் நின்று இடிக்கில் என் - மின்னல்கள் வானில் நின்றபடி எப்படி வேண்டுமானாலும் வெடித்துச் சீறினாலும் சரி. கால் நின்ற செந்தீ - காற்றோடு சேர்ந்த நெருப்பு. மாருத சண்டம் - சண்ட மாருதம் புயல். நான் ஒன்றி - உண்மையோடு ஒன்றி நின்று. நாதனை நாடுவன் - பெருமானைத் தேடி அடைவேன். அவனுடன் இரண்டறக் கலந்தபின் எது என்ன செய்ய முடியும் என்னை.

## (69)

நான் என்பது பொய். எனது என்பதும் பொய். இது எனக்கு விளங்கி விட்டது. அப்படி இருக்க நான் பிறந்தேன். வளர்ந்தேன் என்பது பைத்தியம் தானே?

நான் என்பதே இல்லை என்றான பிறகு நான் பிறக்கிறதாவது ஒன்றாவது?

அப்படியானால் இறக்கிறேன், இறப்பேன் என்பதும் அபத்தந்தானே.

மரணமாவது ஒன்றாவது. எமனாவது எருமைக் கடாவாவது.

எமப்பயல் வருவதாவது? வந்து நம்மிடம் வாலாட்டுவதாவது?

நமன்வரின் ஞானவாள்
கொண்டே எறிவன்

இறைவன் ஒருவன் தான் உண்மை. அந்த உண்மையோடு சேர்ந்தே இருக்கிறேன். ஆனாலும் இறைவன் என்னை அழைத்துக் கொண்டு தேடி வருவான் என்பது போலவும், அவன் தோளைப் பற்றியபடி கூடலே பின் தொடர்ந்து போவது போலவும் ஒரு இன்பக் கனவு.

சிவன்வரின் நானுடன்
போவது திண்ணம்

நான் என்பது இல்லை என்றால் என் செயல் என்பதும் இல்லை தானே. என்னுடைய காரியம் என்னுடைய காரியம் என்கிற பேதைமை தானே நான் பிறந்தேன் என்று மயங்க வைக்கிறது.

நான் என்பதைக் கிள்ளி எறிந்தது போலவே எனது என்பதையும் கிள்ளி எறிந்து விட்டேன். தோன்றுவதம் அவன் தான் மறைவதும் அவள் தான்.

பவம் வரும் வல்வினை
பண்டே அறுத்தேன்.

இப்படி ஒரு தெளிவிலும் உறுதியிலும் நிற்கிற என்னை அசைக்க முடியுமா?

மார்க்கண்டனை அசைத்துப் பார்த்த எமனுடைய கதி என்ன ஆயிற்று.

இனிப்பாடலின் மொத்த உருவம்

நமன்வரின் ஞானவாள்
கொண்டே எறிவன்,
சிவன்வரின் நானுடன்
போவது திண்ணம்
பவம் வரும் வல்வினை
பண்டே அறுத்தேன்
தவம் வரும் சிந்தைக்குத்
தாள் எதிர் யாரே?

## (70)

திருவிழாக்கூட்டம். தாயோடு தான் சேர்ந்து நின்றது குழந்தை. நெரிசலில் எப்படியோ பிரிந்து விட்டது தாயை. அழுது புலம்பியது. ஏக்கம், பயம், நடுக்கம் எல்லாம் பற்றிக் கொண்டது குழந்தையை.

குழந்தையின் நிலையை ஒருவர் பார்த்தார். பரிவு உண்டாகி விட்டது அவருக்கு. 'உன் அம்மாவைக் காட்டுகிறேன் வா என்று குழந்தையை வீட்டுக்கு அழைத்து வந்தார்.

உன் அம்மா வருவாள், வந்து விடுவாள் என்றே பொம்மைகளை அதன் முன் போட்டார். வேறு சில பொருள்களையும் குழந்தையிடம் கொடுத்தார்.

பழம், பால்க் கட்டி என்று பண்டமும் கொடுத்தார்.

குழந்தையும் ஒருவாறு சமாதானம் அடைந்தது போல அழுகையை நிறுத்தியது. ஊது குழலை எடுத்து ஊதியது.

---

நமன் - எமன், மரண பயம். ஞான வாள் - இறைவன் மயம் எல்லாம் என்கிற உண்மை ஒளி. பவம் - பாவம். பண்டே - முன்னமே. ஏற்கனவே .தவம் வரும் சிந்தை - தெளிந்த உறுதியான எண்ணம்.

மின்சாரத்தால் ஆடும் மயிலின் கழுத்தையும் கொண்டையையும் பிடித்துக் கொஞ்சியது. பழம், பால் இவற்றையும் ருசி பார்த்தது. தாளையும் பென்சிலையும் வைத்து ஏதோதோ கிறுக்கியது.

இந்த நேரத்தில் வீட்டு வாசலை ஒட்டித் தாயின் சத்தம் கேட்டது. அவ்வளவுதான்! ஒரே பாய்ச்சலில் பாய்ந்து தாயின் காலைக் கட்டிப் பிடித்தது குழந்தை. இப்பொழுதும் ஆனந்தம் தாங்கமாட்டாமல் விம்மி விம்மி அழுதது குழந்தை.

கொஞ்சிக் கொஞ்சி மறுகியது குழந்தை. தாயும் அப்படியே செய்தாள். பிறகு தாயும் குழந்தையுமாகச் சேர்ந்து அவர்கள் வீட்டிற்குப் போய் விட்டார்கள்.

ஊதுகுழல், பொம்மை, பால் கட்டி, பழம் எல்லாம் அப்படி அப்படியே கிடந்தன. ஒன்றையும் எடுக்கவில்லை குழந்தை.

தாய் ஒருத்தியே போதும் குழந்தைக்கு. அவ்வளவும் தாய் தான் குழந்தைக்கு.

நாமும் குழந்தை மாதிரித்தான். இறைவனைக் காணாமல் எதை எதையோ பார்த்து பொழுதைப் போக்குகிறோம். கண்டு விட்டாலோ.

ஒழிந்தேன் பிறவி,
  உறவென்னும் பாசம்
கழிந்தேன், கடவுளும்
  நானும் ஒன்(று) ஆனேன்,
அழிந்தாங்(கு) இனிவரும்
  ஆக்கமும் வேண்டேன்
செழும் சார்(பு) உடைய
  சிவனைக்கண் டேனே!

என்று திருமூலர் போலத் துள்ளி விளையாடுவோம்.

---

ஒழிந்தேன் பிறவி - நான் பிறந்தேன் என்னும் மயக்கம் தொலைந்தது. உறவு என்னும் பாசம் அழிந்தேன். பாசபந்தம் நீங்கியது. அழிந்தாங்கு இனி வரும் ஆக்கம். பொய்யான நிலையற்ற உடைமைகள்.

## (71)

சமுத்திரத்தை ஒட்டி ஒரு சிறு குட்டம். அதில் சிறிதளவு தான் தண்ணீர்.

சமுத்திரத்தில் அலை பொங்கி எழும் போது குட்டத்திலுள்ள பாசி பிடித்த நீர் பயப்படும். ''ஐயையோ, இந்தச் சமுத்திரம் என்னைக் கொள்ளையடிக்கவல்லவா பார்க்கிறது. கரை தாண்டி வந்து என்னைக் கட்டி அணைத்தால் என் கதி என்னாவது'' என்று குலை பதறுகிறது குட்டம்.

''சமுத்திரம் வந்து தன்னை அதனோடு இணைத்துக் கொண்டால் குட்டம் என்கிற நம் சிறுமை ஒழியுமே நாம் சமுத்திரம் ஆகி விடலாமே என்கிற புத்தி இல்லை அதற்கு.

கலிபோர்னியாவிலிருந்து கன்யாகுமரி வரை வடதுருவத்திலிருந்து தென் துருவம் முடிய எப்படி நீண்டு பரந்து கிடக்கிறது பெருங்கடல். அதனோடு சேர்ந்து விட்டால் நாமும் பெருங்கடல் ஆகி விடலாமே என்று யோசிக்கிற புத்தி இருந்தால் பயப்படுமா குட்டம்.

''நாமும் அதே நீர்தான் சமுத்திரமும் நீர்தான். ஒரு கரை அல்லவா பிரிவினை செய்து அலங்கோலப்படுத்துகிறது'' என்கிற உண்மையானது தெரியாமலே அல்லவா போய்விட்டது குட்டத்துக்கு?

இனி, நமக்கும் அது விளங்கவா செய்கிறது. திருமூலர் போன்ற ஒன்றிரண்டு பேர்களுக்குத் தான் அந்தப் பாக்கியம் உண்டு.

ஒன்றுகண் டீர்உல
குக்கொரு தெய்வமும்,
ஒன்றுகண் டீர்உல
குக்கு உயிர் ஆவதும்;
நன்றுகண் டீர்இனி
நமச்சிவா யப்பழம்

தின்றுகண் டோர்க்கது
தித்தித்த ஆறே.

---

உலகுக்கு ஒரு தெய்வம் - பேரண்டங்கள் முடிய எல்லாவற்றுக்கும் தோற்றுவாயாக இருந்து அவை எல்லாவற்றுக்கும் உருவம் கொடுப்பது கடவுள். (தத்துவம்) தான். ஒன்று கண்டீர் - அதுதான் உண்மை. உண்மை என்றால் உண்மைதான். வேறு இல்லை. உலகுக்கு உயிர் ஆவது - ஆலமரமாகட்டும் கொசுவாகட்டும். எல்லாவற்றிலும் ஒரே உயிர்தான். அந்த உயிரும் அந்தக் கடவுள்த் தத்துவந்தான்.

உண்மையைத் தெரிவதை விட நன்மை என்ன இருக்கிறது வேறு. நாம் கடவுள் மயம் (நமச்சிவாய) என்னும் உண்மையை விட எளிமை வேறு என்ன இருக்கிறது. தேன் சொட்டும் கனியல்லவா? சுவைத்து (அனுபவித்து)ப் பாருங்கள். மதுரமயமாக இருக்கும் அது.

## தீயை வைத்தான் நீரில் மூழ்கினான் முடிந்தது காரியம்

## (72)

மேல் நாட்டு நிருபர் ஒருவர் மகாத்மா காந்தியிடம் கீழ்க்கண்ட கேள்வி ஒன்று கேட்டார். ''உங்கள் (இந்திய) நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் பக்தி நிறைந்தவர் ஆயிற்றே? சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபடுவார்களா? நீங்கள் ஆசைப்படுகிற நிர்மாணப் பணிகளை ஏற்றுச் செயல்படுவார்களா? பெண் விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, மத ஒற்றுமை இவை எல்லாம் ஒழுங்காக நடக்குமா'' இப்படி நிருபர் கேட்டு முடித்ததும் காந்திஜி புன்முறுவல் பூத்தார். திகைத்துப் போனார் நிருபர். அப்பொழுது காந்தி மகான் சொன்னார்.

நீங்கள் சொல்கிறபடி என் நாட்டு மக்கள் உண்மையான பக்தர்களாக இருந்தால் என்னுடைய பணி சிரமம் இல்லாமல் எளிதில் முடிந்து விடுமே! பக்தி என்பது உண்மையாக இருந்தால் மத வேற்றுமை இருக்குமா? தீண்டாமை என்கிற கொடுமை தோன்றி இருக்குமா, தனித்தனிக் கூட்டமாகப் பிரிந்து ஒன்றை ஒன்று வெறுக்குமா? பெண்ணைத் தெய்வம் என்று சொல்லிக் கொண்டே பெண் குலத்தையே அடக்கி ஒடுக்குமா?

பக்தியாவது ஒன்றாவது? பக்தர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் சோம்பேறிகள். வேளாவேளைக்குச் சாப்பிடுவார்கள். திண்ணையில் உட்காருவார்கள். அவன் இப்படி இவன் அப்படி என்று ஊர்ப்புரளி பேசுவார்கள். இல்லை என்றால் விளங்காத சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் வியாக்யானம் பண்ணுவார்கள்.

செயலில் ஆர்வமோ ஊக்கமோ கிடையாது அவர்களிடம். செயலை நினைத்தாலே பயப்படுவார்கள் அவர்கள். யோசனை செய்வதற்கே அஞ்சி நடுங்குவார்கள். இவர்களையா பக்தர்கள் என்பது?

பக்தர்கள் போலவே வேஷம் போடுவார்கள். ஆனால் சோம்பேறிகள். அதனால் தானே நான் இந்தப் பாடுபட வேண்டி இருக்கிறது,

இப்படிச் சொல்லி முடித்தார் காந்தி மகான்.

பக்தி இருந்தால் பயம் இருக்காது.

பயத்தில் எல்லாம் மட்டமான பயம் மரண பயம். மிக மிகக் கோழைத்தனமான பயம் அது. பொய்யின் பிடியில் எப்படிச் சிக்கித் திணறுகிறோம் நாம் என்பதற்கு நேர் சாட்சி மரண பயந்தான்.

ஆதி நாள் தொட்டு பிறந்தவர்களில் ஒருவராவது நிலைத்து நிற்கிறார்களா? நிலைத்து நிற்க முடியுமா?

நோயாளியும் இறந்து போகிறான். மருத்துவனும் இறந்து விடுகிறான். வாத்தியாரும் போய் விடுகிறார். மாணவனும் போய் விடுகிறான். பெற்றவர்களும் இறக்கிறார்கள். பிறந்தவர்களும் இறக்கிறார்கள். வென்றவனும் சாகிறான். தோற்றவனும் மடிகிறான்.

இவ்வளவும் கண் முன்னே நடந்து கொண்டே இருக்கிறது. எங்கும் எப்பொழுதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. பிறகு ஏன் மரணத்தை நினைத்துப் பதறுகிறான் மனிதன்.

சிந்திக்க ஆரம்பித்தால் மரணம் பற்றிய சிந்தனையும் வந்து விடுமே! என்ன செய்ய அதை என்று தான் பயப்படுகிறான் மனிதன்.

பொய் தான் பயத்துக்குக் காரணம். மரணத்தைத் தவிர்க்க முடியாது என்று தெரிந்து கொண்டான் மனிதன். ஆனால் அந்த மரணம் பற்றிய நினைப்பு வந்து விடக் கூடாதே என்று மட்டும் பயப்படுகிறான். அந்தப் பக்கமாக யோசனையே போய் விடாதபடி என்னென்னவோ தில்லுமுல்லுகள் அவ்வளவையும் பண்ணுகிறான் மனிதன்.

நான் என்பது பொய். முழுப் பொய். அதுதான் ஆதிக்கம் பண்ணுகிறது. உச்சி முதல் உள்ளங்கால் வரை அதன் ஆதிக்கந்தான். நினைப்பு, செயல், சொல் எல்லாவற்றிலும் ஆதிக்கம் செலுத்துவது அந்தப் பொய்தான்.

இறந்த பின் இந்த வீடு என்னாவது, மாடு என்னாவது, பேங்க் டெபாசிட் என்னாவது, பிறகு யார் என் சொல்படி கேட்பார்கள், யாரை அதட்ட முடியும், இந்தச் சட்டை, வேட்டி,

மேலங்கி, கோட்ஷூட்டாண்ட், கடிகாரம் எல்லாம் எங்கு போகும். ஒன்றுமே இல்லை என்றால் என் நிலை என்ன என்று மறுகுகிறது நான்.

மற்றப்படி உயிரோ, உடம்போ பயப்படுவதில்லை. அவற்றுக்குத் தெரியும் மரணமும் இல்லை. ஜனனமும் இல்லை என்பது.

பயப்படுவதெல்லாம் நான் என்கிற பொய் தான்.

உயிர் என்றால் என்ன என்று தெரியுமா இந்த நான் என்பதற்கு. அதைப் பார்த்ததும் இல்லை, அதனோடு பேசியதும் இல்லை. பழகியதும் இல்லை இந்த நான்.

அப்படி இருக்க அந்த உயிருக்காக இது என்ன அழுகை அழுகிறது.

உயிர் பற்றிய விபரம் இருக்கட்டும். உடம்பைப் பற்றிக் கூட இந்த நான் என்பதற்கு ஏதாவது தெரியுமா?

எலும்பு, நரம்பு, சதை, தோல், ரத்தம், கால், கை, மூக்கு, விழி, மண்டை, மூளை, நகம், ரோமம், வயிறு, நெஞ்சு என்று எப்படிச் சேர்த்து வைத்திருக்கிறது உடம்பு என்கிற பெயரில்?

ஒன்றோடொன்றைச் சேர்த்து வைத்திருக்கிறதே எங்கேயாவது தையல் உண்டா, பூட்டுச் சாவி உண்டா, இல்லை ஆணி வைத்து அடித்து இறக்கித்தான் விட்டிருக்கிறதா, இல்லை பசை போட்டுத்தான் ஒட்டி இருக்கிறதா?

எந்தவிதமான சொருகுமானமும் இல்லை. ஆனால் அத்தனையும் உலையாமல் இயங்குகிறது. மஞ்சாடி கூடப் பிறழ்வதில்லை, சிதறுவதில்லை, விலகுவதில்லை.

பகல், இரவு என்று பாராமல் ஆண்டாண்டு காலமாக ஒன்றாய் நின்று ஒரு தன்மைத்தாய் இயக்குகின்றன அத்தனை தத்துவங்களும்.

தலைகீழாக நின்றாலும் சரி, நனைந்தாலும் சரி, காய்ந்தாலும் சரி,ஏறினாலும் சரி, இறங்கினாலும் சரி, எழுந்தாலும் சரி, உட்கார்ந்தாலும் சரி, ஓடினாலும் சரி, நீந்தினாலும் சரி, பறந்தால் கூட கட்டுமானம் குலைவதில்லை உடம்பில்.

இந்த அற்புதத்தை ஒரு நாள் ஒரு பொழுதாவது பார்த்ததுண்டா இந்த நான். பார்த்துப் பரவசப்பட்டதுண்டா இந்த நான் வெளிச்சத்தைப் பார்க்க இருட்டு எப்படிக் கூசிக் கண்ணை மூடுமோ அப்படி கண்ணை மூடிக் கொள்கிறது பொய். உண்மையைப் பார்க்க - உடம்பின் உண்மையைப் பார்க்க, அதன் ஒருமைப்பாட்டைப் பார்க்கப் பயப்படுகிறது நான் என்னும் பொய்.

உடம்பில் ஒளிரும் அற்புதத்தைப் பார்த்திருந்தால் போதும் நான் என்னும் பொய் கரைந்தோடி இருக்கும்.

எங்கும் நிறைந்த பரம்பொருள் அல்லவா உடம்பாக - உடம்பில் இயங்கும் ஆயிரம் ஆயிரம் தத்துவங்களாகச் செயல்படுகின்றது என்பது தெரிந்திருக்கும்.

உடம்பாக - அதனுள் பல்வேறு தத்துவங்களாகத் தோன்றும் பரம்பொருள் புதிய புதிய வேஷம் போடும் பரம் பொருள் அப்படியே வேஷத்தைக் கலைத்துக் கொள்ளவும் செய்கிறது.

பரம்பொருள் எடுக்கும் வேஷந்தான் பிறப்பு. வேஷத்தை அது கலைத்துக் கொள்வதுதான் இறப்பு.

நான் என்பது இல்லை. இல்லாத ஒன்று பிறக்க முடியுமா, இறக்கத்தான் முடியுமா?

எல்லாம் இறைவனுடைய நாடகம். திருவிளையாடல்.

மாணிக்க வாசகர், அப்பர் சுவாமிகள் போன்ற ஞானிகளுக்கு இந்த உண்மை தெரிந்திருக்கிறது. இல்லை என்றால்

''ஊனை நாடகம் ஆட்டுவித்தவா'' என்று எப்படிச் சொல்ல முடியும் மணிவாசகப் பெருமானால்?

கடவுள் தத்துவந்தான் எல்லாம். உடம்பு, உயிர், உணர்ச்சி எல்லாம் அதுதான். அவருக்கு மனம் இருக்கும் வரை - விருப்பம் இருக்கும் வரை உடம்பு தங்க விளக்காய் ஒளி விட்டுப் பிரகாசிக்கும். அவர் முகத்தைத் திரும்பிக் கொண்டால் போதும். இந்தத் தங்க விளக்கு மண் சட்டிதான். அதுவும் உடைந்த மண் சட்டிதான். உடைந்து குப்பையில் கிடக்கும் மண்சட்டிதான்.

''கடலின் நஞ்சமு(து)
உண்டவர் கைவிடில்
உடலி னாரும் ஓர்
ஊர்முனி பாண்டமே''

என்று எப்படி அடித்துச் சொல்கிறார் அப்பர் சுவாமிகள்.

நாடகத்தை நாடகம் என்று பார்க்க வேண்டும். பார்க்க விடாமல் தடுக்கிறது பொய். நான் என்னும் பொய்.

அந்த நான் என்னும் பொய்க்கும் உடம்பு, உயிர், உணர்ச்சி என்கிற நாடகத்துக்கும் சம்பந்தமே இல்லை. ஆனால் ஏதோ உறவு இருப்பது போல உழப்புகிறது நான் என்னும் பொய்.

அதனுடைய மாய்மா லந்தான் மரண பயம்.

காலைத் தூக்கி ஒரு எட்டு வைக்கிறதென்றால், அதற்கே உடம்பில் பல பாகங்கள் கூடிச் சேர்ந்து செயல்பட வேண்டி இருக்கிறது. தசை நார், எலும்பு, நரம்பு, மூட்டு, இடுப்பு, கால், ஏன் தேகம் முழுவதும் ஒன்றுபட்டு முயல வேண்டும்.

ஒரு வார்த்தை வெளிப்படுவதற்குள் உடம்பு முழுவதும் அங்கங்கே என்னென்னவோ காரியங்கள், எப்படி எப்படி எல்லாமோ நடக்கின்றன.

இப்படி எண்ணிறந்த தத்துவங்கள். அவ்வளவும் ஒன்றாய் நிற்பதுதான் உடம்பு. அற்புதமாய் செப்பனிட்டு உண்டான கோட்டை கொத்தளத்தோடு கூடிய தங்கக் கோபுரம் இந்த உடம்பு. பொற்கோயில் என்றால் உடம்புதான்.

கோட்டை, கொத்தளம், கோயில், கோபுரம் எல்லாம் இறைவனின் ஆட்டந்தான். ஆட்டம் போதும் என்று அவன் முடித்ததும் கோயில் ஆடி விடும். தத்துவங்கள் எல்லாம் சிட்டாய்ப் பறந்து ஓடி விடும்.

இப்படி விடுகதை போடுவது போல நய உரை கூறி நலம் பாராட்டுகிறார் திருமூலர். மரணத்தைக் கண்டு பயப்படவில்லை அவர். அதன் தோள் மேலேயே கையைப் போடுகிறார் திருமூலர்.

எப்படி என்று பாருங்கள்.

முப்பதும், முப்பதும்,
முப்பத்(து) அறுவரும்,
செப்ப மதிலுடைக்
கோயிலுள் வாழ்பவர்;
செப்ப மதிலுடைக்
கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும்
ஒட்டெடுத் தாரே.

## *(73)*

நாலா திசையிலிருந்தும் நாடகம் பார்க்க வந்த கூட்டம், நாடகம் முடிந்த உடன் கலைந்து போகும். அது போலல்லவா சேர்ந்து பரிமளித்த தோற்றம் - உடம்பென்றும், உயிரென்றும், உணர்ச்சி என்றும் முளைத்தெழுந்த தோற்றம் ஆட்டம் முடிந்த உடன் அப்படி அப்படியே மறைந்து கொள்கின்றன. வேஷம் கலைந்து ஒன்றாய் விடுகின்றன அவை.

இனி சூரியனைச் சதா சுற்றி வந்து கொண்டிருக்கிறது பூமி. செவ்வாய், புதன் முதலிய கிரகங்கள் போலவே பூமியும் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

---

முப்பது முப்பது முப்பத்து அறுவர் - மொத்தம் தொண்ணூற்று ஆறு தத்துவங்கள். பல்லாயிரக்கணக்கான தத்துவங்கள் உடம்பில். அவற்றை தொண்ணூற்று ஆறு என்று ஒரு வகையாக வகுத்தும் தொகுத்தும் சொல்லி இருக்கிறது.

செப்பமதில் உடைக்கோயில் - உடம்பு. பலாப்பழத்துள் சுளைகளை அடுக்கி வைத்துச் சிப்பம் கட்டியது போல் அத்தனை தத்துவங்களையும் செம்மையான முறையில் இணங்கிச் செயல்பட வைத்திருக்கிற அற்புதந்தான் உடம்பு. ஒப்ப அனைவரும் - சொல்லி வைத்தது போல் அத்தனை தத்துவங்களும். ஓட்டெடுத்தார் - ஓடி விட்டன. திரு ஓடு - எடுக்கிற நிலைக்கு ஒய்ந்து போயின அவ்வளவும்.

சூரியனைப் பூமி சுற்றி வருவதனால் தான் பகல் என்றும், இரவு என்றும் தோன்றுகின்றன.

ஒரு திசையிலிருந்து சூரியன் மளமள என்று ஏறி வருவது போலவும், இன்னொரு திசையில் தட தட என்று அதே சூரியன் இறங்குவது போலவும் தெரிகிறது.

வானத்தில் தோன்றுவது அப்படி இருக்கட்டும். நம்முடைய வீட்டுத் தொழுவத்தில் கன்று போட்டது பசு. கொழு கொழு என்று வளர்கிறது கன்று. வளர வளர (அதன்) நாட்கள் ஒவ்வொன்றாய் உதிர்ந்து விட்டன. வளர்ச்சி தான் கண்ணில் பட்டதே தவிர அந்த வளர்ச்சிக்கு உள்ளேயே இருந்த வறட்சி முதுமை கண்ணில் படவில்லை.

முதுமைக்கு ஆளான கன்றோ கால்களை நீட்டிப் படுத்து விடுகின்றது. எழுந்து நின்றது விழுந்து விட்டது. கிழக்கே உதித்தெழுந்து ஏறிய சூரியன் மேற்கே சறுக்கி விழுவது போல விழுந்து விட்டது கன்றும்.

மேலே ஏறிப் போன கல் கீழே விழத்தானே செய்யும். இப்படியாக வானம், பூமி எங்கும் ஏறுகிறதென்றால் இறங்குகிறது. தோன்றுவதானால் மறைகிறது.

அப்படி இருக்க உடம்பு மட்டும் கல்லுப் பிள்ளையார் மாதிரி அப்படியே இருக்கும் என்று நினைக்கலாமா? அதுவும் ஏறத்தான் செய்யும். ஏறியது போல இறங்கத்தான் செய்யும். தோன்றவும் செய்யும். மறையவும் செய்யும்.

இதுகூட விளங்கவில்லை என்றால் என்ன தான் செய்கிறது?

கண்ணிருந்தும் குருடாய்ப் போகிறதே உலகம்!

பாடல்

கிழக்கெழுந்(து) ஓடிய
ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார்
விழிஇலா மாந்தர்!
குழக்கன்று மூத்(து) எரு(து)
ஆய்ச்சில நாளில்

விழக்கண்டும் தேறார்
வியன்உல கோரே

## (74)

நேர்த்தியான அற்புதக் கட்டுமானம் என்றால் அது உடம்பு தான். எலும்புகளை நிறுத்தி, நரம்புகளைக் கொண்டு பின்னி, சதையைக் குழைத்து அங்கங்கே அப்பி, தீற்றி மெழுகி வழு வழு என்று பூச்சுக் கொடுத்திருக்கிறது.

காற்றும் நீரும் எப்பொழுதும் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கும்படி வசதி பண்ணி வைத்திருக்கிறது. அதற்காக ஒன்பது மடைகள்.

சூடு தணியாமல் ஒரே நிலையில் ஒரு வெதுவெதுப்பு எப்பொழுதும் தங்கி இருக்கும்படியும் செய்திருக்கிறது.

அதற்காக ரத்தமானது மேலும் கீழும் உள்ளும் புறமும் சுற்றிச் சுற்றி வருகிறது.

இவ்வளவுக்கும் மேலே தோலை, இழை இழையாக வைத்து உடம்பு முழுவதையும் பின்னி இருக்கிறது.

உள்ளே இருக்கும் நிலைமையை அப்படியே வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருக்கிறது தோல்.

உடம்புக்குத் தோல் பை என்று பெயர். அதுவும் அழகான பெயர்தான். இப்படி எல்லாம் அற்புதம் பண்ணுவதற்கு உடம்புக்குள் என்ன தான் இருக்கிறதோ என்று அதிசயப்பட வைக்கிறது. அது எப்படித்தான் இருக்கிறதோ என்று திகைக்கவும் வைக்கிறது.

உடம்பாய் எழுந்து உடம்பு முழுவதுமே இருந்து கண்ணுக்குத் தெரியாமல் நவ நவமான கோலம் போட்டுக்

---

ஞாயிறு - சூரியன். தேறார் - தெளிய மாட்டேன் என்கிறார்களே, அதாவது தெரிய மாட்டேன் என்கிறார்களே? விழி இலாமாந்தர் - இவர் களைக் குருடர்கள் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல. விழி - கண். குழ கன்று - இளம் கன்று. எருது - காளை. வியன் உலகோர் - பரந்த உலகில் உள்ள பலரும் தான். பலப்பல பேர்களும் தான்.

கொண்டே இருக்கிற அந்த அற்புதத்தை 'கூத்தன்' என்று தானே சொல்லத் தோன்றுகிறது.

அப்படியே சொல்லி இருக்கிறது ஆதிகாலத்திலேயே. ''இதோ மாயக் கூத்தனும் தோற்பையும்.'' ''மாயக்கூத்தன் விளையாட்டை மாற்றினால் பொம்மலாட்டம் மாறும்.'' முடம், குருடு, ஊமை, கிறுக்கு, முதுமை, கிழடு என்று மட்டும் மாறுவதோடு நிற்காது. பிணம் என்றே மாறி விடும் என்றே சொல்லி இருக்கிறது.

ஆட்டம் நின்று விட்டால் பிறகு அதற்குப் பால் வார்த்தாலும் ஒன்று தான். காகம் வந்து அதன் கண்ணைக் கொத்தினாலும் ஒன்று தான்.

புண்ணியவான் போய்ச் சேர்ந்தான் என்று பலர் புகழ்ந்தாலும் அது பிணம் தான். சண்டாளன் ஒழிந்தான் என்று பலர் இகழ்ந்தாலும் மிச்சம் பிணந்தான்.

அப்படியானால் புகழ்வது யாரை, இகழ்வது யாரை? எப்படி இருக்கிறது மாயக்கூத்தனின் மாய விளையாட்டு? அழகு, அழகு, வெகு அழகு.

இதோ திருமூலர்

காக்கை கவரில் என்?
கண்டோர் பழிச்சில் என்?
பால்த்துளி பெய்யில் என்?
பல்லோர் புகழில் என்?
தோற்பையுள் நின்று
தொழ்அறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப்
போனஇக் கூட்டையே

---

காக்கை கவரில் என் - காக்கைகள் கூடி மூக்கு முழி என்று கொத்திப் பிடிங்கினாலும் சரிதான். பழிச்சில் என் - இழி செயல்களைப் பட்டியல் போட்டுச் சொன்னாலும் சரிதான். தோற்பை - உடம்பு. தொழில் அற செய்து ஊட்டும் - ஒவ்வொரு தத்துவத்தையும் நன்றாக வேலை வாங்கியும் அமுதூட்டியும் வளர்த்த. கூத்தன் - உயிர். கடவுள் என்கிற மாயாவி. கூடு - வெறும் கூடு, பிணம்.

## (75)

நான் என்பதற்குப் புத்தியே இல்லை. புத்தியில்லாததால் என்னென்னவோ கற்பனை பண்ணுகிறது. இதே தடபுடலை, இதே அதிகாரத்தை எப்பொழுதும் நடத்த முடியும் என்று நினைக்கிறது. இந்த இளமை, பொலிவு, உடம்பு எல்லாம் நம் கையில் தான். எப்பொழுதும் அவை நம் கையில் தான். அக்கம் பக்கம் நகர முடியாது நம்மை விட்டு என்றும் நம்புகிறது இந்த நான்.

சரியான கோமாளி தான் 'நான்' என்னும் கிறுக்கு. சுற்றி என்ன நடக்கிறது என்று பார்க்க மாட்டேன் என்கிறதே இந்த நான். ஒன்றையுமே பார்க்க மாட்டேன் என்கிறதே இந்த நான். போதை மயக்கம் அப்படி உச்சிக்கேறி நிற்கிறது 'நான்' என்னும் பைத்தியத்திடம்.

நேற்றுத்தானே வெற்றி விழாக் கொண்டாடினான். ஜே, ஜே, என்று முன்னும் பின்னும் பலர் முழங்கிய முழக்கம் அப்பப்பா விண்ணையே பிளந்தது.

ஆனால் இன்றைக்கு

நாட்டுக்கு நாயகன்

நம் ஊர்த் தலைமகன்

ஒன்றியத் தலைவர், மாவட்டத் தலைவர், இயக்குநர், ஆணையர், ஜமீன்தார், இளவரசர் என்கிற பட்டங்கள் எல்லாம் பறந்தோடி விட்டன.

ஏறி வந்த பீட்டன்சாரட், யானை, குதிரை, கெடிலாக்கார் ஒன்றும் இல்லை.

காட்டு மூங்கிலும் வைக்கோலும் தென்னங்கீற்றுமே வாகனம்.

காட்டுச் சிவிகை ஒன்(று)
ஏறி

பயலுக்குக் கடைசிப் பயணம். போய்த் தொலைகிறது. மயானம் வரையாவது போய் வருவோம் என்று உற்றார் உறவினர் சிலர் பின்னால் வருகிறார்கள். மங்கல வாத்தியம் இல்லை. பறைக் கொட்டுத் தான் முன்னால்

கடைமுறை

நாட்டார்கள் பின் செல்ல,
முன்னே பறை கொட்ட,

ஆடம்பரம் பொங்கக் கெக்கெலி கொட்டி எப்படி எல்லாம் தடபுடல் பண்ணினான் பயல். சத்தம் இல்லையே இப்பொழுது.

அனாதையாய்ப் போகிறான். துணைக்கு யாரும் இல்லை. ஒன்றுமே இல்லை.

இனிப் பாடலின் முழு உருவம்

நாட்டுக்கு நாயகன்,
நம் ஊர்த் தலைமகன்,
காட்டுச் சிவிகை ஒன்(று)
ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின் செல்லப்,
பின்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி
நடக்கின்ற ஆறே!

## (76)

இனி மிளகு வற்றல் வியாபாரி ஒருவர். பொதி ஒன்றுக்கு எண்ணூறு ரூபாய்க்கு ஆயிரம் பொதி வற்றல் வாங்கினார். மூன்று மாதம் கூட ஆகவில்லை. மிளகு வற்றல் விலை ஏறி விட்டது. பொதி ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் என்றே ஏறி விட்டது விலை.

ஏறின விலைக்கு அவ்வளவு வற்றலையும் விற்றார். கிடைத்த லாபம் இருபத்து இரண்டு லட்ச ரூபாய்.

---

நாயகன், தலைமகன், நம்பி என்பனவெல்லாம் கிண்டல். கேலியில் வருகிற ஏளனம். காட்டுச் சிவிகை - பாடை காட்டு மரக்கம்புகளால் கட்டிய பாடை. கடைமுறை - கடைசியாக. நாட்டார் - உற்றார் உறவினர். பறை - கொட்டு. நடக்கின்ற ஆறு. அடடா அவள் போகிற போக்கு, அழகு, அழகு.

நோட்டுக்களைக் கட்டுக் கட்டாகக் கட்டினார். அடுக்கினார். இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார். அடிக்கடி இரும்புப் பெட்டியைத் திறப்பார். நோட்டுக்கட்டுகளைப் பார்ப்பார். எண்ணுவார். கையில் எடுத்துக் கண்ணில் ஒற்றுவார்.

பூரிப்பு ஏற ஏற வயிற்றில் தொந்தியே வைத்து விட்டது வியாபாரிக்கு.

நோட்டுக் கட்டைத் தடவுவது போலவே அடிக்கடி தொந்தியையும் தடவுவார். கற்பனைக்கு மேல் கற்பனை வரும் அப்பொழுது.

புது வீடு, தோப்பு, வயல், தங்க வயிர நகைகள் என்றெல்லாம் கற்பனை வந்து வந்து போகும்.

புதுசா இன்னொரு பொண்டாட்டி இருந்தால் என்ன என்று யோசிப்பார் ஆசாமி.

வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், உதவி கேட்டு நிற்பவர்கள் இப்படி வரிசையாக அவர் கண் முன் வந்து நிற்பார்கள்.

அப்பொழுதெல்லாம் ஒரு மாதிரி ஓரம் சாரமாகவே அவர்களைப் பார்ப்பார் ஆசாமி. அப்படி பார்த்து மயங்குகிற நேரம் ஆசாமிக்கு.

'நேரம் ஆகவில்லையா? சாப்பிட வேண்டாமா? என்று கொஞ்சி அழைக்கிறாள் மனைவி'.

'இதோ வந்து விட்டேன். இலையைப் போடு' என்று குழைகிறார் வற்றல் வியாபாரி.

வற்றல் குழம்பு, வாழைக்காய்ப் புட்டு, கட்டித் தயிர், மாங்காய்த் தொக்கு என்று சாப்பாடு ஆனந்தமாக இருந்தது. ஒரு பிடி பிடித்தார் சாப்பாட்டை. ஜமுக்காளத்தை விரி, தலையணைகளைப் போடு என்று வேண்டினார் மனையாளிடம்.

இரண்டு பேரும் உட்கார்ந்தார்கள் ஜமுக்காளத்தில். வெற்றிலையையும் பாக்கையும் எடுத்து, சுண்ணாம்பை வெற்றிலையில் தடவி மடித்துக் கொடுத்தாள் மனைவி. அவள் கொடுக்கக் கொடுக்க வாங்கி வாங்கி மென்றார் ஆசாமி. ஆனந்தமாக இருந்தது.

மனதிலோ கற்பனை, வாயிலோ மென்று குதப்புகிற வெற்றிலைச் சாறு. அவ்வளவு தானா, கொஞ்சம் சல்லாப விளையாட்டும் பண்ணினார்.

அடப்பண்ணி வைத்தார்
அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடும்
மந்தணம் கொண்டார்,

வல்லிக் கொடி போல மனையாள் மார்பிலே துவள, ஐமுக்காளத்தில் இருந்தபடியே சொர்க்கத்தில் உலாவினார் வியாபாரி என்று தான் சொல்ல வேண்டும்.

அப்படி உலாவிக் கொண்டிருக்கும் போதே 'ஐயோ' என்று கத்தினார் வியாபாரி.

என்ன என்ன என்று கெஞ்சினாள் தர்மபத்தினி. வாய் திறந்து சொல்ல முடியவில்லை அவரால். நெஞ்சின் இடது பாகத்தில் கையை வைத்து ஐயோ, ஐயோ என்று பிசைந்தார்.

இடப்பக்க மே இறை
நொந்தது என்றார்

அப்படியே தன்னுடைய மடியில் படுக்க வைத்தாள் முதலாளியைத் தர்மபத்தினி. வினாடி நேரம் கூட ஆகவில்லை.

என்ன ஆனது. பாடலில் பார்க்கலாம்

அடப்பணி வைத்தார்
அடிசிலை உண்டார்,
மடக்கொடி யாரொடும்
மந்தணம் கொண்டார்,
இடப்பக்க மே இறை
நொந்தது என்றார்;
கிடக்கப் படுத்தார்
கிடந்தொழிந் தாரே.

---

அடப்பண்ணி - சமையல் செய்து. அடிசில் - உணவு. மடக்கொடியார் - மனையாள். மந்தணம் - மற்றவர் பார்க்க முடியாத ரகஸ்யம்.

'நான்' என்னும் ஆணவம் கழல வேண்டும். அது கழலக் கழலத்தான் மரணம் பற்றிய பயம் விலகும்.

பயம் விலகுவது மட்டுமல்ல, மரணத்தை எதிர்பார்த்தே நிற்பார்கள் ஆணவத்தை விட்டவர்கள்.

திருமணத்தை எதிர்பார்த்து இளைஞன் நிற்பது போல நிற்பார்கள் அவர்கள்.

ஞானம் என்றால் அதுதான்

தெய்வ கடாட்சத்தால் வருவது ஞானம். அதாவது மெய்யுணர்வு.

தெய்வ கடாட்சம் இல்லை என்றால் படிப்பிருக்கும், புத்தி இருக்காது. சட்டம் இருக்கும், நீதி இருக்காது. பசி, தாகம் முதலிய உணர்ச்சி இருக்கும், ஆனால் உணர்வு இருக்காது.

வெறும் மண்ணாங்கட்டிதான் அவன்.

மனிதனாகவேண்டும், மனிதரில் மனிதன் (வானவர்) ஆக வேண்டும் என்றால் தெய்வகடாட்சம் தேவை.

மெய்யுணர்வு என்ற ஞானம் தேவை.

புண்ணியன் எந்தை
புனிதன் இணையடி
நண்ணி அருள்கென
ஞானம் விளங்கிடும்;
மண்ணவர் ஆனவர்
வானவர் ஆவது
அண்ணல் இறைவன்
அருள்பெற்ற போதே.

மண்ணவர் – உணர்வில்லாத அசடுகள். வானவர் – மெய்யுணர்வு பெற்றவர். மரணம் பயமுறுத்துமா அவர்களை.

---

இடப்பக்கம் - இடது பக்க மார்பில். இறை நொந்தது - சிறிது நேரம் தான் வலி. இரண்டு மூன்று குத்துத்தான் குத்தி இருக்கும். கிடந்து ஒழிந்தார் - கூடு கிடக்கிறது. கூத்தன் போயே விட்டாள்.

## (78)

ஐயோ, என்கதி என்ன என்று பயப்படுவது 'நான்' என்கிற பித்தலாட்டந்தான்.

புழுப்பூச்சியிலிருந்து மனிதன் வரை கோடான கோடி உருவங்களில் புதுப்புது வேஷம் போட்டுத் தோன்றுகிற கடவுளுக்கு ஏன் வருகிறது பயம்? "மரணமா? அதன் பிறகு வாழும் வழி என்ன என்று பயப்படுவாரா கடவுள்?

புதுப்புது வேஷங்களைப் போடத்தானே பழைய பழைய வேஷங்களை அவர் களைகிறார்.

நான் என்கிற பித்தலாட்டத்துக்கு உண்மை விளங்காது. உண்மையைப்பற்றிய நினைப்பே இல்லை அதற்கு.

தன்னல வெறி ஒன்றுதான் அதற்கு. அதற்காகவே அது பயப்படுகிறது, அலறுகிறது. பழுக்காத மாம் பழங்களாக இருந்தாலும் அவைகளோடு நாலு அழுகல் மாம்பழங்களைப் போட்டுவிட்டால் போதும். எல்லாமே ஒவ்வொன்றாக அழுக ஆரம்பிக்கும்.

இன்னொருவர் முட்டிமோதிக் கதறினால் அதைப் பார்க்கிறவர் உணர்ச்சி நெகிழும். அவரும் கண்கலங்கி வருந்த ஆரம்பித்துவிடுவார்.

அப்படி ஒரு ஒட்டுவாரொட்டி வேதனை. அது காரணமாகவே அழுங்கல் என்று அதற்குப் பெயர். அழுங்கல் தானே அழுகலுக்கு மூலம்.

மரணம் மரணம் என்று 'நான்' என்கிற பித்தலாட்டம் பயந்து அலறுவதைப் பார்க்கிறதிட உணர்ச்சியும் கொஞ்சம் கண்ணைக் கசக்குகிறது. உணர்ச்சிக்கு வசப்பட்ட உடம்போ நீர்வடிக்கவே ஆரம்பித்து விடுகிறது கண்ணிலிருந்து.

சேர்ந்தாரைக் கொல்லிஎன்றால் இந்த நான் என்கிற பித்தலாட்டந்தான்.

தான் உண்டு தன் வேலை உண்டு என்கிறவர்கள் இது பற்றி எல்லாம் யோசிக்கமாட்டார்கள். 'ஒக்கச் செத்தால் துக்கம் இல்லை' எனகிற கணக்கில் உடல், உயிர், உணர்ச்சி எல்லாம் நான் என்பதுடன் சேர்ந்து மடிவதாக எண்ணி ஒப்புக்கு அழுவார்கள். அது தானே ஒப்பாரி.

அழுகையோடு அழுகையாய் சில சடங்குகளையும் செய்து முடிப்பார்கள். அதோடு முடிந்தது காரியம்.

ஆனால் திருமூலர் போன்ற ஞானிகள் இந்த நான் என்பதையும், அது பண்ணுகிற அயோக்கியத்தனங்களையும் பார்த்தவர்கள்.

நம் கூடவே இருந்துகொண்டு நமக்கே குழிவெட்டுகிறதே இந்த நான் என்பது என்றவுடன் அவர்களுக்கு முதலில் கோபம் வரும். பிறகு தானாக ஆறிவிடும் கோபம். சரியான கோமாளி இந்த நான் என்று அதன் மேல் பரிவே உண்டாகிவிடும்.

உண்மையை வெளிப்படுத்த வேண்டுமே என்கிற ஆர்வம் அவர்களுக்கு. ஆனால் காரணகாரிய விளக்கம் என்று புட்டுப் புட்டு வைத்தால் ஒன்றும் எடுபடாது. அதனால் கிண்டல், கேலி, நையாண்டி இவைகளைப் போட்டுத்தான் சொல்ல வேண்டி இருக்கிறது உண்மையை.

எப்படி வருகிறது அது?

நாட்டுக்கே நாயகன் நம் எல்லோருக்குமே பெருந்தலைவன் எப்படிப் போகிறான் பவனி. பாரய்யா பார்!! அவன் கடைசிப் பயணம் இது. போனால் வராது. நன்றாகப் பார் என்றெல்லாம் நையாண்டி பண்ண வேண்டி இருக்கிறது.

அதற்கும் மேலே நான் என்னும் ஆணவத்தின் தோலை உரித்துக் காட்டுவது போல, கிண்டலோடு கிண்டலாய்க் கொஞ்சம் காரத்தையும் சேர்த்து கொடுக்கிறார் திருமூலர்.

எப்படி எப்படி எல்லாம் தடபுடல் பண்ணி வாழ்ந்தான் இவன்? 'மதயானையே குனிந்து பின் வாங்கும்' இவன் ஒரு அதட்டு அதட்டினால்.

பெயரில் தான் எத்தனை பட்டங்கள் தொங்கின. அவற்றில் அடைமொழிகள் தான் எத்தனை எத்தனை தொங்கின பயலுக்கு.

அவ்வளவும் பறந்தோடிவிட்டன. பிணத்தைத் தூக்கு, பிணத்தைக் குளிப்பாட்டு என்று சாதாரணப்பட்டவர்களும் சொல்லும் நிலை வந்து விட்டது பயலுக்கு

பேரினை நீக்கிப்
பிணம்என்று பேரிட்டு

மலை போல நின்றல்லவா அதிகாரம் பண்ணினான், சிலைபோல ஆகிவிட்டானே பயல், மண்பொம்மை போலல்லவா ஆகிவிட்டான்.

என்ன இருந்தாலும் பறிகொடுத்த மனது பதறத்தானே செய்யும், ஆசாமிபோனதில் குடும்பத்தார் துயருற்று வருந்தினார்கள். துயரத்தையும் வருத்தத்தையும் விடவும் செய்தார்கள். ஆனாலும் தெருக்காரர்களும் ஊர்க்காரர்களும் விடுவார்களா?

சாரை சாரையாக வருகிறார்கள். கட்டிப்பிடிக்கிறார்கள். குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டே அழுகிறார்கள். என்ன செய்வார்கள் அப்பாவிக் குடும்பத்தார்? அவர்களோடு சேர்ந்து இவர்களும் அழுகிறார்கள்.

அழுது தொலைக்க வேண்டி இருக்கிறதே ஒப்புக்கு! அந்த ஒப்பாரிச் சத்தத்தில் ஊரே அல்லோல கல்லோலப் பட்டுவிட்டது.

ஊரெல்லாம் கூடி
ஒலிக்க அழுதிட்டு

இப்படியே விட்டுவிட்டால் சரிப்பட்டு வராது காரியம் என்று வயது வந்தர்கள் தீர்மானித்தார்கள்

பயலை (பிணத்தை) எடுத்துப் பாடையில் வைத்தார்கள். கொட்டு முழக்கத்தோடு சுடுகாட்டில் கொண்டு வந்தே இறக்கிவிட்டார்கள் பயலை.

அங்கே அடுக்கி வைத்திருந்தது விறகை. அடுக்கிய விறகின் மேல் இறக்கிவைத்துப்படுக்க வைத்தார்கள் பயலை. எருவை மேலே போட்டுப் பரப்பினார்கள். பக்கவாட்டில் அணைத்தும் வைத்தார்கள் எருவை. அவை சரிந்து விழுந்து விடாதபடி ஈரமண்ணைக் குழைத்து அப்பியும் விட்டார்கள். பிறகு கொள்ளிவைக்கிறவன் கொள்ளியை வைத்தான். ராஜாதிராஜன், ராஜமாத்தாண்டன், ராஜ கம்பீரன் பிடிசாம்பலாய் நீறுகிறான்.

சூரையங் காட்டிடைக்
கொண்டுபோய்ச் சுட்டிட்டு.

அவ்வளவுதான் கொள்ளிவைத்தவனிலிருந்து அவ்வளவு பேரும் ஆற்றிலும் குளத்திலும் இறங்கினார்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று நீரில் மூழ்கி எழுந்தார்கள்.

கரையில் ஏறும் பொழுதே "நெல்விலை என்ன இப்படி தலைகீழாய்ச் சரிகிறது. தங்க விலை போகிற போக்கைக் கவனித்தாயா?

என்ன பஞ்சாயத்துப் பேசுகிறான் மேலத்தெரு சுப்பையா? பஞ்சாயத்தா பேசுகிறான் பஞ்சாயத்து" என்றெல்லாம் பேச்சு ஆரம்பித்துவிட்டது.

பயலோ நாதியே இல்லாமல் வெந்து நீறுகிறான்.

நீரினில் மூழ்கி
    நினைப்பொழிந் தாரே.

இனிப்பாடலின் முழுஉருவம்

ஊரெலாம் கூடி
    ஒலிக்க அழுதிட்டுப்,
பேரினை நீக்கிப்
    பிணம் என்று பேரிட்டு,
சூரையம் காட்டிடைக்
    கொண்டுபோய்ச் சுட்டிட்டு,
நீரினில் மூழ்கி
    நினைப்பொழிந் தாரே!

---

பேரினை நீக்கி – ஞான ஒளி, வல்லளான், அடுபோர்ச்செழியன், மல்லையா? அகில உலக சாம்ராட், தங்கப்பன், செல்வன் என்கிற பெயரெல்லாம் ஓடிவிட்டன. இப்பொழுது பயலுக்குப் பெயர் பிணம். சூரையங்காடு – சுடுகாடு. நினைப்பு ஒழிந்தார் – இனி அவனை நினைத்து ஆவப்போவதென்ன?

குறிப்பு – அருமையான பாட்டு. பாடப் பாடக் கல்கண்டாய் இனிக்கும் பாட்டு, மரணத்தைப் பற்றிய பயமோ, கசப்போ இல்லை பாட்டில்

## அருளும் பொருளும்

## (79)

கல்யாணப் பெண்ணை எதிர்நோக்கி பள்ளியறையில் காத்திருப்பான் கல்யாணமாப்பிள்ளை.

காரணம், தனிமையில் ஒன்றும் இல்லை, இரண்டும் ஒன்றானால் தான் ஆனந்தம்.

கடவுள் வேறு நாம் வேறு என்கிற வேற்றுமை (தனிமை) இருக்கும் வரை ஆனந்தம் ஏது. வேற்றுமை நீங்கி ஒன்றாவது தான் மறைவு – அதாவது மரணம்.

உடம்போடு ஒட்டி பிறந்த வாழ்க்கையில் எத்தனை விலங்குகள்? அதனால் நரக வேதனையாக இருக்கிறது பிறவி.

இந்த நரக் வேதனையில் கிடந்து உழல்வதையா வாழ்(த)ல் என்று சொல்வது? உண்மையான மரண(வேதனை)ம் எது என்றால் இந்தக் கொடிய(நரக)வாழ்க்கை தான். அப்படியானால் விலங்குகளால் மாட்டப்பட்ட வாழ்வை(பிறப்பை) உதறி எறிந்து விட்டு மறைவது தான் (ஆனந்தமான) வாழ்வு.

வாழ்வில் மரணமும் மரணத்தில் (நிரந்தர) வாழ்வும் மறைந்து கிடக்கின்றன.

இதை வைத்தே பிறவித்தளையை அறுத்தெறிந்து விட்டு ஓடவேண்டும் என்று தவிக்கிறது உயிர். எமன் எப்பொழுது வருவான் அவன் தோளைப் பிடித்தபடியே எப்பொழுது போவது அவன் பின் என்று எதிர்பார்க்கிறதுஅந்த உயிர்

''உயிரும்

தருமனையே நோக்கும்'' என்று அழகாய்க் குறிப்பிடுகிறார் ஆள்வார்.

அறிஞர் ஒருவர் சொன்னார் ''இரண்டே இரண்டு பேர் தான் நல்லவர்கள் ஒன்று பிறவாதவர். அடுத்தது இறந்து போனவர்.

இருவருந்தானே கடவுளோடு கடவுளாக ஒன்றி இருக்கிறார்கள்.

திருமூலர் பாடல் – மரணம் பற்றிய பாடல்கள் வேற்றுமை அற்ற ஒற்றுமையைத் தெளிவுபடுத்துகின்றன.

மரணத்தில் வாழ்வையும், வாழ்வில் மரணத்தையும் தெளிவுப்படுத்துகின்றன.

✧ ✧ ✧

'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்று ஒரு எடுத்துக்காட்டு இலக்கணத்தில் வரும். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் மனிதர்களின் இயல்பே பிடித்த பிடியை இயல்பாக விடுவதில்லை என்று தான் தெரிகிறது.

உயிர்வர்க்கம என்று சொல்லக்கூடியவற்றுக் கெல்லாம் விடாப்பிடி என்பதுதான் பொதுத்தன்மையோ என்று சொல்லும் படியாகக் கூட இருக்கிறது.

''ஒரு பொருளை ஒரு இடத்தில் வைத்தால் அந்தப் பொருள் அந்த இடத்தில் அப்படியே இருக்கும். எவ்வளவு காலமானலும் அது அப்படியே இருக்கும், இன்னொன்று வந்து அதைத்தாக் காதவரை பொருளும் இடமும் ஒன்றை ஒன்று விடா''

ஐசக் நியூட்டனின் மூன்று விதிகளில் மேலே குறிப்பிட்டது ஒரு விதி.

மூர்க்கன், முதலை என்பன பெயருக்குத்தான். பார்க்கப்போனால் எல்லாமே ஒன்றை ஒன்று பற்றிநிற்கின்றன. விடமாட்டேன் என்கின்றன. இன்னொன்று மோதிவிலக்கினால் அன்றி நெகிழ்வதாக இல்லை பிடி.

மனுசன் என்றால் பிடித்துத் தொங்க ஏதாவது ஒன்றுவேண்டி இருக்கிறது. ஒன்றுக்கு மேலே இருந்தாலும் சரிதான். பிடித்துப்பிடித்துத் தொங்குகிறான்.

மனைவி, மக்கள், சொத்து, சுகம், பாடம், படிப்பு, அதிகாரம், பதவி, ஆராய்ச்சி, எழுத்து, பேச்சு, மதம், வெற்றி, தோல்வி, வழக்கு, தத்துவம், லட்சியம் என்று ஒன்றோ, பலவோ வேண்டி இருக்கிறது மனிதனுக்கு! ஏன்? பிடித்துத்தொங்கத்தான்.

இனி இரும்புப் பெட்டியைத் திறக்கிறோம். அதனுள் இருக்கிற நகைப்பெட்டியை எடுத்துத் திறந்து பார்க்கிறோம் வளையல்கள், மோதிரங்கள், விதவிதமான சங்கிலிகள், பதக்கம் வைத்த மாலைகள், ஒட்டியாணம், நெற்றிச்சுட்டி என்றெல்லாம் இருக்கின்றன.

ஒவ்வொன்றும் விதவிதமாக – பலவாக இருந்தாலும் இவ்வளவும் தங்கந்தான். அவ்வளவிலும் தங்கந்தான். அது

போலத்தான் வஷ்துக்கள் எத்தனையோ உருவங்களில் இருக்கலாம். அத்தனையும் இறைவன்தான். அவ்வளவிலும் கடவுள்த்தத்துவம் என்கிற ஒன்றுதான்.

ஒவ்வொன்றும் கடவுள்த்தத்துவத்தின் தனித்தனிக் கோலம். இறைவனுடைய திருஉள்ளத்தில் உண்டாகும் ஆனந்தக் கனவுகளே அண்டபிண்ட சராசங்களாய் வடிவெடுக்கின்றன.

ஒவ்வொரு வடிவமும் இறைவனுடைய திருமேனிதான். இறைவனே தான்.

இறைவனுடைய திருமேனிதான், கோலங்கள்தாம் எல்லாம் என்று விளங்கிவிட்டால் போதும். சக்தி, சிவம், திருவருள், பொன்னம்பலம், ஆனந்த நடனம், ஞான ஒளி, கருணை, எல்லாம் ஒருபொருட்பன் மொழிதான் என்பது புரிந்து விடும்.

ஆனால் இந்த உண்மையை அனுபவிக்க முடிகிறதா மனிதனால். முடியவில்லை. ஏன், தலைக்கு மேலே தொங்குகிற தத்துவக் கயிற்றைப் பிடித்துத் தொங்குகிறான். விட மாட்டேன் என்கிறான் பிடியை.

திருமேனி தானே
    திருவருள் ஆகும்,
திருமேனி தானே
    திருஞானம் ஆகும்
திருமேனி தானே
    சிவநேயம் ஆகும்
திருமேனி தானே
    தெளிந்தார்க்குச் சித்தியே!

## (80)

வீட்டில் விழா, முற்றத்தில் தூணுக்குத் தூண் கயிறு கட்டி பல்புகளைத் தொங்க விட்டிருக்கிறது. பல்புகள் பல நிறம். பச்சை, சிவப்பு, ஊதா, மஞ்சள், நீலம் என்று பல பல

---

★திருவருள் – இறைவனின் பெருங்கருணை, ஞானம், ஒளி. சிவநேயம் – பக்தி. சித்தி – ஒன்றுபடல்.

குறிப்பு–கடைசி அடியை எப்படி ஒரு சுழட்டுச் சுழட்டி அடிக்கிறது தமிழ் என்று பார்த்தீர்களா? கவியில் தான் அப்படிச் சுழட்டி அடிக்கமுடியும். 'திருமேனிதானே சிவசக்தி ஆகும்' என்று முடிந்தால் அதில் உயிர் இருக்குமா?

வண்ணங்கள். மின்சாரப் பொறியை தட்டிவிட்டதும் பல்புகள் பல பல வண்ணங்களில் ஒளிர்கின்றன.

சில பல்புகள் சிவப்பு ஒளியில், சில மஞ்சள் நிறத்தில், சில நீல நிறத்தில் இப்படி வித விதமாக ஒளிவீசுகின்றன.

மின்சாரம் ஒன்று தான் அதிலிருந்து வருகிற வெளிச்சமும் ஒன்றுதான். பச்சை, சிவப்பு என்கிற வேறுபாடு மின்சார ஒளியில் இல்லை.

பல்புகளில் தான் ஒளிவேறுபாடு

எந்தெந்த நிறப்பல்புகளுடன் சேர்கிறதோ அந்தந்த நிறத்தைக் காட்டுகிறது ஒளி.

கடவுள்தத்துவமும் அப்படிதான். அது ஒன்றுதான். ஆனாலும் எத்தனையோ வடிவங்களில் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் ஒவ்வொரு திருமேனியும் ஒவ்வொரு பெயர், நிறம் பெறுகின்றன. அத்தனையிலும் இறைவன் ஒருவன்தான். ஆனாலும் ஒவ்வொரு திருமேனியும் ஒவ்வொரு சாயலில் அபிநயம் பிடிக்கின்றன. அபிநயத்தை (மட்டும்) பார்த்தால் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமே இல்லையோ என்று சொல்லத்தோன்றும்.

சிரிப்புக்கும் அழுகைக்கும் சம்பந்தம் இல்லைதானே. ஆனால் இரண்டுமே உணர்ச்சிதான்.

அப்படியானால் பேரண்டம் முழுவதும் இறைவன்தான். அவன் திருமேனிகள் தாம். எல்லாம் அந்த ஒன்றே ஒன்றுதான்.

இதோ வருகிறார் திருமூலர், மேடைஏறுகிறார். நம்மை ஒரு பார்வை பார்க்கிறார். வாய் திறந்து சொல்கிறார். என்ன சொல்கிறார்.

எங்கும் திருமேனி,
    எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம்,
    எங்கும் திருநட்டம்,
எங்கும் சிவமாய்
    இருத்தலால் எங்கெங்கும்
தங்கும் சிவன்அருள்
    தன்விளை யாட்டே

## (81)
## ஆட்டம் என்ன ஆட்டமோ

அடைமழை, வெள்ளப்பெருக்கெடுத்த ஓடைகள் குளத்தில் கொண்டுவந்து கொட்டுகிறது நீரை. செந்நிறம் மிக்க வண்டல்மண் நீரோடு கலந்து கொழு கொழு என்று வந்தது.

மழையும் நின்றது. குளத்து நீரும் மெள்ள மெள்ளத் தெளிந்தது. கலந்திருந்த செம்மண் கொஞ்சம் கொஞ்சமாகத் தளத்தை நோக்கி இறங்கின.

செம்மண் இறங்கிப் பீடங்களாய் அமைந்தன. நீளம், சதுரம், நீள் சதுரம், முக்கோணம் என்றெல்லாம் பீடங்கள் வித விதமாய் அமைந்தன.

கொத்தனார் வந்து சமைத்தது போலவே அப்படித் திருத்தமாய் அமைந்தன பீடங்கள். பீடம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோலத்தில் இருந்தன. தனித்தனியாகவே இருந்தன. ஒன்றை விட்டு ஒன்று விலகியே இருந்தன. ஆனால் அத்தனையும் மண்தான். ஒரே செம்மண்தான்.

அப்படித்தான் கடவுள்த்தத்துவமும். எத்தனை எத்தனையோ வடிவங்களில் அண்டம், அகண்டம், மண்டிலம், பூமி, மலை, கடல், காடு, மேடு, பள்ளம் என்று தனித் தனிப்பீடங்களாய் உருவெடுக்கின்றது அந்த ஒரே ஒரு தத்துவம், நான் தனி நான் தனி என்றாலும் அத்தனையும் ஒரேதத்துவம் தான், அந்த ஒன்றுதான் அவ்வளவிலும்.

இதை விளங்கும் படியாகச் சொல்லவேண்டுமானால் அதாவது உணர்ச்சியோடு சொல்லவேண்டுமானால் – உண்மையானது ஒளி வீசும்படி சொல்லவேண்டுமானால் எல்லாம் ஒன்றுதான் – ஒரே கடவுள்த்தத்துவந்தான் என்று மொட்டையாய்ச் சொல்லக்கூடாது.

அவ்வளவும் இறைவனுடைய திருநடனம். அவ்வளவும் பொன்னம்பலம் என்று அனுபவித்துச் சொல்ல வேண்டும்.

---

சிதம்பரம் – நடனஅரங்கு, பொன்னம்பலம். திருநட்டம் – ஆனந்த நடனம். நட்டம் – நடனம். அரள் விளையாட்டு – திருவிளையாடல்.

அந்த நடனத்தைக் கண்டுகுளிரப் பார்க்கிறார் திருமூலர். நாமும் கண்டுமகிழ இடங்கொடுக்கிறார் திருமூலர்

எப்படி

ஆதி பரன்ஆட,
அங்கைக் கனல்ஆட,
ஓதும் சடைஆட,
உன்மத்தம் உற்றாடப்,
பாதி மதிஆடப்,
பார்அண்டம் மீதாட;
நாதமோ(டு) ஆடினான்
நாதாந்த நட்டமே

## (82)

இறைவன் ஆடுகிறான், அவனோடு அவன் கைகளும் ஆடுகின்றன, மாலையும் ஆடுகிறது, அங்கவஸ்திரமும் ஆடுகிறது என்று சொன்னால் போதுமா?

---

★ஆதிபரன் - மூலநாயகனாகிய பரம்பொருள், சிவபெருமான். அவன் ஆடுகிறான் என்றால் கையை வீச்த்தானே ஆடவேண்டும். கைகள் வீசி ஆட ஆடக் கையில் இருக்கிற நெருப்பும் சேர்ந்து ஆடுகிறது.

ஆணவத்தை இங்கே கொடு – அதை உன் முன்னாலேயே சுட்டுப் பொசுக்குகிறேன் என்று காட்ட எப்பொழுதும் அவன் கையில் இருக்கிறது நெருப்பு. (அங்கைக்கனல்)

ஓதும் சடை - எட்டாத வான்வெளியே சடை, திசைகளைத் தொங்கப்போட்டுள்ள வானகமே சடை என்று ஞானிகளால் பாராட்டபடுகின்ற சடை. ஓதுதல் – பாடுதல்.

உன்மத்தம் – பித்தம், உண்மை அடியார்கள் என்றால் அவர்கள் மேல் அவ்வளவு காதல் (பயித்தியம்) பெருமானுக்கு.

பாதிமதி – பிறைச்சந்திரன். பார் அண்டம் – அணு முதல் அண்டம் எல்லாமே. அவை ஒவ்வொன்றும் அவன் நடன அரங்கு, கோயில். நாதமோடு ஆடினான் – பாட்டும் தாளமும் முழங்க ஆடுகிறான். நாதாந்த நட்டம் – பாட்டு, இசை எல்லாம் களைத்துப் போய் நின்றாலும் ஆட்டம் மட்டும் நிற்பதில்லை. ஆடிக்கொண்டே இருக்கிறான் அவன்.

இறைவன் ஆட ஆட அவனோடு சூரியன் ஆடுகிறது, சந்திரன் ஆடுகிறது, நட்சத்திரம் ஆடுகிறது, அண்டங்களே ஆடுகின்றன, அணுவும் ஆடுகின்றன, துகள்களும் ஆடுகின்றன என்றால்தான் போதுமா? நம்மோடும் ஆடுகிறான். நம்மைப் போன்ற மனிதர்களோடும் ஆடுகிறான் (சனம்). இனி விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் என்கிற முனிவர்களுடனும் ஆடுகிறான் என்றால் தான் திருப்தி ஏற்படும் நமக்கு.

நம் உடலிலும் உணர்ச்சியிலும் நின்று செயல்படுகின்ற தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் நின்று ஆடுகிறான் என்றாலோ பரமதிருப்தி.

தேவரோ(டு) ஆடித்
திருஅம் பலத்தாடி,
மூவரோ(டு) ஆடி,
முனிசனத்தோ(டு) ஆடி
பாவினுள் ஆடி
பராசக்தி யில்ஆடி,
கோவினுள் ஆடிடும்
கூத்தப் பிரானே!

---

★தேவர் – எண்ணிறந்ததத்துவங்கள். கோ-பசு. கன்றை மனசில் வைத்தே பசுவில் பால்சுரக்கிறது. அதைச் சேமித்து வைக்கும் அமிர்தகலசமாக இருக்கிறது பசுவின் மடி. பசும்புல், புண்ணாக்கு, வைக்கோல், பருத்திக்கொட்டை முதலியன பசுவுக்குள் உணவாகச் செல்கின்றன. பிறகு அவை ரத்தம் ஆகிறது. அந்த ரத்தம் பசுவின் தேகம் முழுவதும் ஓடுகிறது. ஏதோ ஒன்று அந்தரத்தத்தைப் பிழிகிறது. திரவமாகிறது. சொட்டுச் சொட்டாய் அந்தத்திரவம் பசுவின் மடியை நோக்கி வருகிறது. மடிக்குள் லட்சக்கணக்கில் ஒளித்துகள்கள் மொய்த்து ஆய்கின்றன. ஜன்னல் வழிவரும் ஒளியில் துகள்கள் ஆய்வது போல் ஆய்கின்றன. அந்த ஒளித் துகளில் திரவம் விழுந்தவுடன் பாலாகிறது. பாலுக்கென்று ஒரு தனிமணம், தனிக்குணம் (உயிர்ச்சத்து) தனிருசி(அமுதச்சுவை) கதகதப்பைக் கொடுக்கும் ஒரு தனித்த வெதுவெதுப்பு. அவ்வளவிலும் தருமஞ்சனம் ஆடுகிறான் பெருமான்.

பசுவுக்குத் தெரியாமலே அவ்வளவும் நடக்கிறது. எத்தனை தத்துவங்கள் செயல்பட்டு நடக்கிற காரியம் இது. அம்பலம் – நடன சபை. மூவர் – பிறப்பு, இருப்பு, மறைவு எனும் காரியங்களை நடத்தும் பிர்மா முதலிய மூர்த்திகள். பா – பாடல்.

## (83)

ஒரு புல்லை எடுத்துக் கொண்டால் சின்னஞ்சிறியது தான் அது, ஆனாலும் அது முளைக்கிறதே அது எளிதான காரியமா? அகில உலகமும் ஒன்று சேர்ந்தல்லவா ஒரு புல்லை முளைக்க வைக்கிறது. ஏன், பேரண்டம் முழுவதுமே ஒன்றாய் நின்று செயல்படுகிற காரியம் அது.

எந்த ஒரு பிராணியானாலும் பூமிக்குள்ளிருந்து புல்லை இழுத்து வர முடியுமா? பிரதமராலும் முடியாது, தலைமைத் தளபதியாலும் முடியாது. விஞ்ஞானி மெய்ஞ்ஞானி யாராலும் முடியாது.

அப்படியானால் கோடான கோடி வஷ்துக்களும் பிறந்து பிறந்து வருகிற படைத்தல் என்பதும் ஒரு மாபெரும் தத்துவந்தானே, தெய்வ சக்தி என்று தானே அந்தத்தத்துவத்தைச் சொல்லவேண்டும்.

அப்படியே காப்பாற்றுதல் – கோடான கோடி வஷ்துக்களையும் பட்டுப் போய்விடாமல் பாதுகாத்தல் என்றால் சாதாரணமா? பிறகு ஒவ்வொன்றாக அவற்றை மறைத்தல் – அதாவது ஒதுக்கல் என்பதும் தெய்வசக்திதான்.

இந்த தெய்வசக்திகளுக்கு மும்மூர்த்திகள் – பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் (மூவர்) என்று பெயர்.

அப்படி இன்னும் எத்தனை எத்தனையோ தெய்வசக்திகள், தத்துவங்கள். அவ்வளவும் நிறைந்து கிடக்கின்றன. அணுவிலிருந்து அண்டம் பேரண்டம் வரை எல்லாவற்றிலும் நிறைந்து கிடக்கின்றன.

அவைகளுக்கு என்னென்னவோ பெயர். சில பெயர்கள் காளி, கூளி என்று விநோதமாகக் கூட இருக்கும்.

திருக்கயிலாயம், பராசக்தி, நந்தி, விநாயகர் என்று கூட இருக்கும் பெயர்.

எப்படி எப்படி இருந்தால் என்ன பெயர்கள். அவ்வளவும் இறைவன்தான். அவனுடைய ஆடரங்குகள் தான் அங்கு ஒரே நடனந்தான். ஆனந்த நடனமே தான்.

இதோ பாடல்

காளியோ(டு) ஆடிக்,
கனகா சலத்தாடி,
கூளியோ(டு) ஆடிக்,
குவலயத் தேஆடி,
நீளிய நீர்தீக்கால்
நீள்வான் இடைஆடி,
நாள்உற அம்பலத்
தேஆடும் நாதனே

## (84)

இனி, இடம் என்பதாக ஒன்று, அதற்கு எல்லையே கிடையாது. போகப்போகப் போய்க் கொண்டே இருக்கும் இடம்.

இடம் என்பதற்கே எல்லை இல்லை என்றால் காலம் என்பதற்கு எப்படி இருக்க முடியும் எல்லை. காலம் என்பது உதறிப் போட்டவலை தானே இடம்?

எல்லை இல்லாத இடத்தை மைல் கணக்கில் சொல்ல முடியுமா? யாராலும் முடியாது.

பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் ஒன்பது கோடிமைல். சூரியனிலிருந்து ஒளி வர எட்டேமுக்கால் நிமிஷம் ஆகிறது. அப்படியானால் ஒரு நாளில் ஆயிரத்து ஐந்நூறு கோடி மைல் தூரத்தைக் கடக்கும் ஒளி.

ஒரு வருடத்தில் ஐந்து லட்சம் கோடிமைல்களைத் தாண்டிவிடும்.

---

★கனகாசலம் – பொன்மயமான மலை. கைலையங்கிரி. கனகம் – பொன். அசலம் – மலை. குவலயம் – பூமி முதலிய கோளங்கள். நீளிய – நீண்டுயர்ந்த. நீர் – சமுத்திரம் முதலிய நீர் நிலை. தீ – அக்கினி. கால் – காற்று. வான் – ஆகாயம். ஐந்து பூதங்களும் அவன் ஆடரங்குகளே. அதில் நாள் உற – ஊழிஊழிகாலமாக ஆடுகிறான் பெருமான்.

குறிப்பு – காலம், இடம் இரண்டுமே அவனுக்கு நடன அரங்குகள் தாம். இறைவனைத் தவிர ஒன்றும் இல்லை.

ஐந்து லட்சம் கோடி மைல்களுக்கு ஒரு ஒளி ஆண்டு என்று பெயர்.

நாம் வாழும் பூமியின் குறுக்களவு வெறும் எண்ணாயிரம் மைல்தான்.

அப்படியானால் ஒரு ஒளியாண்டு தூரத்தில் ஒரு மண்டலத்தை நிறுத்தி அதற்கும் நாம் வாழும் பூமிக்கும் இடையில் உள்ள தூரத்தை நிரப்ப வேண்டும் என்றால் எத்தனை எத்தனை உலகங்கள் வேண்டும் தெரியுமா? அறுபத்து ஐந்தாயிரம் கோடி உலகங்கள்.

ஒன்றல்ல இரண்டல்ல, ஆயிரம் அல்ல, லட்சம் அல்ல, கோடி கூட இல்லை. பத்துக் கோடி உலகம், நூறு கோடி உலகம், ஆயிரம் கோடி உலகம், பதினாயிரம் கோடி உலகங்கள் கூட இல்லை.

அறுபத்து ஐந்தாயிரம் கோடி உலகங்களை ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டு அடுக்கி வைக்க வேண்டும். அவ்வளவு இடைவெளியைத்தாண்டி இருக்கிறது ஒரு ஒளி ஆண்டின் தூரம்.

இனி, பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரம் ஒன்றின் தூரம் இரண்டாயிரம் ஒளி ஆண்டு, அப்படியானால் ஆயிரம் கோடிமைல் இல்லை, லட்சம் கோடி மைல் இல்லை, கோடிகோடி மைல் கூட இல்லை. பல கோடிகோடி மைல். இனி, பூமியை விட்டு கொஞ்சம் தள்ளி இருக்கிற நட்சத்திரத்தின் தூரம் லட்சம் ஒளியாண்டு. அப்படியே பத்து லட்சம் ஒளி ஆண்டு. கோடி ஒளி ஆண்டு என்று போய்க்கொண்டே இருக்கிறது தூரம்.

ஒரு சில நட்சத்திரங்களின் ஒளியானது பூமி தோன்றியதிலிருந்து இன்னும் பூமிக்கு வரவே இல்லையாம்.

இந்தக் கணக்கெல்லாம் மனித மண்டைக்குள் ஏறவா செய்யும்?

எல்லையற்றது இடம் என்று ஒரு வார்த்தையில் முடித்து விட வேண்டியதுதான். அப்படி எல்லையற்று விரிந்து பரந்த வானவெளியில் - பிரபஞ்ச வெளியில் மேல் என்று ஒன்று உண்டா, கீழ் என்று ஒன்று உண்டா? முன் பின் என்றுதான் உண்டா?

ஆழம், உயரம், அகலம், கனம் ஒன்றும் இல்லை. தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்று திசைகள் எப்படி இருக்கும்.

ஒன்றுமே இல்லை. வெளி என்றால் வெளிதான் வேறு எதுவும் இல்லை அந்த வெளியில்.

ஆனாலும் அந்த வெளியில் நட்சத்திரங்கள் மிதக்கின்றன. கூட்டம் கூட்டமாகவே மிதக்கின்றன. அந்தக் கூட்டங்களுக்கு நட்சத்திர வட்டம் என்று பெயர். பால்வெளி என்று சொல்வார்கள் அதை.

பாலாறு, ஆகாயகங்கை பாற்கடல் என்றெல்லாம் முன்னோர்கள் அதைச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

அப்படி லட்சோபலட்ச நட்சத்திர வட்டங்கள் ஒரு அண்டத்தில், லட்சோப லட்ச அண்டங்களைக் கொண்டது ஒரு பேரண்டம், அப்படி எத்தனை எத்தனையோ பேரண்டங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் – மாயப பிரபஞ்சத்தில்.

இறைவனுடைய பேருள்ளத்தில் இடைவிடாமல் தொடர்ந்து ஆனந்தக் கனவுகள் உதித்த வண்ணமாக உள்ளன. அந்தக்கனவுகள் தாம் பேரண்டங்களாக, அண்டங்களாக, உலகங்களாக, உயிர்வர்க்கங்களாக ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றன.

அப்படி வரும் தொடர்ச்சிதான் காலம். இடமும் அதுதான்.

ஒன்று மட்டும் இல்லாமல் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து பல பல உதித்து வருவதால் ஒன்றுக்கொன்று தூரம் என்று ஆகிறது. அதை ஒட்டி மேல், கீழ், முன், பின், தெற்கு, வடக்கு என்றெல்லாம் தோன்றுகிறது.

தோன்றுவது வெறும்மாயை (மனப்பிராந்தி)தான் உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை.

திசைகள், மேல் கீழ் இவைகளை இறைவனுடைய திருநோக்கு(கனவு)கள் என்று அழகாய்ச் சொல்லி இருக்கிறது. (திரு) நோக்கை (திரு) முகம் என்று சொல்லலாம் தானே.

(சிவ)பெருமானுக்கு முகங்கள் ஐந்து என்பது இதை உத்தேசித்துத்தான்.

இறைவனுடைய நடனம் (ஆனந்தக்கனவு) அதாவது திருநோக்கு பேரண்டம் முழுவதுமாகத்தானே இருக்கிறது.

அப்படியானால் அம்மை உமையாளோடு(சக்தியோடு) சேர்ந்து பரம்பொருளின் ஆனந்த நடனம் நடந்து கொண்டே இருக்கிறது. நடனம் ஆடுவது சிவமும் சக்தியும் ஆக இரண்டென்று சொல்லவா, இல்லை, இரண்டும் இரண்டறக் கலந்த பரம்பொருள் - ஏகநாயகன் என்கிற ஒன்றே ஒன்று என்று சொல்லவா?

என்ன சொல்ல இந்த அற்புதக்கூத்தை? எப்படிச் சொல்ல இந்த தற்பரக் கூத்தை?

இதோ பாடல். அது சொல்லட்டும்.

தெற்கு வடக்கு
    கிழக்குமேற்(கு) உச்சியில்,
அற்புத மான
    ஐந்து முகத்தினும்,
ஒப்பில்பேர் இன்பத்துள்
    உபய உபயத்துள்
தற்பரன் நின்று
    தனிநடம் செய்யுமே.

## (85)

சிற்றெறும்பிலிருந்து யானை வரை, கடுகிலிருந்து மலை வரை - ஏன் சூரியன் வரை அவ்வளவும் இறைவனின் ஆனந்த நடனம் நடைபெறும் அரங்குகள் தாம். பெருமான் கொலுவிருக்கும் கோவில்கள்தாம்.

தகதக என்று ஜொலிக்கும் பொன்னம்பலம் என்றாலும் நடமாடும் பாதங்கள் தாமரை மலர் போன்று விரிந்து பரந்தவை என்றாலும் (முகக்) கண்களால் பார்க்க முடிகிறதா? இல்லையே.

---

உபய உபயத்துள் - சிவம், சக்தி என்னும் இரண்டாகிய இரட்டையன். ஆனாலும் அந்த இரண்டனுள்ளும் அவன் ஒருவனே. தற்பரன் - ஏகநாயகன். தனி நடனம் - ஒப்பற்ற நடம், ஆனந்தத் தாண்டவம்.

அவற்றைப் பார்க்க ஞானக்கண்கள் வேண்டும். சிந்தித்துச் சிந்தித்து சிந்தனையிலே ஒளிரும் கண்களால் தான் பார்க்க முடியும்.

பார்த்தால் போதும் உள்ளம் உருகிவிடும். அன்பு(பக்தி) பெருகும். கருங்கல்லை விடக்கரடுமுரடான முடிச்சுகளையும் – மன முடிச்சுகளையும் அவிழ்த்துவிடும்.

காலடிபட்டமண்தான், ஆனாலும் அதைக் குழைத்துக் குழைத்து – பிசைந்து பிசைந்து விநாயகராகவே, கலை மகளாகவே, திருமகளாகவே ஆக்கிவிடுவான் குயவன்.

அப்படி ஒரு புதுப்பிறவியைக் கொடுக்கும் நடனமும் பொன்னம்பலமும்.

அவ்வளவுதான் உணர்ச்சிப் பெருக்கில் தம்மை மறந்து விடுவார்கள். தம்மை இழந்தேவிடுவார்கள். யார்? ஞானிகள்!

விம்மும், வெருவும்,
விழும், அழும், மெய்சோரும்
தம்மையும் தாம்அறி
யார்கள் சதுர்கெடும்;
செம்மை சிறந்த
திருஅம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத்(து)
அன்புவைப் பார்கட்கே

---

விம்மும் – ஆனந்த பரவசத்தில் ஏங்கிவிம்முவார்கள், இழுத்து விடுவார்கள் மூச்சை. வெருவும் – அதில் இன்ப அதர்வு(நடுக்கமு)ம் ஏற்படும் அவர்களுக்கு. விழும் – நிற்கமுடியாமல் துவண்டு விழுவார்கள். அழும் – ஆனந்தக்கண்ணீர் மாலை மாலையாகக் கோக்கும். மெய் சோரும் – புளகாங்கிதம் கொண்டு உடம்பே பட படக்கும். தம்மையும் தாமறியார்கள் – ஆணவம் அற்ற நிலையில் அனுபூதியில் திளைப்பார்கள். சதுர் கெடும் – நான் என்பது போய்விடும். அம்மலர்ப்பொற்பாதம் – அழகிய தாமரை மலர் போன்ற பொன்னடிகளை – திருவருளை. அன்புவைப்பார் – பக்திக்கண்கொண்டு அனுபவிக்கிற ஞானிகள்.

## (86)

## சமயப்பண்பாடும் தாவரமும்

ஒரு சமயம் — எண்பது ஆண்டுகளுக்கு முன் மாகாத்மாகாந்தியிடம் ஒரு பக்தர் கீழ்க் கண்டபடி கேட்டார். காந்திஜி! உங்களுக்கு லட்சியமே கடவுளைத்தேடல் – உண்மையைத்தேடல் ஆகியது தான்.

தீவிரமான – வைராக்கியமான நிலையில் இருக்கிற உங்களால் இசை, நடனம் முதலிய கலைகளில் ஈடுபடமுடியுமா? அவற்றை நீங்கள் உணர்கிறீர்களா? என்று

எப்பொழுதும் காந்திஜிக்குக் கோபம் வராது. ஆனால் இந்தப் கேள்வி செவியில் விழுந்த உடனேயே உணர்ச்சிவசப் பட்டுவிட்டார் காந்திமகான்.

''எனக்கா கலை உணர்வு இல்லை என்கிறீர்கள்'' என்று காரமாகவே கேட்டுவிட்டார் காந்தி.

இத்தனைக்கும் பக்தர் வெறும் பண்டாரச் சாமியார் இல்லை, கற்கவேண்டியவற்றை எல்லாம் ஐயம் திரிபறக் கற்றுணர்ந்த மேதை. விஞ்ஞான நோக்கோடு அலசி ஆராய்ந்து பார்க்கும் பேரறிஞர்.

கலைகளில் மிக்க ஈடுபாடுடையவர், பயிற்சி மிக்கவர் பக்தர். காந்தியே அவரை மிகவும் உயர்வாக மதித்துப் பழகினார்.

இவ்வளவிருந்தும் கோபப்பட்டுவிட்டார் காந்திஜி. 'எனக்கா கலைஉணர்வு இல்லை' என்றே கேட்டுவிட்டார்.

எனக்கா, என்னையா என்றெல்லாம் பேசுகிற பழக்கம் இல்லாதவர் காந்திமகான்.

ஆனாலும் பக்தர் கேள்வி அப்படி எரிச்சலடைய வைத்து விட்டது.

ஒன்றிரண்டு விநாடிகள் தான். கோபம் போய்விட்டது காந்திஜியிடமிருந்து, புன் முறுவல் பூத்தார். பக்தரைக் கனிவோடு பார்த்தார்.

மிருதுவாக ஆனால் தெளிவாகச் சொன்னார் காந்திஜி.

இந்தச் செடிகொடிகளைப் பாருங்கள். எத்தனை இலைகள் இவற்றில், ஒவ்வொரு இலையும் அசைந்தாடும். அந்த இலைகள் அசைந்தாடுவதிலேயே நான் நடனத்தைப் பார்க்கிறேன். கடவுளின் அற்புத நடனமே அதில் தெரிகிறது. அதை அனுபவித்து அனுபவித்து ஆனந்த பரவசம் அடைகிறேன்.

அப்படியே உதிரும் இலைகள், விரியும் மலர்கள், பழுக்கும் பழங்கள் எல்லாவற்றிலும் நடனக்கலையைப் பார்க்கிறேன்.

பழுத்த இலை ஒவ்வொன்றும் உதிரும் போதும் அந்த இலை எழுப்பும் ஒலி – இலையின் இதய ஒலி எனக்கு இசைவிருந்தளிக்கிறது.

நெளிந்து வளைந்து ஓடும் நீர், பறவைகளின், குரல், இதழ் இதழாக மலரும் மலர் ஒவ்வொன்றிலும் தாளம், பாட்டு, இசை, நடனம், ஓவியம், சிற்பம் எல்லாம் இருக்கின்றன. அவ்வளவையும் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறேன்.

எனக்குக் கலை உணர்வு இருக்கிறதா இல்லையா? உங்கள் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்'' என்று முடித்தார் காந்தி மகான்.

பக்தர் அப்படியே கனிந்து உருகிப்போனார். சரி, இன்னொரு நாள் இது பற்றி விரிவாகப் பேசுவோம் என்று முடித்தார் காந்திஜி.

சாஸ்திரங்கள் எதிலும் இல்லாத ஞானமும், ஒளியும், அனுபவமும் தாவரத்தில் இருக்கின்றன.

எல்லாம் வல்ல இறைவனுக்கு, இறைவனோடு உறவாடுவதற்கு என்ன வேண்டும்? கொஞ்சம் அறுகம்புல், வில்வம், துளசி போன்ற ஒரு சில பச்சிலைகள், ஒன்றிரண்டு மலர்கள் இவைகளே போதும்.

தங்கம், வெள்ளி, வயிரம், வைடூரியம் இவைகள் செய்ய முடியாத அற்புதத்தை இலையும் பூவும் புல்லுமே செய்யும்.

மூர்த்திக்கு எத்தனை எத்தனை நகைகள் பூட்டினாலும் பூமாலை இல்லை என்றால் எடுபடுமா? ஏன்? மாப்பிள்ளை பெண்ணுக்குக் கூட பூவும்,மாலையுந்தாம் பொலிவூட்டுகின்றன.

ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் செலவில் பொன்னாடை போர்த்தினாலும் ஐம்பது அறுபது ரூபாயில் கட்டிய ஒரு பிச்சிப் பூமாலைக்கு ஈடாகாது.

கலை, பண்பாடு, பக்தி, ஞானம், சுகம், ஆனந்தம் எல்லாம் சேர்ந்து பரிமளிக்கும் ஞானக் களஞ்சியமாக இருக்கிறது தாவரம் மனசுக்குப் பிடித்த ஒரு கைககுழந்தையாகவே இருக்கிறது தாவரம்.

இனி, தாவரத்தைக் கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் மரம்(தண்டு), கிளை, வேர், உச்சி, இலை, பூ, காய், இலையின் நரம்போட்டம் இப்படி ஒவ்வொன்றையும் சேர்த்துவைத்துப் பார்த்தால் நம்மைப் போலவே – ஒரு ஆள் போலவே தோன்றும் தாவரம்.

உடம்பு, நெஞ்சு, முதுகு, இடுப்பு, தலை என்கிற அங்கங்களோடு காலைத் தரையில் ஊன்றி, கையை வீசியபடியே நிமிர்ந்து நிற்கும் மனிதனுக்கு நிகர் தாவரம் ஒன்றுதான் என்பது விளங்கும்.

தாவரம் ஒன்று தானே நிமிர்ந்து நிற்கிறது மனிதன் போல, ஏனைய பிராணிகள் எல்லாம் குறுக்குவசத்தில் தானே கிடக்கின்றன.

இது காரணமாகவே மனிதனைப் போல தாவரமும் என்று சாதாரணமக்கள் நினைக்கிறார்கள். திருமூலர் போன்ற ஞானிகள் அப்படி நினைக்கமாட்டார்கள். தாவரம் போன்றல்லவா மனிதர் களாகிய நாம் இருக்கிறோம் என்றே நினைக்கிறார்கள்.

ஒரு புல்லை ஒடித்து ஒரு துண்டை வாயில் போட்டால் அது இனிக்கும். அப்படி ஒரு சர்க்கரைச் சுவை – பதநீர், இளநீர் புல்லில் இருக்கிறது.

தென்னை, பனையிலோ குடம் குடமாக இருக்கிறது சுவை நீர், தேன்.

மா, பலா, வாழை முதலியன கனிகளின் மூலம் தேனைச்சொரிகின்றன. வேறு பல தாவரங்கள் புஷ்பங்களில் ஊறும் பன்னீர் மூலம் அமுதம் பொழிகின்றன.

பச்சிலைகள் மூலம் வடிக்கப்படுகிற சாறுகளும் உண்டு.

இப்படியாகத் தாவரம் முழுவதும் ரசம் ஊறிப்பெருகுகிறது. கரும்புக்குள் எவ்வளவு ரசம் ஊறி நிறைந்திருக்கிறது.

அப்படித்தானே மனிதனுக்குள்ளும் – மனிதனுடைய எண் சாண உடம் பென்னும் கரும்புக்குள்ளிருந்தும் தேனாய்க் கசிகிறது உணர்ச்சி.

அந்தத் தேன் தானே கல் கண்டாய் ஞானமாய், விஞ்ஞானமாய், கவி, இசை, முதலிய கலைகளாய் விளைகின்றன.

'அடடா, கரும்பு போலல்லவா இருக்கிறோம் நாம்! என்று அதிசயப்படுகிறார் திருமூலர்

அதிசயம் எப்படிப் பாடலாய் எழுந்து வருகிறது என்று பாருங்கள்

கரும்பும் தேனும்
கலந்ததோர் காயத்தில்

உணர்ச்சிமயமாக இருக்கிறது உடம்பு. பிரிக்க முடியாதபடி உடம்பும் உணர்ச்சியும் ஒன்றாகவே நிற்கிறது. எதுபோல தேனு(சாறு)ம் கரும்பும் சேர்ந்தே நிற்பது போல.

இனி உடம்பு முழுவதும் உணர்ச்சியானது சுரந்து பெருகுவதால் இன்பச்சுரங்கம் என்றுதான் சொல்லவேண்டும் உடம்பை.

மலரில் மணம் நிறைந்து நிற்கிறது போல நிறைந்து நிற்கிறது ஆனந்தம்.

அரும்பும் கந்தமும்
ஆகிய ஆனந்தம்.

குடம்குடமாகத் தேனாய் ஊறுகிறது உடம்பு. அப்படி இருந்தும அதைக் கவனிக்க மாட்டேன் என்கிறது மனம். எப்படி எல்லாம் உடம்பைப் புண்ணாக்க(காயப்படுத்த) முடியுமோ அப்படி எல்லாம் புண்ணாக்கி உடம்பையே சிதைக்கிறது மனம்.

பூங்கோயில் என்றும் பொன்னம்பலம் என்றும் புகழுரை பேசிக்கொண்டே எப்படி எல்லாம் தொந்தரவு பண்ணுகிறான் உடம்பை மனிதன்.

ஒன்றுமே செய்ய வேண்டாம் உடம்புக்கு. அதைத் தொந்தரவு படுத்தாமல் இருந்தால் போதும், உடம்பிலும், உடம்பிற்குள்ளும் நடக்கிற அற்புதங்களை - ஒன்றிரண்டு அற்புதங்களையேனும் உணர்ந்தால் போதும் மனுசனுடைய ஒவ்வொரு அணுவிலும் - அவனுடைய உணர்ச்சியுள் அணுவுக்கு அணு சொட்டுச் சொட்டாக இறங்கும் ஆனந்தத்தேன். பெருக்கெடுத்து வெள்ளமாய்ப் பெருகிவிடும் அந்த ஆனந்தத்தேன்.

ஆனால் யோசித்துப் பார்க்க வேண்டுமே மனம்

விரும்பியே உள்ளம்

வெளியுறக் கண்டபின்.

உணர்ந்து கண்டால் போதும். ஆனந்தந்தான். ஆனந்தமயமே தான். அந்த ஆனந்தத்தை ருசிகண்டவர்கள் கடைக் கரும்பை வாங்கிக் கடிப்பார்களா? அந்தக் கரும்புச் சாறைப் பருகுவார்களா? என்ன இருக்கும் அவற்றில்? சப்பென்றுதான் இருக்கும் விலைக்கரும்பும் சாறும்

இனிப்பாடலின் முழுஉருவம்

கரும்பும் தேனும்

கலந்ததோர் காயத்தில்,

அரும்பும் கந்தமும்

ஆகிய ஆனந்தம்,

விரும்பியே உள்ளம்

வெளிஉறக் கண்டபின்

கரும்பும் கைத்தது

தேனும் புளித்ததே

---

★காயம் – பிறவித்தோற்றம். முதல்வரியில் வருகிற கரும்பு – மனுச உடம்பைக் காட்டும். தேனோ – உணர்ச்சியைக் காட்டும். அரும்பு – மலர், மொட்டாக இருந்து விரியும் மலர். கந்தம் - மணம். விரும்பி - ஆர்வத்தோடு. உள்ளம் வெளிஉறக்கண்டபின் - வெளிப்படையாக, அதாவது தெளிவாக மனம் யோசித்துப் பார்க்க பார்க்க. கரும்பு - விலைக்கரும்பு. கைத்தது - கசக்க ஆரம்பித்து விட்டது. தேன் - சாறு. புளித்தது - சளிப்பு வாடை அடிக்கிறது.

## (87)

கரும்பு ஒரு சின்னஞ்சிறிய தாவரந்தான். ஆனாலும் அரிய பெரிய தத்துவநுட்பத்தை - மெய்ப்பொருள் விளக்கத்தையே கரும்பு வந்துதான் எடுத்துக் காட்டவேண்டி இருக்கிறது.

எள்ளளவு கூட அலட்டிக் கொள்ளாமல் மிக எளிதாக, மனஇயலின் போக்கையே தொட்டுக்காட்டிவிடுகிறது கரும்பு. மன இயலின் போக்கைக் காட்டுவதோடு சமயப்பண்பாட்டின் கொடு முடியையே 'இதோ பார் அதன் ஒய்யாரத்தை' என்று கண்குளிரப் பார்க்கும் படிகாட்டிவிடுகிறது கரும்பு.

கரும்பினுள் இருக்கும் சாறும் சேர்ந்து உதவுகிறது. அப்படியே பூவும் வந்து உதவுகிறது. அதன் மணமும் வந்து உதவுகிறது.

சமயப் பண்பாட்டுக்கும், தாவரத்துக்கும் அப்படி ஒரு நீங்காத உறவு. நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே சமய வழிபாட்டுக்கும் தாவரத்துக்கும் விதி போட்டமுடிச்சு அது.

இனி நம் உடம்பு சம்பந்தமான ஒரு சிறு விசாரணை

விரலில் நகம் அதிகமாக நீண்டுவளர்ந்து விட்டது. சிறுகத்தி கொண்டு நகத்தின் வேண்டாத பகுதியை வெட்டி எறிந்து விட்டோம்.

அத்தோடு முடிந்தது நகம் பற்றிய காரியம் நாற்பது. ஐம்பது நாள் ஓடி விட்டன. முதுகுப்பக்கம் ஊறல் எடுத்தது. சொரிந்து விட்டோம். ரம்பம் போட்டு அறுப்பது போல இருந்தது அது. ரத்தமே கசிந்து விட்டது முதுகுப்பக்கம்.

என்னவென்று பார்த்தால் முள்ளை விட அதிகமாக வளர்ந்திருக்கிறது நகம். நினைத்தவுடன் திடுதிப்பென்று வந்துவிட்டதா நகத்தின் அந்த நீளம்.

அணு அணுவாய் - துளித் துளியாய் வளர்ந்து வந்ததுதான் அந்த நீளம்.

தலை முடி வளர்வதும் அப்படித்தான். உடம்பின் வளர்ச்சியும் அப்படித்தான். கொஞ்சம் கொஞ்சமாய் மெள்ள மெள்ள வளர்ந்தவைதான் அவை.

எதுவும் இப்பொழுதுள்ள அளவில் அப்படியே ஒரே மூச்சில் வந்துவிடவில்லை. உடம்பைப் போலத்தான் மூளையும். அதுவும் மெள்ள மெள்ள – பையப்பைய – சிறிது சிறிதாகத்தான் வளர்ந்தது.

தவழ்ந்து விளையாடிய குழந்தைப் பருவத்தில் திருமூலரிடம் இருந்த மூளை அவர் திருமந்திரம் பாடிமுடிக்கிற வரை சும்மாவா இருந்தது? அப்படியே பிடித்து வைத்த பிள்ளையாராகவா இருந்தது? அணு அணுவாக கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தே வந்தது அந்த மூளை. அனுபவத்தாலும், யோசனையாலும், கல்விகேள்விகளாலும், பழக்க வழக்கங்களாலும் திருந்தித் திருந்தி வளர்ந்து வந்தது அந்த மூளை.

யோசனையும் அப்படித்தான். கொஞ்சம் கொஞ்ச மாகத்தான் ஆழத்தில் இறங்கும். உயர்ந்து ஏறும்.

எடுத்த எடுப்பிலேயே – யோசித்த உடனேயே எதிரில் வந்து நின்று விடாது உண்மை, பேருண்மை.

யோசனை மேலே மேலே போகப் போகத்தான் இருட்டு விலகும். அறியாமை கலையும், மூடநம்பிக்கைகள் கழலும், ஐயப்பாடு நீங்கும்.

இவ்வளவும் எடுத்த எடுப்பில் – யோசித்த மாத்திரத்திலேயே வர வேண்டும் என்றால் அதற்கு வாய்ப்பே இல்லை. யாருக்குமே இல்லை அந்த வாய்ப்பு.

மாணிக்கவாசகர் முதலிய ஞானிகள் கண்ட அனுபவம் இது, அவர்களுக்கே நிலமை இப்படித்தான் என்றால் நம் போலியர்களுக்கு அது பற்றிச் சொல்லவா வேண்டும்.

யோசித்து யோசித்து அதன் மூலம் பெறும் அனுபூதியை இறையருள் என்றே பாவிக்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவன் வந்து தான் கொஞ்சம் கொஞ்சமாக மெள்ள மெள்ள அதாவது 'வரவர' என்மயக்கங்களை ஒவ்வொன்றாக அறுத்தெறிகிறான் என்கிறார்.

நான் சேர்த்து வைத்த – மண்டைக்குள் திணித்துவைத்த குப்பையும் கூளமும் கொஞ்சமா என்ன? வண்டி வண்டியாய் என்றுகூடச் சொல்லக் கூடாது. மலை மலையானது என்று தான் சொல்ல வேண்டும்.

அவ்வளவும் மக்கி மடிந்து அறிவையே மூடிவிட்டது. வேர்ப் போட்டே படர்ந்து மூடிவிட்டது.

ஒரு நாளில் அவ்வளவையும் பிடிங்கி எறிந்து விட முடியுமா? துடைத்துத் துப்புரவாக்க முடியுமா?

கருணைமயமான பெருமான் பொறுமையாக இருந்து சுத்தப்படுத்துகிறான். கொஞ்சம் கொஞ்சமாக என்னை மனுசனாக்குகிறான்.

இப்படிச் சொல்கிறார் மாணிக்கவாசகர் பாடல் எப்படி வருகிறது அவர் வாயிலிருந்து என்று பாருங்கள்

கள்வன் கடியன்
    கலதிஇவன் என்னாதே
வள்ளல் வரவர
    வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத்(து) உறுதுயர்
    ஒன்றொழியா வண்ணம், எலாம்
தெள்ளும் கழலுக்கே
    சென்றூதாய் கோத்தும்பீ

அவசரப் படக்கூடாது. மேலே மேலே யோசிக்க வேண்டும். எத்தனை வேலைகள் இருந்தாலும் சரி, எத்தனை துறைகளில் ஈடுபட்டாலும் சரி, யோசிக்கிற பழக்கமும் இருக்க வேண்டும். விட்டுவிடக்கூடாது அதை.

ஆனால் ஒன்று, யோசிக்க யோசிக்க யோசனையானது ஆழத்துள் போகப்போக புத்தியுள் கிடக்கும் குப்பை கூளங்கள், அறியாமைகள் படம் எடுத்துச் சீறும். ஆயிரம் தலையுடைய கருநாகம் போலவே சீறிப் பொங்கும். வெருட்டும், முடுக்கும்,

---

கலதி – கலப்படமான பயல். என்னாது – என்றெல்லாம் என்னை ஒதுக்காமல். வரவர – மெள்ள மெள்ள, வந்து ஒழித்தான் என்பது சந்த நயம் கருதி வந்து ஒழிந்தான் என மெல்லோசை பெற்று வந்திருக்கிறது. அறியாமையை – குப்பையை எடுத்து எறிந்து விட்டான். உள்ளத்து உறுதுயர் – மனதை அழுத்தித் தேய்த்துக் கொண்டிருந்த விபரீதங்களை, தடித்தனங்களை. தெள்ளும் – களைபறித்துச் சுத்தப்படுத்தும். கழல் – அருள், ஞானஒளி.

சட்டையைக் கழற்றிப் போடும், ஏமாற்றும். என்னென்ன பித்தலாட்டம் உண்டோ அவ்வளவையும் செய்யும்.

பயந்துவிடக்கூடாது. கிணறுவெட்டப்பூதம் அல்லவா புறப்பட்டுவருகிறது என்று ஓடக்கூடாது. பொறுமையோடு நம்பிக்கையோடு மேலும் மேலும் தொடர்ந்து ஈடுபட வேண்டும் யோசனையில்.

யோசிக்காமல் சும்மா இருப்பவர்களுக்கு ஒன்றும் இல்லை. குப்பையும் கூளமும் மக்கிமக்கி அடை சேர்ந்து கொண்டே இருக்கும். மனுசனும் அவன் போக்கில் போய்க்கொண்டே இருப்பான்.

ஆனால் யோசிக்க யோசிக்கத்தான் குப்பையை அப்புறப்படுத்தத் தோண்டினால்தான் உள்ளே இருந்து புழுப்பூச்சிகள் வரும். மக்குமடிசல் எல்லாம் வரும்.

அள்ளிப் போடுவதற்காகச் சாக்கடையைக் கிளறினால் அது நாறத்தான் செய்யும். கொஞ்சநேரத்துக்குத் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான் அதை.

இனி ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு உண்மையைத் தேடி யோசிக்கிறவனுக்கு உண்மை எளிதில் புலப்பட்டுவிடாது. புலப்படுவது போலத் தோன்றி ஏமாற்றியும் விடும்.

தங்கநாணயம் என்று எடுப்போம். அது பித்தளை என்று பல்லைக்காட்டும்.

இந்த அனுபவத்தை தாவரம் – செடி கொடியை வைத்து எப்படிக் காட்டுகிறார் திருமூலர்.

வழுதலை வித்திடப்
பாகல் முளைத்தது.

கத்தரி(வழுதலை) விதையை ஊன்றினவன் அதிலிருந்து பாகல் கொடி இலை விடுகிறது என்றால் திகைப்பானா திகைக்கமாட்டானா.

திகைத்துப் போன தோட்டக்காரன், என்னடா இது! மாயமாக இருக்கிறதே எனறு விதை ஊன்றிய இடத்தில் மண்ணைக் கிளறிப் பார்த்தான்.

அட கடவுளே, தோண்டிப்பார்த்தால் உள்ளே பூசணிக் கொடி படர்ந்து மஞ்சள் நிறத்தில் பூப்பூத்து சிரிக்கிறது.

புழுதியைத் தோண்டினேன்
பூசணி பூத்தது.

பதறிப்போனான் தோட்டக்காரன். கத்தரியும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்று அதற்கொரு கும்பிடு போட்டே ஓடிவிட்டான் தோட்டக்காரன்

தொழுதுகொண்(டு) ஓடினார்
தோட்டக் குடிமக்கள்

தோட்டக்காரனைப் போல ஓடிவிடக் கூடாது சிந்தனையாளர்கள். உண்மையைத் தேடி அதையே குறி என நிற்பவர்கள் பயப்படலாமா? பின் வாங்கலாமா? யோசனையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று ஓடலாமா?

வருவதெல்லாம் வரட்டும், அது என்னதென்று தெரியாமல் நிறுத்தமாட்டேன் என்று மேலும் மேலும் சிந்தனையில் ஏறி அந்தக்குதிரையைத் தட்டிவிடவேண்டும்.

முயற்சி உடையார் இகழ்ச்சியடையார். கோடி சூரியப்பிரகாசமாய் எதிரில் வந்து ஜொலிக்கும் உண்மை. ஆனந்தமாயப் பொங்கும் அந்த உண்மை.

கத்தரி பாகல் பூசணி எல்லாம் போய் குலைவாழை தொங்கும்.

இனிப்பாடல்

வழுதலை வித்திடப்
பாகல் முளைத்தது,
புழுதியைத் தோண்டினேன்
பூசணி பூத்தது,
தொழுதுகொண் டோடினார்
தோட்டக் குடிமக்கள்;
முழுதும் பழுத்தது
வாழைக் கனியே.

## (88)

கத்திரிவிதை, பாகல்முளை, பூசணிப்பூ, வாழைப்பழம் நான்கும் தாவரம். எளிய இனிய தாவரம். ஆனால் அரிய பெரிய சமய உண்மையை லகுவாய் விளக்கிவிடுகின்றன அவை.

இனி, வறட்டுப் புலமை என்று ஒன்று. அளவுக்கு மீறி. தடபுடல் பண்ணும் அது. உண்மையையே அதட்டும். சந்து பொந்துகள் ஒவ்வொன்றிலும் நுழையும். விண்ணுக்கும் மண்ணுக்கும் துள்ளி விளையாடுவது போலப் பாய்ச்சல் காட்டும்.

அதன் ஆடம்பரத்தைக் கண்டு ஏமாறுகிறவர் பலர். ஆனால் உண்மைக்கும் அதற்கும் சம்பந்தமே இருக்காது. சமயப் பண்பு களின் பக்கத்தில் வர முடியாது வறட்டுப்புலமையால்.

அவ்வளவு ஆழமானது, நுட்பமானது, உண்மையானது, ஒளிமயமானது சமயப்பண்பாடு. அதை எடுத்துச்சொல்லும் ஆற்றலோ தாவரத்துக்கு இருக்கிறது.

இரும்புக் கடப்பாறையால் பிளக்கவே முடியாத கரும்பாறையைக்கூட தாவரத்தின் நுண்ணிய வேர்முனை துளைத்து ஊடுருவத்தனே செய்கிறது.

இனி, சிந்தனையானது தொடரத் தொடர உண்மை வெளிப்படும். தூணுக்குள்ளிருந்து நரசிம்மம் புறப்பட்டு வந்தது போலவே புறப்பட்டு வரும் உண்மை.

உண்மை என்றால் நம்மைப்பற்றிய உண்மைகளும் வரத்தானே செய்யும். நம்மைச் சேர்ந்தவர்களைப் பற்றிய உண்மைகளும் வரத்தானே செய்யும்.

அப்படி வரும் உண்மைகளில் சில வேடிக்கையாகவும் இருக்கும். சில கசப்பாகவும் இருக்கும். சில துன்புறுத்து வதாகவும் இருக்கும்.

அதற்காக விட்டுவிடக்கூடாது சிந்தனையை. சிந்திக்கச் சிந்திக்க அதன் முடிவு ஆனந்தமாகவே அமையும். காரணம் சிந்தனையின் அந்தம் 'நான்' என்று ஒன்று இல்லை. எல்லாம் இறைவனுடைய காரியந்தான்'' என்னும் உறுதிப்பாடுதான்.

நாம் என்பது இல்லை. நம் செயல் என்பதும் இல்லை என்று ஆன பிறகு, எல்லாம் அவன் அருளே என்று முடிந்த பிறகு நல்லது கெட்டது இல்லைதானே.

வேடிக்கை, கசப்பு, வேதனை ஒன்றுக்கும் இடம் இல்லை தானே.

அப்படி விடுதலை பெற்று விடும் மனம். பால் போல ஒளிரும் மனம். எளிமைக்கு எளிமையாய் தூய்மைக்குத் தூய்மையாய் மனம் பொலியப் பொலிய அன்பு பெருகும். அதில் இன்சொல் விளையும். அருளும் ஆதரவுமாக செயல்படும் அந்த உள்ளம்.

வேற்றுமைக்கு அங்கு இடம் இல்லை. அதனால் வெறுப்போ, பொறாமையோ தலை நீட்ட மாட்டா? ஒற்றுமை, அமைதி, ஆனந்தம் இப்படி இலங்கும் அந்த உள்ளம்.

இதை எப்படி எடுத்துக் கவியில் பரிமாறுகிறது கனி - அதாவது பழம், வாழைப்பழம். எல்லாம் கடவுள் அருள் தான் என்கிற நமச்சிவாயப்பழம்?

இதோ பாருங்கள்

ஒன்றுகண் டேன்இவ்
உலகுக்(கு) ஒரு கனி
நன்றுகண் டேன்அது
நமச்சிவா யக்கனி;
மென்றுகண் டால் அது
மெத்தென்(று) இருந்திடும்
தின்றுகண் டால்அது
தித்திக்கும் ஆறே!

---

உலகுக்கு ஒரு கனி - அண்ட பிண்ட சராசரம் அவ்வளவுக்கும் உயிர், உயிருக்கு உயிர் எல்லாமே ஒன்று தான். கனிந்து பழுத்து ஆனந்தமயமாக இருக்கிறது அது. நன்று கண்டேன் - நன்றாக யோசித்து யோசித்துப் பார்த்தேன். அது என்னதாக இருக்கும் என்று! யோசிக்க யோசிக்க என்ன தெரிந்தது? உயிராக இருப்பதும் உயிருக்கு உயிராக இருப்பதும் நமச்சிவாயப்பழந்தான். அதாவது இறைவன் மயம்.

இறைவனைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்கிற உண்மை தான் அது.

மென்று கண்டால் - அந்த உண்மையைச் சிந்திக்க சிந்திக்க. மெத்தென்று இருந்திடும் - என்ன இதம்? என்ன சுகம்? அடடா, என்ன இனிமை, என்ன எளிமை அதில். தின்று கண்டால் - முழுவதும் விளங்க விளங்க யோசனை நிற்கும். அனுபவந்தான் பிறகு. அனுபவிக்க அனுபவிக்க ஆனந்தந்தான். அடடா, தித்திப்பு என்றால் அதல்லவா தித்திப்பு. தெவிட்டாத தித்திப்பு அது.

குறிப்பு :- அற்புதமான பாடல். வாய் மட்டுமா, மனம் மட்டுமா, கை, கால், கண், காது, மூளை, நரம்பு எலும்பு எல்லாமே தித்திக்கும். பிறகு உணர்ச்சியைப் பற்றிக் கேட்பானேன். ஏதேழு சென்மத்துக்கும் அந்தத் தித்திப்புக் கூடவே வரும்.

ஏன் யோசிக்க வேண்டும். யோசித்து யோசித்து என்னத்தைக் கண்டோம். என்ன பலன் அதனால் என்று கேட்கிறார்கள்.

கேட்கிறவர்கள் சிலர் அல்லர். பலர். மிகப்பலர். மிக மிகப் பலர். இவர்களுடைய கேள்வியைப் பார்ப்பதுடன் நின்று விடக்கூடாது. வேள்விக்குப் பின்னால் இருக்கும் நோக்கத்தைப் பார்க்க வேண்டும்.

என்னத்தைக் கண்டோம்? என்ன பலன் என்று அவர்கள் எதை நோக்கிச் சொல்கிறார்கள். ரூபாய், அணா, பைசா என்கிற பணத்தைத் தான் நோக்கி சொல்கிறார்கள். அதுவும் பங்களா, கார், டெலிபோன், குடி, கூத்தி என்கிற தான் தோன்றித்தனத்தை வேண்டித்தான்! அதற்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு பணம் ஒன்று தான் என்கிறார்கள். அதற்கும் மேலே பதவி, அதில் பாய்ந்து பறக்கிற உயர்வு, அதிகாரம், மற்றவர்களை மிரள வைக்கும் ஆடம்பரம் இவைகளையே அவர்கள் பலன் என்கிறார்கள்.

எதானாலும் சரி இப்படிப்பட்ட டம்பங்களையும் படாடோபங்களையுமே அவர்கள் பலன் என்கிறாகள். 'எனக்கென்ன இருக்கிறது அதில்' என்கிற தன்னல வெறி தான் அவர்கள் சொல்கிற பலன்.

அரசியல், பொருளாதாரம், சட்டம், சமூக நீதி, ஜனநாயகம், தேர்தல் என்பவற்றில் கூட அவர்கள் பார்ப்பது - பலன் என்று பெற விரும்புவது மேலே குறிப்பிட்ட ஆடம்பரம் மிக்க தன்னல வெறி தான். அதிகார வெறிதான்.

விஞ்ஞான வளர்ச்சியைக் கூட அது கருதித்தானே அங்கீகரிக்கிறார்கள். தன்னலத்திற்குப் பயன்படவில்லை என்றால் தூக்கித் தூர எறிந்து விடுவார்கள் விஞ்ஞானத்தைக்கூட.!

மெய்ஞானம் மெய்ஞானம் என்று கூத்தடிப்பது கூட தன்னலம் ஒன்றைக் கருதியே. தான் (மட்டும்) சௌகர்யமாக ஏகபோகமாக வாழ வேண்டும் என்பது கருதியே தான்.

மற்றப்படி தூய வாழ்க்கை, உண்மை அனுபவம், ஞானம், வளர்ச்சி, அதற்கான ஒழுங்கு முறை, கட்டுப்பாடு, ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்தல், சேர்ந்து மகிழ்தல் ஆகிய எதையும் இவர்கள் பலன் என்று நினைக்க மாட்டார்கள்.

மனித இயல் பற்றியோ அதன் முன்னேற்றம் பற்றியோ இவர்களுக்கு நினைப்பே வராது.

அதனால் தான் யோசனை வேண்டாம், அதில் பிரயோசனம் இல்லை என்கிறார்கள்.

யோசிக்க யோசிக்க மனிதன் தெரிவான். அவன் யாரென்றே தெரிவான். வாழ்க்கை இன்னதென்று தெரியும். எப்படி இனிதாக வாழ்வது என்பதும் தெரியும்.

யோசிக்க யோசிக்க மனத்திலுள்ள அழுக்குப் போகும். மனம் சுத்தமாகும். சுத்தமான மனதுக்குத் தான் காரண காரியம் தெரியும். உண்மை விளங்கும்.

அடிப்படைக் காரணம் (உண்மை) தெரிந்தாலே போதும். வாழ்க்கை மணக்கும்.ருசிக்கும். மதிக்கத் தோன்றும் வாழ்க்கையை. பக்தியே உண்டாகி விடும் வாழ்க்கையினிடத்து.

ஆனந்தம் என்றால் இதுதானே. இது இல்லை என்றால் விளையாட்டு ஏது? உத்சாகம் ஏது? ஆனந்தம் ஏது?

''காரணத்தைக் கண்டு விளை
யாடுவா யே''

என்று இதைத் தெளிவுபடுத்துகிறார் சித்தர்.

நன்றாக மதித்து வாழ்வதற்குத் தான் வாழ்க்கை. அதற்கு வழிகாட்டுகிறது காரண காரிய (உண்மை) உறவு. யோசிக்க யோசிக்கத்தான் வரும் அது. அப்பொழுது தான் திறந்து பார்க்க முடியும். உண்மையை - அதாவது அடிப்படைக் காரணத்தை.

பூட்டைத் திறப்பதும்
கையா லே - மன
வீட்டைத் திறப்பதும்
மெய்யா லே

மெய்யால் என்றால் உண்மையை - காரணத்தைத் தேடும் யோசனையால் என்று பொருள். மனக்கோவிலை அதாவது வீட்டைத் திறப்பது சிந்தனை தான்.

வாழ்க்கை, மனித இயல், தெளிவு, உறுதி ஆகியவை தான் பலன்.

இனி மனித இயலில் என்ன இருக்கிறது. ஒரு பலனும் இல்லை. பழையபடி நாய், நரி, பேய்,கழுகு என்று போய் விட வேண்டியது. தான். அப்படிப் போனால் தான் நினைத்ததை நினைத்தபடி அடித்துப் புசிக்க முடியும். அதுதான் கண் கண்ட பலன். கைக்குக் கிடைத்த பலன் அதுதான் என்று முரண்டுகிறவர்களை விட்டு விட வேண்டியதுதான்.

இருபது வருடங்களுக்கு முன் காஞ்சி முனிவரை (முக்தி நிலை பெற்ற சந்திர சேகர மௌலி மகா பெரியவர்களை) தரிசித்து ஆசி பெற பாரதப் பிரதமர் இந்திராகாந்தி காஞ்சி மாநகர் வந்தார். முனிவரைத் தரிசனம் செய்தார்.

பெரியவர்கள் அன்று மௌன விரதம். நான்கு ஐந்து நிமிஷங்கள் ஆகியும் பெரியர் ஆசி வழங்கவில்லை.

'ஆசி பெறக் காத்திருக்கிறேன்' என்றே கேட்டார் இந்திராகாந்தி.

சட்டென்று உடனே 'நாட்டுக்கா, உங்களுக்கா ஆசி' என்றார் மகா முனிவர் சைகை மூலமாகத்தான்.

அதே போல சட்டென்று உடனே ''எனக்கும் நாட்டுக்கும் சேர்த்துத்தான் ஆசி'' என்றார் இந்திராகாந்தி.

காஞ்சிப் பெரியவரே திகைத்து விட்டார் அப்பழுக்கற்ற உண்மையானது ஒரு அரசியல்வாதியிடமிருந்தே - அதுவும் ஒரு பிரதம மந்திரியிடமிருந்தே வெளி வருகிறதே! அதிசயம் என்றால் இதுவல்லவா அதிசயம் என்று வியந்து போனார் முனிவர்.

ஆசி வழங்கினார் முனிவர்.

மனிதர்கள் நன்றாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாடு நன்றாக இருக்கும். மனிதர்கள், நன்றாக இருக்க வேண்டும் என்றால் பொய் தொலைய வேண்டும். மூட நம்பிக்கை ஒழிய வேண்டும். இருட்டடிப்பு நீங்க வேண்டும்.

நல்ல யோசனை, உண்மையான சிந்தனை வேண்டும் அதற்கு. மக்கள் மோசமானவர்களாக இருந்தால் நாடும் மோசமாகத்தான் இருக்கும்.

என் விருப்பந்தான் எனக்கு முக்கியம். நாடு எப்படிப் போனால் எனக்கென்ன என்று ஒவ்வொருவரும் நினைத்தால் - செயல்பட்டால் உருப்படுமா உலகம்?

உருப்படா நாட்டில் மனிதன் எப்படி மனிதனாக இருப்பான்?

இனி இன்னொரு கேள்வி. எல்லோரும் சிந்தனைச் செல்வராகிச் செம்மை நலம் பெற முடியுமா? எல்லோரும் சான்றோர்கள் ஆகி விட முடியுமா? என்று.

எல்லோரும் சான்றோர்கள் ஆவதில் தவறு ஒன்றும் இல்லை. அப்படி நூற்றுக்கு நூறு என்கிற கணக்கில் அவ்வளவு பேரும் சான்றோர் ஆகி விட்டால் அது எவ்வளவோ நல்லதுதான். ஆனால் அது நடக்கிற காரியமா?

குறிப்பிட்ட அளவாவதுச் சான்றோர்கள் இருக்க வேண்டும். ஊருக்கு ஒருவர் இருவராவது மொத்தத்தில் பத்துப் பதினைந்து சதமாவது சான்றோர் இருக்க வேண்டும்.

அந்த அளவுக்குச் சான்றோர் இருந்தாலே போதும். அவர்களுடைய சான்றாண்மை எழுபது எண்பது சதவிகித மக்களின் மனச்சாட்சியைத் தீட்டிக் கூர்மைப்படுத்திக் கொண்டே இருக்கும்.

அப்படி ஒரு சான்றாண்மை இருந்தால் தான் நாட்டில் மழை பெய்யும். பயிர் பச்சை விளையும். மனுசன் சுறுசுறுப்பாக இருப்பான். சந்தோஷமாகவும் இருப்பான்.

உலகம் - அதாவது மனித வளம் அடிமேல் அடி எடுத்து வைத்து முன்னே முன்னே போகும்.

இதுபற்றியே சிந்தனை. அது உண்மை ஒன்று பற்றியே இருக்க வேண்டும். அதுதான் தெய்வம். தெய்வீகம் என்பது அதுவே தான்.

ஒன்றே நினைந்திருந்தேன்,
    ஒன்றே துணிந்தொழிந்தேன்,
ஒன்றேஎன் உள்ளத்தின்
    உள்ளடைத்தேன் - ஒன்றேஅக்
கங்கையான் திங்கள்க்
    கதிர் முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்(கு) ஆளாம்
    அது.
இன்று நமக்கெளிதே;
    மாலுக்கும், நான்முகற்கும்,
அன்றங்(கு) அளப்பரியன்
    ஆனானை, - என்றென்றும்
மூவா மதியானை,
    மூவேழ் உலகங்கள்
ஆவானைக் காணும்
    அறிவு''

(காரைக்காலம்மையார்)